www.tamilarangam.net

# இலங்கைத் தமிழர் கண்ணீர்



- தில்லைக்கூத்தன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கைத் தமிழர் கண்ணீர்

- தில்லைக்கூத்தன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SEELAM BOOKS ★ NORWAY ★
SIGNATURE

வன்னியில்

அனாதைகளாகவும்,

அகதிகளாகவும் கொடூரமான

இன்னல்களுக்கு முகம்

கொடுக்கும் எம்

உடன் பிறப்புகளுக்கு

இந்நூல் அர்ப்பணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# பொருளடக்கம்

பக்கம்

1. ''குஜ்ரால் கோட்பாடுகளை'' கடைப்பிடிக்குமாறு புதிய இந்திய அரசுக்கு அமெரிக்கா உபதேசிப்பது புரியாத புதிர்!'' ........................................ 1 - 2

2. இலங்கைத் தமிழர்களின் இன்றைய நிலையும் அவர்களின் எதிர்காலமும் ................................ 3 - 10

3. வன்னிப்பகுதியில் துயருற்றுவாடும் புலம் பெயர்ந்த மக்கள் மத்தியில் கதியற்ற நிலையில் எழும் அவலக்குரல்கள்! ................................ 11 - 18

4. 1621 இற்கு முன்பிருந்த இறையாண்மையை திரும்பப் பெற தமிழருக்கு உரிமையுண்டு ............ 19 - 24

5. 'இலங்கையின் இனப்பிரச்சினைக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இல்லாது தீர்வு காண்பது சாத்தியமா ? ........................................ 25 - 29

6. இலங்கையில் என்ன நடக்கிறது? உண்மையை உலகம் அறிய வேண்டும் .................. 30 - 34

7. இன்றைய அரசில் தமிழ் மக்களின் நம்பிக்கை? ...... 35 - 38

8. இஸ்ரேல் பாணியில் இங்கும் பாதுகாப்பு வலய போர்வைக்குள் பறிபோகும் தமிழ் பிரதேசங்கள் .... 39 - 41

9. சர்ச்சையைக் கிளப்பியிருக்கும் ஐ.நா. அபிவிருத்தி நிறுவன அறிக்கை ........................ 42 - 45

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

10.தென்னாசியாவிலிருந்து தென்னாபிரிக்கா நோக்கி
திசைதிரும்பும் இனப்பிரச்சினை ........................ 46 - 50

11.பொஸ்னியா, ருவண்டா பற்றி குமுறும் உலகம்
இலங்கை குறித்து மௌனித்து நிற்கின்றது ............ 51 - 57

12.செம்மணி விவகாரத்தை சர்வதேச பிரச்சினையாக்கி
இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.. 58 - 62

13.இன்று நடக்கும் யுத்தம்
பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கா? தமிழினத்தை
ஒழிப்பதற்காக? ............................................ 63 - 67

14.சேது சமுத்திரத் திட்டம்
கொழும்பில் ஏற்படுத்த உள்ள தாக்கம் ................ 68 - 72

15.இந்திய வெளியுறவுக் கொள்கைக்குள் அமிழ்ந்து
போன தமிழர் நலன்கள் ................................ 73 - 83

16.பட்டினிச்சாவில் வன்னி மக்கள் .......................... 84 - 90

17.வன்னித் தமிழ் மக்களின் பட்டினிப்போராட்டம்
சர்வதேச அரங்கிற்கு எடுத்துச்
சொல்லப்பட வேண்டும். ................................ 91 - 96

18.அமெரிக்காவின் கழுகுப் பார்வையில்
இலங்கையில் மனித உரிமை மீறல்கள் ...................97 - 104

19.மேற்குலகின் பார்வையில் கொசோவாவும்
இலங்கையும்.............................................. 105-110

20.தமிழர்களுக்கு இனி போக்கிடம் ஏது? ...................111-115

www.tamilarangam.net


21.தென் ஆசியாவில் ஒரு கொசோவோ .................. 116-121

22.தமிழர்களுக்கு விடுதலை விமோசனம் எப்போது?... 122-127

23.இலங்கையில் சமாதானம் எட்டாக்கனி ................ 128-133

24.இன அழிவிலிருந்து தம்மை காத்துக்கொள்ள பிரதேச வேறுபாடுகளை தமிழர்கள் மறக்க வேண்டும் ................................................ 134-139

25.கொசோவோவையும் மிஞ்சிவிட்ட இலங்கை இனப் பிரச்சினை .................................140-144

26.பேரினவாதம் நாட்டை அழிவுக்கே இட்டுச் செல்லும்................................................ 145-148

27.செம்மணி கூறும் கதையும் தமிழரின் இன்றைய நிலையும்................................................ 149-153


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முகவுரை

இந் நூலாசிரியரான திரு. இ. நடராஜா ''தில்லைக்கூத்தன்'' அவர்களோடு நான் பல வருடங்களாக நெருங்கிப் பழகியுள்ளேன்.

ஓர் அரசியல் மாணவரான இவர், இன்றும் கூட அரசியல் மாணவராகவே திகழ்கின்றார். தமிழ் மக்களின் பிரச்சினையில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இவர், கொழும்பு வாழ் தமிழ் மக்களுக்கான செயற்பாட்டுக் குழுவுக்கு அமரர் டாக்டர் வேலாயுதபிள்ளை அவர்களால் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டவராவார். அன்றிருந்து இன்றுவரை இவரது பேச்சும் மூச்சும் தமிழுணர்வுடனிருப்பது பாராட்டுவதற்குரிய தொன்றாகும்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பாக குறிப்பாக மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, இவர் வெளிநாடுகளிலும் கூடப் பல சொற்பொழிவுகளிலும் கலந்துரையாடல்களிலும் பங்குபற்றியிருந்தார்.

இலங்கைக்கு வருகை தந்த பல வெளிநாட்டுக் குழுக்களுக்கு, விசேடமாக, தென் ஆபிரிக்க பாராளுமன்ற அங்கத்தவர்கள் மற்றும் ஐரோப்பிய பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு, இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும், இங்கு நிகழும் மனித உரிமை மீறல்களையும் புள்ளிவிபரச் சான்றுகளுடன் எடுத்துக்காட்டி அவர்களின் பாராட்டுக்களுக்கும் ஆளானதை நான் நன்கறிவேன்.

இங்கிலாந்து சென்றிருந்த சமயங்களிலெல்லாம் இலங்கைத் தமிழ் மக்களின் அவலங்கள் தொடர்பாக அங்கு இயங்கும் ஒலிபரப்பு நிலையங்களுக்கு மணிக் கணக்காக வழங்கிய பேட்டிகளின் மூலம் ஐரோப்பாவில் வாழும் தமிழ் மக்களின் நெஞ்சங்களிலும் இவர் இடம் பெற்றிருந்தார் என்பதும் எனக்குத் தெரியும்.

தமிழ்த் தாயகப் பிராந்தியங்களான யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்குப் பல தடவைகள் விஜயம் செய்த இவர், அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் அவல நிலையையும் கண்டும், வவுனியாவிலும் மன்னாரிலும் தங்கியி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருக்கும் அகதிகளின் உணவுப் பற்றாக்குறையையும், அவர்கள் படும் அவலங்களையும் கண்டும், உளம் நொந்து, இந்த அவலங்களை சர்வதேச தமிழ்ச் சமுதாயத்துக்கு அறியக் கொடுக்க வேண்டுமென்ற உந்துதலால் பத்திரிகைகளுக்கு எழுதத் தொடங்கினார்.

இவர் தமிழ் மண்ணைக் காப்பதற்காக உயிர்த் தியாங்களைச் செய்யும் இளைஞர்களையும், யுவதிகளையும் தன் கண்ணின் மணிகளாகக் கருதுபவர்.

இவருடைய கட்டுரைகள் நூல் வடிவமாக வெளிவருவது இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையுமெனக் கருதுகின்றேன். இலங்கைத் தமிழ் மக்கள் மட்டுமல்லாது, சர்வதேசத் தமிழ்ச் சமுதாயம் குறிப்பாகப் புலம் பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் வதியும் எமது இளைஞர்களும் யுவதிகளும், இந் நூலைப் படிப்பதன் மூலம் இலங்கைத் தமிழ் மக்களின் அவலங்களை ஆதியிலிருந்து அந்தம்வரை அறிந்துகொள்ளலாம்.

எனது தாயாரின் பிறப்பிடமான கரம்பனிற் பிறந்த இந் நூலாசிரியர், தனது ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் அதனைத் தொடர்ந்து மேற் கல்வியை யாழ் மத்திய கல்லூரியிலும், தனது பட்டப்படிப்பைப் பேராதெனியப் பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டு ஓர் பொருளாதாரப்பட்டதாரியானர். அதன் பின்னர் இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் நிறைவேற்றுத் தர அலுவலராகப் பணிபுரிந்து ஐ.நா. நிறுவனப் பொருளாதாரத் திட்டமிடற் பிரிவில் பயிற்சி பெற்றார். அதன் பின்னர் ஐ.நா. ஸ்தாபனத்தில் சர்வதேச ஆலோசகராகப் பணிபுரிகையில் , 1970 ஆம் ஆண்டில் ஐ.நா. ஸ்தாபன (Unctad) செயலாளர் நாயகம் அவர்கள் துறைமுகப் புள்ளிவிபரங்கள் விடயமாக உலகளாவிய ரீதியில் ஆறு புகழ்பெற்ற நிபுணர்களை நியமித்திருந்தார். திரு. நடராஜா அவர்கள் இந்த சர்வதேச நிபுணத்துவக் குழுவில் ஆசியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்குமான ஏகபோக பிரதிநிதியாக நியமிக்கப்பட்டமை, இலங்கைத் தமிழர்கள் மாத்திரமல்லாது உலகத் தமிழர்களும் பெருமைப்பட வேண்டியவோர் விடயமாகும். அதன் பின்னர் சவூதி அரேபியாவில் 16 வருட காலமாக புத்திமதியாளர் அந்தஸ்தில் கடமை புரிந்ததன் பின்னர், 1996 ல் ஈழத்திற்குத் திரும்பி, மக்கள் பணியே மகேசன் பணியாகவும் தமிழ் மக்களுக்கான பணியே

www.tamilarangam.net

திருப்பணியாகவும் கருதி, பொதுப் பணியில் இறங்கி இந்நூலையும் பிரசுரிக்கின்றார்.

திரு நடராஜா குறிப்பாக "வீரகேசரி" உட்பட வேறு பல தமிழ் சஞ்சிகைகளுக்கு அரசியல் சம்பந்தமான கட்டுரைகள் எழுதிப் பிரசுரிக்கப்பட்ட ஒரு வருடம் பூர்த்தியாகும் வேளையில், அக்கட்டுரைகளை ஒரு புத்தக வடிவில் இப்போது பிரசுரிக்கப்படுகின்றது. இதே போல் அடுத்தடுத்த வருடங்களில் பிரசுரமாகும் கட்டுரைகளும் புத்தக வடிவில் வரும் என்று எதிர்பார்ப்பதோடு, இறைவன் அருளும் ''தில்லைக் கூத்த''னுக்குக் கிட்டவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

தில்லைக்கூத்தனின் இத்திருத்தொண்டு மேன்மேலும் தொடர இறை அருள் கிட்டட்டும்.

**ஜீ.ஜீ. பொன்னம்பலம்**
**(குமார்)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிமுகம்

இலங்கைத் தமிழர் பிரச்சினை சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் காலத்திலேயே உருவெடுத்துவிட்டது என்பதே எமது கணிப்பு. அதன் பின்னர் இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து இன்றுவரை இலங்கைத் தமிழர் பிரச்சினை படிப்படியாக விஸ்வரூப மெடுத்து உலக கவனத்தை ஈர்த்துவிட்டது. தமிழர் என்று நாம் கூறுவது, யாழ்ப்பாணத் தமிழர் மட்டும் என்ற அகந்தையை அகற்றி, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, மலையகத் தமிழர் மற்றும் கொழும்புத் தமிழர் யாவரையும் உள்ளடக்கியேயாகும். மலையகத் தமிழர் பிரச்சினையும், ஈழத் தமிழர் பிரச்சினையும், காலப்போக்கில் ஒன்றாக இணைந்த பிரச்சினையாகத்தான் போகின்றது.

ஈழத் தமிழர்களின் காந்தி எனப் புகழ் பெற்ற திரு.செல்வநாயகம் அவர்கள் தமிழர்கள் இழந்த உரிமைகளை மீளப் பெறுவதற்காக, சகல தமிழ் மக்களையும் ஒன்றிணைத்து சாத்வீக முறையிற் பாடுபட்டு ஈற்றில் தோல்வியையை தழுவிக் கொண்டார். சாத்வீகப் போராட்டத்தில் அவர் தோல்வியைத் தழுவிக் கொண்ட போதிலும், அவரது நோக்கங்களும் அபிலாஷைகளும் தமிழ் மக்களின் உள்ளங்களில் பசுமையாகப் பதிந்து விட்டன. அதன் பயனாக, தமிழர்களின் உரிமைகளையும் தாயகத்தையும் பாதுகாப்பதற்காகத் துப்பாக்கி ஏந்த வேண்டிய நிலைக்குத் தமிழ் இளைஞர்கள் தள்ளப்பட்டனர். அதன் விளைவாகத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அவலங்கள், பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்களின் அகதி வாழ்க்கை, மற்றும் வடகிழக்கில் வாழும் தமிழ் மக்கள் உணவு, உடை மற்றும் மருந்துவகை இன்றி எந்நேரத்திலும் எறிகணைத்தாக்கு தலுக்கும், விமானத்தாக்குதலுக்கும் முகம் கொடுத்து எந்த நிமிடத்திலும் மரணத்தை எதிர்நோக்கி வாழும் அவல நிலைகளை உலக மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதனையே எமது பிரதான கடமையாகக் கருதி, இக் கட்டுரைகளை இலங்கை வாழ் தமிழர்களுக்கும் சர்வதேச தமிழ்ச் சமுதாயத்துக்கும் சமர்ப்பிக்க விரும்புகின்றோம். இதனை ஒரு திருப்பணியாகவே கருதுகின்றோம்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இனப்படுகொலை, இனச் சுத்திகரிப்பு மற்றும் மிகக் கொடூரமான மனித உரிமை மீறல்கள் ஆகிய விடயங்களுக்கே எமது கட்டுரைகளில் முக்கிய

www.tamilarangam.net

இடம் வழங்கியிருந்தோம். இப் பணிகளை மேற்கொள்வதனால், சில ஆபத்துகளுக்கும் இடை யூறுகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி ஏற்படலாமென எமது குடும்பத்தினர், எமது இனத்தவர்கள் மற்றும் நண்பர்கள் எம்மை எச்சரித்திருந்தனர். தூய்மையான எண்ணங்களுடன், எமது சமூகத்தின் நன்மையை முக்கியமாக சமூகத்தின் எதிர்கால நல னைக் கருத்திற் கொண்டு இத்திருப்பணியில் ஈடுபடுவதனால் ஏற்படக் கூடிய எவ்வித ஆபத்துக்களையும் எதிர் நோக்க நாம் சித்தமாக வுள்ளோம்.

இத் தருணத்தில் எமது இளைஞர்களும், யுவதிகளும் தங்கள் தாயகத்தைப் பாதுகாப்பதற்காகத் தம் உயிரைத் துச்சமென மதித்து ஆற்றிய தியாகங்கள் உலக சரித்திரத்தில் நிகரற்றதொன்றாகி விட்டன. எமது பிள்ளைகளின் தியாகங்கள் எதிர்காலச் சரித்திரத்தில் நன்றாக விபரிக்கப்படப்போகின்றன. தமிழ்த் தாயகத்தின் புதைகுழிகளில் தசையை மண்ணுக்குக் கொடுத்துவிட்டு, எலும்புக் கூடுகளாகக் காட்சியளிக்கும் எமது பிள்ளைகளின் தியாகங்கள் தொடர்பாகக் கவிதைகளும் காவியங் களும் பிறக்கத்தான் போகின்றன.

தமிழர்களின் அவலங்கள் தொடர்பாக அதுவும் கொழும்பு மாநகரிலிருந்து துணிச்சலுடன் உண்மைகளை வெளிப்படுத்துவது சில காலங்களுக்கு முன்னர் முடியாதவோர் விடயமாகும். ஆனால் இன்று இனியும் முடியாத நிலையில், அற நனைந்தவனுக்குக் குளிரென்ன கூதலென்ன என்ற தோரணையில் இத்திருப்பணித் தொண்டினை மேற்கொள்ள நாம் முன்வந்துள்ளோம். தமிழ் மீது, தமிழ் மக்கள் மீது எமக்குள்ள உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குக் களம் அமைத்துக் கொடுத்த வீரகேசரி ஸ்தாபனத்துக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள் ளோம். அவர்களின் ஒத்தாசையும், ஒத்துழைப்பும் கிடைக்கப் பெற்றி ருக்காது விட்டால் இத் திருப்பணியை மேற்கொண்டிருக்க முடியாது. எனவே அவர்களுக்கு நாம் மாத்திரமல்லாது இலங்கைத் தமிழ்ச் சமுதாயமும் சர்வதேச தமிழ்ச் சமுதாயமும் கடமைப்பட்டுள்ளன.

நாம் எழுதிய கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதியிருக்கலாம் என்றும் ஒரு சிலர் கருத்து தெரிவித்திருந்தனர். எமது தாய் மொழி தமிழ். எனவே தாய்ப் பாசமே முன் நிற்கின்றது. மற்றும் இன்றைய சூழ்நிலை யில், எமது உணர்வுகளையும் அன்றாட நிகழ்வுகளையும் பாரபட்ச

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மில்லாது எழுதும் போது அவற்றைப் பிரசுரிக்க கொழும்பின் ஆங்கிலப் பத்திரிகைகள் முன்வருமா என்பதுவும் சந்தேகமே. அதனால்தான் தமிழில் எழுதும் நாட்டம் ஏற்பட்டது. அதனை விட தமிழ்ச் சமுதாயத்தில் பதினைந்து வீதத்துக்கும் குறைவானவர்களுக்கே ஆங்கிலம் தெரியுமாகையால், இக்கட்டுரைகள் முழுத் தமிழ்ச் சமுதாயத்துக்கும் பயன்படவேண்டுமென்ற நோக்கமும் எமக்கிருந்தது. இவற்றுக்கும் மேலாக, ஆங்கிலத்தில் போதிய புலமையற்ற தமிழ் இளைஞர்கள் பலர் புலம் பெயர்ந்து உலகின் பல்வேறு பாகங்களிலும் வாழ்ந்து வருவதனால், அவர்களையும் நெஞ்சில் நிறுத்தியே தமிழில் எழுத ஆரம்பித்தோம்.

இக்கட்டுரைகள் எவையாவது ஆழ்ந்த ஆராய்ச்சியின் பின்னணியில் அமைந்தவையல்ல. பல்கலைக்கழகங்களில் முதுமாணிப்பட்டம் பெறுவதற்கோ, அல்லது கலாநிதிப் பட்டம் பெறுவதற்கோ ஆராய்ச்சி செய்வதற்காக அல்லாது, சாதாரண தமிழ்ப் பொது மக்கள் இலங்கையில் நிகழ்ந்த, நிகழ்கின்ற மிகக் கொடூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் மாத்திரம் எழுதப்பட்டவையாகும். இக்கட்டுரைகளின் மூலம், தமது சமுதாயம் மீதும் தாயகம் மீதுமான விழிப்புணர்வுகள் அனேக தமிழ் மக்களுக்கு ஏற்பட்டதாக அறிந்தோம்.

இத் திருப்பணியில் நாம் வெற்றியடைந்துள்ளோமா, அன்றேல் தோல்வியடைந்துள்ளோமா, என்பது எமக்குத் தெரியாது. அதே வேளையில் இத் திருப்பணி மேலும் தொடருமென்பதையும் ஆணித் தரமாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

இந் நூலின் விற்பனையாற் கிடைக்கப்பெறும் நிதியை, வன்னியில் அல்லல்படும் அனாதைகளுக்கும், இந் நூலினை வன்னியில் அவலங்களுக்கு ஆளாகியிருக்கும் தமிழ் மக்களின் திருப் பாதங்களுக்கும் அர்ப்பணம் செய்கின்றோம்.

இறுதியாக இந்நூலினை எனது நெருக்குதல்களுக்கு மத்தியில் சிறப்பாக அச்சிட்டு தந்த நியூ கார்த்திகேயன் அச்சக உரிமையாளருக்கும் அவர்தம் ஊழியருக்கும் மிகுந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

-தில்லைக்கூத்தன்-
இ. நடராசா

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1

18-05-98

## ''குஜ்ரால் கோட்பாடுகளை'' கடைப்பிடிக்குமாறு புதிய இந்திய அரசுக்கு அமெரிக்கா உபதேசிப்பது -புரியாத புதிர்!''

இலங்கைக்கு அண்மையில் வருகை தந்த ஐ.நா. ஸ்தாபனத்துக்கான அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதி திரு. ரிச்சர்ட்சன் இந்தியாவின் புதிய பாரதீய ஜனதா கூட்டணி அரசு அண்டைய நாடுகளுடன் ''குஜ்ரால் கோட்பாடுகளை'' கடைப் பிடிக்கும் என தாம் எதிர்பார்ப்பதாக கூறியதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகியது. அவர் இந்த அதிமுக்கிய கூற்றை கொழும்பில் வைத்து கூறியுள்ளபடியால் இது ஏனைய அண்டை நாடுகளைவிட இலங்கையையே குறிப்பதாக இருக்கிறது. சுருங்கக் கூறினால் திரு.ரிச்சர்ட்சன் இலங்கையைப் பொறுத்தவரை இந்தியாவின் ஒருவித தலையீடும் இருக்கக்கூடாது என்பதையே விரும்புகின்றார்.

வியட்னாம், தென்கொரியா, லாவோஸ், கம்பூச்சியா, லெபனான், லிபியா, கிரனடா, பனாமா, ஈராக், சோமாலியா முதலிய நாடுகளில் நேரடியாக தலையீடுகள் செய்து கடுமையாக செயற்பட்ட அமெரிக்கா ''குஜ்ரால் கோட்பாடுகள்'' பற்றி புதிய இந்திய அரசுக்கு ''கீதா உபதேசம்'' பண்ணுவது புரியாத புதிராக இருக்கிறது அதுவும் இலங்கை மண்ணில். ராஜதந்திர சொற்பிரயோகத்தில் இது இலங்கையில் உள்ள தமிழர்களின் அபிலாஷைகளுக்கு சாதகமான கொள்கைகளை இந்தியா கடைப்பிடிக்கக்கூடாது என்று ஓர் எச்சரிக்கையாகவே கருத வேண்டி இருக்கின்றது. இது உண்மையில் ஓர் ஆபத்தான போக்காகவே தென்படுவதுடன் இது இலங்கையில் மேலும் ஸ்திரமற்ற நிலையை உண்டாக்க வழிகோலும்.

### மத்தியஸ்த விவகாரம்

திரு.ரிச்சர்ட்சன் இலங்கை அரசு விரும்பினால் அமெரிக்கா மத்தியஸ்தம் செய்ய விரும்புவதாகக் கூறியுள்ளது ஆச்சரியமளிக்கும் விடயமாகும். பொதுவாக மத்தியஸ்தத்துக்கு சகல தரப்பினர்களாலும் வேண்டுகோள் விடப்பட வேண்டும். அமெரிக்கா இலங்கையில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு பகுதியினரை சட்டபூர்வமாக தடை செய்த பின்பு எவ்விதம் அது மத்தியஸ்தம் செய்ய முன்வரலாம்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

திரு.ரிச்சர்ட்சனின் மற்ற சகாவான திரு.கார்சல் இன்டர்போர்த் மேலும் ஒரு படி முன் சென்று அமைச்சர் திரு. கதிர்காமர் அடிக்கடி வேண்டுகோள் விடுப்பதுபோல் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என யோசனை கூறினார். இது இவ்விதம் இருக்க, திரு. கதிர்காமர் சமீபத்தில் லண்டனில் உரையாற்றுகையில் ''பிரபாகரனை ''கைது'' செய்வதற்கு அமெரிக்க ஜனாதிபதியின் உதவியை கோருவதற்கான சாத்தியம் பற்றி ஆராயவேண்டும்'' எனக்கூறினார்.

இந்தக் கோரிக்கை நிறைவேறுவதாக இருந்தால் அமெரிக்க இராணுவம் இலங்கை மண்ணில் இறங்குவதற்கு வகை செய்து இந்நாட்டைப் பெரிய யுத்தகளமாக மாற்றி அகில இலங்கைக்கும் அழிவை ஏற்படுத்தவும் தென் ஆசியாவின் சமாதானத்தைச் சீர்குலைக்கவும் வழிவகுக்கும். இக்கோரிக்கை இந்தியாவின் பாதுகாப்புக்கு ஓர் அச்சுறுத்தல் ஆகும்.

## விளக்கமற்ற நிலை

இலங்கைக்கு விஜயம் செய்த இந்த இரண்டு அமெரிக்க முக்கியஸ்தர்களும் மனித உரிமை மீறல் விடயத்தில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தவறிவிட்டார்கள்.

இலங்கையில் உள்ள யதார்த்த நடைமுறைகளைப் பற்றி திரு. ரிச்சர்ட்சனுக்கு தகுந்த விளக்கங்களை அவர் இங்கு வருவதற்கு முன் கொடுக்கவில்லை என்பது நன்கு புலனாகின்றது.

இலங்கையில் தமிழ் மக்கள் தனிமையாக இருக்கவில்லை. உலகின் பல்வேறு பாகங்களிலும் உள்ள 8 கோடி தமிழ் மக்கள் அமெரிக்காவில் இருந்து வந்த இந்த இரண்டு முக்கியஸ்தர்களது கருத்துக்களை மிகவும் உன்னிப்பாக கவனிக்கிறார்கள். அதன் பிரதிபலன் உலகின் வேறு பகுதிகளில் எதிர்விளைவுகளை ஏற்படுத்தவே வழிவகுக்கும்.

www.tamilarangam.net

**2** 11-07-98

## இலங்கைத் தமிழர்களின் இன்றைய நிலையும் அவர்களின் எதிர்காலமும்

தமிழர்களுடைய இன்றைய நிலையை ஆராயும் முன் கடந்த காலத்தில் அவர்கள் தமது, அரசியல், பொருளாதார, சமூக விடயங்களில் எவ்விதம் திகழ்ந்தார்கள் என்று சிறிது சிந்திப்பது அவசியம். தமிழர்கள் தங்கள் தாயகத்தை 1621 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயருக்கு யுத்தத்தில் பறிகொடுத்து விட்ட பின்பு அவர்கள் பிரித்தானிய ஆட்சியின் கீழ் நீதியாகவும் பாரபட்சம் இல்லாமலும் நடத்தப்பட்டார்கள்.

அரசியல் விவகாரங்களில் பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் அரசியல் சீர்திருத்தங்களுக்கு தமிழர்கள் முன் நின்று வாதாடினார்கள்.
சேர்.பொன்னம்பலம் இராமநாதன் சிங்களவர் மேல் திணித்த கொடூரமான தானியவரியை (Grain Tax) நீக்குமாறு கடுமையாக எதிர்த்து வெற்றியும் பெற்றார். புத்த பகவான் ஞானம் பெற்ற தினமான விசாக் (Wesak) தினத்தை விடுமுறை தினமாக்க வேண்டும் எனவும் அவர் வாதாடி வெற்றி பெற்றார். 1915 ஆம் ஆண்டில் சிங்கள முஸ்லிம் இனக்கலவரத்தின் போது பிரித்தானிய இராணுவம் சிங்களவர்களை சுட்டுத்தள்ளியும், தலைவர்களை சிறையிலும் வைத்தார்கள்.

இவ்விதமான கொடூரமான செயல்களை சேர்.பொன்னம்பலம் இராமநாதன் கண்டித்ததுடன் பின் இங்கிலாந்து சென்று சிங்களத் தலைவர்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்தார். நன்றிக்கடனாக சிங்களத் தலைவர்கள் இவர் நாடு திரும்பியதும் கொழும்புத்துறை முகத்தில் இருந்து இவர் வீடுவரை இவரை குதிரை வண்டியில் வைத்து இழுத்துச் சென்ற விடயம் இத்தருணத்தில் நினைவு கூரவேண்டிய தாகும்.

### ''வேதனையுற்ற நிலையில் வெளிவந்த வார்த்தை''

அக்கால கட்டத்தில் தமிழரை சிறுபான்மையினர் என்று அழைக்கவில்லை. சிங்களவர்களும், தமிழர்களும் இரு பெரும் சமூகத்தினர் என கருதப்பட்டார்கள். இறுதியில் சிங்கள தலைவர்கள் இராமநாதனை அலட்சியப்படுத்தி பாரபட்சம் காட்டியதால் மன வேதனை அடைந்த பொன். இராமநாதன் ஓர் எச்சரிக்கையை விடுத்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

''தமிழர்களை உதாசீனம் பண்ணியும், அவர்கள் பாரபட்ச முறையிலும் நடத்தப்பட்டால் நிச்சயமாக தமிழர்கள் பிரிந்து போவதற்கு குரல் கொடுப்பார்கள்'' என்று அன்று அவர் முழங்கினார். அன்று அவர் கூறிய தீர்க்க தரிசன வார்த்தை இன்று எவ்வளவு தூரம் உண்மையாகியுள்ளது என்பதை மக்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும். இதேபோலத்தான் இவரின் தம்பியான பொன்.அருணாசலத்துக்கும் நேர்ந்தது. இவரும் மனவேதனையுடன் அரசியலில் இருந்து விலகினார்.

இந்த துயரமான நிகழ்வுகளைப் போலத்தான் தமிழ் மக்களுக்காக வாதாடிய திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம், திரு.செல்வநாயகம் அது தொடர்பாக எடுத்த முயற்சிகள் படுதோல்வியில் முடிந்தன. செல்வநாயகம் - பண்டாரநாயகா உடன்படிக்கை, டட்லி-செல்வநாயகம் உடன்படிக்கை காற்றில் பறக்கவிடப்பட்டன. இதனால் திரு.செல்வநாயகம் விரக்தி அடைந்து 'தமிழர்களை இனிமேல் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்'' என்று கூறினார்

## விரக்தி நிலைக்கு தள்ளியது ஏன்?

இலங்கைத் தமிழர்கள் ''சாத்வீக முறையில் தங்கள் உரிமைகளைப் பெற முடியாத காரணத்தால் விரக்தி அடைந்து தமிழர் கூட்டணி

(T.U.L.F.) 1976 ஆம் ஆண்டில் 'தமிழ் மக்கள் தங்கள் தாயகத்தை பாதுகாக்க தமிழ் ஈழம் ஒன்றுதான் சாலச்சிறந்தது'' என்று தீர்மானம் எடுத்தது. 1977 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் முன் இந்த ஈழத் தீர்மானத்தை முன்வைத்து வெற்றியும் அடைந்தார்கள். ஆனால், இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்த அவர்களுக்கு மனோதைரியமும், மக்கள் இட்ட ஆணையை அமுல்படுத்த திட்டங்களும் இருக்கவில்லை.

இந்த நிலையில் ஏற்பட்ட விரக்தியின் காரணமாக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

தமிழர்களுக்கு உத்தியோக, தொழில், உயர் கல்வி வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. சகல துறைகளிலும் மிகக் கடுமையான பாரபட்சம் மேற்கொள்ளப்பட்டது. தமிழர்களின் ''சுயமரியாதைக்கு'' கடுமையாக பங்கம் ஏற்பட்டது. தமிழர்களின் தாயகமே பறி போகும் நிலை ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையில் தான் 1621 ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் இழந்த சுதந்திரத்தை திரும்பவும் மீட்போம் என்று திட சங்கற்பம் கொண்டு இளைஞர்கள் தங்களை அதற்காக அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

www.tamilarangam.net

இந்திய உபகண்டத்தின் சரித்திரத்தில் பாகிஸ்தான் என்கிற நாடு இருந்திருக்கவில்லை. 1942 ஆம் ஆண்டில் தென் இந்திய அரசியல் மேதாவியான திரு.சி.இராஜகோபாலச்சாரியார் இந்திய உபகண்டத்தின் பிரிவினையை தடுக்க எடுத்த முயற்சி கடும் போக்காளர்களாக இருந்த இந்து அரசியல்வாதிகளால் தோல்வி கண்டது. இலங்கை வெளிநாட்டு அமைச்சர் திரு.கதிர்காமர் பயங்கரவாதத்துக்கும், ஆயுதம் ஏந்திய விடுதலைப் போருக்கும் உள்ள வித்தியாசம் தெரிந்தும் தெரியாதது போல் செயல்படுகின்றார். பயங்கரவாதம் என்பது ஓர் சிறு குழுக்களால் நடத்தப்படுவதாகும். ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி இங்கு விடுதலைப்போர் நடத்துகிறார்கள். இது பயங்கரவாதம் என்று கூற முடியாது.

இலங்கை சரித்திரத்தில் 1621 ஆம் ஆண்டு வரை தமிழ் இராச்சியம் இருந்தது. அதை பறி கொடுத்து விட்டோம். சிங்கள பேரினவாதிகளால் செய்த அடக்கு முறையால் ஏற்பட்ட விபரீதங்களினால் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி இழந்த சுதந்திரத்தை திரும்பவும் மீளப் பெற போராடுகின்றனர். வியட்நாம் விடுதலை யுத்தம் பயங்கரவாதமா? அமெரிக்க மக்கள் தங்கள் சுதந்திரத்துக்காக பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக ஆயுதம் ஏந்தி விடுதலை யுத்தம் புரிந்தார்கள். அதுவும் பயங்கரவாதமா?

சுபாஷ் சந்திரபோஸ் இந்திய சுதந்திரத்துக்காக பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக இராணுவ ரீதியில் யுத்தம் புரிந்தார். இதுவும் பயங்கரவாதமா? அல்லது விடுதலை யுத்தமா? இதுபோல தமிழ் தாயகத்தில் தங்கள் சுதந்திரத்துக்காக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராடுவதற்கு அடிப்படையான உண்மையான காரணத்தை தமிழ், சிங்கள மக்களும், இந்திய மக்களும் அகில உலகமும் உணரவேண்டும். இங்கு நடக்கும் யதார்த்த நிலைமைகளை மற்றவர்கள் சரியாகப் புரியவில்லை என்று அறிய மனவேதனை உண்டாகின்றது.

தமிழ் கூட்டணிக் கட்சியினர் 1976 ஆம் ஆண்டில் 'தமிழ் ஈழம்' ஒன்றுதான் விமோசனம் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைய நிலை என்ன? பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகள் வரவு-செலவு திட்டத்திற்கு எதிராக வாக்களிப்பு செய்யவில்லை. தமிழ்ப் போராளிகளையும், அப்பாவி மக்களையும் கொன்று குவிப்பதற்கு வகை செய்யும் வகையிலான யுத்த ஆயுதங்களை வெளிநாடுகளில் இருந்து வாங்குவதற்கு வருடா வருடம் வரவு-செலவு திட்டம் பாராளுமன்றத்தில்

www.tamilarangam.net

சமர்ப்பிக்கப்பட்டு பின் வாக்களிப்பு நடைபெறும் பொழுது தமிழ் கட்சிகள் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களிக்கின்றன.

### பார்த்தும் பாராத நிலை

1998 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான கூட்டத்தொடரில் 54 அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் இலங்கையில் சிங்கள இராணுவத்தை தமிழ் தாயகத்தில் இருந்து விலகப் பண்ண வேண்டும் என்று கோரிக்கை விடுத்தன.

ஐக்கிய நாட்டு ஸ்தாபனங்களோ, மேற்கு உலக ஜனநாயகங்களோ இலங்கையில் தமிழ் தாயகத்தில் நடக்கும் கொடூரமான மனித உரிமை மீறல்களையும் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதையும் பற்றி விமர்சனம் செய்யாதது வேதனைக்குரியது. நவாலி கிறிஸ்தவ ஆலயத்தை விமானக் குண்டு வீச்சால் அழித்ததும், அதில் தங்கி இருந்த அகதிகளில் 200 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதும் பற்றி உலக சமுதாயம் மௌனம் கடைப்பிடித்தது மிகவும் வேதனைக்குரிய விடயம். இந்தக்கொடூரமான சம்பவத்தை பரிசுத்த பாப்பரசர் கடுமையாக கண்டனம் செய்தார்.

இதுபோல திருகோணமலையில் குமரபுரத்தில் குழந்தைகள் உட்பட அப்பாவி மக்கள் 25 பேர் இராணுவத்தால் கொல்லப்பட்டனர். யாழ்ப் பாண மாவட்டத்தில் மாத்திரம் 81,000 வீடுகள் யுத்தத்தினால் சேதமாக் கப்பட்டன. வட-கிழக்கு பிராந்தியத்தில் 1600 க்கு மேல் இந்து கோவில் களும் கிறிஸ்தவ தேவாலயங்களும் சேதமாக்கப்பட்டன. 2000 ஆண்டு களுக்கு முன்பே இருந்த பிரசித்தி பெற்ற புனித இந்து கோவில்களும் சேதமடைந்த இவற்றுள் அடங்கும். தலதா மாளிகை சேதமுற்றபோது ஐக்கிய நாட்டு ஸ்தாபனங்கள், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா கடும் கண்டனத்தை தெரிவித்தன. ஆனால் அரசுப்படைகளின் தாக்குதலால் 1600 இந்து, கிறிஸ்தவ மத வழிபாட்டு ஸ்தலங்கள் சேதமுற்றது பற்றி அவர்கள் மௌனம் சாதித்தார்கள். அவர்கள் தம் 'மனச்சாட்சி'யை அடைவு வைத்து விட்டார்களா? இவ்விதம் உதாரணமாக அநேக சம்ப வங்களை எடுத்து கூறலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பட்டினிச்சாவை எதிர்நோக்கும் நிலை

வடபகுதிக்கு அனுப்ப வேண்டிய உணவு, மருந்துப் பொருள்களை மிகவும் குறைத்தது, அங்குள்ள தமிழ் மக்களை பட்டினிச்சாவால் மடியவைக்கும் இனப்படுகொலை என்றே கூறலாம்.

மேற்கு உலகம் தமிழர்களின் உயிர்களுக்கும் அவர்களின் மத வழிபாட்டு ஸ்தலங்களுக்கும் ஒருவித மதிப்பும் இல்லை என்று எண்ணலாம். ஆனால் இது பற்றி தற்போதைய தமிழ் கட்சிகளும், தமிழ்க் குழுக்களும் மேற்கு உலகத்தை விமர்சனம் செய்யவில்லை. இந்த தமிழ் கட்சிகளுக்கு அரசாங்கத்தையோ, அல்லது மேற்கு உலகத்தையோ பகைக்க விருப்பம் இல்லை போல் தெரிகின்றது. உண்மையை உலகத்துக்கு எடுத்துக் கூற ஏன் தயக்கம் கொள்ள வேண்டும்?

## தமிழர்களின் எதிர்காலம்

இலங்கைத் தமிழர்களின் அகதி வாழ்க்கையின் துயரத்தையோ அல்லது அவர்களின் அவலங்களையோ போக்கும் பொருட்டு மேற்கு நாடுகள் இராணுவ ரீதியில் அல்லது அரசியல் ரீதியில் நேரடியாக தலையிட்டு உதவுவது கஷ்டமான விடயம். ஆனால் இராஜதந்திர ரீதியில் இலங்கை அரசுக்கு அநேக வழிகளில் அவை இது தொடர்பாக அழுத்தம் கொடுக்க முடியும். இந்தியாவின் அனுசரணை இல்லாமல் இனப்பிரச்சினையை மேற்கத்திய நாடுகள் தீர்க்க முன் வர இயலாது. இது நடைமுறைக்கு சாத்தியம் இல்லை. ஆகையால் இலங்கைத் தமிழர்களின் புத்தி ஜீவிகளும், தமிழ் அரசியல் கட்சிகளும் இந்தியாவின் நல் எண்ணத்தையும் உதவியையும் நாடவேண்டும். இந்திய மத்திய அரசு கடந்தகால துக்ககரமான நிகழ்வுகளை நினைவில் கொள்ளாது தன்னுடைய தேசிய நலன், பாதுகாப்பு கருதியும் தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளை மதித்தும் மனிதாபிமான முறையில் இலங்கைத் தமிழர்களின் அவலங்களை போக்க இராஜதந்திர ரீதியில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்கு மூல காரணம் என்ன என்பதை அறிந்து அதற்கு ஏற்ப தீர்வுகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

நடைமுறைக்கு ஏற்ப யதார்த்த நிலைகளுக்கு அமைய தீர்வுதிட்டம் அமையவேண்டும் என்ற ரீதியில் இந்திய மத்திய அரசின் செயல்பாடு இருக்க வேண்டும்.

www.tamilarangam.net

**'உள்ளதை உள்ளபடி உணராத நிலை'**

இலங்கையின் நிலைமை வேறு; இந்திய மாநிலங்களின் நிலைப் பாடுகள் வேறு. ஆகவே இந்திய மாநிலங்களின் அரசியல் அமைப்பு இலங்கைக்கு உதவாது என்பதுதான் எங்கள் கணிப்பு. இலங்கையில் அரசியல் தீர்வு இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகளுக்கும் போராளி களின் தியாகங்களுக்கும் உகந்தவையாக இருக்கவேண்டும். போராளி களின் 16 வருட தியாகங்களை மனதில் கொள்ளாத தீர்வு எவ்விதத்திலும் வெற்றி பெற முடியாது. இந்திய மத்திய அரசின் உயர்தர உத்தியோக வர்க்கம் இதை சரியாக உணராதபடியால் தான் ராஜீவ் காந்தியின் சமரச முயற்சி தோல்வியில் முடிந்தது.

இந்திய மத்திய அரசின் செயல்பாடுகளுக்கு தமிழ்நாடு தான் திறவுகோல், ஆகையால் அகில உலகத்தில் இருக்கும் தமிழ் புத்திஜீவிகள் இந்த உண்மையை உணர்வதுடன் அதற்கு ஏற்ப அரசியல் நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

தமிழ் நாட்டில் பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் சில வர்க்கத்தினரின் கையில் இருக்கும் நிலையில் அவர்கள் இலங்கைத் தமிழர்களின் அபிலா ஷைகளுக்கோ, அல்லது போராளிகளின் தியாகங்களுக்கோ மதிப்பு கொடுப்பதில்லை. பொது ஜன அபிப்பிராயத்தை எங்களுக்கு எதிராக அவர்கள் திசை திருப்பினார்கள். அவர்களின் போக்கிற்கு இலங்கைத் தமிழர்கள் பொறுப்பு இல்லை. ஆனால் தமிழ் நாட்டு அரசியல் தான் இதற்கக் காரணம். திராவிட இயக்கங்களுக்கு இலங்கைத் தமிழர்கள் மீது பாசம் இருப்பதை மறத்தல் இயலாது.

இலங்கை அரசியலில் சிங்கள பேரினவாதிகளின் செல்வாக்கு மேலோங்கி இருக்கிறது. அவர்களுக்கு அரசியல் தீர்வில் நம்பிக்கை இல்லை. இராணுவத் தீர்வே அவர்களின் விருப்பம். சுருங்கக்கூறின் இது இன ஒழிப்பில் தான் முடியும். இந்த உண்மையை தமிழ் நாட்டுக்கும், இந்திய மத்திய அரசுக்கும் மேற்கு உலகத்துக்கும் புள்ளிவிபரங்களுடன் தமிழ் புத்திஜீவிகள் எடுத்து உரைப்பது மிகவும் அவசியம்.

யூகோஸ்லாவியாவில் சேர்பியர்கள் அல்பேனிய இனத்தை சேர்ந்த மக்கள் மீது இன ஒழிப்பு நடத்துவதை மேற்கு உலகம் வன்மையாக கண்டித்ததுடன் அதற்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்க தீர்மானம் செய்தது. ஆனால் இலங்கையில் 16 வருடமாக இனமோதல்கள்

www.tamilarangam.net

70,000 மக்கள் உயிரை பலி எடுத்தும் அதனை பொருட்படுத்தாது மேற்கு உலகம் இலங்கைக்கு பொருள் உதவிகளை வருடா வருடம் கொடுக்கின்றது. மேற்கு உலகம் ஒரே வகையான பிரச்சினைக்கு வித்தியாசமான முரண்பட்ட கோட்பாடுகளை கடைப்பிடிக்கின்றது.

வருடா வருடம் இலங்கைப் போராளிகளுக்கு எதிராக நடைபெறும் யுத்தத்திற்கு 5000 கோடி ரூபா செலவாகின்றது. இனிமேல் இத்தொகை மேலும் ஏறும். பாராளுமன்றத்தில் யுத்தத்துக்கான வரவு-செலவு திட்டம் வரும் பொழுது தமிழ் கட்சிகள் அரசாங்கத்துக்கு சாதகமாக வாக்குகளை அளிப்பது மிகுந்த விசித்திரமான விடயம்.

## 'மாறுபட்ட அமெரிக்க போக்குகள்'

தமிழர்களின் எதிர்காலம் ஓர் கணிப்பில் அமெரிக்காவின் தலையீட்டிலும் பின்னிப்பிணைந்திருக்கிறது. அமெரிக்கா இரண்டாவது மகா யுத்தத்தின் முன் விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு கொடுத்து இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்று பிரிட்டனுக்கு அழுத்தம் கொடுத்தது. இரண்டாவது உலக யுத்தத்துக்குப்பின் அமெரிக்கா அநேக நாடுகளில் சுதந்திர வேட்கையை நசுக்க முயன்றது. வியட்நாம், மத்திய அமெரிக்க நாடுகளில் சுதந்திர போராட்டங்களை இராணுவ ரீதியில் அடக்க முயன்றும் அமெரிக்கா தோல்வி கண்டது. ஈராக், லிபியா சோமாலியா ஆகிய நாடுகளில் நேரடியாக தலையிட்டு தோல்வி கண்டது.

தன்னுடைய நாட்டில் ஜனநாயகத்தை பேணியும் தன் கொள்கைகளுக்கு விரோதமான ஏனைய நாடுகளில் ஜனநாயக கிளர்ச்சிகளை நசுக்கவும் முயலுகின்றது. அதுபோல தற்பொழுது இலங்கை அமெரிக்காவுக்கு சார்பாக நடந்து கொள்வதால், இந்தியாவுக்கு இலங்கை மீது தமிழர் சார்பாக இராஜதந்திர அழுத்தம், தலையீடு இருக்கக்கூடாது என்று 'கீதா உபதேசம்' செய்கின்றது. அமெரிக்கா இலங்கையில் தனது தேசிய நலனுக்காக வர்த்தக சலுகைகளையும், வேறு இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த சலுகைகளையும் பெற்றதின் பலனாக நன்றிக்கடனுக்காக இலங்கை அரசின் வேண்டுகோளை ஏற்று புலிகள் இயக்கத்தை தடை செய்தது. அதே சமயம் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை அது அதிக விமர்சனம் செய்யவில்லை.

அதன் பலனாக அமைச்சர் திரு கதிர்காமர் லண்டனில் தமது உரையில் பிரபாகரனை கைது செய்வதற்கு அமெரிக்க உதவி தேவைப் படும் என்றும் சொன்னார். இது எவ்வளவு பாரதூரமான விடயம் என்பது உணரப்படாதது பெரு வியப்புக்குரியது. இலங்கை அரசின் இக்கோரிக்கைக்கு அமெரிக்கா செவிசாய்த்து வன்னியில் இராணுவ ரீதியில் செயல்பட்டால் இலங்கை இன்னொரு வியட்நாமாக மாறும். இது தமிழர், சிங்களவர்கள் எல்லார்க்கும் கடும் விளைவுகளை ஏற்படுத்தும்

இதே சமயம் இந்திய மத்திய அரசு அமெரிக்காவின் தலையீட்டை தன் தென் பிராந்தியத்தில் பொறுத்துக் கொண்டும், பார்த்துக் கொண்டும் இருக்கும் என்று எண்ணிப் பார்க்க முடியாது. சர்தார் கே.எம்.பணிக்கர் எழுதிய புத்தகத்தில் 'இலங்கை இந்தியாவின் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைகின்றது'' என்று ஆணித்தரமாக சொல்லி இருக்கின்றார். இந்தியா வின் உத்தியோக வர்க்கமும் இந்த அடிப்படையில்தான் செயல்படும். இந்த நிலையில் பாகிஸ்தானும், சீனாவும் இலங்கைக்கு தமிழ் போராளி களை கொன்று குவிக்க யுத்த தளவாடங்களை கொடுக்கின்றன. அமெரிக் காவும் இராணுவ ரீதியாக வேறு பல உதவிகள் செய்கின்றது. ஆகவே இந்திய மத்திய அரசு இவ்விடயம் மேலும் பல முற்று இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையுமுன் இராஜதந்திர ரீதியில் தலை யீடு செய்யும் நிலைக்கு வரலாம்.

1987 ஆம் ஆண்டு இந்திய மத்திய அரசு இலங்கைத் தமிழர் பிரச் சினையை நன்கு பரிசீலனை செய்யாமல் தலையிட்டபடியால் எடுத்த காரியம் தோல்வியில் முடியும் நிலை ஏற்பட்டது.

இனிமேல் இந்திய மத்திய அரசு யதார்த்த நிலைமையை புரிந்து தமிழ் மக்களின் அபிலாஷைகளை மதித்தும், தமிழ் போராளிகளின் தியாகத்தையும் உணர்வுகளையும் உணர்ந்தும், தமிழ் நாட்டு மக்களின் ஆர்வத்தையும் கவலைகளையும் பற்றி சிந்தித்தும், இந்தியாவின் பாது காப்பை மனதில் கொண்டும் இந்திய அரசு இராஜதந்திர ரீதியில் செயல் பட முன்வரலாம் என பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

www.tamilarangam.net

3

24-07-98

## வன்னிப்பகுதியில் துயருற்றுவாடும் புலம் பெயர்ந்த மக்கள் மத்தியில் கதியற்ற நிலையில் எழும் அவலக்குரல்கள்!

இலங்கைத் தமிழர் என்று கூறும் பொழுது அதன் வரைவு இலக்கணத்தையும் சொல்ல வேண்டிய கடமை உள்ளது. மலையகத்தமிழர், வட-கீழ் தாயகத்தில் வாழும் தமிழர், கொழும்பிலும் ஏனைய தெற்கு இலங்கை பகுதிகளிலும் வசிக்கும் தமிழர் ஆகிய எல்லாரையும் இது உள் அடக்கும். முக்கியமாக அகதிகளாக தமிழ் நாட்டிற்கும், ஏனைய நாடுகளுக்கும் சென்று கஷ்டங்களுக்கு முகம் கொடுத்து வாழ்பவர்களையும் புலம் பெயர்ந்து வசிப்பவர்களையும், இதில் சேர்ப்பது மிகவும் அவசியம்.

பொதுவாக, எல்லா நாடுகளிலும் வசிக்கும் தமிழர்களின் எதிர் பார்ப்புகள் ஒன்றாக இருந்தாலும் இடத்துக்கு இடம் வித்தியாசம் தென்படும். ஆனால் முரண்பாடு இல்லை. உதாரணமாக அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வசிக்கும் தமிழர்களின் எதிர் பார்ப்பும் இராணுவ கட்டுப்பாடு இல்லாத தாயக பகுதியில் (வன்னி) வாழும் தமிழர்களின் எதிர்பார்ப்பும் ஒன்றாக இருக்க முடியாது.

வன்னியில் வாழும் தமிழ் மக்களுக்கு மரம் தான் கூரை, மரத்தின் கீழ்தான் பள்ளிக்கூடம், சதாநேரமும் விமானக்குண்டு வீச்சு ஆபத்து, உணவுக்கஷ்டம், குழந்தைகள், முதியோர் பிச்சை எடுக்கும் காட்சிகள், பட்டினிச்சாவை எதிர்நோக்கும் காட்சிகள், அடிக்கடி நோய் வாய்ப்பட்டு சிகிச்சைக்கு வசதி இல்லாது துன்புறும் காட்சிகள் என்பவை இப்பகுதியில் சாதாரணம்.

இந்த சூழ்நிலையில் இவர்களின் எதிர் பார்ப்புகளும் கொழும்பில் வசிக்கும் தமிழர்களின் எதிர்பார்ப்பும் எவ்விதம் ஒன்றாக இருக்கும்? இன்றைய நிலையில் வன்னியில் அவதிக்குள்ளாகி இருக்கும் தமிழ் மக்களுக்கு 1000 ஆண்டுக்கு முன் வாழ்ந்த கவி அரசன் கம்பனுக்கு 'விழா' எடுக்க ஆர்வம் வருமா? அல்லது பொன்னாடை போர்த்தும் கலாசாரத்தில் நம்பிக்கை அவர்களுக்கு இவ்வேளையில் உண்டா?

www.tamilarangam.net

வன்னித்தமிழ் அகதிகளுக்கு 'கீதா உபதேசமோ', திருவாசகமோ மனதில் பதியாது. அவர்களுக்கு நேரத்துக்கு 'கஞ்சி'கிடைத்தால் அதுவே போதும் என்று இறைவனுக்கு துதி சொல்லுவார்கள். இந்த விடயம் நாம் நேரில், கண்ட உண்மை.

இந்த வகையில் இந்தியாவிடம் இருந்து தமிழர்களின் எதிர்பார்ப் புகள் என்று கூறும் போது அந்த எதிர்பார்ப்புகள் பலவகைப்படும். பொதுவாக தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் பின்வரும் வகைகளைச் சார்ந்தன.

1. அவசர மனிதாபிமான உணவு, மருந்து வகை உதவி.
2. தமிழர்களின் பாதுகாப்புக்கு உறுதி.
3. தமிழர்களின் 1000 ஆண்டுகளுக்கு மேலான சரித்திரப் புகழ் பெற்ற தாயகத்தை பாதுகாத்தல்.
4. தமிழர்களின் அரசியல், பொருளாதார சமூக உரிமைகள்.
5. தமிழர்கள் ஓர் தனித்துவமான தேசிய இனம் என்பதும் அவர் களின் சுய நிர்ணய உரிமையும்.

## அவசர மனிதாபிமான இந்திய உதவி

ஐ.நா.மனித உரிமைகள் சாசனத்தின் படி மனிதன் வாழ உரிமை உண்டு. (Right to life) ஆனால் இலங்கையில் நடைமுறையில் 1983 ஆம் ஆண்டிற்குப் பின் தமிழர்கள் இந்த உரிமையை இழந்து விட்டார்கள். தமிழ் மக்கள், விமான குண்டு வீச்சுகள், பீரங்கித்தாக்குதல்கள், ஷெல் அடிகள், சுற்றிவளைப்பு தேடுதல்கள் எல்லாவற்றிற்கும் முகம் கொடுக் கின்றார்கள். இவை எல்லாம் ''யுத்த கால குற்றச் செயல்கள்'' (War Crimes) என சமீபத்தில் 160 நாடுகளால் ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேசிய குற்றவியல் கோர்ட்டினால் (International Crimes Court) ஏற்றுக் கொள்ளப்பட்டது. இத்தீர்மானத்துக்கு (ரோமாபுரியில் நிறைவேற் றப்பட்டது) இலங்கை அரசு சாதகமாக வாக்களிப்பு செய்யவில்லை. காரணம் சுலபமாக அறியலாம். வன்னியில் அப்பாவி மக்களும் சிறுவர் களும் பட்டினி கிடந்தும் நோய்வாய்ப்பட்டும் மடிகிறார்கள். 1995 கார்த்திகை, மார்கழி மாதம் யாழ்.குடாநாட்டில் இருந்து அரச இராணுவ நடவடிக்கையால் 5-1/2 லட்ச மக்கள், தங்கள் பாதுகாப்புக்காக வன்னி யில் புகலிடம் தேடி அலைந்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த அவலத்தையும் துன்பத்தையும் மனதில் கொண்டு அவர்களின் கஷ்டத்துக்கு நிவாரணமாக ஐ.நா. செயலாளர் நாயகம் திரு.பூட்ரோஸ் காலி (Mr.Butros Ghali) சர்வதேச சமுதாயத்துக்கு தமிழர்களின் அவலத்தை தீர்க்கும் வண்ணம் மிகவும் உருக்கமான ஒரு வேண்டுகோள் விடுத்தார். ஆனால் இலங்கை வெளிநாட்டு விவகார அமைச்சர், இவரின் வேண்டுகோளை கடுமையாக நிராகரித்து விட்டார். இவ்விடயம் இலங்கையின் உள்நாட்டு விடயம் என்றும் ஆகவே வெளிநாட்டவர் இதில் தலையிடக்கூடாது என்றும் ராஜதந்திர ரீதியில் ஐ.நா.செயலாளர் நாயகத்துக்கு சூடாக கூறிவிட்டார்.

இதனால் தமிழ் நாட்டில் இருந்து சேகரித்த அவசிய மருந்துகள், இரத்தம் கூட இங்கு வரதடை செய்யப்பட்டு விட்டது. இது இலங்கை அரசின் மனிதாபிமானம் அற்ற மனச்சாட்சிக்கு விரோதமான செயல் என்றே கூறலாம்.

அதே சமயம் இலங்கை அரசு இது உள்நாட்டு பிரச்சினை என்று கூறுவதனால் தமிழ் அகதிகளுக்கும் வன்னியில் புலம் பெயர்ந்த தமிழ் மக்களுக்கும் தேவையான உணவு, மருந்து வகைகள் கொடுத்து உதவி இருக்க வேண்டும். அவர்கள் கொடுத்த உதவி நன்றாகவும், போதியளவும் இருந்தால் பட்டினி, போஷாக்கின்மை நோய்வாய்ப்படுதல் நடைபெற வாய்ப்பு இருந்திருக்காது. இது மனித உரிமை மீறலாகவும் இன ஒழிப்பின் ஒரு அம்சமாகவும் கொள்ள வேண்டியுள்ளது. அமெரிக்காவும், மேற்கு உலகமும் இது குறித்து மௌனம் சாதித்தது வேதனைக்குரிய விடயம்.

ஆகவே இந்தியா வன்னித்தமிழர்களுக்கும் மற்றும் தமிழ்த்தாயக அகதிகளுக்கும் மனிதாபிமான முறையில் பட்டினிச்சாவை தவிர்க்கும் வழியாக உணவு, மருந்து வகைகளை அவசரமாக அன்பளிக்க முன்வர வேண்டும். இராஜ தந்திர ரீதியில் இதனை மேற்கொள்ளலாம்.

*இந்த அன்பளிப்புகள் வழங்கல் சர்வதேச ஸ்தாபனங்கள் மூலம் செய்யப்படல் வேண்டும்.*

வன்னியில் வாழும் மக்கள் மலேரியா, இன்னும் பல நோய்களால் அவதிப்படுகிறார்கள். மருத்துவ வசதிகள் இல்லை. மருந்து விநியோகமும் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே தமிழ் தெரிந்த இந்திய

டாக்டர்களை வன்னிக்கும் மற்ற இடங்களுக்கும் அனுப்புவது சாலச் சிறந்தது. மாணவர்கள் மரத்தின் கீழ்தான் படிக்கின்றார்கள். ஆகவே பள்ளிக்கூடங்களை புனருத்தாரணம் செய்ய இந்திய அரசு முன்வர வேண்டும். போக்குவரத்துக்கு மிகவும் கஷ்டம் ஆனபடியால், பேருந்துகளை அனுப்பலாம்.

வன்னித் தமிழர்களும், ஏனைய தமிழர்களும் இந்திய அரசிடம் இருந்து மனிதாபிமான முறையில் உதவி பெற காரணங்கள் உண்டு. இலங்கைத் தமிழர்களுக்கும், தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கும் உள்ள உறவு தாய்க்கும், பிள்ளைக்கும் உள்ள உறவுதான். இந்த உறவை'' பொக்குள் கொடி'' உறவு என்றும் சொல்லலாம். அவதியில் துன்பப்படும் பிள்ளைக்கு தாய் உதவுவது இயற்கைதானே.

அன்னை இந்திரா காந்தி 1983 இனக்கலவரத்துக்கு பின்பு ராஜ தந்திர ரீதியில் இலங்கைத் தமிழர் நலன் கருதி செயல்பட்டார். அன்னை இந்திரா 1983 கலவரத்தின் பின்பு, பண்ரூட்டி ராம சந்திரனை ஐ.நா. ஸ்தாபனத்துக்கு அனுப்பி இலங்கைத் தமிழர்களின் அவலத்தை எடுத்துரைக்கும் படி பணித்தார். அவர் அமெரிக்காவில் பல இடங்களில் இலங்கைத் தமிழர் படும் அவலங்கள் பற்றி விரிவுரைகள் செய்தார். அன்னை இந்திரா ஓர் அரசியல் தீர்வு ஏற்பட திரு.பார்த்தசாரதியை இங்கு அனுப்பினார். ஆனால் அன்னை இந்திராவின் அகால மரணத்தால் இலங்கைத் தமிழரின் 'தலைவிதி' மாறி விட்டது. அன்னை இந்திரா இருந்த காலத்தில் தமிழர் அனுபவித்த துன்பங்களைப் பார்க்கிலும் தற்பொழுது உள்ள அவலங்கள் மலையளவு அதிகரித்துள்ளன. தற்பொழுது தமிழர்கள் பெரும்பாலும் அகதிகளாகவும் அநாதைகளாகவும் வாழ்க்கை நடத்துகின்றனர். மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.இராமசந்திரன் 'இலங்கைத் தமிழர் அனாதைகள் அல்லர்'' என்று சென்னையில் ஒரு கூட்டத்தில் கூறினார். அவரின் மறைவும் எங்களை பாதித்துவிட்டது.

அன்னை இந்திராவுக்கு பின் அவரின் மகன் ராஜீவ் காந்தி இலங்கைத் தமிழரின் அவலங்களை நீக்க ராஜதந்திர ரீதியில் பாடுபட்டார். உலகில் உள்ள வல்லரசுகளின் தலைவர்களுக்கு இலங்கைத் தமிழர்களின் அவலங்கள் பற்றி கடிதம் அனுப்பினார். மனிதாபிமான ரீதியில் உணவுப் பண்டங்களை யாழ்ப்பாணத்திற்கு விமானத்தில் இருந்து போடச் செய்தார். ஆனால் 'விதி' அவர் உயிரோடும் விளையாடி விட்டது. தமிழர்களின் விதியும் கடுமையாக மாறிவிட்டது.

www.tamilarangam.net

தமிழ் மக்களின் அவலங்கள் ஓயாமல் அவர்களின் துன்பங்கள் கடுமையாகி விட்டன.'

## அதிக அதிகாரம் உள்ள சமஷ்டி அமைப்பு ஒன்றுதான் நியாயமான அரசியல் தீர்வாக அமையும்!'

1987 ஆம் ஆண்டு ஆடிமாதம் 29 ஆம் திகதி கை எழுதப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் தமிழரின் உயிர், பாது காப்பு எல்லாவற்றிற்கும் இந்தியா 'உத்தரவாதம்' கொடுத்தது. ஆனால் ராஜீவின் மரணத்தால் பின் அடைவு ஏற்பட்டு இந்த ஒப்பந்தத்தை இந்தி யா நடைமுறைப்படுத்தவில்லை. உயிர் இழப்புகள் உடைமை இழப்புகள் எல்லாம் தமிழ் மக்கள் மத்தியில் அதிகமாகிவிட்டன.

'உத்தேச சமஷ்டி அரசியல் அமைப்பு பற்றி சிங்கள அரசியல் கட்சிகள் இணைந்து தமிழ் போராளிகளுடன் மூன்றாவது நாட்டின் மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமுகதீர்வைக்காணலாம். இதற்கு இந்தியாவின் பங்களிப்பு அவசியம்.

இந்தியா இலங்கைத் தமிழரின் பாதுகாப்புக்கு சட்டரீதியாக சர்வ தேசிய உடன்படிக்கையில் உத்தரவாதம் கொடுத்து கையொப்பம் இட்ட படியால் தார்மீக ரீதியிலும், சர்வதேச சட்ட ரீதியிலும் அதற்க கடமைப் பாடு இருக்கின்றது. இந்த வகையில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள வன்னித் தமிழ் மக்களுக்கு உணவு, மருந்துகள் முதலியவற்றை சர்வ தேசிய ஸ்தாபனங்கள் மூலம் விநியோகிக்க ஒழுங்குகள் செய்ய் வேண்டியது இந்தியாவின் கடமை. இது தார்மீகக் கடமை, இதை செய்ய தவறினால், 1941-42 இல் ஏற்பட்ட 'வங்கப் பஞ்சம்' போல் 'வன்னிப் பஞ்சம்' உருவெடுக்கலாம். அப்படி நடந்தால் இந்தியா மீதுபழி ஏற்பட லாம். தமிழ் நாட்டில் சீற்றமும், கவலையும் ஏற்படும்.

## தமிழர்களின் பாதுகாப்புக்கு உறுதி

இன, சரித்திர, பூகோள, சமய, கலாசார காரணங்களுக்காக தமிழர் களின் பாதுகாப்பு இந்திய மக்கள் உடைய பாதுகாப்புடன் பின்னிப்போய் விட்டது. இதையாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. இந்தியா இக்காரணங்களுக்காகத்தான் இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான 'இன ஒழிப்பு' நடவடிக்கைக்கு எதிராக குரல் கொடுத்தது.

கடந்த சில வருடங்களாக ராஜீவின் துயர சம்பவத்தால் இந்தியா சற்று விலகிப்போய் 'தலையிடா' கொள்கையை கடைப்பிடித்தது. இதை சிங்கள பேரினவாதம் தப்புக்கணக்கு போட்டு விட்டது. ஆனால் இந்தியாவின் கொள்கையில் திரும்பவும் மாற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அமெரிக்கா, பாகிஸ்தானுடனும் சீனாவுடனும் நட்புக் கொண்டு இலங்கையில் வரம்புக்கு மீறி தலையிட்டால் இலங்கை இன்னொரு வியட்னாமாக மாற நிச்சயம் வாய்ப்பு உண்டு. இதை இந்தியா தன்னுடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று காரணம் காட்டி தமிழர் சார்பாக இலங்கைக்கு அதிக கடுமையான ராஜதந்திர நெருக்குதல் கொடுக்கலாம்.

## தமிழர்களின் சரித்திர அங்கீகாரம் பெற்ற தாயகத்தை பாதுகாத்தல்

தமிழர்களுக்கு தாயகம் ஒன்று இல்லை என்று சிங்கள பேரின வாதம் சரித்தரத்தை மூடி மறைக்க பகீரத முயற்சியில் இறங்கியுள்ளது. இந்திய உபகண்டத்தை எடுத்தால் சரித்திரத்தில் பாகிஸ்தான். என்ற நாடு இருந்திருக்கவில்லை. ஆனால் இலங்கைச் சரித்திரம் வேறு. இலங்கையை ஆட்சிசெய்த இராவணன் 3500-4000 ஆண்டுகளுக்கு முற்பட்டவன். சைவபக்தன், சிவலிங்கத்தை வழிபட்டவன் எல்லாளன் அநுராதபுரத்தில் ஆட்சி புரியும் பொழுது வட-கீழ் பிராந்தியத்தை மட்டும் தான் ஆட்சி புரியவில்லை. இப்படி எத்தனையோ உதாரணங்கள் காட்டலாம்.

யாழ்ப்பாண குடாநாட்டில் கந்தரோடையில் பௌத்த சின்னங்களை கண்டார்கள். இது உண்மைதான் ஆனால் அது சிங்களச் சின்னங்கள் இல்லை மாணிக்கவாசகர் காலத்தில் தமிழ் நாட்டில் சைவம், சமணம், பௌத்தம் இருந்தன. தமிழ் நாட்டில் பௌத்தத்தை தழுவித்தான் மணிமேகலை, சிலப்பதிகாரம் என்கிற காப்பியங்கள் படைக்கப்பட்டன. சுருங்கச் சொன்னால், தமிழ் நாட்டில் பௌத்தம் நன்கு வேர் ஊன்றி இருந்தபடியால், யாழ். குடாநாட்டிலும் அது பரவ வாய்ப்புண்டு. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வடகீழ் பிராந்தியம் உட்பட வேறு இடங்களிலும் தமிழ் ஆதிக்கம் இருந்திருக்கின்றது. தமிழரின் சுதந்திரமான ஆட்சி இலங்கையில் 1621 ஆம் ஆண்டுவரை நிலைத்து இருந்தது. இது சரித்திர உண்மை.

ஒரு கட்டத்தில் தமிழர் ஆட்சி இலங்கையில் பெரும் பகுதியில் நிலவிய நேரத்தில் இபன் பட்டுட்டா (IBNBATTUTA) என்கிற அராபிய சுற்றுலாப்பயணி யாழ்ப்பாண மன்னனிடம் சிவனொளிபாத மலைக்கு போவதற்கு உத்தரவு பெற்றார். இது நடந்தது 14 ஆம் நூற்றாண்டு நடுப்ப குதியில். இது உணர்த்துவது என்னவெனில் தமிழரின் ஆதிக்கம் தெற்கு இலங்கையில் நன்கு பரவி இருந்தது என்பதையே இலங்கையின் புகழ் பெற்ற பேராசிரியர் K.M.D. சில்வா தன்னுடைய இலங்கைச் சரித்திர நூலில் தமிழரின் ஆதிக்கம் பற்றி நன்கு விளக்கியிருக்கின்றார். தரை வாரியாக புத்தளம், கம்பொல வரையில் தமிழர் ஆதிக்கம் இருந்ததாக வும், கடல் மார்க்கமாக பாணந்துறைவரையில் இருந்ததாகவும் அவர் கூறு கின்றார்.

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை உடன்படிக்கையில் வட-கீழ் பிராந்தியம் தமிழரின் சரித்திர ரீதியான தாயகம் என்று கூறப்பட்டு உள்ளது. ஆகையால் தமிழரின் தாயகத்தை சிங்கள பேரினவாதம் மறுக்கவும், மறைக்கவும் முடியாது.

## தமிழர்களின் அரசியல், பொருளாதார, சமூக உரிமைகள்:-

தமிழ் தாயகம் 1621 ஆம் ஆண்டுக்குமுன் இருந்த அரசியல் நிலைக்கு திரும்பவும் போகாமல் தவிர்க்கும் எண்ணம் பேரினவாதி களுக்கு இருக்ககுமானால் தமிழர்களும், சிங்களவர்களும் இரு பெரும் சமூகத்தினர் என்றும், இவ்விரு சமூகத்தவர்களும் வேறுபட்ட கலாசார த்தைக் கொண்ட தேசிய இனத்தவர்கள் என்றும், தமிழர்களுக்கு தனித்துவ தாயகம் ஒன்று சரித்திரகாலம் தொட்டு இருந்தது என்றும் அங்கீகாரம் செய்தல் முதற்பணியாகும்.

சிங்களவர்கள் அனுபவிக்கும் உரிமைகள் யாவற்றையும் தமிழ் மக்களும் அனுபவிக்க ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் குறிப்பிட்ட எந்த சாராருக்கும் பாரபட்சம் காட்டக்கூடாது. முன்னுரிமை எந்தச் சமுதாயத்துக்கும் கொடுக்கப்படாமல் இருக்க வேண்டும். உத்தியோகத்துக்கும் பல்கலைக்கழகத்திற்கும் அனுமதிப்பதி லும் 'திறமை' ஒன்று தான் அளவுகோலாக பாவிக்கப்படல் வேண்டும். அதேபோல் யாவரும் பொருளாதாரதுறையில் நீதியாகவும் பாரபட்சம் இல்லாமலும் நடத்தப்பட வேண்டும். தமிழர் தாயகத்தில் அரச பணத்தைக் கொண்டு சிங்களவரை குடியேற்றம் செய்யாமல் தவிர்க்க வேண்டும்.

www.tamilarangam.net

இலங்கை பூராகவும் சிங்களம், தமிழ் இரண்டும் அரசாங்க மொழிகளாக நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

தமிழரின் அபிலாஷைகளையும் அவர்களுக்கு ஓர் தனித்தாயகம் ஒன்று இருக்கின்றது என்பதையும் அங்கீகரிப்பதனால் அவர்களின் உரிமைகளையும் தாயகத்தையும் பாதுகாக்க அதிக அதிகாரம் உள்ள சமஷ்டி அமைப்பு ஒன்றுதான் நியாயமான அரசியல் தீர்வாக அமையும்!' இந்த சமஷ்டி முறையில் இரு வித்தியாசமான தேசிய இனங்கள் ஒன்றாக சேர்ந்து சமத்துவ அடிப்படையில் ஓர் தேசமாக (Confederation of Two States) கருதப்பட வேண்டும். தமிழ் மக்களின் வரலாற்று தியாகங்களுக்கு ஏற்பவும் அவர்களின் அபிலாஷைக்கு மதிப்புக் கொடுத்தும் அதிகாரங்கள் அமையவேண்டும் மத்திய அரசிடம் அதிக அதிகாரங்களைக் குவிக்காமல் இரு சமஷ்டி அமைப்புகளுக்கு மாத்திரம் அதிக அதிகாரம் குவிக்கப்படல் வேண்டும். மத்திய அரசிடம் பாதுகாப்பு, அந்நியநாட்டு விவகாரம் நாணய விடயம் மட்டும் விடப்படவேண்டும். ஏனைய துறைகள் எல்லாம் சமஷ்டி அமைப்புகளைச் சார்ந்தவை ஆகும். காணி, பொலிஸ், துறைமுகங்கள், கல்வி எல்லாம் சமஷ்டி அமைப்புகளுக்குத்தான் சொந்தமாக இருக்கும்.

இந்த அரசியல் அமைப்பு பற்றி சிங்கள அரசியல் கட்சிகள் இணைந்து தமிழ் போராளிகளுடன் மூன்றாவது நாட்டின் மத்தியஸ்த உதவியுடன் பேச்சுவார்த்தை நடத்தினால் நாட்டின் பிரிவினையை தடுக்கலாம் இதற்கு இந்தியாவின் பங்களிப்பு அசியம். இதில் தோல்வி ஏற்பட்டால் தமிழ் தாயகம் 1621 ஆம் ஆண்டு நிலைக்குப்போவதை தவிர்க்க முடியாமல் போய்விடலாம்.

www.tamilarangam.net

# 4

03-08-98

## 1621 இற்கு முன்பிருந்த இறையாண்மையை திரும்பப் பெற தமிழருக்கு உரிமையுண்டு

1983 ஆம் ஆண்டு ஆடி மாதம் நிகழ்ந்த இனப்படுகொலையை அடுத்து இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அன்னை இந்திரா காந்தி எடுத்த முயற்சி வெற்றி பெறவில்லை. அன்னையாரும் 1984 இல் அகால மரணம் அடைந்தார். அது தமிழரின் தலைவிதியை மாற்றிவிட்டது. அதற்குப் பின் 1985 ஆம் ஆண்டு ஆடி மாதம் ராஜீவ் காந்தியின் முயற்சியால், பூட்டான் தலைநகரான ''திம்பு'' வில் இரப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு ஓர் மகாநாடு நடக்க ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது. இதில் இலங்கை அரசு தமிழர் விடுதலைக் கூட்டணி, மற்றும் ஐந்து முன்னாள் ஆயுதம் ஏந்திய தமிழ்க் குழுக்கள் பங்கு பற்றின. இலங்கைச் சரித்திரத்தில் முதல் முறையாக, சகல அரசியல் கட்சிகள் எல்லாம் ஒரே குரலில் மிகவும் ஆகக்குறைந்த பட்சமாக நாலு அடிப் படைக் கொள்கைகளைக் கோரிக்கையாக அந்த மகாநாட்டில் முன் வைத்தன. இந்தக் கொள்கைகள், தமிழரின் அபிலாஷைகளுக்கு ஓர் அளவு முக்கியத்துவம் கொடுக்கின்றதாக இருந்தாலும், தமிழரின் சுதந்திர வேட்கைக்கும், தாகத்துக்கும் இது சமமாக இருக்க முடியாது.

இத்தருணத்தில் தமிழரின் 2000 ஆண்டுக்கு மேற்பட்ட ஆட்சியின் இறையாண்மை 1621 இல் யுத்தத்தில் பறிபோனது பற்றியும் அதைத் திரும்ப பெறத் தங்களுக்கு உரிமை உண்டு என்று வெளிப்படையாகத் துணிவுடன் உலககுக்கு எடுத்துக் கூறாதது ஓர் பெரிய சரித்திரத்தவறாகும். என்றாலும், தமிழர்கள் முன் வைத்த நாலு அம்சக் கொள்கைக் கோரிக் கைகள் ஓர் சமரசத்துக்கு உதவ முடியும். இந்த நாலு அம்ச அடிப்படைக் கொள்கைகள் பின்வருமாறு:-

1. தமிழர்களை ஓர் பிரத்தியேக தேசிய இனமாக அங்கீகரித்தல்.
2. தமிழர்களுடைய, இனம் கண்டுள்ள தாயகத்தை அங்கீகரித்தல்.
3. தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை அங்கீகரித்தல்.
4. இலங்கையில் வசிக்கும் தமிழர்கள் எல்லார்க்கும் பூரண குடியுரிமை உண்டு என்பதை அங்கீகரித்தல்.

www.tamilarangam.net

என்ன காரணங்களுக்காக நமது தமிழ் அரசியல் கட்சிகள் 1621 ஆம் ஆண்டுக்கு முன் இருந்த நம் அரசியல் நிலைமைக்குத்தான் நாம் திரும்ப வேண்டும் என்கிற கோரிக்கையை இந்த மகாநாட்டில் முன் வைக்கவில்லை என்று அறிவது மிகவும் கடினமான விடயம்.

சரித்திரத்தில், பாகிஸ்தான் என்ற ஒரு நாடு இருந்திருக்கவில்லை என்று அறிந்தும், உணர்ந்தும், காயிதே முஹமது அலிஜின்னா 1940 இல் ''அழுங்குப் பிடியாக'' முஸ்லிம்களின் ஒரே ஒரு கோரிக்கை பாகிஸ்தான் உருவாக வேண்டும் என்பது தான் இலட்சியம் என ஆணித்தரமாகக் கோரிக்கை வைத்தார். நாங்கள் ஏன் அப்படிக் கேட்கவில்லை. எங்களுக்கு அரசியல் சாமர்த்தியம் அல்லது சாணக்கியம் இல்லை என்பதைத் தான் இது வெளிப்படுத்துகின்றது.

1956 இல் இருந்து 1983 வரை அடிக்கடி தமிழர்களுடைய உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் குந்தகம் விளைவித்த தாக்கதை மனதிற்கொண்டும், சிங்கள-தமிழ்த் தலைவர்களுக்கிடையில் ஏற்பட்ட உடன்படிக்கைகளைக் காற்றில் பறக்க விட்ட பின்பும், தமிழர்களுக்கு எதிரான கொடுமையான பாரபட்சம் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்தால், இந்த நாலு அம்சக் கொள்கை - கோரிக்கைகள் தமிழர்களின் அபிலாஷைகளை முழுமையாகப் பூர்த்தி செய்வதாகத் தெரியவில்லை. 1985 இல் திம்பு மகாநாட்டில், தமிழர்கள் ஒரே குரலில் 1621 இற்கு முன் இருந்த நிலைமைக்குத் திரும்பப் போக வேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைத்திருந்தால் எங்கள் சுயமரியாதைக்கும் சுதந்திர தாகத்துக்கும் நிகராக இருந்திருக்கும் என்பதில் ஓர் வித ஐயமுமில்லை. ஆனால், அதற்குப் பதிலாக நாலு அம்சக்கொள்கை, கோரிக்கைகளைக் குறைந்தளவு பட்சமாக முன்வைத்த பின்பு, இலங்கை அரசின் விஷேச பிரதிநிதி மறைந்த எச். டபிள்யூ. ஜயவர்த்தனா இக் கொள்கைகளை நிராகரித்து விட்டார். அவற்றை ஏற்றால் ''தமிழ் ஈழம்'' கொடுப்பதற்குச் சமமாகத்தான் முடியும் என்பது தான் அவரின் வாதம். அவர் தமிழர் ஓர் பிரத்தியேக தேசிய இனமாக அங்கீகரித்தால், அவர்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு என்கிற வாதத்தையும் ஏற்றால் தமிழர்

''பிரிந்து போகும்'' உரிமை உண்டு என்பதையும் இதனால் தமிழர்களுக்கு ஓர் பிரிவினை ஏற்படுவதற்கு உதவும் என்கிற காரணங் களைக் காட்டி நிராகரித்தார். எச்.டபிள்யூ. ஜயவர்த்தனா ஏனைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாட்டுப் பல இன சமுதாய நாட்டுப் பிரச்சினைகளின் சரித்திரத்தை ஆராயவில்லை. அவர் தமிழரின் சரித்திரத்தை அறியாதவர் போல் பாசாங்கு செய்திருந்தார். ஆகையினால், நமது அரசியல் கட்சிகள், நாலு அம்சக் கொள்கைகளைச் சுற்றி வளைத்துப் பேசாமல், நாங்கள் யுத்தத்தில் 1621 இல் இழந்த தமிழ் இராச்சியத்தின் இறையாண்மையைத் திரும்பவும் பெறப் போவது தான் எங்கள் ''ஒரே கோரிக்கை'' என்று வாதிட்டால் உலக சமுதாயத்துக்கு எளிதாக விளங்கி இருக்கும்

## "Demand for Restoration of our lost sovereignty in 1621"

### 1. தமிழர் ஓர் பிரத்தியேக தேசிய இனமாக அங்கீகரித்தல்

இந்தக் கொள்கையை, தமிழர்களின் பல ஆயிரக்கணக்கான ஆண்டு சரித்திரங்களையும், (இராவணன் தொடக்கம் சங்கிலியன் வரை) அவர்களின் பிரத்தியேகக் கலாசாரத்தையும் அலசிப்பார்த்தால், சர்வதேச சமுதாயம் அனுதாபத்துடன் நிச்சயமாக அங்கீகரிக்கும். ஏனைய நாடுகளிலும் இதே கொள்கையை ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

சரித்திர காரணங்களாக, தமிழரின் மொழி, கலாசாரம் ஏனைய தேசிய இனங்களிடமிருந்து வேறுபட்டதால், இந்த அடிப்படையில் அந்தத்தனித்துவ குணாதிசயத்தை அங்கீகாரம் செய்வது ஓர் வித தவறும் இல்லை. இதை வகுப்பு வாதம் என்று முத்திரை இடமுடியாது.

### 2. தமிழர்களுடைய இனம் கண்டுள்ள தாயகத்தை அங்கீகரித்தல்

(3500 - 4000 கி.மு) இராவணன் தொடக்கம் சங்கிலியன் வரை (1621) இருந்த சுதந்திரமான ஆட்சிகளின் நிலப்பரப்பை அங்கீகரிக்க வேண்டுதலாக முடிகின்றது. இராவணன் இலங்கை முழுவதும் ஆட்சி செய்தான். எல்லாளன் அனுராதபுரத்தில் இருந்து ஏனைய தற்போதைய சிங்களப் பிரதேசத்தையும் ஆட்சி செய்தான். தமிழ் அரசர்களான ஆரிய சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்தில் இருந்து புத்தளம், கம்பொல வரையும் ஆதிக்கம் செலுத்தி இருந்தனர் என்கிற சரித்திர உண்மையைச் சிங்களப் பேராசிரியர்கள் எழுதியிருக்கின்றார்கள். இராவணன் ஆட்சி புரிந்த நிலப்பரப்பையும், எல்லாளன் ஆட்சி புரிந்த தற்போதைய சிங்களப் பகுதிகளையும் நினைவு கூராமல் வட-கீழ் பிராந்தியம் மட்டும் தமிழரின்

www.tamilarangam.net

தற்போதைய தாயகம் என எண்ணிச் செயல்படுவது நமது அரசியல் சாணக்கியத்தை வெளிப்படுத்தும்.

ஆனால், எச்.டபிள்யூ. ஜயவர்த்தனா நிராகரித்து விட்டார். உண்மையில் ஜயவர்த்தனா தமிழ்த் தாயகத்தின் நிலப்பரப்பை நன்கு அறிந்தாலும், அவர் கிழக்கு இலங்கையில் அரச உதவியுடன் குடியேற்றம் அதிகளவு செய்து சிங்களப் பகுதியாகக் கருதப்படல் வேண்டும் என்று எண்ணித்தான் இவ்விதமான நிலைப்பாட்டை எடுத்துள்ளார் எனக் கருத வேண்டியிருக்கின்றது. இதைக் கடுமையாக எதிர்த்துப் போராடுவது சகல தமிழ்க் கட்சிகளின் புனிதக் கடமையாகும்.

## 3. தமிழர்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு

நாங்கள் 1621 ஆவது ஆண்டு வரை அனுபவித்த சுதந்திரத்தைப் போர்த்துக்கேயருடன் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டு இழந்தோம். பின்பு ஒல்லாந்தர். பிரித்தானியர்களுக்கும் அடிமைப்பட்டும், இறுதியாக, 1948 இல் சிங்களவர்க்கும் அடிமைப்பட்டு அநாதைகளாக வாழ்கின்றோம். தற்பொழுது எங்கள் தாயகம் பறிபோகின்றது. உயர்கல்வி, தொழில் வாய்ப்பும், சகல துறைகளிலும் எதிர் மறை பாரபட்சச் செயல்பாட்டினாலும் அவதிப்படுகின்றோம். சுயமரியாதையை இழந்தும் வாழ்கின்றோம். இது தான் எங்கள் தற்போதைய பரிதாப நிலை. இதற்குப் பரிகாரமாக எங்களுக்கு ''சுயநிர்ணய உரிமை உண்டு'' என்கிற கொள்கையைத் திம்பு மகாநாட்டில் முன்வைத்தது சரியானதாகும்.

இவ்விதமான சுயநிர்ணய உரிமையை ஐ.நா. ஸ்தாபனம் ஏற்றுக் கொள்கின்றது. அப்படி இருந்தும் எச்.டபிள்யூ. ஜயவர்த்தனா இது பிரிவினைக்கு வழி வகுக்கும் என்கிற ரீதியில் நிராகரித்து விட்டார். சுய நிர்ணய உரிமை பிரிந்து போவதற்கும் உரிமை உண்டு என்பதை ஒருவராலும் மறுக்க முடியாது. தமிழர்கள் தங்கள் 1621 நிலைமைக்குப் போவது பற்றிச் சிந்திப்பது பிரிவினை வாதம் இல்லை. ஆனால், இந்திய உபகண்டத்தில் முஸ்லிம்கள் ''பிரிவினை வாதம்'' கேட்டு 1947 இல் பிரிதார்கள். எச்.டபிள்யூ. ஜயவர்த்தனா எங்கள் சமுதாயத்தின் அடிப்படை உரிமையைக் கூட நிராகரித்தது. *தமிழ் மக்களுக்குச் செய்த ''வஞ்சகச் செயல்''*

www.tamilarangam.net

## 4. இலங்கையில் வாழும் தமிழர்கள் எல்லார்க்கும் பூரண குடி உரிமை உண்டு

இதன் பின்னணியை நன்கு ஆராய்வது சிறந்தது. 1983 ஆம் ஆண்டுக்குப் பின், தமிழர்கள் வாழ்வதற்கு உரிமையை இழந்து விட்டார்கள். (Right to Live) 19 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் இருந்து இலங்கை மலை நாட்டிற்கு கூலி வேலை செய்வதற்குப் பிரித்தானிய கம்பனிகளால் கொண்டு வரப்பட்டார்கள். இவர்களின் ''நெற்றி வியர்வை'' தான் இன்று காணப்படும் தேயிலை, றப்பர் தோட்டங்களும் அதனால் தேறிய அந்நிய செலாவணியும் என்று கூறலாம். அப்படி இவர்கள் 150 வருடங்களாக வாழ்ந்தாலும் அவர்கள் அனுபவித்த குடியுரிமையை 1948 இல் இலங்கை அரசு பறித்து விட்டது. இவ்விதம் வேறு நாடுகளில் நடைபெறவில்லை.

மேற்கு உலகில் 10 வருடங்கள் வாழ்ந்தால் குடியுரிமை கிடைக்கின்றது. அமெரிக்காவில் மேற்கு ஆபிரிக்காவில் இருந்து மக்களை அடிமையாக்கித் தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தினார்கள். அவர்கட்கும் குடியுரிமை உண்டு. ஆனால், இலங்கையில் செல்வத்தைத் தேடிக் கொடுத்த தமிழர்கள் அனுபவித்த குடியுரிமையைப் பறித்து விட்டார்கள் அனால் பிரித்தானியர் இந்தியாவில் இருந்து கொண்டு வந்தபடியால் இந்தியாவுக்குத் தார்மீகப் பொறுப்பு உள்ளது. ஆசிய ஜோதியான பண்டிதநேரு இது பற்றிக் கடும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், ஃவிஜி Fiji,சில வருடங்களுக்கு முன் இந்தியர்களுக்கு எதிரான நடவடிக்கையை அந்த நாட்டு அரசு எடுத்தபடியால், உடனே இந்திய அரசு ராஜதந்திர உறவைத் துண்டித்து விட்டது. எங்கள் மலை நாட்டுத் தமிழர் விடயத்தில் இது உள் நாட்டு விடயம் என்று இந்திய மத்திய அரசு கருதுகின்றது. ஆனால், ஃவிஜி இந்தியர்கள் விடயத்தில் அது இந்தியாவின் விடயம் என்று கருதுகின்றது.

150 ஆண்டுகளாக வாழ்ந்த மலை நாட்டுத் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்தது மனித உரிமை மீறல் எனலாம். ஆகையால் தான் இந்தக் கொள்கையும் ஓர் கோரிக்கையாகத் திம்புவில் முன் வைத்தார்கள். இதையும் இலங்கைத் தமிழர்கள் கேட்க முடியாது என்று நிராகரித்து விட்டார்கள்.

www.tamilarangam.net

மேலே குறிக்கப்பட்ட நாலு அம்சக் கொள்கைக் கோரிக்கைகளை இலங்கை அரசு 13 வருடங்களாக ஏற்காவிட்டாலும் தமிழர்களுக்கு இது ''தென்பாகத்தான்'' இருக்க முடியும். இலங்கை அரசும் போராளிகளும் இந்த நாலு அம்சக் கொள்கைகள் அடிப்படையில் தான் 'பேச்சுவார்த்தை'யில் ஈடுபடுவது நலம். இது சாத்தியம் இல்லை என்றால் ''பேச்சுவார்த்தை'' நடப்பது கஷ்டமாகிவிடும். இதனால், நாட்டுக்குத் தான் மேலும் அழிவை ஏற்படுத்தும்.

நாலு அம்சக் கொள்கைக் கோரிக்கை வேறு, இலங்கைக்கு ஏற்ப யாப்பு அமைப்பு வேறு. நாலு அம்சக் கொள்கைகளின் அடிப்படை விடயங்கள் ஆனால் தமிழர் கோரும் யாப்பு அமைப்பு அல்ல. (Constitutional Frame Work) இந்த நாலு அம்சக் கொள்கையில் இருந்து உருவெடுக்க உதவும்.

தமிழரின் பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காண முடியாது என்பது உலகறிந்த உண்மை. யுத்தத்தின் மூலம் அழிவைத் தான் கண்டோம். சமாதானத்துக்காகத் தான் யுத்தம் என்கிற பிரசாரத்தால் உலக அரங்கில் தாக்கம் இல்லை. ஆகையால் இவ்வளவு அழிவைக் கண்ட பின்பும் இலங்கை அரசுக்கும், சிங்களப் பேரினவாதத்துக்கும் ''ஞானோதயம்'' பிறக்காவிடில் நாடு ஓர் பெரிய அழிவைத் தான் காணப்போகின்றது. இதைத் தவிர்ப்பதற்குத் ''திம்பு'' நகரில் 1985 ஆம் ஆண்டில் முன்வைத்த நாலு அம்சக் கொள்கைகளைக் குறைந்தளவு அடிப்படையாக வைத்து யுத்தத்தில் ஈடுபட்ட இரு பகுதியினரும் பேச்சுவார்த்தைக்கு இணங்கினால் சமாதானத்துக்கு வழி பிறக்கும். இதற்காகத் தான் ''திம்பு'' ஒன்று தான் ''தென்பு'' என்று கூறுகின்றோம். சிங்கள ஆட்சியாளர்களுக்கும் தமிழ் மக்களுடைய உறவுகள் ''சமத்துவ'' அடிப்படையில் தான் இருக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

5 25-11-98

## 'இலங்கையின் இனப்பிரச்சினைக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இல்லாது தீர்வு காண்பது சாத்தியமா ?

இலங்கையில் இனப்பிரச்சினை மிக மோசமாக விஸ்வரூபம் எடுத்திருப்பதனை அகில உலகமும் அறிந்து கொண்டுள்ளது. ஆனால், சிங்களப் பேரினவாதிகளோ இங்கு இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லையெனவும் பயங்கரவாதம் என்ற ஒன்றுதான் உள்ளதெனவும் கூறுகின்றார்கள்.

இனப்பிரச்சினை ஆரம்பித்த காலத்திலிருந்து இன்று வரை சிங்கள - தமிழ் அரசியற் தலைவர்களுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட உடன் படிக்கைகள் ஏன் முறிவடைந்தன என்பது பற்றிச் சற்றுச் சிந்திக்க வேண்டும். கடந்த காலங்களில் சிங்களத் தலைவர்கள் சில அரசியல் அழுத்தங்களின் காரணமாக தமிழ்த் தலைவர்களுடன் உடன்படிக்கை களை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டன. இதனை அரசியல் தூர நோக்கு என்றும் கூறலாம்.

ஆயினும் சிங்கள பேரினவாதிகளின் குறுகிய இனவாதக் கண் ணோட்டத்தினாலும், தேசிய நலன்களைப் புறக்கணித்து சிங்கள மக்களை உணர்ச்சி வசப்படுத்திக் குறுக்குவழியில் அரசியல் இலாபம் தேட முனைந்தமையாலும், சிங்கள பாமர மக்கள் தேசிய நலன்களைக் கருதாது இனவாத உணர்வுகளுக்கு அடிமைகளாகினர் இதனால் சிங்களத் தலைவர்கள், தமிழ் தலைவர்களுடன் மேற்கொண்ட உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்தாது உதாசீனம் செய்து விட்டனர். இவ்விதமான செயற்பாடுகளினால் தமிழ் மக்கள் சிங்களத் தலைவர்கள் மீது சிங்கள மக்கள் மீதும் வைத்திருந்த நம்பிக்கையை இழந்து விட்டனர்.

### பேரினவாதத்தின் பிரதிபலிப்பு

இவ்விதமான சூழ்நிலையில் சிங்கள பேரின வாதத்தின் தூண்டு தலினால் தமிழ் மக்களுக்குச் சகல துறைகளிலும் பாரபட்சம் காட் டப்பட்டது. இதன் பலனாக தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ முடியுமா என்பது கேள்விக் குறியாகிவிட்டது. பேரினவாதத்தின் பிரதி பலிப்பாக தமிழ் மக்களுக்கான தொழில் வாய்ப்பு அவர்களது சனத்தொகை விகிதாசாரத்தை விடக் குறைந்து விட்டது.

www.tamilarangam.net

முன்னைய காலங்களில் திறமை அடிப்படையில் தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டது. திறமை என்ற அடிப்படையில் தான் சகல துறைகளிலும் அவர்களது விகிதாசாரத்தையும் விட அதிகளவில் தமிழர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஆனால் சிங்கள பேரினவாத சக்திகள் திறமை அடிப்படையை மறுத்து அரசியல் வாதிகளின் ஆதிக்கத்துக்கேற்ப சிங்களவர்களுக்கு அவர்களது விகிதாசாரத்துக்கும் மேலாகத்தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

இன்றைய சூழ்நிலையில் தமிழர்களுக்கு எத்துறையிலாவது சொற்பவீத தொழில் வாய்ப்புத்தானும் கிடைப்பதில்லை. இந்த உண்மையைத் தமிழ்க்கட்சிகள், விசேடமாக அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கும் தமிழ்க் கட்சிகள் கவனத்திற்கெடுக்காதது வேதனைக்குரியதோர் விடயமாகும். இவ்வாறான பாரபட்சமான கொடூரமான கொள்கை நாமறிந்தளவில் உலகில் வேறெந்த வொரு நாட்டிலும் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

இது ஒரு புறமிருக்க, தமிழர்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்த பிரதேசங்களில் அரச செலவில் சிங்கள மக்களுக்கான குடியேற்றங்களைப் பல வருடங்களாக ஸ்தாபித்தனர். இதன் விளைவாக அனேக ஆண்டுகளுக்கு முன் கிழக்கு மாகாணத்தில் 2 வீதமாகவிருந்த சிங்கள மக்கள் தற்போது 30 வீதத்திற்கும் மேலாக அதிகரித்து விட்டார்கள்.

***காரணகர்த்தாக்கள் யார்?***

இவ்விதமான கொடுமையான செயல்களுக்கெதிராக நம் அரசியல் தலைவர்கள் சாத்வீக முறையில் மேற்கொண்ட எதிர்ப்புக்கள் யாவும் படுதோல்வியிலேயே முடிவடைந்தன. 1956 தொடக்கம் 1983 வரை தமிழ் மக்களுக்கெதிராக வகுப்புக் கலவரங்கள் பல தூண்டிவிடப்பட்டன. இதன் விளைவாக தமது தலைவர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்த தமிழ் இளைஞர்கள் 1621 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த இராச்சியத்திற்குப் போவதே சாலச் சிறந்த தெனக் கருதிச் செயலிலும் இறங்கி விட்டனர். இதன் விளைவாக நடைபெறுவதே தற்போதைய யுத்தம். எனவே இந்த யுத்தத்துக்கான காரண கர்த்தாக்கள் யார்? என்பதைச் சுலபமாக அறிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது இரு பகுதியினராலும் வெல்ல முடியாத யுத்தமென்பதை உணரவேண்டும். இந்த உணர்வு ஏற்பட்டால் பேச்சுவார்த்தைக்கு இடமுண்டு. இரு பகுதியினரதும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை ஒன்றுதான் சமாதானத்திற்கான வழியாகும். என்பதை உணர்தல் வேண்டும். நிபந்தனையுடனான பேச்சுவார்த்தை நடைமுறைக்கு உகந்ததல்ல. உலகில் ஒரு தேசத்திலாவது நிபந்தனையுடனான பேச்சுவார்த்தை நடைபெறுவதில்லை. அரசாங்கமும் புலிகளும் பேச்சுவார்த்தையில் இறங்கினால் முன்னைய உடன்படிக்கைகள் தோல்வியடைந்ததுபோல இனியும் நிகழாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

ஆகவே பேச்சுவார்த்தைக்கு இறங்குவதற்கு முன்னர் பிரதான சிங்கள கட்சிகள் இரண்டும் ஒரு உடன்பாட்டுக்கு வருவது மிக மிக அவசியம். அரசாங்க கட்சியும் எதிர்க்கட்சியும் தமிழர் பிரச்சினையை ஒரு தேசிய பிரச்சினையாகக் கொண்டு செயற்பட்டால், அக்கட்சிகள் இரண்டும் ஒரு உடன்பாட்டுக்கு வர வாய்ப்புண்டு இவ்விரு கட்சிகளும் உடன்பாடொன்றுக்கு வந்த பின்னர் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது மிகவும் சிறந்தது.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியும் அரசாங்கக் கட்சியும் யுத்த மொன்று தான் வழி என்று எண்ணிச் செயற்பட்டால் நாடு நிச்சயமாக பிளவுபடும். ஏனெனில் அனேக அறிஞர்களின் கணிப்பின்படி இது இரு பகுதியினராலும் வெல்ல முடியாத ஓர் யுத்தமாகவே கருதப்படுகின்றது. இந்நிலையில் யுத்தத்தை மேலும் தீவிரப்படுத்தினால் நாடு அழிவதைவிட வேறு வழியில்லை.

இதனால் தான் இரு பகுதியினருக்கும் நம்பிக்கையுள்ள மூன்றாம் தரப்பு மத்தியஸ்த உதவியுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இவ்விதம் மேற்கொள்ளப்படுமானால் பேச்சுவார்த்தை வெற்றியளிக்க அதிக வாய்ப்புண்டு.

மூன்றாந்தரப்பின் உதவியுடன் நடைபெறும் பேச்சுவார்த்தையைச் சர்வதேச சமுதாயம் மதிப்பளித்து வரவேற்கும். சர்வதேச தமிழ் சமுதாயத்துக்கும் இது மகிழ்ச்சியைத் தரும். மத்தியஸ்தம் வேண்டாம் என்று கூறும் சிங்களக் கட்சிகள் யுத்தத்தையே விரும்பினால் தமிழர் 1621 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலையையே நாடுவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐக்கிய தேசியக்கட்சியும் மக்கள் முன்னணி அரசாங்கமும் யுத்த நிறுத்தம் இல்லாமலே பேச்சுவார்த்தைக்கு இணங்குவார்களாயின் அது நடைமுறைக்கு உகந்ததல்ல. மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சு வார்த்தை நடைபெறுமே யாகில் யுத்த நிறுத்தம் அவசியமானதாகும். யுத்த நிறுத்த உடன்படிக்கையை இரு பகுதியினரும் மீறக்கூடுமெனச் சந்தேகம் கொள்வது இயல்பு. ஆகையினால் யுத்த நிறுத்தத்தையோ அதன் மீறல்களையோ சர்வதேச அவதானிப்பாளர்கள் அவதானிக்கலாம். சர்வதேச பார்வையாளர்கள் நியமிக்கப்படுமிடத்து இரு பகுதியினரும் யுத்த நிறுத்தத்தை மீறுவது கடினமாகவிருக்கும்.

பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் யுத்த நிறுத்தம் தொடர்பாக பரிசீலிப்பது மிகவும் அவசியம். இதனால் பரஸ்பர நம்பிக்கை ஏற்படும் சூழ்நிலை உருவாகும். இவ்வித சூழ்நிலையில் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுமேயாகில் அப்பேச்சுவார்த்தை வெற்றியளிப்பதும் ஏற்படும் தீர்வுகள் நடைமுறைப் படுத்தப்படுவதும் சுலபமாகவிருக்கும்.

மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் வகிக்கும் நாடு பிறநாடொன்றாக இருப்பதே சிறந்தது. இலங்கை அரசுக்கோ அன்றேல் புலிகளுக்கோ ஆதரவான நாடுகளைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். வெளி நாடுகளில் இரு சாராரையும் பகைக்காத நாடுகள் மத்தியஸ்தம் வகிப்பது மிகச் சிறந்தது.

அரசின் தீர்வுப் பொதிக்கோ அன்றேல் புலிகளின் ஈழத் தீர்மானத் துக்கோ மத்தியஸ்தம் தேவையில்லை. அதனால் புதிய அரசியல் தீர் வொன்றுக்கு இருசாரரரையும் இணங்க வைப்பதே மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தின் கடமையாகும். அது என்ன தீர்வு என்று தீர்மானிப்பது இரு சாராரையும் சார்ந்ததாகும். அந்த தீர்வு என்ன வகையில் உருவெ டுக்கும் என்பதுதான் பிரச்சினை. அந்தப் பிரச்சினையைச் சுமுகமாகக் கையாளுவதற்குத்தான் மத்தியஸ்தம் தேவைப்படுகின்றது.

புலிகள் தமிழீழ கோரிக்கையைக் கைவிடுவதானால் தமிழர்களின் அபிலாஷைகளுக்கேற்ப அதிகபட்சம் சுயாட்சி வழங்குவதுதான் சிறந்த தது. இந்த விடயத்தில் திம்புக் கோட்பாடுகளை நினைவுகூருவது அவசிய மாகின்றது. இலங்கை அரசு தற்போது சமர்ப்பித்துள்ள தீர்வுப்பொதி திம்பு

www.tamilarangam.net

கோட்பாட்டுக்கு நிகரானதல்ல. ஆகவே, இந்நிலையில் இரு சாராரும் யதார்த்த நிலையை உணர்ந்து ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு மத்தியஸ்தம் உதவவேண்டும். இவ்வண்ணம் நடைபெறுமேயாகில் சர்வதேச அங்கீகாரம் ஏற்படும் வாய்ப்புண்டு.

www.tamilarangam.net

# 6

25-11-98

## இலங்கையில் என்ன நடக்கிறது?
## உண்மையை உலகம் அறிய வேண்டும்

இலங்கையில் தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக ஆட்சி புரிந்தமை உலகறிந்த உண்மை. விஜயன் வந்ததன் பின்னரே சிங்கள இனம் தோன்றியதாக மகாவம்சம் கூறுகின்றது. எனவே, அக்காலம் 2500 வருடங்களுக்கு முந்திய காலமாகும். ஏனெனில் தேவநம்பியதீசனுடைய காலம் கி.மு.250 தொடக்கம் 210 வரையுமாகும். விஜயன் இங்கு வருகை தந்த காலத்தில் சரித்திர பிரசித்தி பெற்ற சிவஸ்தலங்கள் ஐந்து இருந்ததாக அறிகின்றோம். இராவணனுடைய காலம் மகாபாரத காலத்துக்கு முற்பட்டதாகையால் கி.மு.3500 க்கும் 4000 க்கும் இடைப்பட்ட காலமென ஊகித்துக் கொள்ள முடியும். திருக்கேதீஸ்வரத்தில் தமிழரசனாகிய இராவணன் வழிபட்ட சிவலிங்கத்தை இன்றும் காணலாம். எனவே, இலங்கையில் தமிழராட்சி இராவணன் தொடக்கம் சங்கிலியன் வரை அதாவது, 1621 ஆம் ஆண்டு வரை ஓங்கிச் சீரோடும் செழிப்போடும் நடந்தது என்பது சரித்திர உண்மை.

இச்சரித்திர உண்மையை மீண்டும் மீண்டும் ஆராய்வது, இன்றைய நிலைக்கு ஓர் தீர்வாக அமையாது. ஏனெனில் சிங்கள ஆட்சியாளரின் பிரசாரமும் பேரினவாதமும் ஜேர்மனியில் ஹிட்லரின் காலத்திலிருந்த கொபல்சியன் பிரசாரத்தையும் மிஞ்சிவிட்டது. முக்கியமாக ஜேர்மனியிலுள்ள யூதச் சிறுபான்மையினர் எவ்விதம் நடத்தப்பட்டனரோ அதுபோலவே இலங்கையிலும் தமிழ் மக்கள் நடாத்தப்படுகின்றனர், என்ற நிலைப்பாட்டுக்குத்தான் வரவேண்டியுள்ளது. இதற்கு உதாரணமாக வடகிழக்கில் வாழும் தமிழ் மக்கள் உண்ண உணவின்றி வானமே கூரையாக மரங்களின் கீழ்த்தான் வாழ்க்கை நடாத்துகின்றனர். அரசாங்கத்தினால் அனுப்பிவைக்கப்பட வேண்டிய உலர் உணவு அவர்களுக்கு இரண்டு தடவைகளில் கடுமையாகக் குறைக்கப்பட்டுள்ளது. மருந்து வகைகளும் அனுப்பப்படுவதில்லை.

உலகிலேயே இலங்கையில் மட்டும் தான் மாவட்ட உயர் அதிகாரிகளின் புள்ளிவிபரங்கள் நிராகரிக்கப்பட்டு இராணுவ உத்தியோகத்தர்களின் மதிப்பீடுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. வட மாகாணத்திலுள்ள ஐந்து அரசாங்க அதிபர்கள் வழங்கிய சனத் தொகைப் புள்ளி விபரங்களை உதாசீனம் செய்து, தன்னிச்சையாகப் புள்ளிவிபரங்களை மதிப்பீடு

www.tamilarangam.net

செய்து, அதற்கிணங்க உணவுப் பொருட்கள் அனுப்பப்படுகின்றன. இதனால் வங்கப் பஞ்சம் போல் வன்னிப் பஞ்சம் உருவாகப் போகின்றது. இக்கொடூரமான செயல் ஓர் இனப் படுகொலையாகும். ஐக்கிய நாட்டு ஸ்தாபன விதிப்படி, மருந்து வகைகளையோ, உணவு வகைகளையோ யுத்தக் கருவியாகப் பாவிக்க முடியாது. ஆனால் இலங்கை அரசாங்கம் இந்த விதிகளை மீறுவது மிக்க கொடூரமான மனித உரிமை மீறலாகும். ஒரு புறம் தமிழர்கள் மீது மிகக் கொடூரமான யுத்தமொன்று கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. எந்நேரத்திலும் அப்பாவித் தமிழ் மக்கள் மீது எறிகணைத் தாக்குதல்களும் விமானக் குண்டு வீச்சுக்களும் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழர்களை அழித்தொழிக்கும் இச் செயற்பாடு கடந்த 15 வருடங்களாக சர்வதேச அரங்கில் எடுத்துக் கூறப் பட்டது. இந்த மீறல்களை உலகம் முழுவதும் அறிந்து வைத்துள்ளது.

கதிர்காமர் இலங்கை அரசு பயங்கரவாதத்துக்கு எதிராக யுத்தம் புரிவதாக உலகெங்கிலும் சென்று பறைசாற்றுகின்றார். அவ்வாறாயின், 1600 க்கு மேற்பட்ட இந்து - கிறிஸ்தவ ஆலயங்கள் சேதமாக்கப் பட்டதற்கு அல்லது அழிக்கப்பட்டதற்கான காரணம் என்ன? யாழ் குடா நாட்டில் மட்டும் 81,000 வரையான வீடுகள் தரை மட்டமாக்கப்பட்டதற்கு அல்லது சேதமாக்கப்பட்டதற்கான காரணம் என்ன? பயங்கரவாதத்துக்கு எதிராகத்தான் யுத்தம் நடாத்தப்படுகின்றதென்றால், இலட்சக் கணக்கான மக்கள் உண்ண உணவின்றியும் மருந்து வகைகள் இன்றியும் அநேக அவலங்களுக்கு ஆளாகி இந்தியாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் உயிரைக் கையிலேந்தியபடி ஓடுவதேன்? கொழும்பில் கூடத் தமிழர்கள் சுயமரியாதையுடன் வாழ முடியாத நிலை ஏன் ஏற்படுகின்றது? பொல்கொட வாவியில் மிதந்த சடலங்கள் பயங்கரவாதிகளுடையதா? குமரபுர இனப்படுகொலைக்கு காரணம் பயங்கரவாதமா? கற்பழிக்கப்பட்டும் கொல்லப்பட்டும் செம்மணியிற் புதைக்கப்பட்டது. மனித உரிமை மீறல் பயங்கரவாதத்துக்கு எதிரான செயற்பாடா? யாழ் குடா நாட்டில் மனித உரிமை மீறல்கள் நடைபெற இல்லையென கதிர்காமர் வெளிநாடுகளில் ஆணித்தரமாகக்கூறிவருகின்றார். ஆனால் செம்மணி விடயத்தில் அவர் கடுமையாக மௌனம் சாதிக்கின்றார். இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகள் முக்கியமாக அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ்க் கட்சிகள் கடும் போக்கைக் கடைப்பிடிக்காமை கவலைக்குரிய விடயமாகும். வேறு நாடுகளில் இவ் வண்ணம் நிகழ்ந்திருந்தால் விபரீதமான விளைவுகள் ஏற்பட்டிருக்கும். ஆனால் இலங்கையில் தமிழர்களை இலட்சக்கணக்கிற்கொன்று குவித்தாலும், அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ்க் கட்சிகள் தங்களது

www.tamilarangam.net

போக்கை மாற்றிக் கொள்ளாது, அரசாங்கத்துக்கு ஆதரவாகவே பாராளு மன்றத்தில் வாக்களிக்கின்றன. இவ்விதமான செயற்பாடுகள் தமிழினத் துக்குச் செய்யும் மிகக் கொடூரமான துயரச் செயலென்பதை ஆணித்தர மாகக்கூறவேண்டியுள்ளது.

இலங்கையில் தமிழர்கள் சுயமரியாதையுடன் வாழ முடியுமா என்பது தான் இன்றைய கேள்வி. இதனை நாம் ஆராய்வதற்கு முன்னர் பாதுகாப்பு மக்களுக்காகவா அன்றேல் மக்கள், பாதுகாப்புக்காகவா என்பதை ஆராய வேண்டும். தமிழ் மக்களுக்கு உணவுப் பண்டங் களையும் மருந்து வகைகளையும் எந்தளவு அனுப்ப வேண்டும். எவ்வா றான பண்டங்களை அனுப்ப வேண்டும், என்பதைத் தீர்மானிப்பது யார்? இராணுவமா அல்லது சிவில் அதிகாரிகளா? தமிழ் மக்களுக்கு அனுப்ப வேண்டிய மருந்துகளின் வகையையும் தொகையையும் தீர்மானிப்பது மருத்துவர்களா அல்லது இராணுவத்தினரா? இப்படியான ஒரு சூழ்நிலை இலங்கையில் மட்டும் தான் நிலவுகின்றது. இதனை இனப் படுகொலை யின் ஓர் அம்சமாகவே கருத வேண்டும். இவ்வாறான மனிதாபிமானமற்ற செயற்பாடுகளினால் உலக அரங்கில் இலங்கையின் செல்வாக்கு மிகவும் குறைந்து விட்டது. ஐ.நா. மனித உரிமைக் குழுவில் 19 அரச சார்பற்ற நிறுவனங்கள் 1994 ஆம் வருடத்தில் இது தொடர்பாக இலங்கை அரசை வன்மையாகக் கண்டித்தன. ஆனால், பின்னர் 1997 ஆம் வருடத்தில் 53 அரச சார்பற்ற நிறுவனங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கையை மிகக் கடுமையாக விமர்சித்திருந்தன. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால், சர்வதேச அரங்கில் கதிர்காமரின் செயற்பாடு தோல்வி கண்டுள்ளது என்பதே.

வன்னித் தமிழ் மக்களின் பட்டினிச் சாவைத் தவிர்ப்பதற்குப் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் முன்வர வேண்டும். தமிழ் நாட்டின் உதவியும், இந்திய மத்திய அரசின் அனுசரணையும் இல்லாது நாம் இழந்த சுதந்தி ரத்தை மீண்டும் பெறுவது கடினமானதாகும்.

சர்வதேச சமுதாயத்தை எங்கள் பக்கம் ஈர்த்திருக்கவும் வேண்டும். அதன் பொருட்டு இங்கு நிகழும் கொடூரமான மனித உரிமை மீறற் செயல்களைத் தமிழ் நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்தல் வேண்டும். அப்போது இந்திய மத்திய அரசும் தனது பாதுகாப்பினைக் கருதி, இலங்கை அரசின் மீது, இராஜதந்திர ரீதியிலான அழுத்தங்களைக் கொடுப்பதற்கு வாய்ப்புண்டு, இதற்காகச் செயற்படுவதுதான் புலம்

www.tamilarangam.net

பெயர்ந்த தமிழ் மக்களதும் நிபுணர்களதும் தலையாய கடனாக இருத்தல் வேண்டும். இவ்விதம் செயற்பட்டால் மிக விரைவில் 1621 இல் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியும்.

தற்போது நடைபெறும் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் தேவையென்பதனைச் சகலரும் ஒத்துக் கொள்கின்றனர். இலங்கை அரசு இதனைப் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தமென வர்ணிக்கின்ற போதிலும் இராஜதந்திர ரீதியில் தோல்வியைத் தழுவிக் கொண்டது. மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துக்கு அமெரிக்கா, பிரித்தானியா, பாகிஸ்தான், சீனா, இஸ்ரேல் போன்ற நாடுகள் தகுதியற்றவையாகும். ஏனெனில் இந்நாடுகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ இலங்கை அரசுக்கு இராணுவ உதவிகளை வழங்கி வருகின்றன.

இந்தியா இவ்விடயத்தில் முன்னரும் பங்கெடுத்தமையால் திரும்பவும் மத்தியஸ்தம் செய்வதற்கு, அரசியற் காரணங்களால் முன்வருவது கடினமானதாக இருக்கும். எனினும் இந்தியாவின் ஒத்துழைப்பு இன்றி இலங்கையில் அமைதி நிலவும் என்பது பகற்கனவாகும். ஏனெனில் இலங்கை, இந்தியாவின் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ளது. பிரித்தானியா முன்வந்தாலும் கூட அவர்களும் அதுவும் தொழிற்கட்சி அரசாங்கம் இலங்கை இராணுவத்திற்கு ஆயுத உதவிகள் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியக்கிடக்கின்றது. ஒரு புறத்தில் அரசியல் தீர்வுக்கு வழி செய்வதாகக் கூறிக் கொண்டு மறுபுறத்தில் ஆயுத உதவி வழங்குவது மன்னிக்க முடியாத குற்றமாகும். இந்நிலையில் பிரித்தானிய அரசாங்கம் மத்தியஸ்தம் வகிக்கத் தகுதியற்ற தென்றே கருத வேண்டியுள்ளது.

இலங்கையின் உள்நாட்டுப் போரில் நேரடித் தொடர்புகள் இல்லாத நாடுகளான நோர்வே, சுவீடன், டென்மார்க், சுவிற்சர்லாந்து, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகள் மத்தியஸ்தம் வகிக்கத் தகுதி வாய்ந்தவையாகும். எங்கள் எதிர்காலம் அரசியல் தீர்வுப் பொதியையோ அன்றேல் சிங்கள ஆட்சியாளரின் தயவையோ நம்பியிருப்பது, கல்லில் நார் உரிக்கும் கதையாக அமையும். எங்கள் விதியை நாங்களே நிர்ணயித்துக் கொள்ளுதல் வேண்டும். சரித்திரத்தில் பாகிஸ்தான் என்று ஒரு நாடு இருந்ததில்லை. ஆனால் முஸ்லிம் மக்களின் தியாகத்தால்

www.tamilarangam.net

பாகிஸ்தான் உருவாகியது. சரித்திரத்தில் 5000 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழர்கள் இலங்கையில் ஓர் தமிழ் இராச்சியத்தில் சர்வதேசத் தொடர்புகளுடன் 1621 ஆம் ஆண்டுவரை சீரோடும் சிறப்போடும் வாழ்ந்தனர். இத்தோரணையில் தமிழர்கள் திரும்பவும் 1621 ஆம் வருடத்துக்கு முன்பிருந்த இராச்சியத்தை மீளவும் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இது பிரிவினை வாதமல்ல. ஆண்ட பரம்பரை மீண்டும் ஆள நினைப்பது தவறா? இப் புனித பணிக்குத் தமிழ் மக்கள் யாவரும் தமது சுய விருப்பு வெறுப்புகளை மறந்து ஒன்றுபட்டுச் செயற்படல் வேண்டும். இப்புனித யாத்திரைக்குப் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் பெரும் பங்களிப்பு வழங்குதல் வேண்டும்.

www.tamilarangam.net

7 29-11-98

## இன்றைய அரசில் தமிழ் மக்களின் நம்பிக்கை?

ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் கணவராகிய காலம்சென்ற விஜய குமாரதுங்க யாழ்ப்பாணம் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அதிலிருந்து விஜயகுமாரதுங்க மீதும் அவரது பாரியாராகிய சந்திரிகா மீதும் தமிழ் மக்கள் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார்கள். இவர்கள் இருவரும் தமிழ் நாடு சென்று மறைந்த மக்கள் திலகமாகிய எம்.ஜி.ஆர். உடன் இலங்கைத் தமிழர்கள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தியது மகிழ்ச்சிகரமான செய்கையாகும்.

குமாரதுங்க இறந்த பின்பு சந்திரிகா அம்மையார் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் கூட்டணியின் சார்பாக தேர்தல் களத்தில் இறங்கினார். இச்சமயத்தில் தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சியில் அனுபவித்த துன்பங்களை மனத்திற்கொண்டும் இந்த அம்மையார் ஓர் சமாதானப் புறாபோன்று காட்சி அளித்தமையாலும் தமிழ் மக்களுக்கு ஓர் நிரந்தர சமாதானம் ஏற்பட வாய்ப்பிருக்கும் என்று எண்ணி இந்த அம்மையாருடைய கட்சிக்கு அதிகளவு வாக்குகளை அளித்தார்கள். மன்னார் மாவட்டத்தில் 90 வீதத்திற்கு அதிகமாகவும் கிழக்கு மாகாணத்தில் 82 வீதத்திற்கதிகமாகவும் வடக்கு மாகாணத்தில் அதிகளவான வாக்குகளும் இவருக்கு கிடைத்தன. கொழும்பு வாழ் தமிழர்களும் இவருக்கே வாக்களித்தனர்.

இலங்கைத் தமிழ் மக்கள் 1983 ஆம் ஆண்டிற்குப் பின் ஐக்கிய தேசியக்கட்சியின் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்த நடவடிக்கைகளினால் விரக்தியடைந்தே இந்த சமாதான்த்தை வெகு விரைவில் ஏற்படுத்துவாரென எண்ணி மக்கள் இவர் மீது பூரண நம்பிக்கை கொண்டு வாக்களித்தார்கள். ஆனால், நடந்தது என்ன?

புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று அவை தோல்வியில் முடிந்தன. புலிகளுடன் நடந்த பேச்சுவார்த்தைகளில் ஒரு மந்திரியாவது அங்கம் வகிக்க வில்லை. இதனால் பல பின் விளைவுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பிருந்தது.

www.tamilarangam.net

17 வருட ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சியைவிட அவரது 4 வருட ஆட்சி தான் தமிழர்களைப் பொறுத்தவரையில் அதிக துன்பங்களும் சோக நிகழ்வுகளும் நிகழ்ந்த காலமாகும். இவரது ஆட்சியின் கீழ்தான் யாழ்ப்பாணம் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டு சிங்கக் கொடி ஏற்றப்பட்டது. அரசாங்கத்தின் இச்செய்கையானது இன்னொரு நாட்டைக் கைப்பற்றி விளம்பரம் செய்வது போன்றிருந்தது.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் இவரது ஆட்சியில் அனுபவிக்கும் கஷ்டங்களை வார்த்தைகளால் கூற முடியாது. மனித உரிமை மீறல் சம்பவங்கள் மிகக் கொடூரமாக அதிகரித்தன. இதன் காரணமாக ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் மனித உரிமைக்குழு ஒரு உயர்தர உத்தியோகத்தரை இலங்கைக்கு அனுப்பி வடக்கு, கிழக்கில் இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் பற்றி ஓர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டது. இந்த உத்தியோகத்தரின் அறிக்கை இலங்கைக்கு பாதகமாக அமைந்தது. யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியபோது ஐந்தரை லட்சம் தமிழ் மக்கள் வன்னிக்கு இடம் பெயர்ந்தனர். இவர்களின் அவலங்களை நீக்கும் பொருட்டு முன்னாள் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகமாகிய பூற்றஸ் பூற்றஸ் காலி சர்வதேச சமுதாயத்திற்கு ஓர் உருக்கமான வேண்டுகோள் விடுத்தார் இடம் பெயர்ந்த தமிழ் மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்ய வேண்டுமென்பதே அந்த வேண்டுகோளாகும். இந்த வேண்டுகோளை இலங்கை வெளிநாட்டமைச்சரான கதிர்காமர் மிகவும் ஆணித்தரமாக மறுத்த விட்டார். இவருடைய செய்கை வைக்கோற் போரிற்கு அருகிலிருக்கும் நாயின் செய்கையைப் போலிருக்கின்றது. இதனால் சர்வதேச சமுதாயம் இலங்கை அரசின் மீது மிகுந்த சீற்றம் கொண்டது. மனிதாபிமான முறையில் தமிழ் நாட்டில் தானம் செய்து கொண்டு வரப்பட்ட இரத்தத்தையும் இலங்கை அரசு ஏற்க மறுத்துவிட்டது. இச்செய்கையானது யாழிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்குச் செய்யும் துரோகமாகக் கருதப்பட்டது. இதனால் சர்வதேச தமிழ்ச் சமுதாயம் இலங்கை அரசையும் வெளிநாட்டமைச்சரையும் கடுமையாக விமர்சித்தது. அத்துடன் இச் செய்கையானது இன்றைய அரசுக்கு மிகவும் அபகீர்த்தியை சர்வதேச அரங்கில் உண்டாக்கிவிட்டது. அத்தோடு வடக்கு, கிழக்கில் இராணுவக் கெடுபிடிகள், இரவுநேரச் சுற்றி வளைப்புக்கள், நவாலி தேவாலயக் குண்டு வீச்சு, வன்னிப் பிரதேசக் குண்டு வீச்சுக்கள், குமரபுர அப்பாவித் தமிழர் கொலைகள், கிருஷாந்தி கோணேஸ்வரி மீதான பாலியல் பலாத்காரமும் கொலையும், வன்னி

www.tamilarangam.net

தமிழ் மக்கள் மீதான கடுமையான நிவாரண வெட்டுக்கள், வடக்கு, கிழக்கில் அடிக்கடி நிகழும் மனித உரிமை மீறல் சம்பவங்கள், கொழும்பு மாவட்டத்தில் அப்பாவித் தமிழர்களை சுற்றி வளைத்து இம் சித்தல் போன்றனவும் இன்றைய அரசு மீது தமிழர்கள் சீற்றம் கொள்ளக் காரணமாகிவிட்டன.

சர்வதேச அரங்கில் ஜனாதிபதி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எனப் பிரசாரம் செய்து கொண்டும், அதே சமயத்தில் தமிழர்களுக்கு, எதிராக திட்டமிட்ட யுத்தத்தை தீவிரப்படுத்துவதும் இவரது உள்நோக் கத்தை வெளிப்படுத்துகின்றது. அரசியல் தீர்வுப் பொதி எனக்கூறி நான்கு வருடம் கழிந்து விட்டது. இராமாயணம் என்னும் நாடகத்தை நடிப்பதென்றால் இராமர் அவசியம். மகாபாரதத்தில் அருச்சுனனுடைய பாத்திரம் இல்லையெனில் நாடகத்தை அரங்கேற்ற முடியாது. அதே போல இலங்கை அரசியல் நாடகத்தில் விடுதலைப் புலிகளுடைய பங்களிப்பில்லாமல் சமாதானம் ஏற்பட வாய்ப்பில்லை.

புலிகள் இயக்கத்தை சட்டரீதியாக தடைசெய்த இந்தியாவும் அமெரிக்காவும் அரசியல் தீர்வுக்கே அதி முக்கியத்துவம் கொடுக்கி றார்கள். அப்படியானால் புலிகளை உதாசீனம் செய்து விட்டு ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினால் அது நிரந்தர சமாதானத்திற்கு வழி வகுக்குமா? ஆகவே தான் இன்றைய அரசு புலிகளுடன் பகிரங்கமாகவோ, அந்தரங்கமாகவோ மூன்றாம் தரப்பு மத்தியஸ்த உதவியுடனோ, உயர் மட்ட பேச்சுவார்த்தை செய்யாதது தவறென்று தமிழ் மக்கள் கருதுகின்றனர். இதுபோலவே சர்வதேச தமிழ் சமூகத்தின் கருத்தும் வெளிப்படுகின்றது.

இலங்கையில் நடப்பது பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தமென்று இலங்கை வெளிநாட்டமைச்சர் பிறநாடுகளுக்குச் சென்று ‘கோபெல்சிய’ பிரசாரத்தை மேற்கொண்டபோதிலும் அது வெற்றி அளிக்கவில்லை. 97 ஆம் ஆண்டு நடந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் குழுவில் 53 அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் இலங்கை அரசைக் கடுமையாக விமர்சித்தன. ஆனால் 94 ஆம் ஆண்டு 18 அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் தான் இலங்கை அரசை விமர்சித்தன. இதிலிருந்து நாம் அறிவது என்ன வெனில் கதிர்காமரின் கோபெல்சிய பிரசாரம் எடுபடவில்லை. எந்த ஒரு நாடாவது வெளிநாட்டமைச்சரின் பிரசாரத்தை ஏற்று புலிகள் இயக்கத்தை

தடைசெய்யவில்லை. இந்தியாவோ அமெரிக்காவோ புலிகள் இயக்கத்தை வெளிநாட்டமைச்சரின் பிரசாரத்திற்கமைய தடைசெய்யவில்லை என்றே கூறலாம். சமீபத்தில் வெளிநாட்டமைச்சர் தென்னாபிரிக்காவுக்குச் சென்று நிகழ்த்திய புலிகளுக்கெதிரான பிரசாரம் தோல்வியையே தழுவிக் கொண்டது. நாம் இதிலிருந்து அறிந்து கொள்வது யாதெனில் வெளிநாட்டமைச்சரின் பிரசாரத்தினால் இலங்கைத் தமிழர்கள் மாத்திரமல்ல சர்வதேச தமிழ்ச் சமுதாயமும், சர்வதேச சமுதாயமும் இன்றைய அரசின் மீது வெறுப்பையே கொண்டிருக்கின்றன என்பதை விளங்கிக்கொள்ள முடிகிறது.

செம்மணி விவகாரம் உலக கவனத்தை ஈர்த்துவிட்டது. இதுமூடி மறைக்க முடியாத விடயம். இவற்றையெல்லாம் விட சந்திரிகா அம்மையார் தென்னாபிரிக்காவிலே தமிழர் பூர்வீகக் குடிகள் அல்லர் என்று கூறியது வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சியது போன்ற செயலாகும். இக்கூற்று சரித்திரத்திற்கு எதிரான கூற்று. இதன் உள்நோக்கம் மிகவும் பாரதூரமானது. தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு ஒரு வீதமாவது கொடுக்கப்படவில்லை. தமிழ்ப் பிரதேசங்களில் கைத் தொழில் பேட்டைகள் நிறுவப்படுவதில்லை. இராணுவப் பாதுகாப்பிற்குத் தேவை என நியாயப்படுத்தி தமிழ் மக்களை ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வாழ்ந்த இடங்களிலிருந்து அப்புறப்படுத்துகிறார்கள். இவ்விதமான நிகழ்வுகளால் இன்றைய அரசின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்திருக்க முடியுமா?

*ஆகவே 5000 ஆண்டுகளாக வாழ்ந்து வரும் மக்கள் இலங்கையில் சுய மரியாதையுடன் வாழ முடியுமா? என்பதுதான் கேள்விக்குறி! இதற்கு இன்றைய அரசே பதில் கூறவேண்டும்.*

www.tamilarangam.net

**8** 06-12-98

## இஸ்ரேல் பாணியில் இங்கும் பாதுகாப்பு வலய போர்வைக்குள் பறிபோகும் தமிழ் பிரதேசங்கள்

இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது சகலரும் அறிந்தவோர் விடயமாகும். சிங்களவர்கள் இலங்கைக்கு வருகை தருவதற்கு முன்னரே, இலங்கைத் தீவின் பூர்வீகக் குடிகளாகப் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தனி இராச்சியமாக வாழ்ந்த தமிழர்கள் இன்று வாழ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதிலும் வட கிழக்கில் வாழும் தமிழர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் சொல்லுந்தரமன்று. சுருக்கமாகக்கூறுவதாயின், தமிழர்கள் அனுபவிக்கும் அவலங்களை இனப்படுகொலை என்றே சொல்லமுடியும். இந்நிலையில் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள், தமது இனத்தவர்கள் சுயமரியாதையுடன் வாழுவதற்கு உதவுவதை ஓர் புனிதப் பணியாக உணர்தல் வேண்டும். நம்மவர்கள் புலம் பெயர்ந்து இந்தியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, நியூஸிலாந்து, சுவிற்சலாந்து, ஒல்லாந்து, இத்தாலி, ஜேர்மனி, டென்மார்க், நோர்வே மற்றும் சுவீடன் போன்ற நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். சிலர் அந்நாடுகளில் நிரந்தர வாசிகளாகவும் இன்னும் சிலர் அங்கு பிரஜா உரிமை பெற்றும் வாழ்ந்து வருகின்றனர். ஆனால், அனேகர் அகதிகளாகவே தற்காலிகமாக வாழ்க்கை நடத்துகின்றனர். தமிழர்களில் பலர் உயர் பதவிகளையும் வகிக்கின்றனர். ஏனையோர் சிறு சிறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் யாவரும் தங்கள் தாயகத்திற்கும் தாங்கள் பிறந்த மண்ணுக்கும் தமது இனத்தவர்களுக்கும் உதவி புரியக் கடமைப்பட்டவர்களாவர். இலங்கை வாழ் தமிழ் மக்களின் விமோசனம் புலம் பெயர்ந்த தமிழர்களின் தயவிலேயே தங்கியுள்ளது. ஐரோப்பிய நாடுகளிலுள்ள புலம் பெயர்ந்த தமிழர்கள் தமது எதிர்காலத்தை எண்ணிக் கவலைப்படுகின்றனர். ஏனெனில் அவர்கள் அகதிகளாகவே வாழ்ந்து வருகின்றனர். அப்படியிருந்த போதிலும் அவர்களது பங்களிப்பு மிகவும் போற்றத்தக்கதாகும்.

உதாரணமாக இங்கிலாந்தில் 2000 வரையினதான தமிழ் டாக்டர்கள் இருக்கின்ற போதிலும் ஏறத்தாழ 150 டாக்டர்கள் வரையில் தம் இனத்தவர்களாகிய இலங்கைத் தமிழர்கள் மீது பற்றும் பாசமும் வைத்துள்ளனர். மற்றவர்கள் வன்னியில் நிகழும் அவலம் பற்றித் தெரிந்தும் தெரியாதது போல் இருக்கின்றனர். இது மிகவும் வேதனைக்குரியவோர் விடயமாகும். வன்னியில் வாடும் மக்களுக்கு உடுதுணி, உணவு வகை,

www.tamilarangam.net

வீட்டு வசதி மற்றும் மருத்துவ வசதிகளை வழங்குவதில் அதிக அக்கறை செலுத்தாத தமிழ் மக்கள், பகவான் சாயிபாபாவுக்கு காணிக்கை செலுத்துவதில் கனவான்களாக நடந்து கொள்கின்றனர். ஆகவே புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் நம்மினத்தவருக்குச் சிறிதளவிலாவது உதவ வேண்டியது தலையாய கடமையாகும் இலங்கை அரசாங்கத்துக்கு உலக வங்கி, சர்வதேச நாணய ஸ்தாபனம், மேற்கத்திய நாடுகள், ஜப்பான் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் பெருமளவில் உதவி செய்கின்றன. ஆயினும் இந்த உதவிகள் வட-கிழக்குப் பிராந்தியங்களுக்குக் கிட்டுவதில்லை.

*இலங்கைத் தமிழர் பிரச்சினையில் புலம் பெயர்ந்த தமிழர்களின் பங்களிப்பு அவசியம்*

வடகிழக்குப் பிராந்தியம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் வரவு - செலவுத்திட்டத்தில் வட கிழக்கு பிராந்தியத்தில் கைத்தொழில்களை ஸ்தாபிப்பதற்கான ஒதுக்கீடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இலங்கை அரசாங்கத்தால் வட-கிழக்கு பிராந்தியம் உதாசீனம் செய்யப்படுகின்றது. இதனைப் புலம் பெயர்ந்தோர் நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அதுபோலவே, வடகிழக்கு பிராந்தியத்துக்கு வைத்திய உதவிகளும் உலர் உணவும் குறைக்கப்பட்டுள்ளன. திரு. கதிர்காமர் அவர்களின் பிரசாரத்தால் வன்னி மக்களின் துயரைப்போக்க முடியாது.

ஆகவே, புலம்பெயர்ந்த தமிழர்கள், இரத்த உறவினரான அவர்களது அவலங்களைப் போக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்தால் பயங்கரப் பஞ்சம் உருவாகும் ஒரு நிலையைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

தமிழ் மக்களுக்காகப் பாதுகாப்பா அல்லது பாதுகாப்புக்காகத் தமிழ் மக்களா? கவலைக்கிடமான ஒரு விடயம் புலம் பெயர்ந்த தமிழ் மக்களுக்குத் தெரியாது. அதாவது, யாழ் குடா நாட்டிலும் ஏனைய சில தமிழ்ப் பிரதேசங்களிலும் சில பகுதிகளைக் கடுமையான பாதுகாப்பு வலயங்களாக இராணுவம் பிரகடனம் செய்துள்ளது. அவ்விடயங்களில் மக்கள் வாழ முடியாது. இதுவோர் சட்ட விரோதமான செயலாகும். உதாரணமாக யாழ் குடாநாட்டில் காங்கேசன்துறை, பலாலி, வசாவிளான் ஆகியவை பாதுகாப்பு வலயங்களாகும். அங்கு பிறந்து வாழ்ந்த மக்கள்

www.tamilarangam.net

இன்று அங்கு வாழ முடியாமற் போய்விட்டது. இவ்வகையான செயற் பாடுகள் திருகோணமலையிலும் நடைபெறுகின்றன. இவ்வாறான பாது காப்பு வலயங்கள் வடக்கிலும் கிழக்கிலும் தான் அமைக்கப்படுகின்றன. தென் இலங்கையில் அப்படி எதுவும் இல்லை. இது ஒரு பாரபட்சமான செயல். இக்கொடூரமான செயலுக்குத் தமிழ் மக்கள் எதிர்ப்புத் தெரிவிக் காமல் விடுவார்களேயாகில், காலப்போக்கில், காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை, கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், மாவிட்டபுரம் கந்தசு வாமி கோவில் மற்றும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் பிரதே சங்களைப் பாதுகாப்பு வலயமெனக்கூறி அவற்றை அப்புறப்படுத்தச் சொல்வதற்கும் வாய்ப்புண்டு. கடைசியில் வடமாகாணமும் திருகோ ணமலை மாவட்டமும் பாதுகாப்பு வலயங்கள் எனப்பிரகடனப்படுத்தப பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

இவ்வாறான கொடூரமான செயல்கள் நடைபெற்றால் வட மாகா ணத்திலும் திருகோணமலையிலும் தமிழர்கள் வாழ முடியாத நிலை ஏற்படலாம். இவற்றிலிருந்து நாம் அறிவது என்னவென்றால், பாதுகாப்பு வலயம் அமைப்பதென்பது, தமிழ் மக்களைத் தமிழ்ப் பிரதேசங்களிலி ருந்து விரட்டுவதற்காகத்தான். இதே நடைமுறை இஸ்ரேலிலும் கடைப் பிடிக்கப்படுகின்றது. இஸ்ரேலிய பாதுகாப்புக் கருதி அராபியர்களின் வீடுகளை இடித்துத் தள்ளினார்கள். இவ்வாறு படுமோசமான கஷ்டங்க ளுக்கு முகங்கொடுக்கும் அப்பாவித் தமிழ் மக்கள் மீது பரிந்துணர் வேற்பட்டு அவர் தம் துயர் துடைக்கத் தம்மாலான உதவிகளை வழங் குவது, புலம் பெயர்ந்த தமிழர்களின் தலையாய கடனாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 9

20-12-98

## சர்ச்சையைக் கிளப்பியிருக்கும் ஐ.நா. அபிவிருத்தி நிறுவன அறிக்கை

கொழும்பில் இயங்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனம். இலங்கையின் தேசிய மனிதவள அபிவிருத்தி 1998 தொடர்பாக அண்மையில் அறிக்கையொன்றினை வெளியிட்டிருந்தது. இது ஓர் சர்ச்சைக்குரிய விடயமாக, சர்வதேச செய்தி அறிக்கை நிறுவனமாகிய 'ராய்ட்டரினால்' சகல வெளிநாடுகளுக்கும் செய்தி பரப்பப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையைத் தயாரித்தவர்கள் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் அலுவலர்கள் அல்லர். ஐக்கிய நாடுகள் நிறுவனம் வழங்கிய நிதியைக் கொண்டு இலங்கையைச் சேர்ந்த ஆறு நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றினாலேயே இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் தலைவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொருளாதார துறையைச் சேர்ந்த கலாநிதி ஹாஷா அத்துறபனய ஆவார். மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியை யோகா இராசநாயகம், கலாநிதி சித்திசேன, கலாநிதி சுசங்க பெரேரா மற்றும் கலாநிதி டிலினி குணவர்தன ஆகிய நால்வரும் இக்குழுவில் இடம் பெற்றிருந்தனர். அவர்களோடு இலங்கை மின்சார சபையைச் சேர்ந்த சுசந்த பெரேராவும் அக்குழுவில் அங்கம் வகித்தார்.

இந்தத் தேசியக் குழுவுக்கு ஏழு நபர்களைக் கொண்டதொரு ஆலோசனைச் சபையுமிருந்தது. அவர்களில் ஆறு ஆட்கள் இலங்கையர்களாவர். அடுத்தவர் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் முன்னாள் பிரதிநிதி ஆர்.வீ. ஒப்ஸ்ராட் (ARVEOFSTAD) ஆவார். இந்த அறிக்கையைத் தயாரித்த அறுவரில் ஐவர் சிங்கள இனத்தைச் சார்ந்தவர்களாவர். ஒருவர் மாத்திரம் தமிழ்ப் பெண்மணியாவார். ஆலோசனைச் சபையிலுள்ள ஏழு ஆட்களில் அறுவர் சிங்கள இனத்தவர். ஒருவர் மாத்திரம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் முன்னாள் பிரதிநிதியாவார். ஆலோசனைச்சபையை விட அறிக்கையைத் தயாரித்தவர்களே அறிக்கைக்கான முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த அறிக்கையை ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் அறிக்கை என வர்ணிப்பது உண்மைக்குப் புறம்பான தென்பதற்கு மேற்குறிப்பிட்ட தரவுகள் சான்றாகும். ஐக்கிய நாடுகள் நிறுவனம் இந்த அறிக்கையைப் பிரசுரித்தமையால், இதனை ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் அறிக்கையென வர்ணிப்பது, இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழ் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச செய்தி அறிக்கை நிறுவனமான 'ராய்ட்டரினால்', இது ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் அறிக்கை எனக்காட்டப்பட்டமையே குழப்பத்திற்கான காரணமாகும். இது மிகவும் தவறான தொரு வெளிப்படுத்தலாகும். இத் தவறுதலான செய்தி அறிக்கையினால் இலங்கைத் தமிழ் மக்களும் சர்வதேச தமிழ்ச் சமுதாயமும் மிகவும் கவலையடைந்திருப்பார்கள் என்பதிற் சந்தேகமில்லை. சில முக்கிய விடயங்களில் குறிப்பாக இனப்பிரச்சினை தொடர்பாக இது வோர் பக்கச்சார்பான அறிக்கையாக அமைந்து விட்டது.

அவர்களது அறிக்கையின் நாலாம் அதிகாரத்தைப் பார்க்கும் போது, அது இலங்கை அரசாங்கத்துக்கான ஓர் பிரசாரக் கருவியெனக் கருதத் தோன்றுகின்றது. குறிப்பிட்ட நாலாம் அதிகாரத்தில் வட-கிழக்கு தமிழ்ப் பிராந்தியத்தில் ஏற்பட்ட பொருளாதார நட்டங்கள் மனித உயிர்ப் பலிகள் தொடர்பாக ஒரு வசனமாவது எழுதப்படவில்லை. அந்த அதிகாரம் அரசாங்கத்துக்கான பிரசாரமாகவே அமைந்துள்ளது. மத்திய வங்கி, கண்டி தலதா மாளிகை, மின் நிலையங்கள் புலிகளால் தாக்கப் பட்டதாக அதி முக்கியத்துவம் கொடுத்துத் தயாரிக்கப்பட்ட அந்த அறிக்கையில், யாழ். குடாநாட்டில் மாத்திரம் அரச படையினரால் 81,000 வீடுகள் சேதமாக்கப்பட்டது தொடர்பாகவோ, 1600 க்கு மேற்பட்ட இந்துக்கோவில்களும் கிறிஸ்தவ தேவாலயங்களும் சேதமாக்கப்பட்டது 15 சத வீதத்துக்கு மேற்பட்ட பாடசாலைகள் சேதமாக்கப்பட்டது தொடர் பாகவோ, வடகிழக்கில் ஆயிரக் கணக்கான மக்கள் காணாமற் போனமை தொடர்பாகவோ, நூற்றுக் கணக்கான இளைஞர்களைக் கொன்று புதைத்த செம்மணிப் புதைகுழிகள் தொடர்பாகவோ எதுவும் குறிப்பிடப்பட வில்லை. அவர்கள் வெளியிட்டதிற் பல விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவை. அவற்றிலிருந்து அவர்களது உள்நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடியுமாக உள்ளது. இலங்கையில் நிகழ்ந்த சகல சம்பவங்களுக்கும் புலிகள் இயக்கமே காரணம் என அமைந்த அந்த அறிக்கையை ஏற்பதற்கு இலங்கைத் தமிழ் மக்களோ சர்வதேச தமிழ்ச் சமுதாயமோ ஆயத்தமில்லை.

www.tamilarangam.net

இவ்வாறு அரசியல் விவகாரங்களில் பாரபட்சமான முறையில் ஐக்கிய நாடுகள் நிறுவனம் ஏற்றிருக்கக்கூடாது என்பதே பலரது நிலைப் பாடாகும். இவ்வாறு பாரபட்சமான ஓர் அறிக்கையை ஐக்கிய நாடுகள் நிறுவனம் பிரசுரித்தமை இதற்கு முன்னர் சரித்திரத்தில் நாம் காணாத தொன்றாகும்.

அந்த அறிக்கையின் முகவுரையில், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் பிரதிநிதி, சம்பந்தப்பட்ட அறிக்கைக்கு நிதி வழங்கிய மைக்காகத் தலைமையைகத்துக்கு நன்றி தெரிவித்த அதேவேளையில் அறிக்கையில் அடங்கியுள்ள ஆய்வுகள், முடிவுகள் மற்றும் சிபார்சுகள் தொடர்பாக தாங்கள் முற்றிலும் இணங்க வில்லை எனவும் குறிப்பிடத் தவறவில்லை. இவ்வறிக்கைக்கு அவர்களே முற்றிலும் இணங்கவில்லை யென்பது அவரின் கூற்றிலிருந்தே புலனாகின்றது. அவர்களே அவ் வண்ணம் குறிப்பிட்ட போதிலும் அரசியல் விடயங்கள் தொடர்பாக எழுதுவதற்கு உரிமை இல்லையெனக் கூறி, ஐக்கிய நாடுகள் நிறுவனம் இவ்வறிக்கையை நிராகரித்திருக்கலாம். அவ்வாறு நிராகரிக்கப்படாமை யினால்தான் சர்வதேச செய்தி அறிக்கை நிறுவனம் அப் பகுதியை மாத்திரம் எடுத்து, ஐக்கிய நாடுகள் நிறுவனம் புலிகளுக்கெதிராக உள்ளதென உலகுக்குக் காட்டிவிட்டது. அரசியல் சம்பந்தப்பட்ட அந்த அறிக்கையின் நான்காவது அதிகாரத்தை முற்றாக நிராகரித்திருக்க வேண்டியது ஐக்கிய நாடுகள் நிறுவனப் பிரதிநிதியின் முதற் கடமை யாகும்.

தேசிய மனிதவள அபிவிருத்தி அறிக்கையில் வடகிழக்கில் நடை பெற்ற ஆயிரக்கணக்கான மனித இழப்புகள் தொடர்பாக ஒரு வசனம் கூட இடம் பெறவில்லை. இவ்வாறான அறிக்கையைக் கொழும்பில் இயங்கும் ஐக்கிய நாடுகள் நிறுவனம் பிரசுரித்தது, ஆச்சரியத்துக் குரியதொன்றாகும். தமிழ் மக்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் கட்சிகள் இதுதொடர்பாக ஐக்கிய நாடுகள் நிறுவனத் தலைமையகத்துக்கு முறையீடு செய்திருக்கலாம். இதுவரை அவர்கள் அப்படிச் செய்யாதது வேத னைக்குரியதோர் விடயமாகும்.

ஒரு நாட்டின் உள்நாட்டு அரசியல் விவகாரங்கள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஐக்கிய நாடுகள் நிறுவனப் பிரதிநிதிக்கோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட குழுவுக்கோ அதிகாரமில்லை. முக்கிய

www.tamilarangam.net

மாக இலங்கையில் கடந்த பதினாறு வருடங்களாக நடைபெறும் இனப் பிரச்சினையுடன் தொடர்புடைய யுத்தம் தொடர்பாகக் குறிப்பிட ஐக்கிய நாடுகள் நிறுவனப் பிரதிநிதிக்கோ அல்லது அக்குழுவுக்கோ எவ்வித உரிமையோ கடமையோ கிடையாது.

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் சர்வதேச ஆலோசகர் ஒருவராகப் பல வருடங்கள் கடமையாற்றிய நான், ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் சரித்திரத்தில் இவ்வாறான ஒரு தலைப்பட்சமான அறிக்கை யொன்றைக் கண்டதில்லை. இவ்வாறு இனக்குரோதத்தை வளர்க்கும் அறிக்கைகள் கண்டிக்கப்பட வேண்டியவையாகும். ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் ஐ.நா.பாதுகாப்புச் சபை தலையிடலாமே தவிர, ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் செயலாளர் நாயகத்துக்குக் கூடத் தலையிடும் அதிகாரம் இல்லை என்பதே கருத்தாகும். உதாரணமாக ஹொங்கொங், ஈராக், கொரியா முதலிய நாடுகளின் விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் நிறுவனம் தலையிட்டது.

இந்த அறிக்கையின் புள்ளி விபரங்களில் வட-கிழக்கு மாகாணம் தொடர்பாக தரவுகள் அதிகமாக இடம் பெறவில்லை. இந்த அறிக்கையைத் தயாரித்தவர்களுக்கு எதையும் எழுதும் சுதந்திரம் உண்டு. ஆனால் இந்த அறிக்கைக்கு முகவுரை வழங்கிய ஐக்கிய நாடுகள் நிறுவனப் பிரதிநிதியைத் தான் கடுமையாக விமர்சிக்க வேண்டியுள்ளது. இனப்பிரச்சினை தொடர்பாக ஐக்கிய நாடுகள் நிறுவனம் கடைப்பிடிக்கும் கோட்பாடுகளுக்கு முரணாக இந்த அறிக்கை அமைந்துள்ளது.

வரவு செலவுத்திட்ட விவாதத்தில் வெளிநாட்டு அமைச்சுக்கென நிதி ஒதுக்கப்பட்ட தினத்தன்றே இவ்வறிக்கையும் வெளியிடப்பட்டது புரியாத புதிராகவுள்ளது. ஐக்கிய நாடுகள் நிறுவன அலுவலர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்படும் குழுக்கள் அறிக்கைகளைத் தயார் செய்கையில் நன்கு மதிக்கப்படும் கோட்பாடுகள் ஆண்டாண்டு காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. நடு நிலைமை வகிப்பதே சிறந்த கோட்பாடாகும். இந்த அறிக்கையின் நான்காம் அதிகாரத்தில் நடுநிலை கொள்கை உதாசீனம் செய்யப்பட்டிருப்பது வேதனையளிக்கின்றது.

www.tamilarangam.net

## 10

27-12-98

# தென்னாசியாவிலிருந்து தென்னாபிரிக்கா நோக்கி திசைதிரும்பும் இனப்பிரச்சினை

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக தென்னாபிரிக்க அரசாங்கம் எந்தளவுக்கு அக்கறை கொண்டுள்ளது, என்பது தொடர்பாக சிறிது சிந்தித்தல் வேண்டும். வெளிநாடுகளில் இயங்கும் விடுதலைப் புலிகளுக்கு சார்பான ஸ்தாபனங்கள் ஆபிரிக்க தேசிய காங்கிரஸுடன் அதிக தொடர்புகளை வைத்துள்ளன என ரொஹான் குணவர்தன பத்திரிகைகளில் மிக விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். இவரது கூற்று முற்றிலும் சரியானதா அன்றேல் பிழையானதா என ஆராயப்பட வேண்டியதில்லை. ஆனால் இலங்கை இனப்பிரச்சினையில் தமிழர்களுக்கு சார்பாகக் கட்டுரை எழுத விரும்பாத பிரபல இந்திய சஞ்சிகையான 'புரொன்ட் லைன்' (Front Line) ரொஹான் குணவர்தனவின் கூற்றை அப்படியே பிரசுரித்துள்ளதன் உள்நோக்கத்தினை வாசகர்கள் நன்கு அறிந்து கொள்ளலாம். விடுதலைப் புலிகளுக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸுக்கும் இடையே நேசகரமான உறவுகள் பல ஆண்டுகளாக நிலவி வந்துள்ளன என்பதை இவரின் கட்டுரையிலிருந்து அறிந்து கொள்ள முடியும்.

1983 இனக்கலவரத்தின் பின்னர் இலங்கைக்கு யுத்த தளபாடங்களை அனுப்புவதற்கு அமெரிக்கா, பிரித்தானியா போன்ற உலக நாடுகள் தயக்கம் காட்டிய காலகட்டத்தில், வெள்ளையரின் ஆட்சியிலிருந்த தென்னாபிரிக்க அரசாங்கம், புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பயன்படுத்துவதற்காக கனரக வாகனங்கள் உட்பட்ட யுத்த தளபாடங்களை இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்தது. இந்த இரண்டு அரசாங்கங்களுக்கும் இடையிலான உறவு, ஆபிரிக்க தேசியக் காங்கிரஸுக்கும், வெளிநாடுகளில் இயங்கும் விடுதலைப் புலிகளின் கிளைகளுக்குமிடையே ஒற்றுமைப் பாலமொன்றினை ஏற்படுத்தியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. உண்மையில் இருசாராரும் விடுதலை இயக்கங்களாக விளங்கியமையே அதற்கான காரணமாகும். இந்த உறவு நாளடைவில் வலுப்பெற்றிருக்கலாம்.

வெள்ளையரின் ஆட்சி ஒழிந்து, ஆபிரிக்க தேசிய காங்கிர ஆட்சியைக் கைப்பற்றியவுடன் இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்குவதை தென்னாபிரிக்க அரசாங்கம் நிறுத்திக் கொண்டது. இது விடுதலைப்புலிகள் அடைந்தவோர் தார்மீக வெற்றியாகும்.

www.tamilarangam.net

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் நிகழ்ந்த படுமோ சமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தென்னாபிரிக்க தமிழ்ச் சமுதாயம் மிகவும் கவலைகொண்டிருந்தது. அவர்களின் வேண்டுதலின் பேரில், இலங்கையின் இனப்பிரச்சினையில் அதிகளவு அக்கறை கொள்ள வேண்டிய நிலை தென்னாபிரிக்க அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. இதன் விளைவாக தென்னாபிரிக்க தமிழ்ச் சமுதாயத்தினர் மத்தியில் தோன்றிய பல அமைப்புகள் இலங்கைத் தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையிலான உதவிகளை வழங்குவதற்கு முன்வந்தன. இச்சூழ்நிலையில் தென்னாபிரிக்காவில் விடுதலைப் புலிகளுக்கு அமோக ஆதரவிருப்பதனை அறிந்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர், அதனை இல்லாமற் செய்யும் நோக்குடன் தென்னாபிரிக்காவுக்குச் சென்றிருந்தார்.

இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இலங்கை அரசாங்கம் கொடூரமான கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாலும் தமிழர்களுக்கெதிராகப் படுமோசமாக மனித உரிமைகள் மீறப்படுவதனாலும், இவருடைய தென்னாபிரிக்க விஜயம் வெற்றியளிக்க வில்லை என்பதுதான் கணிப்பாக உள்ளது. அவரது தென்னாபிரிக்க விஜயம் வெற்றியளித்ததாக இலங்கை பத்திரிகைகளும், தொடர்பு சாதனங்களும் பறைசாற்றியபோதிலும் அவ் விஜயம் படுதோல்வியையே தழுவிக் கொண்டது.

## இனப்பிரச்சினை தொடர்பாக வெளிவிவகார அமைச்சு வெளிநாடுகளில் மேற்கொண்ட பிரசாரங்கள் செயலிழந்து போகின்றன.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா அவர்களைச் சந்திப்பதற்கு முயற்சித்தபோதும் அது கைகூடவில்லை. இதன் மூலம் தென்னாபிரிக்க அரசாங்கத்தின் மனப்போக்கை எம்மால் அறிந்து கொள்ள முடியும். எனினும் தென்னாபிரிக்க அரசாங்கத்தின் பாராளுமன்றக் குழுவொன்றினை இலங்கைக்கு அனுப்பி உண்மை நிலையை அறிந்து கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சர் கேட்டிருந்தார். இவ்வாறு அழைப்பு விட்டமைக்கு இவர்தான் காரணமா அல்லது வேறு யாராவது ஆட்களின் தூண்டுதல்தான் காரணமா என்பது தெரியவில்லை. அந்த அழைப்பிற்கிணங்க, ஆபிரிக்க தேசிய காங்கிரஸைச் சார்ந்த ஐவரையும் தேசிய காங்கிரஸைச் சாராத முக்கிய தமிழர்கள் இருவரையும் கொண்ட பாராளுமன்றக் குழுவொன்று இலங்கைக்கு வருகை தந்திருந்தது. இவர்களது இலங்கை விஜயத்திற்கான

www.tamilarangam.net

ஒழுங்குகளை இலங்கை அரசாங்கமே தயாரித்திருந்தது. அவர்கள் கொழும்பில் இருந்தபோது ஜனாதிபதியையும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்தனர். யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது இரா ணுவ தளபதி, அரசாங்க அதிபர், பல்கலைக்கழக ஆசிரியர்கள், மற்றும் சமூகத்தலைவர்களையும் சந்தித்தனர். அதன் பின்னர் புத்தளத்திலுள்ள முஸ்லிம் அகதிகளையும் சந்தித்ததோடு தலதா மாளிகைக்கும் விஜயம் செய்தனர்.

இலங்கையில் நடைபெற்றுவரும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இருதரப் பினர்களையும் சந்திப்பதற்கு அவர்கள் விரும்பியபோதிலும் வன்னிப்பிர தேசத்திற்குச் செல்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. வன் னிக்குச் செல்லக்கிடைக்காமையால் அவர்கள் கவலையடைந்ததாக அறிய முடிகின்றது. எனினும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை தென்னா பிரிக்காவிலோ, லண்டனிலோ அல்லது பாரிசிலோ இயங்கும் அவர்களது அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு அறிந்து கொள்ள முடியும் என பாராளுமன்றக் குழுவில் அங்கம் வகித்த முக்கிய தமிழ் உறுப்பினரான கலாநிதி ராஜு கருத்துத்தெரிவித்திருந்தார்.

இலங்கையில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இரு சாராரும் விரும்பு வார்களேயானால், மத்தியஸ்தராக அல்லது ஏற்பாட்டாளராகச் செயற்ப டுமாறு தமது ஜனாதிபதி நெல்சன் மண்டேலா அவர்களுக்குத் தாம் சிபாரிசு செய்யப்போவதாக அவர்கள் பகிரங்கமாகக் கருத்து வெளி யிட்டமை, இப்பாராளுமன்றக் குழுவின் வருகையால் ஏற்பட்ட முக்கிய மானதொரு தாக்கமாகும்.

மத்தியஸ்தம் வகிப்பதற்கு இதுவரையில் பல நாட்டு அரசாங்கங்கள் முன்வந்த போதிலும் இவ்வாறு பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட்டமை இதுவே முதல் தடவையாகும். வெளிநாடொன்றினைச் சேர்ந்த பாராளு மன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று இலங்கை மண்ணில் விடுதலைப் புலிகளை சந்திக்காவிட்டாலும் அரசாங்கத் தலைவர்க ளோடும் இதர தமிழ்க்கட்சிகளுடனும் கலந்துரையாடியதன் பின்னர் மத்தியஸ்தம் செய்ய முன்வந்தமை இதுவே முதல் தடவையாகும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன், நிபந்தனையற்ற, மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைக்குத் தாம் தயா ரென மாவீரர் தினத்தில் வெளிப்படுத்தியதன் பின்னர் தென்னாபிரிக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாராளுமன்றக் குழு மத்தியஸ்தம் வகிப்பதற்குத் தமது நாடு தயாரெனக் குறிப்பிட்டிருப்பது மிகவும் முக்கியமானதாகும்.

இச்சூழ்நிலையில் இலங்கை மீது அக்கறையுள்ள அனேக நாடுகள் பிரபாகரனின் சமாதானப் பேச்சுக்கான வெளிப்படுத்தலையொட்டி மேலும் அக்கறை காட்டினார்கள். இலங்கை அரசாங்கமும் குறிப்பாக வெளிவிவகார அமைச்சரும் இலங்கையில் நடப்பது பயங்கரவாதமெனப் பிரசாரம் செய்தாலும் அப்பிரசாரத்திற்கு எந்தவொரு நாடும் செவிசாய்க்கவில்லை என்பதையே நடைபெறும் நிகழ்வுகள் காட்டி நிற்கின்றன. பேச்சு வார்த்தைகளின் மூலம் மாத்திரம் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதே சகல நாடுகளினதும் கருத்தாகவுள்ளது.

இரு பகுதியினருக்கும் ஒருவர் மீது ஒருவருக்கு நம்பிக்கை இல்லாமையினால் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் தவிர்க்க முடியாததாகும். இதுவே இன்றைய சர்வதேச சமுதாயத்தின் நிலைப்பாடுமாகும். இந்த யதார்த்த நிலையை உணராமலும் சர்வதேச சமூகத்தின் அழுத்தத்திற்கு மதிப்புக்கொடுக்காமலும் விட்டால் நாடு அழிவது திண்ணம். இதனைத் தென்னாபிரிக்க பாராளுமன்றக் குழு நன்குணர்ந்துள்ளது என்பது அவர்களது உணர்வுகளிலிருந்து புலனாகின்றது. இந்த உணர்வுகள் வெகுவிரைவில் ஏனைய நாடுகளுக்கும் பரவும் என்பது திண்ணம். சமீபத்தில் அமெரிக்காவில் நடைபெற்ற இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான கருத்தரங்கொன்றில் கலந்து கொண்ட சகல பிரதிநிதிகளும், இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மிக மோசமான கட்டத்தை அடைந்துவிட்ட தெனக் கருத்துத் தெரிவித்துள்ளனர். இனப் பிரச்சினை காரணமாக இலங்கையில் ஏற்பட்ட யுத்தத்தின் விளைவால் மனித உரிமை மீறல்கள் படுமோசமாக நடைபெறுவதாக அனைத்து நாடுகளும் கவலையடைந்துள்ளன.

மிக உயர் பதவி வகிக்கும் இலங்கையரான தனபால அவர்கள், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஐ.நா. ஸ்தாபனம் மத்தியஸ்தம் வகிக்கவேண்டும் என தனிப்பட்ட முறையில் விரும்புகின்றார். இச்சூழ்நிலையில் இலங்கை அரசாங்கமோ அல்லது வெளிவிவகார அமைச்சரோ இப்பிரச்சினை ஓர் உள்நாட்டு விவகாரமென இன்னும் எத்தனை நாட்களுக்குக் கூறிக்கொண்டிருக்க முடியும்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுருக்கமாகச் சொல்வதானால், இது உள்நாட்டுப் பிரச்சினை யில்லை. சர்வதேசப் பிரச்சினையாக மாறிவிட்டது. தென்னாபிரிக்க பாராளுமன்ற உறுப்பினர்களின் விஜயமும் அவர்களின் உணர்வுகளும் இலங்கையில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் தமிழர்களுக்குச் சாதகமான வாய்ப்புக்களை ஏற்படுத்தக்கூடும். தென்னாபிரிக்காவிலுள்ள தமிழ் அமைப்புகள் இலங்கைத் தமிழர்களுக்கு சார்பாக தென்னாபிரிக்க அரசாங்கத்திற்குப் பல அழுத்தங்களைக் கொடுப்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக அக்குழுவினரை நேரில் கண்டு அளவளாவும் போது அறிந்து கொள்ள முடிந்தது.

இவ்விடயம் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடும மாறுபட இடமுண்டு. தென்னாபிரிக்கா அதிக அக்கறை எடுக்குமேயாகில், இந்தி யாவும் இராஜ தந்திர ரீதியில் இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்கவும் இடமுண்டு. குஜ்ரால் கோட்பாடுகளையே பாரதீய ஜனதா கட்சியும் கடைப்பிடிக்க வேண்டுமென இலங்கை அரசாங்கம் விரும்பி னாலும், தென்னாபிரிக்கா மத்தியஸ்தம் வகிப்பதனை இலங்கை அரசாங் கம் நிராகரித்தால், அதன் மூலம் ஏற்படக்கூடிய சர்வதேச அழுத்தங்களால் இந்தியாவும், இலங்கை தொடர்பான தனது கொள்கைகளை மீளாய்வு செய்வதற்கு இடமுண்டு.

இம்மாற்றத்திற்கு ஜனதா கட்சியைச் சேர்ந்த சுப்பிரமணிய சுவாமி, சென்னை 'இந்து' பத்திரிகை, 'புரொன்ட் லைன்' பத்திரிகை ஆசிரியரான ராம் மற்றும் 'துக்ளக்' பத்திரிகையாசிரியர் சோ.இராமசாமி ஆகியோர் முட்டுக்கட்டையாக இருந்தாலும் கூடவை.கோபால்சாமி, ராமதாஸ், பெர்னாண்டஸ் ஆகியோர் இம்மாற்றத்திற்கு ஆதரவாகத் தமது செல்வாக் கைப் பிரயோகிப்பதற்குப் பின்னிற்க மாட்டார்கள்.

இவ்வாறு எதிர்ப்பார்க்கப்படும் மாற்றங்களுக்கான காரணம் தென்னாபிரிக்க பாராளுமன்றக் குழுவினரின் விஜயமும் அவர்களது உணர்வுகளுமே யாகும். எனவே, இலங்கையில் கடந்த 16 வருடங்களில் நிகழ்ந்த அழிவுகளை விட இன்னும் மோசமான அழிவுகள் இடம் பெறாதிருக்க வேண்டுமாயின் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளின் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தின் மூலம் பேச்சுவார்த்தை நடத்தி, ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற்கு இலங்கை அரசாங்கம் முன்வருதல் வேண்டும். இதன் மூலமே இலங்கை நாட்டைப் பேரழிவிலிருந்து காப்பாற்றிக்கொள்ள முடியும்.

www.tamilarangam.net

# 11

03-01-99

## பொஸ்னியா, ருவண்டா பற்றி குமுறும் உலகம் இலங்கை குறித்து மௌனித்து நிற்கின்றது

1998 டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி வாஷிங்டனில் நடைபெற்ற இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அமெரிக்க காங்கிரஸின் குழுவினரது வட்ட மேசைக்கருத்தரங்கில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான கருத்துக்கள் மிகவும் தெளிவாக எடுத்துரைக் கப்பட்டன. இந்த வட்டமேசைக் கருத்தரங்கில் அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த செல்வி கொலின் மலோன் (Colleen Malone), றிச்சட் றியோ (Richard Reoch),செல்வி எலிஸபெத் பொவென் (Elizabeth Bowen), சர்வதேச மன்னிப்புச் சபையைச் சேர்ந்த ஸ்டீவன் றிச்சட் (Steven Richard), அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தைச் சேர்ந்த ஜெறி லுடேர்ஸ் (Jerry Luders) ஆகியோர் பங்கு பற்றினர். திருமதி. கொலின் மலோன் இலங்கையிற் சில மாதங்கள் தங்கியிருந்து இங்குள்ள நிலைமையை நன்கு அறிந்து கொண்டவர். அந்த அம்மை யாரை நேராகச் சந்தித்து இங்கு நடைபெறும் இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கியவரான ஹான்ஸ் ஹோகிறபே (Hans Hogrefe) ஆணித்தரமாகவும் அழுத்தமாகவும் சில கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். இவர் ஒரு அமெரிக்கப் பிரஜை என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். இலங்கையின் நிலைவரத்தை இவர் நன்கு அறிந்து வைத்துள் ளார்போல் தெரிகிறது.

இவரது கணிப்பின்படி இலங்கை அரசாங்கம் அனேக சர்வதேச மத்தியஸ்தங்களை நிராகரித்துவிட்டது. அரசின் தீர்வு யோசனைகளும் முடங்கி விட்டன. மேலும் வட கிழக்குப் பிராந்தியங்களுக்கென நியமிக் கப்பட்ட மனித உரிமை மீறல்கள் ஆணைக்குழுவும் செயற்படவில்லை என்பதே பொருளாகும். இக் கருத்துக்களுக்கு அமெரிக்க பாராளுமன் றத்தைச் சேர்ந்தவர்கள் அதிக கவனம் செலுத்துவர் என்பதிற் சந்தேக மில்லை. சில சமயங்களில் இவரது கருத்துக்கள் ஓர் விழிப்புணர்வையும் ஏற்படுத்தலாம். எனினும் அமெரிக்க அரசாங்கம் இவற்றுக்குச் செவி மடுக்குமோ என்பது தெரியாது. ஏனெனில் அமெரிக்க அரசாங்கம் அனேக நாடுகளில் தனது தேசிய சுயநலம் கருதியே செயற்படுகின்றது. தமிழ் மக்களின் அபிலாஷைகள் நசுக்கப்படுவதைக் கூட தனது சுயந லத்திற்காகப் பொருட்படுத்தாது என்பதே பொதுவான கருத்தாகும்.

www.tamilarangam.net

இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த செல்வி கொலின் மலோன் பல விடயங்களை மிக நுணுக்கமாக எடுத்துக்கூறியுள்ளார். அமெரிக்கா இலங்கையில் இராணுவ ரீதியில் எவ்விதத்தில் ஈடுபட்டிருக்கின்றது என்பதை விளக்கிக் கூறினார். அவரது அறிக்கையில், கிழக்கிலங்கையில் இராணுவத்தினரால் மக்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதாக எடுத்துரைத்துள்ளார். எவ்விதமான சித்திரவதைகள் நடைபெறுகின்றது எனவும் விரிவாக விளக்கியுள்ளார். அச்சித்திரவதைகளினால் ஏற்படும் தாக்கங்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். கிழக்கிலங்கையிற்றான் மிக மோசமாக ராணுவத்தினரின் சித்திரவதைகள் நடைபெறுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். கொழும்பிற் கூடச் சோதனைச் சாவடிகளில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியம் பற்றியும் குறிப்பிட்டுள்ள அவர் எவ்விதம் இரண்டு தமிழ்க்கிராமங்களிலிருந்து தமிழ் மக்கள் ராணுவத்தினரால் விரட்டப்பட்டனர் என்றும் எடுத்துரைத்துள்ளார்.

மாங்குளத்தில் பிடிபட்ட 26 சிறுவர்கள் தொடர்பாக உள்நாட்டு தொடர்பு துறையினர் அதிக விளம்பரம் கொடுத்தது பற்றியும், அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் தமிழ்க் குழுக்களுக்கருகிலுள்ள தமிழ்ச் சிறுவர்களிடம் கட்டாயப்படுத்தி வேலை வாங்கப்படுதாகவும், ஒரு சந்தர்ப்பத்தில் 11 வயது 9 வயதுமுள்ள சிறுவர்கள் அவர்களது விருப்பத்துக்கு மாறாகவும், அவர்களின் பெற்றோர்களது விருப்பத்துக்கு மாறாகவும் ராணுவத்தினரால் கட்டாய வேலைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

அந்த அறிக்கையின்படி பெற்றோர்கள் இப்பிள்ளைகள் இவ்வாறு வேலைக்குப் போவதை தடுத்தால் முழுக் குடும்பமுமே அழிக்கப்படும் என்பதாகும். அதனால்தான் பெற்றோர்கள் அவர்களைத் தடுக்கவில்லை. வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் நம் நாட்டுக்கு வந்து மூடிமறைக்கப்பட்ட உண்மைகளை வெளிப்படுத்தியது வரவேற்கத் தக்கவோர் விடயமாகும்.

புலிகள் இயக்கந்தான் அவர்களது விருப்பத்துக்கு மாறாகச் சிறுவர்களை வேலைக்கமர்த்துவதாக அரசாங்கம் பிரசாரம் செய்தாலும், அரசாங்க ஊழியர்களாகிய இராணுவத்தினர் செய்யும் கொடுமைகளை நம் நாட்டு மக்களை விட வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் நமக்கு எடுத்துக் காட்டியது எங்கள் மனச்சாட்சியை உலுக்குகின்றது. இவ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாறான அறிக்கைகள் மூலம் உண்மை நிலையை அறிந்து கொள்ளும் வாய்ப்பு சிங்கள மக்களுக்கும் கிட்டுகின்றது.

மன்னாரில் எவ்வாறு ராணுவத்தினர் பொது மக்களோடு சேர்ந்து பேரூந்துகளில் பயணம் செய்கின்றனர் எனவும், தான் இலங்கையில் இருந்த காலத்தில் மன்னாரில் கடத்தற்காரர்களை ராணுவம் சுட்டுக் கொன்றதனையும் அவர் விபரித்துள்ளார்.

அரசாங்கம் நியமித்த மனித உரிமைக்குழுவில் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர் என்பதே இந்த அம்மையாரின் கருத்தாகும். இலங்கை ராணுவம் விரும்பும் எதனையும் செய்யலாம் என்பதே இந்த அம்மை யாரின் நிலைப்பாடாகவிருக்கின்றது. மக்கள் மேற்கொண்ட முறையீடு களுக்கு எதுவித பலனும் ஏற்படாமையே அதற்கான காரணமாகும். நூற்றுக்கணக்கான மக்களைக் கொலை செய்து புதைகுழிகளில் புதைத் ததாக அனேக மக்கள் முறையிட்டனர். வேறு நாடுகளில் புதை குழிக ளைக் கண்டால் சர்வதேச சமுதாயம் கொதித்தெழுகின்றது. இலங்கையின் புதைகுழிகள் தொடர்பாகச் சர்வதேச சமுதாயம் மௌனம் சாதிப்பது தனக்குக் கவலையளிப்பதாகவும், இது தொடர்பான கேள்விகளுக்குத் தன்னால் பதில் கூற முடியாமல் போனமைக்காக வருத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் மனித உரிமைகளை மீறுகின்றனர். எனக் குறிப்பிட்ட அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தைச் சேர்ந்த பிரமுகரொருவர் யாழ்ப்பாணத்திலுள்ள புதைகுழிகள் தொடர்பாக அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ள வில்லையெனவும், தங்களது புத்திமதிகளைக் கேட்டுத்தான் இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் தொடர்பாக அக்கறை கொண்டுள்ள தாகவும் கூறினார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி இலங்கையில் படுமோச மான மனித உரிமை மீறல்கள் இடம் பெறுவதாகவும், உலகிலேயே ஈராக்கிற்கு அடுத்த படியாக இலங்கையில் தான் ஆட்கள் காணாமற் போவதாகவும், சென்ற வருடம் ஆயிரக் கணக்கானோர் கைது செய்யப் பட்டு சித்திரவதைக்கு உட்புகுத்தப்பட்டதாகவும், பாரிய புதைகுழிகள் இருப்பதாகவும், பத்திரிகைச் சுதந்திரம் இல்லையெனவும் குறிப்பிட்டுப்

www.tamilarangam.net

பின்வரும் விடயங்கள் தொடர்பாக, அமெரிக்க காங்கிரஸ் அதிக கவனம் செலுத்துதல் வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

அவ்விடயங்களாவன; மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் சொன்னதை செய்கின்றதா என்பதும், இலங்கை இராணுவம் அரசாங்கம் சொன்னதைச் செய்கின்றதா என்பதுமாகும். அமெரிக்க அரசாங்கம் சொல்வதற்கு இலங்கை அரசாங்கம் செவிசாய்ப்பதனால் மனித உரிமைகள் தொடர்பாக அமெரிக்க அரசாங்கம் இலங்கை அரசாங் கத்துக்கு எடுத்துக்கூற வேண்டுமென வற்புறுத்தினார்.

செல்வி எலிசபெத் பொவென் இலங்கையிலுள்ள நிலைமையை பொஸ்னியாவிலும் ருவாண்டாவிலுமுள்ள நிலைமைகளோடு ஒப்பிட்டுக் கூறினார். பொஸ்னியாவிலும் ரூவாண்டாவிலும் நடைபெற்ற விடயங்கள் உடனடியாக உலகுக்கு எடுத்துக் கூறப்பட்டதும், ஆனால் இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல் விடயங்கள் கடந்த 16 வருடங்களாக வெளியுலகத்திற்கு எடுத்துரைக்கப்படாததுமே உள்ள வித்தியாசம் எனக் குறிப்பிட்ட அவர் யுத்தத்தினால் சாதாரண பொது மக்களே பாதிப்படை வதாகவும், அரச பயங்கரவாதத்தின் பிரதி பலிப்பே தமிழ் இளை ஞர்களின் செயற்பாட்டுக்கான காரணமெனவும் இலங்கையில் ஆறு இலட்சத்துக்கு மேற்பட்டோர் உள்நாட்டில் இடம் பெயர்ந்து அகதிகளாக வாழுவதாகவும், அவர்கள் ஆயுத பாணிகள் அல்லர் எனவும் சாதாரண குடிமக்களே எனவும் குறிப்பிட்டார்.

மேலும் வன்னிப்பிரதேசத்துக்கு அனுப்பப்படும் உணவு மற்றும் மருந்து வகைகள் அவர்களுக்குப் போதுமானதல்ல எனவும் சுட்டிக் காட்டினார். பேராசிரியர் போஸ்ட் (Phust) தனது ஆராய்ச்சிக் கட்டுரை யொன்றில் யுத்தத்தில் உணவுப் பண்டங்களும் மருந்து வகைகளும், நடுநிலைப் பொருட்களெனவும், அவை சாதாரண மக்களைச் சென்ற டைவதனைத் தடை செய்வது யுத்தக் குற்றமாக மதிக்கப்படும் என்றும் குறிப்பிட்டிருந்ததனையும், இந்த அம்மையார் சுட்டிக் காட்டியிருந்தார். பயங்கரவாதத்தடைச் சட்டமும், இராணுவத்தினர் புரியும் குற்றங்க ளுக்காக அவர்கள் மீது வழக்குத் தொடர முடியாத நிலை ஆகிய இரண்டு விடயங்களும் தான் இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்கான காரணம் எனவும் வெளிப்படுத்தியிருந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்னொரு முக்கியமான பாரபட்சமான விடயமொன்றும் இந்த அம்மையாரால் உலகத்துக்கு வெளிப்படுத்தப்பட்டது. அதாவது சில ஆயிரக்கணக்கில் இடம் பெயர்ந்து வாழும் சிங்கள மற்றும் முஸ்லிம் அகதிகள் அனுபவிக்கும் நலன்கள், இலட்சக் கணக்கான வன்னியில் இடம் பெயர்ந்த தமிழ் அகதிகளுக்குக்கிடைப்பதில்லை. வெளிநாட்டுப் பிரஜையொருவரின் உள்ளத்தை உலுப்பிய இந்தப் பாரபட்சமான அடிப் படை மனித உரிமை மீறல் தொடர்பாக நம் நாட்டுத் தமிழ் உணர்வுள்ள சட்டத்தரணிகள், சட்ட நடவடிக்கை எடுக்க முன்வராமை வேதனை யளிக்கின்றது.

தமிழ் அரசியல் கட்சிகளாவது இப் பாரபட்சத்துக்கெதிராகக் குரலெழுப்பாமலிருப்பது வியப்பளிக்கின்றது. இந்த அம்மையார் தனது முடிவுரையில், அமெரிக்க காங்கிரஸ், இலங்கை மீதான தனது கொள் கையை பிரதேசத்துக்குப் போதுமான அளவினதான உணவுப் பண்டங் களை அனுப்பி வைப்பதற்கு அமெரிக்க காங்கிரஸ் இலங்கை அரசாங் கத்தக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும், பேராளிகளின் கட்டுப் பாட்டிலுள்ள இடங்களுக்கு மக்கள் போய்வருவதற்கு இலங்கை அரசாங் கம் அனுமதி வழங்க வேண்டும் எனவும் ஆணித்தரமாக எடுத்து ரைத்ததோடு, அமெரிக்க அரசாங்கமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அதிக அக்கறை செலுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இலங்கைக்கு அமெரிக்காவிலிருந்து கிடைக்கப்பெறும் உதவிக ளுக்கும், இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கும் ஏதா வது தொடர்பு உண்டா எனவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தை வினாவியிருந்தார். அத்துடன் புலிகள் இயக்கம் அமெரிக்காவில் நிதி திரட்டுவது தொடர்பான முக்கிய கேள்வி யொன்றினையும் கேட்டி ருந்தார். இராஜாங்கத்திணைக்களம் அதற்குப் பதிலளிக்கையில், புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டிருப்பதால் அவர்கள் நிதி திரட்ட முடியா தெனவும் மேலும் புலிகள் இயக்கம் நிதிதிரட்டுகிறது என்ற குற்றச் சாட்டு இதுவரை நிரூபிக்கப்படவில்லையெனவும் குறிப்பிட்டிருந்தது. இறுதியில் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்படும் இராணுவ உதவி மற்றும் இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

## இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற கருத்தரங்கினால் ஏற்படக்கூடிய பலாபலன்கள்

இலங்கையில் தமிழர்களுக்கெதிராக நடைபெறும் கொடூரமான மனித உரிமை மீறல்களை உலகம் நன்கு அறிந்து கொண்டுள்ளது. உலக மக்களின் கவனத்தை இது நன்கு ஈர்த்து விட்டது என்பதனையே இக்கருத்தரங்கிலிருந்து எம்மால் அறிந்து கொள்ள முடியுமாக உள்ளது. இலங்கை அரசும் வெளிவிவகார அமைச்சும் இலங்கையில் நடப்பது பயங்கரவாதம் என மேற்கொள்ளும் பிரசாரம் எடுபடப் போவதில்லை. எனவே அல்லற்படும் தமிழர்களுக்கு இந்தக் கருத்தரங்கு ஒரு திருப்பு முனையாகவே அமையப் போகின்றது. அக்கருத்தரங்கில் விவாதிக் கப்பட்ட விடயங்களைச் சகல நாடுகளும் இதுவரையில் கணனி மூலம் அறிந்திருக்கும்.

தென் ஆபிரிக்க பாராளுமன்றக் குழுவின் அறிக்கையும் அமெரிக் காவில் நடைபெற்ற இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக இந்தக் கருத்தரங்கின் அறிக்கையும், இலங்கை அரசாங் கத்துக்கு மிக மோசமான அபகீர்த்தியை உண்டாக்கப் போகின்றது. அதனால் அண்டை நாடான இந்தியாவில் இதன் தாக்கங்கள் பிரதிபலிக்க போகின்றது. சில மாதங்களுக்கு முன்னர் தமிழ் நாட்டிலுள்ள முக்கிய அரசியற் கட்சிகள் ஒன்று சேர்ந்து, செம்மணிப்புதைகுழி விவகாரம் தொடர்பாகவும் வடகிழக்குப் பிராந்தியத்திலிருந்து, இராணுவம் வெளி யேற்றப்பட வேண்டுமெனவும் வற்புறுத்தியிருந்தார்கள்.

ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் தாபன மனித உரிமை ஆணைக்குழு முன்பாக அனேக வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவ னங்கள், இலங்கை ராணுவத்தை வட, கிழக்கிலிருந்து வெளியேற்ற வேண்டுமென வற்புறுத்தினர். இலங்கையிற் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இடதுசாரிக் கட்சியொன்றும், இலங்கை அரசாங்கம் தனது பிரஜைக ளுக்கு எதிராகவே யுத்தம் செய்வதாகவும், ஆகவே இந்த யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமெனவும், வட,கிழக்கிலிருந்து இராணு வம் வெளியேற்றப்பட வேண்டுமெனவும் குரல் கொடுத்துள்ளது.

www.tamilarangam.net

இவ்வாறான குரல்களுக்கும் அமெரிக்காவில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான கருத்தரங்கிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதெனப் புலனாகின்றது. இவ்வாறான சர்வதேசக் கருத்துக்களையும், எமது நாட்டில் யுத்தத்துக்கு எதிராக தோன்றியுள்ள கருத்துக்களையும் அரசாங்கம் எவ்வளவு காலத்துக்குப் புறக்கணிக்க முடியும்? சர்வதேச அரங்கில் இவ்வாறானதொரு சூழ்நிலை உருவாகும் போது அதன் பிரதிபலிப்பாக எமது நாட்டிலும் யுத்தத்துக்கு எதிரான கோஷங்கள் எழும்புவது தவிர்க்க முடியாததாகும்.

ஆனாலும், இதுவரை ஏதாவதோர் தமிழ் அரசியற் கட்சியோ அல்லது குழுவோ தமிழ் மக்களின் அவலங்களை நீக்குவதற்காக இராணுவத்தை வட கிழக்கிலிருந்து வெளியேற்ற வேண்டுமென பாராளுமன்றத்திலோ, அன்றேல் வெளியிலோ நிர்ப்பந்தம் கொடுக்காதது மிக மிக வேதனைக்குரியவோர் விடயமாகும்.

இந்த விடயம் தொடர்பான நமது தமிழ் அரசியற் கட்சிகளின் நிலைப்பாட்டினை ஒரு தமிழரேனும் மன்னிக்க மாட்டான். வட,கிழக்கிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டுமென வெளிநாட்டவர்கள் சர்வதேச அரங்குகளில் குரலெழுப்பும்போது, நமது சில தமிழ் அரசியற் கட்சிகள் இராணுவத்துடன் இணைந்து செயற்படுவது மிக மோசமான துரோகச் செயல் என்றே கூறவேண்டும். மனித உரிமை மீறல்களுக்கு இவர்களும் உடந்தையாக இருப்பது கண்டிக்கத்தக்கவோர் விடயமாகும்.

www.tamilarangam.net

**12** 10-01-99

## செம்மணி விவகாரத்தை சர்வதேச பிரச்சினையாக்கி இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

உலகின் பல்வேறு இடங்களில், விசேடமாக தென் அமெரிக்கா, மத்திய அமெரிக்கா போன்ற நாடுகளில் அரசாங்கத்துக்கு எதிரானவர் களைக் கொன்று புதைப்பதாக நாம் அறிந்துள்ளோம். அதேபோல் தெற்காசியாவிலும், அவ்வாறான கொடூர சம்பவங்கள் 1996 இன் முற்பகுதியில் இலங்கையில் தமிழ்ப் பிரதேசமான யாழ் குடாநாட்டில் நடந்துள்ள தென்பதும் உலகறிந்த விடயமே.

1990 ஆம் ஆண்டிலிருந்து 1995 வரை யாழ் குடாநாடு விடு தலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. 1995 டிசம்பர் மாதத்தில் யாழ் குடாநாடு அரசாங்கப் படையினரால் கைப்பற்றப்பட்டது. இவ்வாறு கைப்பற்றப்பட்டதும், தமிழ் மக்களை விடுதலைப்புலிகளிடமிருந்து மீட்டெடுத்து விட்டதாக உலகளாவிய ரீதியில் அரசாங்கம் பிரசாரம் செய்தது.

அவ்வாறு தமிழ் மக்களை மீட்டதாகக் கூறிய அரசாங்கம், குடா நாட்டுக்குத் திரும்பிய தமிழ் மக்களை எவ்வாறு நடத்தினார்கள்? உண்மையிலேயே மிகக் கொடூரமான முறையிலேயே அவர்களை நடத்தி னார்கள் என்பது இன்னமும் உலகுக்குச் சரிவரத் தெரியவில்லை. ஆனால் இப்போது உண்மை நிலைவரம் சிறிது சிறிதாகக் கசியத் தொடங்கியுள்ளது. எந்த நேரத்திலும் சுற்றி வளைப்புத் தேடல்கள், இராணுவ அட்டகாசங்களுக்கு மத்தியில் யாழ் குடா நாட்டு மக்கள் சுதந்திரத்தைப் பறிகொடுத்த நிலையில் வாழ்ந்து வருவதும் உலகுக்கு தெரிய ஆரம்பித்துவிட்டது.

திரும்பிய இடங்களிலெல்லாம் முள்ளுக்கம்பிகளும், சோதனைச் சாவடிகளும் தான் காணப்படுகினறன. யாழ். மக்கள் இரவும் பகலும் பயத்தோடும் பீதியோடும் வாழ்ந்து வருகின்றனர். இரவுகளில் ஊரடங்குச் சட்டம். 1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிலவும் இவ்வாறான ஒரு கொடூர நிலை உலகில் வேறெங்கும் இல்லை. இச்சூழ்நிலையில் பல இளம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இக்கொலைகளில் உலகத்துக்குத் தெரியப்ப

www.tamilarangam.net

டுத்தப்பட்டவை மிகவும் சொற்பமே. அனேகமானவை வெளிவர வில்லை. 18 வயதுப் பாடசாலை மாணவி கிருஷாந்தி, பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டது மட்டுமே உலக கவனத்தை ஈர்த்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக உலகிலுள்ள மனித உரிமை அமைப்புகள் குறிப்பாக சர்வதேச மன்னிப்புச் சபையும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் குழுவும் விடுத்த அழுத்தங்களினாலேயே, குற்றம் புரிந்தவர்க ளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு, அவர்கள் குற்றவாளிகளென நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டது. இக்குற்றங்களைப் புரிந்தவர்களில் ஒருவரான ராஜபக்ச என்பவர் தான் நிரபராதி எனக்கூறியதோடு, தங்களது உயரதிகாரிகளின் உத்தரவின் பேரில் 300 க்கும் 400 க்கும் இடைப்பட்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகளின் சடலங்கள் செம்மணியில் புதைகுழிகளில் புதைக்கப்பட்டிருப்பதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து நாடாளாவிய ரீதியிலும் சர்வதேச தமிழ்ச் சமு தாயத்தினர் மத்தியிலும் கொந்தளிப்பான நிலையொன்று தோன்றியது. அதன் பிரதிபலனாகவே இது தொடர்பான விசாரணைகளை மேற் கொள்வதற்கு அரசாங்கம் முன்வந்தது. இவ்விடயத்தில் மனித உரிமை ஆணைக்குழுவும் ஓரளவு அக்கறை எடுத்திருந்தது.

இந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வருவதற்கு முன்னர், எமது வெளிவிவகார அமைச்சர், யாழ் குடா நாட்டில் மனித உரிமை மீறல்கள் அதிகளவில் இடம் பெறவில்லையென, ஐக்கிய நாடுகள் நிறுவனத்துக்கு, ஆணித்தரமாகவும், பிற நாடுகளுக்கு அழுத்தமாகவும் கூறியிருந்தத னையும் இங்கு நினைவு கூறுதல் வேண்டும். இவ்விடயம் தொடர்பாக அரசாங்கம் இதுவரையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

தமது பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், அவர்களை நினைத் துப் புலம்பி, இதற்கான தீர்வைக் காணும் பொருட்டு யாழ் குடா நாட்டுக்கான பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பல தடவைகள் தொடர்பு கொண்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை. 600 க்கு மேற்பட்டோர் வரையில் காணாமல் போயிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தங்களது பிள்ளைகள் தான் செம்மணிப் புதை குழிகளுக்குள் எலும்புக் கூடுகளாக இருக்கின்றனரோ என பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*இவ்விவகாரத்தில் இலங்கையிலுள்ள தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அழுத்தம் கொடுக்க வேண்டும்*

இந்த செம்மணிப்புதைகுழிகளில் சடலங்களை வெளியே எடுப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தமிழ் மக்கள் முன்வந்து செயற்பட வேண்டும். இதற்கென ஆக்கபூர்வமான செயற்றிட்டம் ஒன்றினை உருவாக்க வேண்டும். யாழ் குடாநாட்டில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் முக்கிய பங்களிப்பினை வழங்க வேண்டும். இயலுமானளவுக்கு இந்த ஒன்றியம், கொழும்பில் இயங்கும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒன்று சேர்ந்து, இவ்விவகாரத்தை நன்கு ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக நடவடிக்கைக் குழுவொன்றினை **(Action Committee)** நிறுவ வேண்டும்.

இந்நடவடிக்கைக்குழுவானது, இந்தியாவிலும் மேற்குலக நாடுகளிலும் இயங்கும் மனித உரிமைகள் தொடர்பான அரச சார்பற்ற நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு, விரிவான செயற்றிட்டமொன்றினை உருவாக்க முன்வர வேண்டும். அதன் பின்னர் இவ்விவகாரத்தைச் சர்வதேச அரங்கில் சகல நாடுகளதும் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும். விசேடமாக, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மனித உரிமைகள் தொடர்பான ஆணைக்குழுவுக்கு இது தொடர்பாக மிக விரிவாக எடுத்துரைக்க வேண்டும். முன்னாள் அயர்லாந்து பிரதமரான செல்வி மேரி றொபின்சன் அவர்களே இந்த ஆணைக்குழுவின் தலைவியாவார். இந்த அம்மையாரை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறும், செம்மணி விவகாரம் மாத்திரமல்லாது, காணாமற்போன ஏனையோர் தொடர்பாகவும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்குமாறும் கேட்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் மனித உரிமைகள் தொடர்பான அனேக அரச சார்பற்ற நிறுவனங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தை வன்மையாகக் கண்டித்துள்ளன. 53 நிறுவனங்கள் கண்டித்துள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுடன் இந்த நடவடிக்கைக்குழு தொடர்பு கொண்டு, இவ்விவகாரத்தை ஐக்கிய நாடுகள் தாபனத்துக்கும், ஏனைய முக்கிய வெளிநாட்டு அரசாங்கங்களுக்கும் தெரியப்படுத்துவதோடு சர்வதேச புகழ் பெற்ற பத்திரிகைகளிலும், இவ்விவகாரம் தொடர்பான விபரங்களை வெளியிடுவதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

வெளிநாடுகளில் வாழும் இலங்கை தமிழர்களும் தத்தமது நாட்டு அரசுகளுக்கு யாழின் உண்மை நிலைவரங்களை எடுத்துக்கூறுவது மிகவும் அவசியம் ஆங்கு வசிப்பதனால், தாங்கள் வாழும் நாடுகளின் அரசாங்கங்களுக்கு இவ்விவகாரத்தைத் தெரியப்படுத்த முன்வர வேண்டும். இது முக்கியமாக இந்தியா, தென் ஆபிரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்திரேலியா, கனடா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் வதியும் தமிழ் மக்களின் தலையாய கடமையாகும். யாழ் குடா நாட்டிலுள்ள தமிழ் மக்கள் மாத்திரமல்லாது, இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவரும், அப்பர் அருளிய தேவாரமொன்றில் 'நாம் யார்க்கும் குடியல்லோம் யமனை அஞ்சோம்' என்ற ரீதியில், இந்த மகத்தான தொண்டிற்கு தாமாகவே முன்வந்து, எங்கள் பிள்ளைகளின் எலும்புக்கூடுகளையாவது தோண்டியெடுக்கும் முயற்சிக்கு ஆதரவு வழங்க முன்வர வேண்டும்.

ஒவ்வொரு மாதத்திலும் கடைசி வெள்ளிக்கிழமையில் இந்தப் பிள்ளைகளை நினைவுகூருமுகமாக கோவில்களிலும், தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும் நண்பகல் 12.00 மணிக்கு மணியோசை கேட்கச் செய்ய வேண்டும். இதற்கு வட கிழக்கிலுள்ள சகல இந்து, கிறிஸ்தவ மதத்தலைவர்களும், பாடசாலை அதிபர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

யாழ் குடாநாட்டில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர், செயலாளர் ஆகியோர் வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்து, அந்நாடுகளிலுள்ள மனித உரிமை நிறுவனங்களுக்கும் மக்களுக்கும் செம்மணிப் புதைகுழிகள் தொடர்பாகவும் அறியக் கொடுப்பது மிகவும் சிறந்ததாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது தொடர்பான விபரங்களை அறிந்து கொள்ள விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொண்டால் வெளிநாடுகளிலுள்ள மனித உரிமைகள் குழுக்களின் முகவரிகளைத் தந்து உதவ முடியும். இவ்விரு விவகாரங்களையும் சர்வதேச பிரச்சினையாக்கி, அதன் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களைக் கொடுத்தால் சுதந்திரமான விசாரணைக் குழுவொன்றின் மூலம் விசாரணைகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் முன்வரலாம். இச்சுதந்திரமான குழுவில் சர்வதேசப் புகழ்பெற்ற நிபுணர்களும் அங்கம் வகிக்கும் வகையில் தமிழ் மக்கள் சிந்தித்துச் செயற்படுவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

17-01-99

# 13

## இன்று நடக்கும் யுத்தம்

### பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கா? தமிழினத்தை ஒழிப்பதற்கா?

இலங்கையில், 1956 இல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்ட நாளிலிருந்து 1983 வரை நடைபெற்ற தமிழர்களுக்கெதிரான இனக்கலவரங்கள் தொடர்பாக அரச சார்பற்ற வெளிநாட்டு நிறுவனங்கள் அதிக அக்கறை காட்டின.

இராணுவம் தமிழ்ப் பிரதேசங்களில் இருக்கும்வரை பாலியல் வல்லுறவுகள், மனித உரிமை மீறல்களுக்கு முடிவு கிட்டப்போவதில்லை

அவற்றில் 1983 இல் நடைபெற்ற கலவரமே மிக மிக மோசமானதாகும். அந்தக் கலவரத்தின் போது பண்டித ஜவகர்லால் நேரு கடைப்பிடித்த தலையிடாக் கொள்கையிலிருந்து மாறுபட்ட கொள்கையை இந்திரா அம்மையார் கடைப்பிடித்தமை உலகறிந்த உண்மையாகும்.

1983 க்கு முன்பும் ஜயவர்தன அரசாங்கம் தமிழர்களுக்கெதிரான யுத்த முனைப்பில் ஈடுபட்ட போதிலும் 1983 க்குப் பின்னர் தான் தமிழ் இன ஒழிப்பு யுத்தமாக பரிணமித்தது. எனவே, தமிழ் இன ஒழிப்பு யுத்தம் 1983 இல் ஆரம்பமானதாகக் கருதலாம். இக் கொடூரமான இன ஒழிப்பு யுத்தம் 16 வருடங்களாக நடந்து வருகின்றது. தமிழர்களுக்கெதிரான இன ஒழிப்பு யுத்தமே தற்போது நடைபெறுவதாக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் அண்மையில் பாராளுமன்றத்தில் ஆணித்தரமாகக்கூறியுள்ளனர். கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை. ஆனாலும் இந்த உண்மையை தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் உணர்ந்து செயற்படவில்லை என்பதுதான் கவலையைத் தருகின்றது.

1997 மார்ச் மாதம் 10 ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதிவரை ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் ஸ்தாபன ஆணைக்குழுவின் 53 ஆவது கூட்டத் தொடரில், இலங்கையில் நடைபெற்ற தமிழர்களுக்கெதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் அறிக்கைகளும், தனிப்பட்ட அறிக்கைகளும், கூட்டு அறிக்கைகளும் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கிலாந்தில் இயங்கும் 'விடுதலை' எனும் பிரித்தானிய அரச சார்பற்ற நிறுவனம், அதனது அறிக்கையில் ''இலங்கை இராணுவம் திட்டமிட்டும், ஒழுங்காகவும் இனப்படுகொலையில் ஈடுபடுவதாகவும் தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவதாகவும்'' புள்ளிவிபரங்களுடன் எடுத்துக்கூறியிருந்தது. அவர்களது அறிக்கையின் பிரகாரம் இலங்கை இராணுவத்தினரால் 150 வரையிலான பாலியல் வல்லுறவுகள் மேற்கொள் ளப்பட்டபோதிலும் அதனைவிட அதிகமாக நிகழ்ந்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

1996 பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதியன்று மட்டும் குமரபுரத்தில் நடைபெற்ற சம்பவத்தில் 13 பெண்கள் இராணுவத்தினராலும், ஊர்காவல் படையினராலும் கொலை செய்யப்பட்டதாகவும் 1996 நவம்பர் மாதம் 12 ஆம் திகதியன்று 10 வயதுச் சிறுமியொருத்தியை இராணுவத்தினர் கூட்டாக பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகவும், அவ்விடயம் தொடர் பாக பாடசாலை அதிபர் அச்சுவேலி இராணுவ முகாமில் முறைப்பாடு செய்த போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனவும் குறிப்பிட்டிருந்தனர். மேலும் அவ்வறிக்கையில், இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களைக் கொடூரமாகப் பயன்படுத்தியும், அடிமைப்படுத்தியும் இராணுவ ஆட்சியை நிலைப்படுத்துவதற்காகச் செயற்படுவதாகவும், கொடூரமான சிங்கள ஆட்சிக்கான எதிர்ப்பே உள்நாட்டுக்கலவரம் என்றும், அதற்குப் பயங்கரவாதமென முத்திரை குத்தி தமிழ் இன ஒழிப்பை நியாயப்படுத்த இலங்கை அரசாங்கம் முனைவதாகவும், தமிழ்ப் பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவது மிகக் கடுமையான மனித உரிமை மீறல் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களது கருத்தின் படி, இலங்கை இராணுவம் தமிழ்ப் பிரதேசங்களில் இருக்கும் வரை இவ்விதமான பாலியல் வல்லுறவுகளும், மனித உரிமை மீறல்களும் நடைபெற வாய்ப்பு உண்டென எழுத்து மூலம் சமர்ப்பித்தி ருந்தனர்.

அதனால் இலங்கை இராணுவம் தமிழ்ப் பிராந்தியங்களிலிருந்து விலக்கப்பட வேண்டும். எனவும், பெண்களுக்கெதிரான பலாத்காரம் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதற்கான நியமனம் பெற்றவரை வடகிழக்குப் பிராந்தியங்களுக்குச் சென்று அறிக்கை சமர்ப்பிக்க வேண்டு மெனவும் சிபாரிசு செய்திருந்தனர்.

www.tamilarangam.net

மேலும் அவர்களது அறிக்கையில், இலங்கை இராணுவத்தினரின் விமானக் குண்டு வீச்சு மற்றும் எறிகணைத் தாக்குதல்களின் விளைவாக எட்டு இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் புலம் பெயர்ந்திருப்ப தாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஈற்றில், இவை யாவற்றையும் கவனிக்கும்போது, இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் தொகையைக் குறைக்கும் நடவடிக்கையை மேற்கொள்கின்றதென்றே கருதவேண்டியுள்ளதெனக் குறிப்பிட்ட அவர் கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மனிதாபிமான அடிப்படையில் தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொண்ட உணவு மற்றும் மருந்து வகைகளின் விநியோகத்தினைச் சுதந்திரமாக மேற்கொள்வதற்கு இடையூறு ஏற்படுத் தியதாகவும் குறிப்பிட்டனர்.

இறுதியாக இந்நிறுவனம், இலங்கை அரசாங்கம் தமிழ்ப் பிரதேசங் களுக்கு உணவு, எரிபொருள், மருந்து வகைகளைக் கொண்டு செல்வ தற்கு விதித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்க வேண்டுமெனவும், சர்வதேசப் பத்திரிகையாளர்களும், உள்ளூர்ப் பத்திரிகையாளர்களும், நிவாரண ஸ்தாபனங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் யுத்தம் நடைபெறும் இடங்களுக்குச் சென்று தனிப்பட்ட முறையில் மனிதாபிமான அடிப்படையில் உதவிகள் வழங்குவதற்குத் தடை இருக்கக்கூடாதெனவும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்குச் சிபாரிசு செய்திருந்தது.

உரிமைகளுக்கும் விடுதலைக்குமான சர்வதேசக் குழுவொன்று, இலங்கையில் நடைபெறும் இன ஒழிப்பு யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவருமாறு ஐக்கிய நாடுகள் தாபனத்தை கேட்டுள்ளது. சர்வதேச அரச சார்பற்ற எட்டு நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து ஐ.நா. ஸ்தாபனத்துக்கு விடுத்த கோரிக்கையில் பின்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தன.

அவையாவன,இலங்கையில் 1956 லிருந்து 1983 வரை இடம் பெற்ற இன ஒழிப்பு விவகாரங்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர்கள் வட, கிழக்கில் பழைமை வாய்ந்தவொரு கலாசாரத்தோடு வாழ்ந்து வருவதும், அவர்கள் தனிப்பட்ட ஓர் இனமென்பதும், அவர்க ளுக்கும் சுய நிர்ணய உரிமை உள்ளதென்பதும், இவர்கள் மீது இலங்கை அரசாங்கம் திணித்துள்ள உணவு மற்றும் மருந்துவகைகளுக்கான பொரு ளாதாரத் தடைகள், தமிழ்க் கிராமங்கள் மீது மேற்கொள்ளப்படும்

www.tamilarangam.net

விமானக் குண்டு வீச்சுக்களும், எறிகணைத் தாக்குதல்களும், தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டமை, சித்திரவதைகள், கைதுகள் ஆகியவையாகும்.

எனவே இலங்கைத் தமிழ் மக்களது மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்கவும் தமிழர்களின் அரசியல் அந்தஸ்தை நிர்ணயிப்பதற்கு சுய நிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டு மெனவும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பின்வரும் விடயங்கள் தொடர் பாக இலங்கை அரசாங்கத்துக்கு எடுத்துரைக்க வேண்டுமெனக் கேட்டி ருந்தனர்.

(அ) இலங்கை இராணுவம் வட, கிழக்குப் பிரதேசங்களிலிருந்து விலக வேண்டும்.

(ஆ) யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு பகுதியினரும் அரசியல் தீர்வொன்று ஏற்பட ஒத்துழைக்க வேண்டியதுடன், தமிழ் மக்கள் தங்களது அரசியல் அந்தஸ்தை தாங்களே நிர்ணயித்துக் கொள்ள வேண்டும் என்பவையாகும்.

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் 53 வது கூட்டத்தொடரின் 10 வது நிகழ்ச்சி நிரலின்படி, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அங்கீகாரம் பெற்ற 53 அரச சார்பற்ற நிறுவனங்களும் இன்னும் 17 அரச சார்பற்ற நிறுவனங் களுமான 70 நிறுவனங்கள் ஒன்றிணைந்து, இலங்கையில் தமிழர்களின் நிலை தொடர்பாக பின்வரும் வேண்டுகோளை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்குச் சமர்ப்பித்திருந்தன.

இலங்கையில் நடைபெறும் யுத்தம் தொடர்பாகவும், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், தமிழ்ப் பிராந்தியங்களிலான இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாகவும், அதிக கவலை அடைவதாகக் குறிப் பிட்ட அவர்கள், இவ்வாறான இராணுவ நடவடிக்கைகளுக்கு சாதாரண அப்பாவித் தமிழ் மக்களே இலக்காகிறார்கள் எனவும், இலங்கை இராணு வத்தினரால் நடத்தப்படும் விமானக் குண்டு வீச்சுக்கள், காணாமற் போவோர், சட்டவிரோதமான கொலைகள், பாலியல் வல்லுறவு, சித்திர வதை, காரணமின்றிக் கைதுசெய்தல், காலவரையற்ற தடுத்துவைப்புக்கள் தொடர்பாகக் கவலைப்படுவதாகவும் குறிப்பிட்டிருந்தனர். மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும், வட பிராந்தியத்துக்கு உணவு மற்றும் மருந்து வகைகள் தடைசெய்யப்பட்டமை, தமிழ் பிராந்தியத்தில் எட்டு லட்சத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து குடிநீர், உணவு மற்றும் மருந்து ஆகியவை இல்லாமல் அல்லற்படுவது தொடர்பாக மேற் குறிப்பிட்ட 70 அரச சார்பற்ற நிறுவனங்களும், தமிழ் மக்களுக்கு தங்களுடைய அரசியல் தேசிய அந்தஸ்தை நிர்ணயிப்பதற்கான உரிமை கொடுபடல் வேண்டுமென முழு மனதாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தீர்மானமொன்றை நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டிருந்தனர்.

அத்தீர்மானமாவது, இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை நிறுத்த வேண்டும். தமிழ் பிராந்தியங்களிலிருந்து இராணுவம் விலக வேண்டும். வட,கிழக்குப் பிராந்தியங்களுக்கான பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும். மனிதாபிமான அடிப்படை யிலான உதவிகள் சென்றடைய விடவேண்டும். இரு பகுதியினரும் அரசியல் தீர்வொன்றுக்கு வரவேண்டும். அத்தீர்வின்படி தமிழ் மக்கள் தங்கள் தலைவிதியைத் தாங்களே நிர்ணயிக்க வேண்டும் என்பதாகும்.

சுருக்கமாகக் கூறுவதானால், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மனித உரிமைக் குழுவிலுள்ள 10 அரச சார்பற்ற நிறுவனங்களும், கோரியவாறு இலங்கை அரசாங்கம் யுத்தத்தை நிறுத்தி, வடகிழக்கிலிருந்து இராணு வத்தை வெளியேற்றி, பொருளாதாரத் தடையை அகற்றி, தமிழர்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் சுய நிர்ணய உரிமையை வழங்க வேண்டுமென வற்புறுத்தின. தமிழ் நாட்டின் பிரதான அரசியற் கட்சிக ளும் இதனையே வலியுறுத்துகின்றன. ஆனால், இலங்கையிலுள்ள தமிழ் அரசியற் கட்சிகளும் குழுக்களும் தமிழர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவதாகக் கூறிக்கொண்டு, தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படு கொலை யுத்தத்துக்கு ஆதரவாக அரசாங்கத்தோடு சேர்ந்து வாக்களிப்பது தமிழ்ச் சமுதாயத்துக்குச் செய்யும் கொடூரமான துரோகச் செயலாகவே உள்ளது. இவர்கள் காக்கை வன்னியன், எட்டப்பன், குஷ்லிங் என்பவர் களையும் மீறிவிட்டார்கள். இந்தச் செயலைத் தமிழ் இனம் மாத்திரமல்ல எதிர்காலச் சந்ததியினரும் மன்னிக்க மாட்டார்கள்.

ஆகவே, இனிமேலாவது சகல தமிழ்க் கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஒரே குரலில் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் விடுத்த அதே கோரிக்கைகளை விடுதல் வேண்டும். அவ்வாறு கோரிக்கை விட்டால் அரசாங்கம் சற்றுச் சிந்திக்க வாய்ப்புண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**14** 24-01-99

## சேது சமுத்திரத் திட்டம்
## கொழும்பில் ஏற்படுத்த உள்ள தாக்கம்

சேது சமுத்திரத் திட்டம் தொடர்பாக அண்மைக்காலத்தில் பத்திரிகைகளில் அனேக கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அதனால் அத்திட்டம் தொடர்பாக மீண்டும் மீண்டும் விபரிக்க வேண்டியதில்லை. அதனால் இத்திட்டத்தினை அமுல்படுத்தும் போது நமது கொழும்புத் துறை முகத்திற்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கலாநிதி இராமசாமி முதலியாரின் தலைமையின் கீழ் 40 வருடங்களுக்கு முன்னர் இத்திட்டம் தொடர்பாக ஆராயப்பட்ட போதிலும், இந்திய அரசியல் போக்கினாலும், வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான அபிப்பிராய பேதங்களினாலும், இத்திட்டத்தை அமுல்படுத்த முடியாமல் போய்விட்டது. இத்திட்டத்தின் மூலம் தமிழ் நாட்டுப் பிராந்தியத்தில் அதிக முன்னேற்றம் ஏற்படும் என கருதப்படுகின்றது. தற்போது இத்திட்டத்தை அமுல்படுத்தும் பொறுப்பை இந்திய மத்திய அரசு இந்திய பாதுகாப்பு அமைச்சரிடம் வழங்கியுள்ளது.

ஆகவே இத்திட்டம் இந்தியாவின் கடற்படை தொடர்பான பாதுகாப்புக்கருதியும் முக்கியத்துவம் பெறுகின்றது. இத்திட்டத்திற்கான உத்தேச செலவு இலங்கை நாணயத்தில் ரூபா 1500 கோடியாகும்.

இந்திய உப கண்டத்தை நோக்கும் போது பாகிஸ்தானிய துறைமுகமொன்றான கராச்சியில் சரக்குகளை ஏற்றி இறக்கிய கப்பலொன்று அதன் பின்னர் கொழும்புத்தறைமுகத்திற்கு வந்தே சென்னை, கல்கத்தா போன்ற துறை முகங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. இலங்கையை முற்றாகச் சுற்றியே அவை போகவேண்டும். அதற்காக 2 அல்லது 3 தினங்களை அதிகமாக செலவிட வேண்டியுள்ளது. இதுதவிர்க்க முடியாததொன்றாகும்.

கப்பல் வர்த்தகத்தை பொறுத்தவரையில் ஒரு நாளை வீணாக்குவது பெருமளவு செலவை ஏற்படுத்தும். ஆகவே பாகிஸ்தானிய துறைமுகங்களையும் இந்திய மேற்குக்கரைத் துறைமுகங்களையும் பயன்படுத்தும் கப்பல்கள் இத்திட்டம் நிறைவேறியதன் பின்னர் இலங்கையைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சுற்றி செல்ல வேண்டிய அவசியமில்லை. அவை சேது சமுத்திர கால்வாயின் மூலம் சென்னை, கல்கத்தா, சிட்டாகொங் ஆகிய துறைமுகங்களைச் சென்றடையலாம். அதன் மூலம் கப்பல் உரிமையாளர்களுக்குச் செலவு குறைந்து இலாபம் மிகைப்படும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் கையாளப்படும் சரக்கின் அளவையும் அவற்றின் வகையையும் இனங்காணுதல் வேண்டும். இது தொடர்பாக கொழும்புத் துறைமுகத்தை மாத்திரம் நாம் கவனத்திற்கெடுப் போம். 1998 ஆம் வருடத்தில் கொழும்புத்துறை முகத்திற் கையாளப்பட்ட மொத்தச் சரக்களவு 2,47,93,000 தொன்களாகும். இந்த அளவு 1997 ஆம் வருடத்தில் கையாளப்பட்ட மொத்தச் சரக்கின் அளவினைவிட 1.3% குறைவானதாகும். இத்தொகையில் 1,84,82,000 தொன் சரக்குகள் பொதி கலன்களில் (Containarized) வந்தவையாகும். இத்தொகையை 1997 ஆம் வருடத்துடன் ஒப்புநோக்கும் போது 2.4 வீதம் வரையில் குறைந்து காணப்படுகின்றது.

பொதிகலன்களிலான சரக்குகள், மொத்தத்திற் கையாளப்பட்ட சரக்குகளில் 74 வீதத்திற்கு மேற்பட்டதாகும். சேது சமுத்திரத்திட்டத் தினால் இவ்வாறு பொதிகலங்களில் வரும் சரக்குகளின் அளவில் அதிக பாதிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு.

1998 ஆம் வருடத்திற் கையாளப்பட்ட மொத்த பொதிகலன்களில் (20 அலகுகள் 69% வீதம் ஆனவை கப்பல் மாற்றி ஏற்றும் பொதிக லன்களாகும். (Transhipment) இப்புள்ளி விபரத்தினை 1997 ஆம் வருடத்துடன் ஒப்புநோக்கும் போது 4% குறைவடைந்து காணப் படுகின்றது. சேது சமுத்திரத் திட்டம் அமுல்படுத்தப்படுகையில் கப்பல் மாற்றி சரக்குகளின் அளவில் பெரும் பாதிப்பு ஏற்படும் என்பதே எமது கருத்தாகும்.

கொழும்புத்துறை முகத்தின் வெளிப்புறத்தைப் பார்க்கும் போது கப்பல்கள் வெளியே தரிப்பதை காண முடியும். 1997 ஆம் வருடத்தில் 73% மாக விளங்கிய கப்பல் மாற்றி ஏற்றும் சரக்கின் அளவு 1998 ஆம் வருடத்தில் 69% ஆக 4% தால் குறைவடைந்துள்ளது. கொழும்புத் துறைமுகத்தில் கையாளப்படும் கப்பல் மாற்றி ஏற்றும் (Transhipment) சரக்குகளில் 2/3 வரையானவை இந்திய உபகண்டத்தின் சரக்குகளாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1998 ஆம் வருடத்தின் பிற்பகுதியிலிருந்து இந்திய உபகண்டத்தின் கப்பல் மாற்றி ஏற்றும் சரக்குகள் கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தருவதனைத் தவிர்த்துக் கொள்வதற்கான காரணங்களை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அவ்வாறே பல சர்வதேச கப்பற் கம்பனிகளும் கொழும்புத் துறைமுகத்தைத் தவிர்க்கின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் சேது சமுத்திர திட்டமும் அமுல்ப் டுத்தப்படுமானால் பாரிய வீழ்ச்சி ஏற்பட இடமுண்டு. ஏனெனில் இந்திய உபகண்டத்தின் கப்பல் மாற்றி ஏற்றும் சரக்குகள் கொழும்புத் துறைமுகத்திற்கு வருவதற்கான வாய்ப்புகள் இருக்காது. அவையாவும் தூத்துக் குடித் துறைமுகத்திலேயே கையாளப்படும். இது முக்கியமானதொரு தாக்கமாகும்.

காலித் துறைமுகத்திற்கோ அல்லது நிர்மாணிக்கப்படவுள்ள ஒலுவில் அம்பாந்தோட்டை துறைமுகங்களுக்கோ பிரகாசமான எதிர்காலம் அமையப் போவதில்லை.

இதனை விட இந்திய உபகண்டம் தவிர்ந்த ஏனைய துறைமுகங்களிலிருந்து வருகை தரும் கப்பல் மாற்றி ஏற்றும் சரக்கிலும் வீழ்ச்சி ஏற்படும்.

ஒட்டு மொத்தமாக பார்க்குமிடத்து இது வரை உன்னத ஸ்தானத்தை வகித்து வந்த கொழும்பு துறைமுகம் அதன் முக்கியத் துவத்தை இழந்து இந்தியத் துறைமுகமான தூத்துக்குடியிலிருந்தே கொழும்புக்குச் சாமான் களைக் கொண்டுவரும் ஓர் துறைமுகமாக (Feeder Port) மாற இடமுண்டு.

கொழும்பு துறைமுகத்தைவிட சரக்குக் கையாளும் செலவு குறைவான தூத்துக் குடி துறைமுகத்தில் தற்போது சிங்கப்பூர் துறைமுக அதிகாரசபையால் கரையோர நங்கூரத்தானங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதனையும் நாம் சிந்தித்தல் வேண்டும். இவற்றை கவனத்திலெடுக்கையில் காலித் துறை முகத்திற்கோ, அன்றேல் நிர்மாணிக்கப்படவுள்ள ஒலுவில் மற்றும் அம்பாந் தோட்டை துறைமுகங்களுக்கோ பிரகாசமான எதிர்காலம் அமையப் போவதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொழும்புத்துறைமுகத்தில் ஏற்படவுள்ள இழப்பை ஈடு செய்ய பருத்தித்துறை மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப் பட வேண்டும்.

எவ்வாறாக பார்த்தாலும் கூட காலித்துறைமுகத்திற்கு எதிர்காலம் இல்லையென்றே கூறவேண்டும். ஏனெனில் அங்குள்ள பாறைக்கற்களை அகற்றுவது அவ்வளவு சுலபமானதொன்றல்ல.

ஒலுவில் துறைமுகத்துக்கென இது வரை ரூபா 23 மில்லியன் செலவுசெய்யப்பட்டாலும் கூட அங்கும் சரக்கு ஏற்றி இறக்கும் பணிகள் வெற்றியளிக்காது என்றே எணணத் தோன்றுகின்றது. தென் பிராந்திய அபிவிருத்திச் சபை அம்பாந்தோட்டையில் துறைமுகம் ஒன்றைத் ஸ்தாபிக்க முயன்றாலும், சர்வதேச கப்பல் கம்பனிகள் சேது சமுத்திரக் கால்வாயை பயன்படுத்துவதற்கே அதிக வாய்ப்புகள் உண்டு.

தேசிய துறைமுகக் கொள்கைகள் தொடர்பாக கப்பற்றுறை துறை முகங்கள் புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் 1997 ஆம் வருடத் தில் வெளியிடப்பட்ட வெளியீடு ஒன்றில் கொழும்பு, காலி, திரு கோணமலை, ஒலுவில் மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக நன்கு விபரிக்கப்பட்டிருந்த போதி லும், வட பிராந்திய துறை முகங்களான காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறையின் அபிவிருத்தி தொடர்பாக எதுவும் குறிப்பிடப பட்டிருக்கவில்லை.

காலித்துறைமுகத்தைவிட காங்கேசன் துறை துறைமுகத்திற்கே அதிகளவு கப்பல்கள் வருகை தருவதோடு அதிகளவு சரக்குகளும் கையாளப்படுகின்றது. ஆயினும் அரசாங்கம் மேற்கூறிய இந்த இரண்டு துறைமுகங்களினதும் அபிவிருத்தி தொடர்பாக மாற்றான் தாய் மனப் பான்மையுடன் நடந்து கொள்வது வேதனைக்குரியதாகும். காங்கேசன் துறை மற்றும் பருத்தித்துறைத் துறை முகங்கள் தென்பிராந்தியத்தில் இருந்திருந்தால் இவ்வண்ணம் புறக்கணிக்கப்பட்டிருக்கமாட்டாது.

சேது சமுத்திரத்திட்டத்தினால் தூத்துக்குடியும் ஏனைய தமிழ் நாட்டுத்துறைமுகங்களும் வளர்ச்சியடைவது திண்ணம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதனால் தமிழ் நாட்டின் கரையோரப்பிராந்தியங்கள் பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைவதற்கு அதிகவாய்ப்புகளுண்டு.

அவ்வாறே சேது சமுத்திரத்திட்டம் அமுல்படுத்தும் போது காங் கேசன்துறை மற்றும் பருத்தித்துறை துறைமுகங்களையும் அபிவிருத்தி செய்தால் கொழும்புத்துறைமுகத்திற்கு ஏற்படவிருக்கும் இழப்பை, மேற்கூறிய இரண்டு துறை முகங்களினதும் செயற்பாட்டின் மூலம் ஓரளவுக்கு ஈடு செய்யமுடியும். கொழும்புக்கு வரவேண்டிய சரக்குகளை அவ்விரு துறைமுகங்களிலும் கையாள முடியும். அடுத்ததாக தூத்துக்குடி துறைமுகத்துக்குப் போட்டியாக காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை துறைமுகங்கள் அபிவிருத்தியடைந்தால் சர்வதேச கப்பற் கம்பனிகள் கப்பல் மாற்றி ஏற்றும் சரக்குகளுக்காக இவ்விரு துறைமுகங்களையும் பயன்படுத்தலாம். பருத்தித்தறை ஓர் ஆழ்கடல் துறைமுகமாக விளங்கு வதால் காங்கேசன் துறையை விட பருத்தித்துறையே அபிவிருத்தி செய்வதற்கு மிகப் பொருத்தமான துறைமுகமாகும். ஆயினும் இவ்விரு துறைமுகங்களும் தமிழர்களின் பிரதேசத்தில் இருப்பதால் இலங்கை அரசாங்கத்தின் கொள்கையில் மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டா என்பது கேள்விக்குறியே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**15** 31-01-99

## இந்திய வெளியுறவுக் கொள்கைக்குள் அமிழ்ந்து போன தமிழர் நலன்கள்

இந்தியாவினால் கடைப்பிடிக்கப்படும் கொள்கையானது எவ்விதம் தமிழர்களுக்கு அனுகூலமாகவும் சில சமயங்களில் அனுகூலம் இல்லாமலும் இருக்கின்றது. தமிழர்கள் என்று கூறும் போது மலைநாட்டுத் தமிழர்களையும், இலங்கைத் தமிழர்களையும், இவ்விடயம் உள்ளடக்கும்.

## மலை நாட்டுத் தமிழர்களும் இந்தியாவின் நிலையும்

இலங்கை சுதந்திரமடைய முன்னரே சிங்களத் தலைவர்கள் மலை நாட்டு தமிழர்கள் மீது ஓர் துவேச மனப்பான்மையைக் கொண்டிருந்தது. சரித்திர உண்மை. மலை நாட்டுத் தமிழர்களை பிரதிநித்துவமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் (Ceylon Workers Congress) ஏழு பிரதிநிதிகள் தேசிய சபையில் இருந்தார்கள்.

இந்த பிரதிநிதித்துவம் சிங்கள மக்களுக்கு இனவாதக் கசப்புணர்வை ஏற்படுத்தியது. இதன் பிரகாரமாக இலங்கையின் முதல் பிரதமராக விளங்கிய டி.எஸ். சேனநாயக்க மலைநாட்டுத் தமிழர்களின் தொகையைக் கட்டுப்படுத்தியும் அவர்களை இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பவும் முயற்சி செய்து இரு சட்டங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றினார். அதை நிறைவேற்ற முன்னர் சேனநாயக்கா பண்டிதர் ஜவகர்லால் நேருவிற்கு இது பற்றி அறிவித்திருந்தார். இந்த சட்டங்களை நிறைவேற்றிய பின்பு இந்தியாவில் கடும் எதிர்ப்பு உண்டாகியது. தென்னிந்தியாவை விட, வட இந்தியாவில் அதிக எதிர்ப்புகள் எழுந்தன.

இந்தியாவில் மிகப் புகழ் பெற்ற கல்கத்தாவில் பிரசுரிக்கப்படும் அமிர்தபசார் பத்திரிகை இது பற்றி எழுதுகையில் இலங்கையின் ஆளும் கட்சிக்கும், தென்னாபிரிக்காவிலுள்ள வெள்ளையர் நிறத் துவேஷத்தைக் கடைப்பிடிக்கும் கலாநிதி மாலன் கட்சிக்கும், இந்தியர்கள் தொடர்பாக அதிக வித்தியாசம் இல்லை என்று கூறியுள்ளது.

இதிலிருந்து நாம் அறிந்து கொள்ளக்கூடியது என்னவெனில் மலைநாட்டுத் தமிழர்களுடைய வாக்குரிமையைப் பறித்ததற்கும், அவர்களுடைய சனத்தொகையைக் கட்டுப்படுத்தி அவர்களை நாடு கடத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முயற்சித்ததும் மிகவும் கொடூரமான செயல் என்று இந்தியப் பாராளு மன்றத்தில் அதிகமானோர் குரல் கொடுத்தனர். ஆனால், பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்த மறைந்த ஏ.கே.கோபாலன் மிகவும் கடுமையாக ஜவகர்லால் நேரு அரசாங்கத்தை விமர்சித்தார். அவர் பாராளுமன்றத்தில் தங்களுடைய மக்களுக்கு (மலை நாட்டு தமிழர்) எங்கள் அரசாங்கம் என்ன செய்தது என்று கேட்டும், அவர்களை இலங்கை அரசாங்கம் தீண்டத் தகாதவர்களையும் விட மோசமாக நடத்துகின்றது என்றும் கவலையுடன் தெரிவித்தார்.

இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்வது என்னவெனில் ஆசியா வின் ஜோதி என்று அழைக்கப்பட்ட பண்டிதர் ஜவகர்லால் நேரு, அவருடைய தலையிடாக் கொள்கையை மனதில் கொண்டு இலங்கை மீது ராஜதந்திர ரீதியில் கடும் நடவடிக்கை எடுக்கவில்லை. இத்தருணத் தில் மலைநாட்டு இந்திய வம்சாவழித் தமிழர்கள் உயிர்த்தியாகங்கள் செய்து 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டில் இந் நாட்டை செல்வம் செழிக்கும் நாடாக மாற்றிய பெருமை அவர்களையே சாரும். அவர்கள் செய்த தியாகங்களுக்கு கைமாறாக அவர்கள் அனுபவித்த குடியுரிமையைப் பறித்த இலங்கை அரசாங்கத்தை ராஜதந்திர ரீதியில் கண்டிக்காதது இந்தியாவின் தவறாகும். உலகில் எந்த இடத்திலும் இவ்விதமான செயல் நடைபெறவில்லை. இது மிகப் பெரிய மனித உரிமை மீறல் ஆகும்.

1964 ஆம் ஆண்டில் வாக்குரிமை இல்லாத மலையகத் தமிழரின் பிரச்சினை, இந்தியாவின் பிரச்சினை இல்லையெனக் கருதப்பட்டதுடன் மனித உரிமை மீறலாகக் கருதப்பட்டது. இந்நிலைப்பாட்டினை அந்த நேரத்திலிருந்த தமிழ் நாட்டைச் சேர்ந்த மத்திய அரசு மந்திரிகளான கிருஷ்ணமாச்சாரி, சி.சுப்பிரமணியம் ஆகியோர் ஆதரித்தார்கள், அப்போதைய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரான காமராஜரும் இந் நிலைப்பாட்டை ஆதரித்தார். இவ் விதமான சூழ்நிலை காணப்படினும் வால்பகதூர் சாஸ்திரி, திருமதி பண்டார நாயக்காவி னுடைய அழுத்தத்திற்கு ஆளாகி விட்டார். ஏனெனில் வாக்குரிமையை இழந்த 9,75,000 மலைநாட்டுத் தமிழர்களில் 525,000 பேரை இந்தியா ஏற்றுக் கொள்வது என்றும் 3,00,000 பேரை இலங்கை, ஏற்றுக் கொள்வது என்றும் மிகுதி 1,50,000 மக்கள் பின்பு பரிசீலிக்கப்படுவதென்றும் கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கை மலையகத்தமிழர்களுக்கு மிகவும் துரதிஷ்டமானதாகும். ஏனெனில் மலைநாட்டுத் தமிழர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தங்கள் பிறப்பிடமான மலையகத்தை விட்டு பிற நாடான இந்தியாவிற்கு வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தப்பட்டது மிகவும் கொடூரமான செயலாகும்.

ஆகவே பண்டிதர் நேரு தொடக்கம் லால்பாக தூர் சாஸ்திரி வரை மலை நாட்டுத் தமிழர்களைப் பொறுத்த வரையில் அவர்களால் கடைப்பிடிக்கப்பட்ட நிலையானது இவர்களுக்கு தீமையாகவே முடிந்தது.

## இலங்கைத் தமிழர்களும் இந்தியாவின் கொள்கையும்

இந்திரா காந்தி அம்மையார் பிரதமராக வந்த சமயத்தில் திருமதி பண்டார நாயக்காவும் பிரதமராகவிருந்தார். கச்சதீவை இலங்கை அரசாங்கத்தின் ஆட்சிக்கு உட்படுத்திய பின்பு அது எவ்விதம் இலங்கைத் தமிழருடைய நலன்களைப் பாதித்தது என்பது எல்லோரும் அறிந்த உண்மை. இந்த விடயத்தில் இந்திரா காந்தி தமிழ் நாட்டு அரசியல் வாதிகளுடன் கலந்துரையாடாமல் தன்னிச்சையாகச் செயற்பட்டது வருந்தத்தக்க செயலாகும்.

இந்தியாவின் அயல் நாட்டுக் கொள்கைகளில் உலக ரீதியில் கடைப்பிடிக்கும் கொள்கையும் தெற்காசிய பிராந்தியத்தில் கடைப்பிடிக்கும் கொள்கையும் வேறு விதமானது. 1944 ஆம் ஆண்டு கே.எம். பணிக்கர் இலங்கையும் பர்மாவும் இந்தியப் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ளது என்று கூறியுள்ளார். இக் கொள்கையை பண்டிதர் ஜவகர்லால் நேருவோ அவருக்குப் பின் வந்த இந்தியப் பிரதமர்களோ எதிர்க்கவில்லை. சுருங்கக்கூறின் இலங்கை அரசாங்கம் இந்தியாவிற்கு எதிரான சக்திகளுடன் சேர்ந்து செயற்பட முடியாது என்பதையே இது வெளிப்படுத்துகின்றது.

இந்திராகாந்தி அம்மையார் 1983 இல் நடைபெற்ற கலவரக் காலங்களில் மிகக் கடுமையான கொள்கையைக் கடைப்பிடித்தார். இதற்கு அனேக காரணங்கள் உண்டு. அந்த நேரத்தில் ஜே.ஆர்.ஜயவர்தன மேற்கத்தைய நாடுகளுக்குச் சார்பான கொள்கையைக் கடைப்பிடித்தமையும் ஒரு காரணமாக இருக்கலாம். இலங்கை அணிசேரா நாடுகளுள் ஒன்றாய் இருந்தாலும் மேற்கத்தைய நாடுகளுக்குச் சார்பான கொள்கையை அனுஷ்டித்தமையால் இந்தியா, இலங்கை அரசாங்கத்துடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சினேகபூர்வமாக இருக்கவில்லை. ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில் பிரிட்டனுக்கும் ஆர்ஜென்ரீனாவுக்கும் இடையிலான ''ஃபார்க்கலன்ட்'' யுத்தத்தில் இலங்கை பிரிட்டனுக்குச் சார்பாக வாக்களித்தது. அணிசேரா நாடுகள் எல்லாம் பிரிட்டனுக்கு எதிராக வாக்களித்தது.

1983 இல் அமெரிக்கா 'கிரினேடா' நாட்டைத் தாக்கியதை இலங்கை அரசாங்கம் மற்றைய நாடுகளுடன் சேர்ந்து கண்டிக்கவில்லை. மேலும் இந்திய சமுத்திரத்தை ஒரு அமைதிப் பிரதேசமாகவும் இதில் வெளி நாட்டு வல்லரசுக்கு இடமளிக்கப்படாத கொள்கையை இந்தியா முன் வைத்தது. இந்திய நிலைப்பாட்டிற்கு இலங்கை எதிர்ப்புக் காட்டியது. இச்சம்பவங்கள் இந்தியா, இலங்கை மீது சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதற்கு வழிகோலியது. இதனால் இலங்கை அமெரிக்காவிற்கு திருகோணமலைத் துறைமுகத்தை பாவிக்க அனுமதிக்குமோ என்ற அச்சம் இந்தியாவிற்கு ஏற்பட்டது. இவ்விதமான சிக்கல் நிறைந்த காரணங்களே ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனாவிற்கும் இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கும் இடையில் தனிப்பட்ட குரோதத்தை வளர்க்கக் காரணமாயின.

இந்நிலையில் 1983 ஆம் ஆண்டு ஆடிமாதம் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைக் கலவரத்தில் திருமதி இந்திராகாந்தி இலங் கைத் தமிழ் மக்களுக்குச் சாதகமாகச் செயற்படத் தொடங்கினார். கலவரங்கள் நிகழ்ந்த காலங்களில் திருமதி இந்திரா காந்தி வெளிவிவகார மந்திரியான நரசிம்மராவை இலங்கை நிலவரங்களை அறிய அனுப் பினார். பின்பு அம்மையார் இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் தலையீடு செய்வதில்லை என்று சொன்னாலும் தமிழர்கள் கொல்லப் படுவதை இந்திய அரசு பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதை ஜே.ஆர். ஜயவர்தனவிற்கு ஆணித்தரமாக எடுத்துக்கூறினார். இதிலி ருந்து நாம் அறிந்து கொள்வது யாதெனில் இந்தியா மிகவும் கடும் போக்கைக் கடைப்பிடிப்பது என்ற நிலைப்பாட்டிற்கு வந்ததென்பதை அறியக்கூடியதாயுள்ளது. இந்த சூழ்நிலையில் ஜேர்.ஆர். ஜயவர்த்தன மேற்கத்தைய நாடுகளிலும் பாகிஸ்தான் சீனாவின் இராணுவ உதவி களைக் கேட்டபோதும் அவை கைகூடவில்லை. இது இந்தியாவின் சீற்றத்திற்குக் காரணமாக இருந்தது.

துரதிஷ்டமாக இந்திரா காந்தியின் அகால மரணமானது இலங்கைத் தமிழர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

www.tamilarangam.net

ராஜிவ் காந்தி பிரதமராக வந்த பின்னர் அவர் அரசியல் முதிர்ச்சி இல்லாத படியினால் சில வேறுபாடுகளைக் காணமுடிந்தது. இந்திரா காந்தியின் காலத்தில் அவருக்கு அரசியல் விடயங்களில் நன்கு முதிர்ச்சி அடைந்தவரும் தென் இந்தியருமான ஜி.பார்த்சாரதி ஆலோசகராக விளங்கினார். அவர் சில சிபாரிசுகளையும் செய்திருந்தார். ஆனால் ராஜிவ் காந்தி வந்தவுடன் இவரை அகற்றிவிட்டு ரொமேஸ் பண்டாரியிடம் இலங்கை விவகாரப் பொறுப்பை ஒப்படைத்தார். இதனால் விரும்பத் தகாத சம்பவங்கள் பல நடைபெற்று விட்டன. பண்டாரி இலங்கைத் தமிழர் குழுக்களைச் சேர்ந்தவர்களை அவர்களுடைய அபிலாஷைகளையும் உணர்வுகளையும் நன்கு உணராமல் அவர்களைத் தங்களுடைய ''கைப்பொம்மைகள்'' என்று எண்ணிச் செயற்படத் தொடங்கினார். இதனால் 1985 ஆம் ஆண்டு நடைபெற்ற திம்பு மாநாடு தோல்வியைத் தழுவியது. என்றாலும் ராஜிவ் காந்தி இலங்கை அரசின் கடும் போக்கினாலும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இன்மையினாலும் யாழ்.குடாநாட்டில் இலங்கை அரசின் இராணுவச் செயற்பாடுகளினாலும் ராஜிவ் காந்தியே இலங்கை மீது அழுத்தங்கள் கொடுக்கத் தொடங்கினார். இதற்கு மறைந்த மக்கள் திலகமாகிய எம்.ஜி. ராமச்சந்திரன் காரணமாக இருந்தார்.

இலங்கைத் தமிழ் மக்களுடைய கலாசாரத்தலைநகரான யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு இலங்கை இராணுவம் நடவடிக்கை எடுத்த காரணத்தினால் அதை முறியடிக்க இந்தியா செயற்படத் தொடங்கியது. ராஜிவ் காந்தி உலக வல்லரசுகளுக்கும் ஏனைய முக்கிய அரசுகளுக்கும் இலங்கை அரசு மிகக் கொடூரமான இனப் படுகொலையில் இறங்கியதென்றும் அப்பாவிப் பொதுமக்கள் மீது கடும் குண்டு வீச்சு நிகழ்த்தியதென்றும் கடிதங்கள் மூலம் அறிவித்தார். பின்பு இலங்கை அரசின் இராணுவப்போக்கை மாற்றுவதற்கு யாழ்ப்பாணத்திற்கு படகுகள் மூலம் உணவுப் பண்டங்களை அனுப்பி வைத்தார். இந்த உணவுப் படகுகளை இலங்கை கடற்படை தடுத்த காரணத்தினால் ராஜிவ் காந்தி இலங்கையின் ஆகாயப் பிராந்தியத்தில் ஊடுருவி உணவுப் பொட்டலங்களை யாழ்ப்பாணத்தில் போடுவதற்கு ஏற்பாடு செய்தார்.

இந்த செயல் ஜே.ஆர். ஜயவர்தனாவின் மனதை மாற்றிப் பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்பாக அமைந்தது. இதன் பலனாக அவசரப்பட்டு இந்திய, இலங்கை உடன்படிக்கை ஒன்று 1987 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இதன் முக்கிய அம்சம்

www.tamilarangam.net

யாதெனில் இவ் உடன்படிக்கை தமிழ் மக்களுக்கோ அல்லது விடுதலைப் புலிகளுக்கோ மகிழ்ச்சி அளிக்கவில்லை. வே.பிரபாகரனை டெல்லிக்கு அழைத்தாலும் அவர் நிர்ப்பந்திக்கப்பட்டார் என்றே கூறப்பட்டது. இந்த உடன்படிக்கையின் முக்கிய அம்சங்கள் யாதெனில் இலங்கையின் ஒற்றுமையை அங்கீகரிக்கின்றது. இலங்கை பல இனங்களைக் கொண்டதும் பல மொழி பேசும் நாடாகவும் கருதப்படுகின்றது. இலங்கையின் வடகீழ் பிராந்தியத்தில் தமிழர்கள் சரித்திரகாலம் தொட்டு வாழ்ந்தார்கள் என்று அங்கீகாரம் செய்யப்பட்டது. இந்திய அரசாங்கம் இந்த உடன்படிக்கையில் தமிழர்களுடைய பாதுகாப்பிற்கும் உறுதி அளித்திருக்கின்றது. இவ்விதம் பல ஷரத்துக்கள் கொண்ட உடன்படிக்கை உருவானது. இந்த உடன்படிக்கையை தமிழர்கள் பிரச்சினையில் அதி முக்கிய பாத்திரமாக விளங்கிய புலிகளினாலும் நன்கு ஆராயப்பட்டு உடன்படிக்கைக்கு வந்திருந்தால் இன்று வரலாறு வேறுவிதமாய் இருந்திருக்கும்.

இதில் விசித்திரம் என்னவென்றால் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் திருகோணமலையும், மற்றைய துறைமுகங்களில் இந்தியாவிற்கு எதிரான சக்திகளுக்கும் இடம் கொடுக்கக்கூடாது. திருகோணமலையிலுள்ள எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவும் இலங்கையும் சேர்ந்து பரிபாலனம் செய்வது இலங்கையில் இருக்கும் வெளிநாட்டு வானொலி ஸ்தாபனங்கள், இராணுவ ரீதிக்கோ அல்லது புலனாய்வுப் பிரிவுக்கோ செயற்படாது என்ற உடன்பாடும் அதில் அடங்கியிருந்தன.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை ஜனாதிபதி யுத்த நிறுத்தத்தை 'அமுல் செய்வதற்கு இந்தியப் படைகளை வரவழைக்கலாம். இவை எல்லாவற்றையும் நாம் அவதானிக்கும் பொழுது தமிழருக்காக குரல் கொடுத்த ராஜிவ் காந்தியின் இவ் உடன்படிக்கை திருப்திகரமானதல்ல என்றே கருத வேண்டியுள்ளது. இதன் காரணமாக சில அசம்பாவித சம்பவங்களால் 1987 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9 ஆம் திகதி இந்தியப்படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் யுத்தம் ஏற்பட்டு விட்டது. சுருங்கக் கூறின் உலகளாவிய ரீதியில் தமிழர்களுக்குக் குரல் கொடுத்த இந்திரா காந்தியும் ராஜிவ் காந்தியும் இறுதியில் இந்திய ராஜதந்திர தோல்வியினால் தமிழருக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப்புலிகளோடு போராடும் நிலைமை ஏற்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதிலிருந்து அறியக்கூடியது என்னவென்றால் இந்திய ராஜதந்திரத்திற்குப் பொறுப்பானவர்கள் இலங்கைத் தமிழர்களுடைய அபிலாஷைகளையோ, உணர்வுகளையோ நன்கு அவதானிக்கவில்லை. இதனால் ஜே.ஆர். ஜயவர்த்தனவுக்கு வெற்றியும் இந்தியாவின் ராஜதந்திரத்திற்குப் படுதோல்வியும் ஏற்பட்டது என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். இத்தோல்விக்கு இந்தியப் புலனாய்வுத் துறையிலுள்ளவர்கள் முக்கிய பொறுப்பை ஏற்க வேண்டும். தமிழர்களின் பாதுகாப்பிற்குத் தாங்களே பொறுப்பு என்று உடன்படிக்கையில் கைச்சாத்து செய்து விட்டு தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதாக பாடுபடும் முக்கிய குழுவான விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தில் இறங்கியது எவ்வகையில் நியாயப்படுத்த முடியும்? இந்திய உத்தியோக வர்க்கம் இந்த விடயத்தில் ராஜிவ்காந்திக்கு யதார்த்த நிலையை நன்கு ஆராய்ந்து தகுந்த புத்திமதியை அளிக்கவில்லை.

இதனால் இந்திய இராணுவத்தையே வாபசாகும்படி ஜனாதிபதி பிரேமதாஸாவின் வற்புறுத்தலுக்கிணங்க இந்திய இராணுவம் வாபஸ் பெறப்பட்டது. இதிலிருந்து விளங்குவது என்னவென்றால் இலங்கைத் தமிழருக்கு பாதுகாப்புக் கொடுக்காமல் அவர்களின் அபிலாஷைகளையும் நிறைவேற்றாமல், ராஜதந்திர ரீதியில் இந்தியா தோல்வியையே தழுவிக் கொண்டது.

ராஜிவ் காந்தியின் கொலைக்குப் பின்பு நரசிம்மராவும், குஜ்ராலும் இலங்கைத் தமிழர் சார்பாகச் செயற்படவில்லை. இலங்கை அரசாங்கத்துடன் சினேக பூர்வமான கொள்கைகளையே கடைப்பிடித்தார்கள். இது இலங்கை அரசாங்கத்திற்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. குஜ்ரால் பிரதமராயிருந்த காலத்திலும், அவர் அயல்நாட்டு மந்திரியாயிருந்த காலத்திலும், தமிழர் சார்பாக இந்தியா இராணுவ ரீதியில் தலையிடாது என்று கூறியது ஞாபகமிருக்கும். ஆகவே இலங்கை அரசுக்கு குஜ்ரால் அரசின் கொள்கை நல்ல வரவேற்பைக் கொடுத்திருக்கும் என்பதில் எந்த வித ஐயமுமில்லை.

பாரதீய ஜனதா ஆட்சியின் கீழ் இந்திய அரசு வெளிப்படையாக தமிழர் சார்பாக ஓர் அறிக்கையும் விடவில்லை. என்றாலும் இந்த அரசை ஆதரிக்கின்ற கட்சித் தலைவர்களான ஜோர்ஜ் பெர்ணான்டஸ், வை. கோபாலசாமி, டாக்டர். ராமதாஸ் ஆகியோர் இலங்கைத் தமிழர்கள் மீது

www.tamilarangam.net

பாசமும் விசுவாசமும் வைத்திருக்கிறார்கள். வை.கோபாலசாமி அமெரிக்காவிற்கும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்கும் சென்று இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறலான செயல் பற்றி கூறினார்.

இந்திய அமைதிப்படை விலகிய பின்பும் ராஜிவ் கொலையின் பின்பு இந்திய மத்திய அரசு இலங்கைத் தமிழர் மீது இனப்பிரச்சினையின் மீது அக்கறை எடுக்கவில்லை. ஏனெனில் இந்திய அமைதிப்படையும் விடுதலைப்புலிகளின் யுத்தத்தில் ஈடுபட்டதன் காரணத்தினாலும் ராஜிவ் காந்தியை விடுதலைப் புலிகள் கொலை செய்திருப்பர் என இந்திய அரசு நம்புவதனாலும் இலங்கைத் தமிழர் மீது அக்கறை இல்லாத சகாப்தம் உருவாகியது. இதன் விளைவுகளினால் இலங்கை அரசு முக்கியமாக இன்றைய அரசு ஆட்சிக்கு வந்த பின் இலங்கைத் தமிழர் மீது மிகக் கொடூரமான மனித உரிமை மீறல் நடத்தப்பட்டன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் 22 வீதமான பாடசாலைகள் விமானக் குண்டு வீழ்ச்சினாலும் எறிகணைத் தாக்குதல்களினாலும் சேதமாக்கப்பட்டன. வடகீழ்ப் பிராந்தியத்தில் 1600 இந்துக் கோயில்களும் தேவாலயங்களும் சேதமாக்கப்பட்டன. 1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் புனித பீற்றஸ் தேவாலயம் குண்டு வீசி அழிக்கப்பட்டதோடு அங்கு அகதிகளாயிருந்த மக்களும் கொல்லப்பட்டனர். நாகர் கோயில் என்ற இடத்தில் பாடசாலை வளவில் விளையாடிக் கொண்டிருந்த இளம் பிள்ளைகள் குண்டு வீச்சினால் இறந்தார்கள். சரித்திரப் புகழ் பெற்ற திருக்கேதீச்சரக் கோயில், மாவிட்டபுர கந்தசாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரக் கோயில் போன்றனவும் சேதமாக்கப்பட்டன. இளம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்கள். ஆசியாவில் மிகக் கொடூரமான சம்பவம் ஒன்று 96 இல் நடந்தது. அது யாதெனில், யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட பின் 600 ற்கும் அதிகமான இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்பட்டும் கொலை செய்யப்பட்டும் செம்மணிப் புதைகுழியில் எலும்புக்கூடுகளாய் உள்ளார்கள். இது உலகறிந்த விடயம்.

தமிழ் பிரதேசமான வன்னியில் கஞ்சிக்கே வழியில்லாமலும் மரங்களே வீடுகளாகவும் மக்கள் ஜீவிக்கின்றார்கள். மருந்து வசதிகளும் இல்லை. இந்தியாவில் 1941,42 இல் நடந்த வங்கப் பஞ்சம் போல் வன்னியிலும் தலை தூக்குகின்றது. இம்மாதிரியான மனித உரிமை மீறல் நடந்தும் நமது அண்டை நாடான இந்தியா தார்மீக ரீதியாகவும் மனிதாபிமான முறையிலும் தமிழர்களுக்குக் குரல் கொடுத்திருக்கலாம். உதவியும்

www.tamilarangam.net

செய்திருக்கலாம். 1997 ஆம் ஆண்டு ஐக்கிய நாட்டு மனித உரிமை மீறல் கொமிஷனில் 70 அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் இலங்கையில் நடப்பது தமிழர்களுக்கெதிரான இனப்படுகொலை என்றும் இலங்கை இராணுவம் வடக்கு, கிழக்கிலிருந்து அகல வேண்டும் என்றும் தமிழ் மக்கள் தங்களுடைய தலைவிதியை நிர்ணயிக்க அவர்களுக்கு சுய உரிமை கொடுக்கப்பட வேண்டுமென்றும் குரல் கொடுத்தார்கள். இவற்றை யெல்லாம் அறிந்த பின்பும் இந்திய மத்திய அரசு மௌனம் சாதிப்பது ஓர் மனிதாபிமானமற்ற செயல் என்றே கருத வேண்டும். இந்த மாதி ரியான மனிதாபிமானமற்ற செயல்களுக்கு இந்திய அரசியல் வாதிகளை விட இந்திய உத்தியோக வர்க்கமே பொறுப்பேற்க வேண்டும். இந்திய அதிகார வர்க்கம் சகல துறைகளிலும் ஆதிக்கமும் முட்டுக்கட்டை களையும் உருவாக்குகின்றது என்று இந்தியப் பிரதமரே கூறியிருக் கின்றார்.

## வரதராஜப் பெருமாளின் வருகையும் நோக்கமும்

வரதராஜப் பெருமாள் மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் தான் இலங் கை வந்துள்ளார். தற்பொழுது இலங்கை இனப்பிரச்சினைக்கு சர்வதேச அளவில் புலிகளுடன் இலங்கை அரசு மூன்றாவது மத்தியஸ்தத்துடன் இராணுவத்தீர்வை விட்டு, அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்று அனேக நாடுகள் தாங்கள் மத்தியஸ்தம் செய்ய முன் வந்தன.

புலிகளின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனும் நிபந்த னையற்ற பேச்சுவார்த்தைக்கு இணக்கம் தெரிவித்துள்ளார். ஆனால், இது வரை அரசாங்கம் இது பற்றி சாதகமான அல்லது பாதகமான எந்த விதமான அறிவித்தலையும் தெரிவிக்கவில்லை. எனினும் இராணுவத் தீர்வையே அரசு விரும்புகின்றது என்பது புலனாகின்றது.

இந்தச் சூழ்நிலையில் வரதராஜப் பெருமாள் இலங்கைக்கு வருகை தந்தது, பல விதமான ஊகங்களுக்கு இடமளிக்கின்றது. இவர் இந்திய அமைதிப்படை இருந்த காலத்தில் இந்திய பிரதிநிதி உதவியுடன் வடகீழ் மாகாணசபை முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார். இவருடைய கட்சி E.P.R.L.F இந்தக் கட்சிக்கு இந்திய அரசின் ஆதரவு கிடைத்தது. ஆனால், மறைந்த ஜனாதிபதியாகிய பிரேமதாஸ காலத்தில் வடகீழ் மாகாண சபைக்கும் பிரேமதாஸ அவர்களுக்கும் பலவிதமான பிரச்சினைகள் ஏற்பட்டன. பிரேமதாஸ இந்திய அமைதிப்படையை கடுமையாக

www.tamilarangam.net

விமர்சித்தார் என்பது எல்லோரும் அறிந்த உண்மை.

இந்தச் சூழ்நிலையில் இந்திய அரசின் ஆதரவை நம்பி இவர் 19 கோரிக்கையை பிரேமதாஸவிடம் வைத்தார். இக்கோரிக்கைகளை நிறைவேற்றாவிடின் தான் வடகீழ் பிராந்தியத்தை சுதந்திர ஈழமெனப் பிரகடனம் செய்வதாகக் கூறினார். பின்பு தன்னிச்சையாகவே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் பிரேமதாஸ வடகீழ் மாகாணசபையைக் கலைத்த விட்டார். வரதராஜப் பெருமாள் இக்காலத்தில் இந்திய அமைதிப்படை உதவியுடன் ஒரு தமிழ்த் தேசியப் படையை உருவாக்கினார். ஆனால் விடுதலைப் புலிகளுக்கும் இவர்களுக்கும் நடந்த மோதலில் தமிழ்த் தேசியப் படையை விடுதலைப் புலிகள் நிர்மூலமாக்கிய விடயம் சகலரும் அறிந்ததே. வரதராஜப் பெருமாளையும் இந்திய அரசு தங்கள் விமானத்தில் இந்தியாவிற்கு கொண்டு சென்றது. எட்டு வருடங்களுக்குப் பின்பு இவர் இலங்கை திரும்பியுள்ளார். இதன் மர்மம் என்ன?

இலங்கை அரசு சமாதானத் தீர்வுக்கு சர்வதேசிய அழுத்தங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. ஆகையினால் இலங்கை அரசு சில சமயம் விடுதலைப் புலிகளுடைய அரசியல் ஆதரவைக் குறைப்பதற்கு இவரை ஒரு தமிழ்ப் பிரதிநிதி ஆக்கி ஒரு சமரசத் தீர்வை இவர் மூலம் உருவாக்க முடியுமா எனச் சிந்திப்பதற்கு வாய்ப்புண்டு. மேலும், இந்திய அரசு இவரைப் பொறுப்பேற்றபடியினால் இவர் மூலம் விடுதலைப் புலிகளுடைய ஆதிக்கத்தைக் குறைப்பதற்கு இவரைப் பாவிக்கலாம் என்றும் யோசிக்கலாம். இந்த விடயத்தில் இந்திய அரசின் அதிகார வர்க்கமும் இலங்கை அரசும் ஒரே கருத்தையே கொண்டிருக்கலாம். ஏனெனில் இந்திய உத்தியோக வர்க்கமும் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளை ஓரம் கட்டுவது போல் தெரிகிறது. ஆனால், எமது கணிப்பின்படி விடுதலைப்புலிகளை ஓரம் கட்டிவிட்டு வரதராஜப் பெருமாளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பது ஓர் பகற்கனவாக முடியும்.

இச் செயற்பாடு வடகீழ்ப் பிராந்தியத்தில் நடைமுறையில் இருக்கும் யதார்த்த நிலையை அவமதிப்பதாக முடியும். அருச்சுனன் இல்லாமல் மகாபாரதத்தை வியாசர் உருவாக்க முடிந்திருக்காது. அது போல் விடுதலைப் புலிகளை ஓரம் கட்டி இந்திய அரசோ இலங்கை அரசோ அரசியல் தீர்வு ஏற்படுத்தலாம் என்றால் அது நிச்சயம் தோல்வியையே

www.tamilarangam.net

தழுவும். வரதராஜப் பெருமாள் மீது இலங்கை அரசு நம்பிக்கை வைத்தி ருப்பது உண்மையென்றால் ஏனைய தமிழ்க்கட்சிகள் மீது இலங்கை அரசுக்கு நம்பிக்கை இல்லை என்பதையே இது உணர்த்துகின்றது.

இவர் அரசியலில் ஈடுபட்டு தமிழ் மக்களுக்கு ஓர் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா என்பது இன்னொரு கேள்விக்குறி. சில சமயம் இந்தியத் தேர்தலில் சோனியா காந்தியின் கீழுள்ள காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றால் இந்திய அரசு நேரடி அரசியல் ஆதரவும் மறைமுக இராணுவ ஆதரவும் இலங்கை அரசுக்கு கொடுக்கும் என்று சிலர் தப்புக் கணக்கு போடுகிறார்கள். அந்த சூழ்நிலையில் வரதராஜப் பெருமாளை ஓர் அரசியல் கருவியாகப் பாவிக்க வாய்ப்புண்டு. சோனியா காந்தியோ வேறு யாருமோ இலங்கை அரசுக்கு விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இராணுவ உதவி கொடுத் தால் தமிழ் நாட்டில் எதிர் விளைவுகள் உருவாக வர்ய்ப்பு அதிகமுண்டு. இந்த நிலைப்பாட்டிற்கு சில பத்திரிகைகள் ஆதரவாய் இருந்தாலும் தமிழ் நாட்டின் இளைய சமுதாயம் இதைப் பொறுத்துக் கொண்டு இருக்காது சோனியா காந்தி கத்தோலிக்க சமயத்திலிருந்து இந்து சமயத்திற்கு மாறினாலும் இலங்கை அரசுக்கு இராணுவ உதவி செய்தால் தமிழ் நாட்டு இளைஞர்கள் இவரை மன்னிக்க மாட்டார்கள். இம் மாதிரியான யூகங்கள் எல்லாம் ஒரு கற்பனையே அல்லாமல் யதார்த்த நிலைக்கு ஏற்றவையல்ல.

ஆகவே இலங்கை அரசும் விடுதலைப் புலிகளுடன் ஓர் மூன்றாம் தர மத்தியஸ்தத்துடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையில் இறங்குவதே உசிதமான அரசியல் சாணக்கியம் என்று கூறலாம்.

www.tamilarangam.net

**16** 07-02-99

## பட்டினிச்சாவில் வன்னி மக்கள்

தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்று பாரதியார் அன்று முழங்கினார். ஆனால் இன்று இலங்கை அரசினால் வன்னிப் பிரதேசத் தமிழ் மக்களுக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்படும் இனப்படுகொலையின் விளைவாக அம்மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். 1995 ஆம் வருடத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தை இலங்கை இராணுவம் கைப்பற்றியதால் அம்மாவட்ட மக்களில் அதிகமானோர் வன்னிக் காடுகளில் தஞ்சம் புகுந்த கதையாவரும் அறிந்ததே. அவ்வேளையில் அம் மக்களின் துயரங்களையும் அவலங்களையும் உணர்ந்த முன்னாள் ஐ.நா. செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ் காலி,ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட புலம் பெயர்ந்த தமிழ் மக்களுக்கு நிவாரண உதவிகளை உடனடியாகக் கொடுத்து உதவுமாறு சர்வதேச சமுதாயத்துக்கு மிகவும் உருக்கமான வேண்டுகோளொன்றினை விடுத்திருந்தார்.

ஆனால் எமது வெளி விவகார அமைச்சர் இதனை உள்நாட்டு விடயம் எனக்கூறி அம் மனிதாபிமான உதவிகளை நிராகரித்து விட்டார். இவ்வாறானதொரு நிராகரிப்பு உலக சரித்திரத்தில் நிகழவில்லை. இங்கு நடைபெறும் யுத்தத்துக்கு வெளிநாடுகளிலிருந்து யுத்த தளபாடங்களை வாங்கும் இலங்கை அரசாங்கம், அவர்களை எதிர்த்துப் போராடும் புலிகளுக்கு வெளிநாடுகளில் வதியும் தமிழர்கள் நிவாரண உதவிக்குப் பணம் வழங்கக்கூடாதெனவும், அதனைத் தடை செய்வதற்கு சர்வதேச அரங்கில் பிரசாரமும் மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறான கொடூர செயல்களுக்கு என்றோ ஒரு நாள் சர்வதேச நீதிமன்றங்களில் இலங்கை அரசு பதில் சொல்லியே ஆகவேண்டும்.

ஐ.நா. மரபுகளின் பிரகாரம் உணவு வகைகளும் மருந்து வகைகளும் யுத்தக் கருவிகளாகப் பயன்படுத்தக்கூடாதென்பது ஓர் விதிமுறையாகும். ஆனால் இலங்கை அரசு, வன்னிப் பிரதேசத்தில் இராணுவக்கட்டுப்பாட்டில் இல்லாத தமிழ் மக்களுக்கு உணவு வகைகளையும் மருந்து வகைகளையும் அனுப்புவதற்குக் கடுமையான பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இது இனப்படுகொலையின் ஓர் அம்சமாகவே விளங்குகின்றது. இது தொடர்பாக ஒரு காலகட்டத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இலங்கை அரசை விசாரணை செய்வதற்கான வாய்ப்புகள் உண்டு.

www.tamilarangam.net

இப்பொருளாதாரத் தடையினால் தமிழ் மக்கள் உணவு இன்றியும், மருந்து வகைகள் இன்றியும், அல்லற்படுகின்றனர். குழந்தைகளிலிருந்து முதியோர் வரை பல்வேறு வகையான நோய்களுக்கு ஆளாகித் தத்தளிக் கின்றனர். வீடுகள் இல்லாத நிலையிலும் உடுதுணி இல்லாத இந் நிலை யிலும் பிள்ளைகள் பாடசாலைகளுக்குப் போவது எப்படி?.

எந்நேரத்திலும் விமானக் குண்டு வீச்சுகளும் ஏவுகணைத் தாக்குதல் களும் நடைபெறுகின்றன. இம் மக்களின் நலன் கருதி, உதவ வரும் அரச சார் பற்ற ஸ்தாபனங்களின் தன்னலங்கருதாத சேவைக்கும் அரசாங்கம் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. சுருக்கமாகக் கூறுவதா னால், ஐ.நா. தாபனத்தின் விதிமுறைகளுக்கு முரணாகவும் மனிதாபிமான செயற்பாடுகளுக்கெதிராகவும் இலங்கை அரசு செயற்படுகின்றது. இவை யாவற்றையும் நன்கு அவதானிக்கையில் இது தமிழ் இனத்தை அழிக்கும் மிகக் கொடூரமானதொரு செயல் என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது. இவ்வாறான செயல் இனப்படுகொலையின் ஓர் அம்சம் என்பதனை அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த தென் ஆபிரிக்க பாராளு மன்றக் குழுவுக்கும், பெல்ஜியம் நாட்டிலிருந்து வந்திருந்த 17 தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும், ஐரோப்பிய பாராளுமன்றத்தைச் சேர்ந்த இரு பிரித்தானிய அங்கத்தவர்களுக்கும் தகுந்த புள்ளிவிபர ஆதாரங்களுடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 1997 ஆம் வருடத்தில் நடைபெற்ற ஐ.நா. தாபன மனித உரிமைக் குழுவின் கூட்டத்தொடரில் 70 அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக வெளிப்படுத்திய மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் அவர்களுக்கு எடுத்துரைக்கப் பட்டுள்ளது. 1997 ஆம் வருடத்தில் நடைபெற்ற ஐ.நா. ஸ்தாபன மனித உரிமைக் குழுவின் கூட்டத்தொடரில் 70 அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக வெளிப்படுத்திய மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அவற்றைச் செவிமடுத்த பெல்ஜிய நாட்டின் பிரதிநிதிகளும் ஐரோப்பிய பாராளுமன்ற அங்கத்தவர்களும் இவ்விடயங்களை இதுவரையில் தெரிந்திருக்கவில்லையெனவும் இவ்விடயங்கள் தொடர்பாகத் தாம் அதிர்ச்சியடைவதாகவும் குறிப்பிட்டனர். மேலும் 1941/42 ஆம் வருடங்களில் நிகழ்ந்த வங்கப்பஞ்சம் போல் வன்னிப் பஞ்சம் உருவெ டுக்கும் என்று ஏற்கனவே பலமுறை சுட்டிக்காட்டப்பட்டது.

www.tamilarangam.net

சில தினங்களுக்கு முன்னர் வன்னியில் நெருப்புக் காய்ச்சலுக்கு தன் தாயைப் பறிகொடுத்த பிள்ளையொன்று பட்டினியால் மரணமடைந்த தனது தந்தையின் மரண விசாரணையின்போது நீதிபதியிடம் அழுதழுது கூறிய சோகக் கதையே முதல் தடவையாக உத்தியோகபூர்வமாக வன்னியில் நிகழ்ந்த பட்டினிச் சாவாகும். உலகுக்கு வெளிவராமல் இவ்வாறு எத்தனை ஆயிரம் மரணங்கள் நிகழ்ந்திருக்கலாம். மழை இன்மையாலும் விளைச்சல் இல்லாமையாலும் சில நாடுகளில் பஞ்சம் தோன்றுகின்றது. ஆனால் வன்னியில் ஏற்படுகின்ற பஞ்சம் இலங்கை அரசாங்கத்தினால் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படும் இனப்படு கொலையின் ஓர் அம்சமாகவே விளங்குகின்றது.

வன்னிப் பிரதேசத் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய உலர் உணவுகளை இரண்டு கட்டங்களில் அரசாங்கம் குறைத்துள்ளது. இரா ணுவ நிர்ப்பந்தங்களே இக்குறைப்புக்கான காரணமாகும். குடிசன மதிப்பீட்டினை மேற்கொள்ள வேண்டியது சிவில் அதிகாரிகளின் கடமை யாகும். ஆனால் வன்னிப் பிரதேச அரசாங்க அதிபர்களின் குடிசனக் கணிப்பீட்டை இராணுவத்தினர் அங்கீகரிக்காமல் அதனைவிடக் குறை வான கணிப்பீடொன்றின் அடிப்படையிலேயே உலர் உணவு வழங்கப் பட்டது. இவ்வாறு இராணுவ நிர்ப்பந்தங்களினால் ஏற்படுத்தப்பட்ட உலர் உணவுக் குறைப்புக்கு எதிராகப் பல மாதங்களாகத் தொடர்ச்சியான முறையில் சத்தியாக்கிரகங்கள் நடைபெறுகின்றன. வெளியுலகில் வாழும் தமிழர்களிடமிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியது. ஆனால் மனித நேயமற்ற இச்செயலுக்கு தமிழ்ப் பிரதிநிதிகள் எந்தளவுக்கு எதிர்ப்புக் காட்டினார்கள் என்பது தெரியவில்லை. இவ்வாறான எதிர்ப்புக்களின் விளைவாக, வன்னியின் குடிசனக் கணிப்பீட்டை திரும்பவும் மீளாய்வு செய்வதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்ததாக அறிகின்றோம். இராணுவ மதிப் பீட்டில் நம்பிக்கை இல்லாமலே திரும்பவும் மீளாய்வு செய்வதற்கு ஜனாதிபதி வழிசெய்திருப்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

பொதுவாகப் பாதுகாப்பு விடயங்களில் கவனம் செலுத்த வேண் டிய இராணுவத்தினர் குடிசனக் கணிப்பீட்டில் தலையிடுவது உலகில் வேறெங்கும் காணப்படாத ஓர் விடயமாகும். அதுபோலவே வன்னிப் பிரதேசத்திற்கு அனுப்ப வேண்டிய மருந்துகளின் வகைகளையும் தொகை களையும் இராணுவமே நிர்ணயிக்கிறது. இதனால் தமிழ் மக்கள் அனேக அவலங்களுக்கு ஆளாகின்றனர். வன்னியில் நிலவும் உணவுப் பஞ்சத்

தையும் மருந்துத் தட்டுப்பாட்டையும் சர்வதேச சமூகத்திற்குத் தெரியப்ப டுத்தி சர்வதேச நிவாரணக் கொடுப்பனவுக்கு ஐ.நா.தாபனம் மூலமோ சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமோ அன்றேல் வேறு சர்வதேச தாபனங்கள் மூலமோ அவசரமாக வழி செய்ய வேண்டியது வெளி நாடுகளில் வதியும் தமிழர்களின் தலையாய கடனாகும். இதன் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு கடுமையான அழுத்தங்களைக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். வெளிநாடுகளில் வதியும் இலங்கைத் தமிழர்கள் வன்னியில் நிலவும் பஞ்சம் தொடர்பாகவோ வடகீழ் பிராந்தியத் தமிழ் மக்களுக்கும் கொழும்பு வாழ் தமிழ் மக்க ளுக்கும், எதிராக மேற்கொள்ளப்படும், மனித உரிமை மீறல்கள் தொடர் பாகவோ நன்கு விளங்கிக் கொள்ளவில்லை என்பதே எமது கணிப் பீடாகும். வன்னித் தமிழ் மக்கள் பட்டினியால் மரணமடைவதைத் தவிர்ப்பதற்கு சர்வதேச தமிழ்ச் சமுதாயமும் வெளிநாடுகளில் வதியும் இலங்கைத் தமிழர்களும் மிக மிக அவசரமானதொரு நடவடிக்கையாக, ஐ.நா.செயலாளர் நாயகம், மேற்கு நாட்டு அரசாங்கங்கள் மற்றும் இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மனிதனால் மனிதனுக்கு இழைக்கப்படும் அவலங்களைத் தெரியப்படுத்துதல் வேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் மீது பாச உணர்வுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த வை. கோபாலசாமி மற்றும் டாக்டர் ராமதாஸ் ஆகியோருக்கும் வன்னிப் பஞ்சம் தொடர்பாக எடுத்துரைக்கப்படுதல் வேண்டும். அவர்கள் மூலமாக தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களது கவனத்திற்கும் கொண்டு வரப்படுதல் வேண்டும். தமிழர்கள் எங்கு அவலங்களை எதிர்நோக்கினும், அவர்களுக்காகக்குரல் கொடுத்துச் செயற்படுவது தமது பணியென சில வருடங்களுக்கு முன்னர் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களும், முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெய லலிதா அவர்களும் கூறியிருந்தனர். அந்த நிலைப்பாட்டை வன்னி மக்கள் தொடர்பாகவும் கடைப்பிடித்து அவர்கள் பட்டினியால் மரண மாவதைத் தடுப்பதற்கான எத்தனங்களை மேற்கொள்ளுமாறு கேட்கலாம்.

மற்றும் வெளிநாடுகளில் வதியும் ஏழு இலட்சத்திற்கு மேற்பட்ட இலங்கைத் தமிழ் மக்கள் தம்மிடையிலான அரசியல் பேதங்களை மறந்து, வன்னியில் இயங்கும் நம்பிக்கை நிறைந்த ஸ்தாபனங்களுக்கூடாகப் பஞ்சத்தைப் போக்குவதற்கான நிதியுதவிகளை மேற்கொள்ளலாம். வன்னியில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்க மூலமும், சர்வதேச செஞ்

சிலுவைச் சங்க மூலமும், நிவாரண உதவிகளை வழங்கலாம். இது மிகவும் அவசரமானதொரு தேவையாகவுள்ளது.

மேலும் வெளிநாடுகளில் வதியும் தமிழர்களும் அவர்கள் சார்ந்த ஸ்தாபனங்களும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்களுடன் தொலைபேசி மூலமாகவோ அல்லது பக்ஸ் மூலமாகவோ தொடர்பு கொண்டு, எவ்விதமாக நிவாரண உதவி களை வழங்க முடியும் என்பதை விசாரித்தறிந்து செயற்படலாம். இவ்வி தமான மனிதாபிமான முயற்சிகளுக்கு இலங்கை அரசோ, வெளிவிவகார அமைச்சோ, அல்லது இராணுவமோ முட்டுக்கட்டைகளையோ, தடைக ளையோ விதித்தால், அதனைச் சகல சர்வதேச ஸ்தாபனங்களினதும் கவனத்திற்குக் கொண்டு வருவது மிக மிக அவசியமானதாகும். இது தொடர்பாகத் துணிவுடன் செயற்படுவது வரவேற்கக்கூடியதாகும். காலங் கடத்துவது வ்ன்னியில் தமிழினம் அழிவதற்கு ஏதுவாக அமைந்துவிடும். அரசாங்கம் தமிழினத்தைப் படுகொலை செய்ய எத்தனிக்கும் போது, தமிழினம் முக்கியமாக வெளிநாட்டில் வாழும் தமிழினம் கண்டும் காணாதது போலவோ, அசிரத்தையாகவோ இருக்க முடியுமா? இது தொடர்பாகக் கொழும்பு வாழ் தமிழ் மக்களும் சமய நிறுவனங்களும் அரசியல் கட்சிகளும் குழுக்களும் கூட தமது பங்களிப்பினை வழங்குவது இன்றியமையாததாகும்.

சமய நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டியவை இதுவரையில் இந்நிறுவனங்கள் ஆற்றிய பணிகள் யாவரும் அறிந்ததே. எனினும் அரசின் செயற்பாட்டினால் ஏற்பட்ட பஞ்சத்தினால் மக்கள் மரணமடை வதைத் தவிர்ப்பதற்கு ஓர் அவசரத்திட்டம் வகுத்து வன்னி மக்களைக் காப்பாற்றுவது இவர்களின் கடமையாகும். முக்கியமாக அகில இலங்கை இந்து மாமன்றம் தனது கிளை நிறுவனங்களின் உதவியுடன் இவ்விட யத்தில் அதிக கவனம் எடுக்க வேண்டும். அதுபோலவே, இராம கிருஷ்ண மிஷன், விவேகானந்த சபை, சைவ முன்னேற்றச் சங்கம், உலக சைவசபை, இந்துக்கவுன்ஸில், பகவான் சத்திய சாயி கழகம், முத்துக் கிருஷ்ண சுவாமிகள் மிஷன் மற்றும் கொழும்பு வாழ் இந்து மகளிர் சங்கம் போன்ற ஸ்தாபனங்கள் தத்தமது ஆற்றலுக்கேற்ப நிவாரணப் பொருட்களை வழங்கலாம். அந்தந்தப் பகுதி அரசாங்க அதிபர்களோடு தொடர்பு கொள்ளும் பட்சத்தில் அவர்களாகவே கொழும்புக்கு வந்து இப்பண்டங்களைப் பெற்றுச் செல்வதற்கும் இடமுண்டு.

## கிறிஸ்தவ சங்கங்கள் மேற்கொள்ள வேண்டியவை

இதுவரையில் இச்சங்கங்கள் பெருமளவிற் சேவை புரிந்திருப்பது சகலரும் அறிந்த தொன்றாகும். இச்சங்கங்களுக்கு வெளிநாடுகளில் அதிக தொடர்புகள் இருப்பதனால், தமது செல்வாக்கினைப் பயன்படுத்தி வன்னிப் பட்டினிச்சாவைத் தவிர்ப்பதற்கு உதவ முடியும். தென்னிந்திய திருச்சபை இது தொடர்பாக கவனம் எடுக்குமென எதிர்பார்க்கலாம்.

தமிழ்க் கலாசார சங்கங்கள் மேற்கொள் வேண்டியவை - கம்பன் கழகம் வெகு விமரிசையான வகையில் கொழும்பில் தமிழரின் கலாசாரப் பசியைத் தீர்த்தது, சகலரும் அறிந்த உண்மை. அவ்விழாவுக்கு அதிக செலவு ஏற்பட்டிருக்கலாம் என்பது எமது கணிப்பு. இது அவர்களின் செயற்பாட்டுத்திறனை வெளிப்படுத்தியது. தமது செயற்பாட்டுத் திறனை வன்னிப் பிரதேசத் தமிழ் மக்களது பஞ்சத்தைப் போக்கும் மனித நேயம் மிகுந்த பணிக்கும் வெளிப்படுத்தினால் பெருமளவுக்கு உதவ முடியும். இதுபோலவே, கொழும்பு தமிழ்ச் சங்கமும் செயலாற்ற முன்வருதல் வேண்டும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டியவை - சகல அரச சார்பற்ற நிறுவனங்களும் வெளிநாட்டு உதவியை நம்பியே செயற்படுகின்றன. அதனால் இவர்களது தொண்டு மிகவும் மகத்தான தாகும். இவர்கள் வன்னிப் பிரதேசத்திற்குச் சென்று அங்குள்ள மக்களின் அவல நிலையினைக் கண்டறிந்து அதற்கேற்ப செயற்படுகின்றனர். இத்தொண்டு புரிவதற்கு இராணுவத்தலையீடுகளும் இடையூறுகளும் ஏற்படுவது முண்டு. எனினும் இவர்கள் மக்களுக்கேற்ற சேவைகளை வழங்குகிறார்கள் என்பது உலகறிந்த உண்மை. தற்போது வங்கப் பஞ்சத்தைப்போல் வன்னிப் பஞ்சமும் தலை விரித்தாட வாய்ப்புள் ளமையால், இவர்களுக்கு நிதியுதவி வழங்கும் வெளிநாட்டுத் தாபனங் களுக்கு அவசர வேண்டுகோளொன்றினை பக்ஸ் மூலம் அனுப்பி வன்னிப் பஞ்சத்தைத் தவிர்ப்பதற்கு மாத்திரம் விசேட நிதியமொன் றினைப் பெற்று உதவி செய்வார்களேயாகில், தமிழ் மக்கள் என்றும் அவர்களுக்கு நன்றியுடையவர்களாக விளங்குவர்.

## தமிழ் அரசியல் கட்சிகள் மேற்கொள்ள வேண்டியவை

இத்தமிழ் அரசியற் கட்சிகள் தம்மால் இயன்ற அளவுக்கு செஞ் சிலுவைச் சங்க மூலமோ அரசாங்க அதிபர்கள் மூலமோ தமது பங்களிப் பினை வழங்க முடியும். அத்தோடு அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ்க்

www.tamilarangam.net

கட்சிகள் இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களைக் கொடுத்து இன்னும் நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்காவது தற்போது வழங்கும் உலர் உணவை இரண்டு மடங்குகளாக ஆக்கி விநியோகிப்பதற்கு மனிதாபிமான முறையில் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் யாவும் தனிப்பட்ட முறையிலோ அன்றேல் ஒன்றிணைந்தோ செயற்பட்டால் வன்னியில் நிகழவுள்ள ஆயிரக்கணக்கான பட்டினிச்சாவைத் தவிர்த்துக் கொள்ள முடியும். இந்த விடயத்தில் அண்டை நாடான இந்தியா மௌனம் சாதித்தால் வரலாறு இந்தியாவை மன்னிக்காது.

தமிழ் நாட்டு அரசியல் வாதிகளும் தமக்குள்ளான பேதங்களை மறந்து வன்னியிலுள்ள தமிழ் மக்களைக் காப்பாற்றுமாறு மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்தல் வேண்டும். அல்லாது விடில் வங்கப் பஞ்சம் போலவே, வன்னிப் பஞ்சமும் ஏற்படலாம்.

வங்கப் பஞ்சம் நிகழ்ந்த காலங்களில் இலங்கைத் தமிழர்கள் தங்களால் இயன்ற உதவிகளைத் வங்காள மக்களுக்கு வழங்கினார்கள் என்பதை இத்தருணத்தில் நினைவுகூருதல் வேண்டும். வன்னிப் பஞ்ச நிகழ்வு மனிதாபிமானத்திற்கான ஓர் சவாலாகும். இந்நிகழ்வுக்கான முழுப்பொறுப்பையும் இலங்கை அரசே ஏற்கவேண்டும். ஒரு காலத்தில் இலங்கை அரசு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இதற்குப் பதில் சொல்லித்தான் தீர வேண்டும்.

அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும் என்ற முதுமொழியின் பொருள் ஒரு காலத்தில் தெரியவரும்.

www.tamilarangam.net

14-03-99

# 17

## வன்னித் தமிழ் மக்களின் பட்டினிப்போராட்டம் சர்வதேச அரங்கிற்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டும்.

வன்னிப்பஞ்ச நிலவரம் தொடர்பாக 1999 பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதியன்று கட்டுரையொன்றைப் பிரசுரித்தமைக்காக வீரசேகரி பத்திரிகைக்கு தமிழ் சமுதாயம் மிகவும் கடமைப்பட்டுள்ளது. அதன் பிரதிபலனாக வன்னி நிலவரம் தொடர்பாக ஆராய்வதற்கென சரஸ்வதி மண்டபத்தில் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. அப்பொதுக்கூட்டத்தை அகில இலங்கை இந்து மாமன்றம், இராமகிருஷ்ணமிஷன், கம்பன் கழகம், விவேகானந்த சபை மற்றும் சைவ முன்னேற்றச் சங்கம் ஆகியவை ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்தன. வன்னி பஞ்சம் தொடர்பான கட்டுரையொன்று வீரகேசரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டதன் பின்னர் கம்பன் கழகம் அகில இலங்கை இந்து மாமன்றத்துக்கு ஒரு இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியதை வாசகர்கள் அறிந்திருப்பார்கள். அது போலவே ஏனைய இந்து ஸ்தாபனங்களும் நன்கொடை வழங்க முன் வந்தன. வன்னிப்பகுதியிலுள்ள பாடசாலை பிள்ளைகளுக்கு அப்பியாசப் புத்தகங்களை வழங்குவதற்கு இராம கிருஷ்ணமிஷன் முன்வந்தது.

சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இராமகிருஷ்ண மிஷன் தலைவரான சுவாமி ஆத்மகனானந்தாஜி அவர்கள் நெஞ்சைப் பிளக்கும் வகையில் ''வன்னியில் அவலங்களை எதிர் நோக்கும் மக்களுக்கு இந்த நேரத்தில் நேசக்கரம் நீட்டாது விடில் சரித்திரம் எம்மை மன்னிக்காது'' என முழங்கினார். அவரது முழக்கத்திற்கும் ''தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்ற பாரதியாரின் முழக்கத்துக்குமிடையே ஒற்றுமையொன்றினை நாம் காண்கின்றோம். அக்கூட்டத்துக்கு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி அவர்களே தலைமை தாங்கினார். அக்கூட்டத்தின் பலனாக கடந்தவாரம் இராம கிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மகனானந்தா அவர்களின் தலைமையில் அகில இலங்கை இந்து மாமன்றம், கம்பன் கழகம் மற்றும் ஏனைய இந்து ஸ்தாபனங்களின் தலைவர்கள் ஒருங்கிணைந்து வன்னி நிலைவரங்களை பார்வையிட சென்றார்கள். வன்னி தமிழ் மக்களைக் காப்பாற்றும் விழிப்புணர்வு சகல இந்து ஸ்தாபனங்களுக்கும் ஏற்பட்டதையொட்டி நாம் அனைவரும் மகிழ்ச்சி அடைதல் வேண்டும். ஆனால் சில விடயங்களில் நாம் கவலைப்பட வேண்டியும் உள்ளது. வன்னித்தமிழ் மக்களின் அவலங்களை நீக்குவதற்காகச் சரஸ்வதி மண்டபத்தில் கூட்டப்பட்ட

www.tamilarangam.net

கூட்டத்திற்கு கொழும்பு மாவட்டத்தில் வதியும் ஏறத்தாழ ஒன்றரை இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்களில் ஐம்பது பேர் கூட வருகை தந்திருக்கவில்லை. அதிகளவான ஆட்களை எதிர்பார்த்த நிலையில் ஏமாற்றமே மிஞ்சியது. அக்கூட்டம் தொடர்பாக மக்கள் மத்தியில் அதிக விளம்பரம் செய்யப்படாமையே இதற்கான காரணமாயிருக்கலாம். சகலரும் பத்திரிகைகளை வாசிப்பார்கள் என எண்ணுவது தவறு.

வன்னி மக்களுடைய பஞ்சத்தை தவிர்ப்பதற்கு உதவும் பொருட்டு ஆஸ்திரேலியா, அமெரிக்கா, மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளிலுள்ள தமிழ் மக்கள் பலர் தொலை பேசி மூலம் வீரகேசரி பத்திரிகையுடன் தொடர்பு கொண்டதாக அறிந்தோம். வன்னி மக்களின் அவலங்களைப் போக்குவதற்கு சர்வதேச தமிழ்ச் சமுதாயத்தின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவதற்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு. இது தொடர்பாக கொழும்பு வாழ் தமிழர்கள் சில நடவடிக்கைகளில் இறங்குவது அவசியம்.

2500 மைல்களுக்கு அப்பாலுள்ள கத்தோலிக்க நாடான பிலிப்பைன்ஸிலிருந்து வெறிற்றாஸ் வானொலியில் வணக்கத்துக்குரிய பிதா ஜெகத் ஹாஸ்பார் என்பவர் வன்னி மக்களின் அவலங்களை மிகவும் அழுத்தமாகவும் உருக்கமாகவும் கூறிக்கொண்டிருக்கின்றார். அவரது பேச்சைக் கேட்பவர்கள் கண் கலங்காது இருக்க முடியாது. சில நாட்களுக்கு முன்பு வன்னியில் பட்டினியால் மரணமடைந்த வீரபாண்டிய சுப்பிரமணியத்தின் மரணத்தை இயேசு கிறிஸ்துநாதர் கல்வாரி மலையில் சிலுவையைத் தாங்க முடியாது வீழ்ந்த சோகக் கதையோடு ஒப்பிட்டுக் கூறினார். இவருடைய பேச்சைக் கேட்ட தமிழ் மக்களின் நெஞ்சங்கள் பிழந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. 2500 மைல்களுக்கு அப்பாலுள்ள கிறிஸ்தவ வானொலியொன்று தமிழ் மக்கள் மீதுள்ள பாசத்தினை வெளிப்படுத்துவதை 18 மைல்களுக்கு அப்பாலுள்ள தமிழ் நாட்டின் செய்தி ஊடகங்கள் வெளியிடுவதாக தெரிய வில்லை. இது மிகவும் வேதனைக்குரிய தோர் விடயமாகும். வன்னிப்பஞ்சம் எவ்விதம் ஏற்பட்டதென ஆராய்வதற்கு இது நேரமல்ல. இப்பஞ்சம் இயற்கை அனர்த்தங்களால் ஏற்பட்ட ஒன்றல்ல. மனிதனால் மனிதனுக்கு இழைக்கப்படும் கொடூரத்துரோக செயலே இப்பஞ்சமென்பது யாவரும் அறிந்த ஓர் விடய்மாகும். ஆகவே இது தொடர்பாக நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?

வன்னி என்று கூறும்போது இரண்டு விதமான வன்னிகளை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒன்று இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிரதேசம். மற்றையது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டி லுள்ள வன்னிப் பிரதேசம் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிரதேச நிலைமைகளை அறிந்து கொள்வதற்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிரதேசத்தின் நிலைமையை அறிந்து கொள்ளுவதற்கு அரசாங்கம் இது வரையில் தமிழர்களுக்கோ, தமிழ்ப் பிரதிநிதிகளுக்கோ, அல்லது வெளி யாருக்கோ, உதாரணமாக அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் வருகை தந்திருந்த தென் ஆபிரிக்கப் பாராளுமன்றக் குழுவுக்கோ அல்லது தென் ஆபிரிக்க பத்திரிகையாளர் குழுவுக்கோ, அனுமதி வழங்கவில்லை. விடுதலை புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப்பிரதேசத்தின் நிலை மைகளை அறிந்து கொள்வதற்கு வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்க ளுக்கோ, அன்றேல் உள்நாட்டுப் பத்திரிகை நிருபர்களுக்கோ அனுமதி வழங்கப்படவில்லை.

ஆனால் சமீபகாலத்தில் பௌத்த மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர் களைக் கொண்ட குழுவொன்று இராணுவக்கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பிரதேசத்திற்கு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டமை வரவேற் கத்தக்கவோர் விடயமாகும். அவர்களின் கூற்றுப்படி அப்பிரதேச மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் மிக மோசமானவை என்பதை நாம் அறிந்து கொண்டோம். மண்ணெண்ணெய் கிடைப்பதில்லை உணவு மற்றும் மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு கடைகளில் உணவுப்பண்டங்கள் இருந்தாலும் அவற்றை வாங்குவதற்கு மக்களிடம் பணம் இல்லாமை, உழைப்பு இல்லாத போது மக்களுக்கு பணம் எப்படி கிடைக்கும்? அரசாங்கத்தால் வழங்கப்படும் உலர் உணவையே மக்கள் நம்பியிருக் கிறார்கள். அதிலும் நாற்பது வீதம் மட்டும் தான் கொடுக்கப் படுகின்றது. இவ்வாறு வழங்கப்படும் உலர் உணவு கால் வயிற்றுக்குக் கூடபோதாது.

அண்மையில் யாழ் குடாநாட்டில் நடத்தப்பட்ட ஆய்வொன்றின் பிரகாரம் அங்குள்ள மக்களில் 35 சதவீதமானவர்கள் ஒரு நாளைக்கு ஒரு தடவை மாத்திரமே சாப்பிடுகிறார்கள்.

வறுமையே அதற்கான காரணமாகும். யாழ்ப்பாணக் கடைகளில் பொருட்கள் இருந்தாலும் அவற்றை வாங்குவதற்கு மக்களிடம் பணம் இல்லை. யாழ்ப்பாண நிலைமை இப்படியானால் வன்னி நிலைமை

www.tamilarangam.net

எப்படிருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ள முடியும். இன்னொரு ஆய்வின் பிரகாரம் யாழ்ப்பாண மக்களில் 67% ஆனோர் போசாக்கின்றிக் காணப்படுகின்றனர். வன்னிப் பகுதியிலுள்ள பிள்ளைகள் போசாக்கின்மையால் மயங்கி விழுகின்றார்கள் என்பதை அறிந்து வேதனைப்படுகின்றோம்.

ஆகவே வெளிநாடுகளில் உள்ள புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் நிதி சேகரித்து அகில இலங்கை இந்து மாமன்றம், ராமகிருஷ்ண மிஷன், கம்பன் கழகம், மற்றும் விவேகானந்த சபைபோன்ற ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு வன்னித் தமிழ் மக்களின் பட்டினியை போக்க முன்வர வேண்டும்.

இலங்கையிலுள்ள இந்து ஸ்தாபனங்கள் தங்களது ஆற்றலுக்கேற்ப இந்தியாவிலுள்ள இந்து ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு வன்னி மக்களைக் காப்பாற்ற முயலுதல் வேண்டும். காஞ்சி காமகோடி பீடாதிபதிக்கு இது தொடர்பான வேண்டுதலொன்றினை விடுக்க முடியும். விஸ்வ ஹிந்து பிரிஷத்திடமும் வன்னி மக்களை காப்பாற்றுமாறு கேட்க முடியும். இராமகிருஷ்ண மிஷன் தங்கள் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அவர்கள் மூலம் நிதி திரட்டுவதற்கு ஏற்பாடு செய்வது நன்று இவற்றுக்குத் தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் முட்டுக்கட்டைகள் போடாதிருந்தால் அதுவே எமக்கு செய்யும் பெரிய உதவியாகவிருக்கும் உதாரணமாக அடிக்கடி கொழும்புக்கு வந்து அரசியல் உரை நிகழ்த்தும் ராம் அவர்கள் மனிதாபிமான தோரணையில் அல்லது மனித நேயத்தின் பேரில் வன்னி மக்களின் அவல நிலைக்கு அனுதாபமாகத் தமது பத்திரிகையில் ஒரு வரி கூட எழுதவில்லை. கொழும்பில் இயங்கும் தமிழ்ப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் யாவும் இது தொடர்பாக அதிக அக்கறை கொள்வது வரவேற்கத்தக்கதாகும். வடகீழ் பிராந்தியங்களின் பழைய மாணவர் சம்மேளனமும் அகில இலங்கை இந்து மாமன்றத்துக்கு நன்கொடை வழங்கியுள்ளது.

வெளிநாடுகளில் இயங்கும் தமிழ் குழுக்கள் இலங்கையில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பிரதேசத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைவரங்களை உலகுக்குத் தெரியப்படுத்துமாறு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி. ஜிம்மிகாட்டர், முன்னாள் ஐ.நா. செயலாளர் நாயகமாகிய பூட்ரஸ் காலி மற்றும் ஐ.நா. மனித உரிமை குழுவுக்குத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைமை வகிக்கும் செல்வி மேரி றொபின்சன் ஆகியோரைக் கேட்டுக் கொள்ள வேண்டும். இவர்களால் விடுக்கப்படும் அறிக்கைகள் உண்மையை பிரதிபலிக்கக்கூடியவை ஆகையால் இது அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஓர் விடயமாகும். தமிழ் நாட்டிலுள்ள அரசியல் தலைவர்களுக்கும் முக்கியமாக கலைஞர் மு.கருணாநிதி, செல்வி. ஜெயலலிதா, ராமதாஸ் வை.கோபால்சாமி மற்றும் நெடுமாறான் போன்ற தலைவர்களுக்கு வன்னிப் பஞ்சம் தொடர்பாக எடுத்துரைத்தல் வேண்டும்.

மகாத்மா காந்தி அவர்கள் 1927 ஆம் வருடத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த வேளையில், யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் இந்திய மக்களின் சுதந்திர தாகம் தொடர்பாக காந்தி அடிகள் சொற்பொழிவாற்றினார். அதனைக் கேட்டுத் தாங்கள் அணிந்திருந்த தங்க நகைகளைக் கழற்றிக் காந்தி அடிகளிடம் கையளித்த யாழ்ப்பாணத் தாய்க்குலம் இன்று வன்னியில் பஞ்சத்தால் வாடும் தமது உடன் பிறப்புக்களின் அவலம் தீர்க்க, அந்தளவுக்கு வீறு கொண்டு, எழாதது ஏன்? மருந்து வகைகள் இல்லாமையால் அனேகர் மரணமடைவதாக செய்திகள் வெளிவருகின்றன. எனவே, இந்தப் பிரச்சினையை விரைவில் சர்வதேச அரங்கிற்குக் கொண்டுவரும் முயற்சிகளை மேற்கொண்டால் மாத்திரமே விமோசனம் அடைய முடியும். வன்னியில் நிலவும் பஞ்சம் ஓர் இன ஒழிப்பு, மனித உரிமை மீறலாகவே கருதப்படுதல் வேண்டும். இது இயற்கைச் சீற்றங்களால் அல்லாமல் மனிதனாலேயே சிருஷ்டிக்கப்பட்ட பஞ்சமென்பதே எமது முடிவு.

ஆயிரக்கணக்காக அல்லது இலட்சக்கணக்காக மக்கள் மடிந்த பின்னரா உலகம் விழிக்கப் போகின்றது? வன்னித் தமிழர்களின் உயிர்களைக் காப்பாற்ற தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் எப்போது கைகொடுக்கப்போகிறார்கள்? எனவே அன்று சரஸ்வதி மண்டபத்தில் இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மானானந்தாஜி அவர்கள் கூறியதைத் திரும்பவும் நினைவு கூருதல் வேண்டும்.

''வன்னித் தமிழர்களுக்கு நாம் உதவி செய்யாது விடில் எங்களைச் சரித்திரம் மன்னிக்காது'' ஆகவே, திரும்பவும் அகில இலங்கை இந்து மாமன்றம், இராமகிருஷ்ண மிஷன், கம்பன் கழகம், விவேகானந்த சபை மற்றும் சைவ முன்னேற்றச் சங்கம், ஆகியவை ஒன்றிணைந்து சரஸ்வதி மண்டபத்திலேயே மாபெரும் கூட்டமொன்றை ஒழுங்கு செய்து இப்பிரச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சினையை மக்களுக்கு நன்கு எடுத்துரைத்து, அதற்குகந்த நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ளலாமெனவும் எவ்வகைகளிற் பெற்றுக் கொள்ளலாம் எனவும் சிந்தித்தல் வேண்டும். இவ்வாறான கூட்டமொன்றினை ஒழுங்கு செய்வதற்கு முன்னர் கூட்டம் தொடர்பாகப் பரவலான விளம்பரங்களை மேற்கொள்ள வேண்டியது முக்கியமானதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**18** 21-03-99

## அமெரிக்காவின் கழுகுப் பார்வையில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள்

அமெரிக்கா, ஒவ்வொரு நாடுகளிலும் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வருடாந்த அறிக்கை ஒன்றைப் பிரசுரிப்பது வழக்கம். 1998 ஆம் வருடத்துக்கான அதன் அறிக்கையில் இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்கு அதி முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்க அரசாங்கத்தின் கணிப்பைத் தெரிந்து கொள்வதற்கு முன்னர் சில விடயங்களை நாம் மனதிற் கொள்ளுதல் வேண்டும்.

அதாவது, அமெரிக்க அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் மிகவும் சிநேக பூர்வமான உறவுகளைக் கொண்டுள்ளன. அது மாத்திர மல்லாது விடுதலைப்புலிகள் இயக்கத்தினை அமெரிக்க அரசாங்கம் தடைசெய்துள்ளதையும் நாம் நினைவுகூருதல் வேண்டும். அமெரிக் காவில் விடுதலைப்புலிகளுக்காகவோ, அல்லது தமிழர்களின் நலன் கருதியோ, நிதி சேகரிப்பதற்கு அநேக இடையூறுகள் உண்டு. பொதுவாக அமெரிக்க அரசாங்கம் இலங்கைத் தமிழர்களைச் சந்தேகக் கண்கொண்டே பார்க்கின்றது. அதேவேளையில், இலங்கை அரசாங்கத்துக்கு நேரடி யாகவோ, அன்றேல் மறைமுகமாகவோ, அரசியல் மற்றும் இராணுவ உதவிகளையும் வழங்கிய வண்ணம் இருக்கின்றது என்று கூறப்படுகின் றது. இப் பின்னணியிலேயே, இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அமெரிக்க அரசாங்கம் தெரிவித்திருப்பவற்றை நோக்குதல் வேண்டும். 1998 ஆம் ஆண்டு வருடத்திற்கான பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையின் புள்ளி விபரங் களின்படி இலங்கை அரசாங்கம் ஒரு இலட்சத்து 65 ஆயிரம் பேரை ஆயுத பாணிகளாக வைத்திருப்பது தெரியவருகின்றது. இதனை விட, விடுதலைப்புலிகளுக்கெதிரான தமிழ் இயக்கங்களும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே இயங்கிவருவதாகவும் கூறப்பட்டுள்ளது. இராணு வத்தினரில் சிலர் மிக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள் ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சமயத்தில் இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஆங்கில தினசரியொன்று, அண்மையில் இந்த அறிக்கையிற் காணப்பட்ட விடுதலைப்புலிகளினால் மேற்கொளளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எடுத்துக்கூறியிருந்ததே தவிர, அரசாங்கத் தரப்பினால்

www.tamilarangam.net

மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஒரு வசனத்தையாயினும் குறிப்பிடவில்லை.

இந்த அறிக்கையில் அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ச்சி நடைபெறும் பிராந்தியங்களுக்கு வெளியே மனித உரிமை மீறல்கள் இடம் பெறவில்லையெனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதேவேளையில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இராணுவத்தினர் மிகப் பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தனரெனவும் இதிலிருந்து வட-கிழக்குப் பிராந்தியமான தமிழ்ப் பிரதேசத்தில் தான் இராணுவத்தினர் மிக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தனர் என்பதனை இலங்கை அரசாங்கத்தின் அதி முக்கிய நண்பனே குறிப்பிடுவதைக் காணலாம்.

இந்த அறிக்கையின்படி, இராணுவத்தினர் சட்டவிரோதமான முறையில் 33 கொலைகளைச் செய்ததாகவும், அதுவும் யுத்தத்தில் சிறைப் பிடிக்கப்பட்ட யுத்தக் கைதிகளே அவ்வாறு கொலை செய்யப்பட்டதாகவும், அறியக் கிடக்கின்றது. இராணுவ அரண்களுக்கு அருகிலிருந்த 25 பேரைக் காணவில்லையெனவும் அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சித்திரவதை பாரதூரமான ஒரு விடயமாக விளங்குவதாகவும், பெருந்தொகையான மக்கள் கைது செய்யப்படுவதும், தடுத்துவைக்கப்படுவதும் தொடர்வதாகவும் பாதுகாப்புப் படையினர் அவசரகாலச் சட்ட விதிகளை மீறுவதாகவும், குறிப்பிடப்பட்டுள்ளதோடு மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் பாதுகாப்புத் தரப்பினருக்கு எதிராக இது வரையில் ஒரு வழக்குத் தானும் தாக்கல் செய்யப்படவில்லையெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1996 மற்றும் 1997 ஆம் வருடங்களில் விடுதலைப் புலிகளெனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் இது தொடர்பாக பாதுகாப்புப் படையைச் சேர்ந்த எவரொருவராவது இன்னமும் கைது செய்யப்படவில்லையெனவும், ஒருசில விடயங்கள் தவிர்ந்த ஏனைய அநேக விடயங்களில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட பாதுகாப்புபடையினர் மீது அரசாங்கம் விசாரணைகளையோ வழக்குகளையோ நடத்தவில்லையெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## படையினரால் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் புலிகள் அல்ல. ஆனால், அவ்வாறு முத்திரை குத்தப்பட்டுள்ளது

இதிலிருந்து நாம் அறிந்து கொள்ளக்கூடிய தென்னவென்றால், மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் படையினர் அரசாங்கம் தமக் கெதிராக எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்காது என்ற துணிவில் தொடர்ந்தும் அவ்வாறான மனித உரிமை மீறல்களில் ஈடுபடலாம் என்பதேயாகும். இது எமது கருத்தல்ல. அமெரிக்க அரசாங்கத்தின் அறிக்கையின் கணிப்பு. அரசாங்கம் மக்களின் அந்தரங்க உரிமைகளுக்கு எதிராக செயற்படுகின்றது. பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்து கின்றது. யுத்தச் செய்திகளைப் பிரசுரிப்பதற்கு உள்நாட்டுப் பத்திரிகைக ளுக்குத் தணிக்கை விதிக்கின்றது. இராணுவ விடயங்கள் தொடர்பாக வெளிநாட்டுத் தொலைக்காட்சிகளுக்கும் தணிக்கை விதிக்கின்றது. அது மாத்திரமல்லாது சில சமயங்களில் பத்திரிகையாளர்களையும் கஷ்டத்துக்கு உள்ளாக்குகின்றது.

400 வரையான தமிழர்கள் கொலை செய்யப்பட்டு செம்மணிப் புதைகுழிகளிற் புதைக்கப்பட்டமை உலகறிந்த விடயம். ஆனால், இது தொடர்பான விசாரணைகளை அரசாங்கம் மந்த கதியிலேயே மேற் கொண்டு வருகின்றது. இந்த அறிக்கையின் பிரகாரம், தற்போது அரசாங் கத்துடன் இணைந்துள்ள முன்னைய தமிழ்க் கிளர்ச்சி இயக்கங்களும் சட்ட விரோதமான கொலைகளுக்குப் பொறுப்பானவர்கள் எனவும் ஆட்கள் காணாமற்போவதற்கும் சித்திரவதைகளுக்கும் தடுத்துவைப்புக்க ளுக்கும், மிரட்டல்களுக்கும் அவர்களும் காரணமாக இருப்பதோடு இளைஞர்களைக் கட்டாயப்படுத்தித் தமது இயக்கங்களில் சேர்த்துக் கொள்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் வவுனியாவிலும், கிழக்கிலங்கையிலும், நடைபெறுவதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளதோடு இவ்வாறான மனித உரிமை மீறல்களைத் தடை செய்வ தற்கு அரசாங்கம் எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வில்லையெனவும் அறிக்கையில் ஆணித்தரமாகக் குறிப்பி டப்பட்டுள்ளது.

இவ்வாறான கண்டனம், சிநேகபூர்வமான அரசாங்கமொன்றினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மனித உரிமைகளுக்கு மதிப்பு

கிழக்கிலங்கை, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் ஊர்காவற் படையினரும், பொலிஸாரும் இராணுவத்தினரும், சட்டவிரோதமான கொலைகளைச் செய்துள்ளனரெனவும் அனேகமாக அப்பாவிமக்களே பாதுகாப்புப் படையினரின் குண்டு வீச்சுக்களாலும் எறிகணைத்தாக்குதல்களாலும் பலியாகியுள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. செய்தி தணிக்கையாலும் வட-கிழக்குப் பிராந்தியங்களுக்குச் செல்வதற்கான அனுமதியில்லாததாலும் இவ்வாறான சட்டவிரோதமான கொலைகளின் உண்மையான புள்ளிவிபரங்களை அறிந்து கொள்ள முடியாதுள்ளதாகவும் அறிக்கை கூறுகின்றது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களுக்குப் பதிலடியாகப் பாதுகாப்புப் படையினர் அப்பாவி மக்களைச் சட்டவிரோதமாகக் கொலை செய்துள்ளனர். ஆயினும், பாதுகாப்புப்படையினரால் கொலை செய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகள் என முத்திரை குத்தப்பட்டுள்ளது. ஆனால், அவ்வாறு கொலை செய்யப்பட்டவர்கள் அப்பாவிப் பொதுமக்கள் என மனித உரிமைக்குழுக்கள் உறுதியாகக் கூறுகின்றன. இது தொடர்பாக 1998 பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதியன்று தம்பலகாமத்தில் நடைபெற்ற அப்பாவி மக்களின் படுகொலையைப் பற்றியும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1995 ஏப்ரல் மாதத்திலிருந்து பாதுகாப்புப் படையினரால் 740 மக்கள் சட்டவிரோதமாகக் கொலை செய்யப்பட்டனர். அல்லது பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு அதன் பின்னர் காணாமற் போயுள்ளனர். இது தொடர்பாக இது வரையில் 06 பாதுகாப்புப் படையினரே குற்றவாளிகளாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். குற்றம் புரிந்த ஏனையோரை அரசாங்கம் அடையாளம் காணவில்லை. அவர்கள் நீதிக்கு முன் நிறுத்தப்படவில்லை. இவ்விடயத்தில் இராணுவத்தலைமைத்துவம் தோல்வியையே தழுவிக் கொண்டது.

1998 ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி இலங்கை பூராகவும் அவசரகாலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் தொடர்பாக 48 மணித்தியாலங்களுக்குள் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அறியக் கொடுக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையைப் பாதுகாப்புப் படையினர் கடைப்பிடிக்கவில்லை. இவ்வாறு குற்றம் புரிந்தமைக்காகப் பாதுகாப்புப் படையினரைக் கைது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

செய்வதற்கான வசதிகள் இருந்தபோதிலும் இதுவரை ஒரு பாதுகாப்புப் படையினராவது தண்டிக்கப் படவில்லையென்றும் அந்த அறிக்கை கூறுகின்றது.

தென் இந்திய கிறிஸ்தவ திருச்சபையின் பாதிரியாரான வணக்கத்துக்குரிய இன்னாசி அருள் பாலன் 1997 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் இந்த அறிக்கை கூறுகின்றது. 1997 டிசம்பர் 12 ஆம் திகதியன்று களுத்துறைச் சிறைச்சாலையில் மூன்று தமிழ்க் கைதிகள் சிங்களக் கைதிகளாற் கொலை செய்யப்பட்டனர். அப்போது அங்கு கடமையிலிருந்த சிறைச்சாலை உத்தியோகத்தர்களோ கடமையிலிருந்த இராணுவத்தினரோ இத் தமிழ்க் கைதிகளைப் பாதுகாக்கத் தவறிவிட்டதாகவும் அவ்வறிக்கையிற் குறிப்பிடப்பட்டுள்ளது.

23 தமிழ் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டு, அவர்களது சடலங்கள் பொல்கொட வாவியில் மிதக்கவிடப்பட்டமை தொடர்பாக 1995 அக்டோபர் மாதத்தில் கைது செய்யப்பட்ட விசேட பொலிஸ் படையைச் சேர்ந்த 22 சந்தேக நபர்கள் 1996 பெப்ரவரி மாதம் பிணையில் விடப்பட்டு, அவர்களது கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். பின்னர் 1997 நவம்பர் மாதத்தில் அவர்களில் மூவர் மீது மாத்திரம் குற்றம் சாட்டப்பட்டது.

## காணாமல் போனோர்

வடக்கிலும் கிழக்கிலும் ஆட்கள் காணாமற் போவது தொடர்ந்த வண்ணமிருக்கின்றது. வவுனியாவிலும் கிழக்கிலும் இராணுவத்தின் பாதுகாப்பிலிருந்த 11 ஆட்கள் காணாமற்போயுள்ளனர். 1996 ஆம் வருடத்தில் யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிய சமயத்தில் அநேகர் காணாமற் போய்விட்டனர். இவ்வாறு ஆட்கள் காணாமற் போனமைக்குக் காரணமாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென இராணுவத்தளபதியும், பொலிஸ் மா அதிபரும் கூறியிருந்த போதிலும் இது தொடர்பாக இதுவரையில் பாதுகாப்புப்படையைச் சேர்ந்த ஒருவருக்கெதிராகவாவது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

www.tamilarangam.net

### சித்திரவதை

சித்திரவதையை ஒரு குற்றமாக 1997 நவம்பர் மாதம் 25 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அப்படியிருந்த போதும் பாதுகாப்புப் படையினர் சித்திரவதைகளிலும் மக்களைத் கீழ்த்தரமான வகையில் நடாத்துவதிலும் ஈடுபட்டு வருகின்றனர். சித்திரவதைகளில் ஈடுபட்ட இராணுவத்தினர் அல்லது பொலிஸார் மீது அரசாங்கம் இதுவரையில் எவ்விதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதிகமாக சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டவர்கள் தமிழர்கள். இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள் அதிகமாக இருந்த போதிலும், யாழ்ப்பாணத்தில் சற்றுக் குறைந்திருப்பதாக மனித உரிமைக் குழுக்கள் தெரிவித்துள்ளன. சித்திரவதைகள் பொதுவாக மின்சாரம் பாய்ச்சுதல், அடித்தல், நெருப்பாற் சுடுதல் மற்றும் நீரினுள் அமுக்குதல் போன்ற வழிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் மூலம் கைதிகள் எலும்பு முறிவுகளுக்கும் பாரதூரமான காயங்களுக்கும் ஆளாகியுள்ளனரென இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறான சித்திரவதைகளில் அரசாங்கத்துக்கு சார்பான தமிழ்க் குழுக்களும் ஈடுபட்டுள்ளன. ஆட்கள் காணாமற் போவதற்கும் அரசாங்கத்தை ஆதரிக்கும் குழுக்கள் உடந்தையாக உள்ளதாகவும், முக்கியமாகப் புளொட் இயக்கமே இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதாகவும் அறிக்கை கூறுகின்றது. இதனை தடுப்பதற்கு அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

அரசாங்கம் அவசரகாலச்சட்டத்தின் கீழ் 1600 ஆட்களைத் தடுத்து வைத்துள்ளது. மேலும் 300 ஆட்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் அநேக தமிழர்கள் நான்கு வருடங்களுக்கும் மேலாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அநேகமான தமிழ் இளைஞர்கள் வலுக்கட்டாயமாக அரசாங்கத்துக்குச் சார்பான குழுக்களுக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியக்கிடைத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வன்னியின் உணவு விடயம்

வன்னி மாவட்டத்தில் உலர் உணவு பெற்றுக் கொள்வதற்கு உரித்துள்ள 317,000 ஆட்களைக் கடந்த ஜூலை மாதத்தில் அரசாங்கம் 190,000 ஆட்களாகக் குறைத்தது. இதனால் பெரும் பாதிப்பேற்பட்டது. இதன் மூலம் அரசாங்கம் மாதமொன்றுக்கு அங்கு அனுப்பிவைத்த 3000



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொன் உலர் உணவை 1500 தொன்களாகக் குறைத்தது. நிதி போதாமையே இதற்கான காரணமெனவும் அரசாங்கம் கூறியது. அதன் பின்னர் அரசாங்கம் வன்னிப் பிரதேசத்தில் அதிகளவு உணவுப் பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுவதனால், அங்கு உலர் உணவு அனுப்பப்பட வேண்டிய அவசியமில்லை யெனவும் கூறியது. உணவுப்பண்டம் தொடர்பான அரசாங்கத்தின் இந்த முடிவு அம்மக்களைக் கடுமையாகப் பாதித்துவிட்டது.

மக்களிடம் பணமின்மையால் அவர்களால் உணவுப்பண்டங்களை வாங்க முடியாமலுள்ளதாக மனித உரிமைக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் எதிர்வாதம் புரிந்தனர். வன்னிப் பிரதேசத்துக்கு மருந்து வகைகளை அனுப்புவதற்கும் அரசாங்கம் கடுமையான தடைகளை விதித்தது. இதன் பலனாக மிகக் குறைந்தளவு மருந்துப் பொருட்களே வன்னிக்கு அனுப்பப் பட்டது. இதனால் அப்பாவி மக்கள் மிகவும் கஷ்டங்களை எதிர்நோக்கினர். மேலும் அரசாங்கம் சீமெந்து, பற்றறி ஆகியவற்றை வன்னிப் பிரதேசத்திற்குக் கொண்டு செல்வதற்கும் தடை விதித்தமையால், அரச சார்பற்ற நிறுவனங்கள் நிவாரண உதவிகளை வழங்க முடியாமலிருந்த தாவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கையர் எவரும் இலங்கையின் எப்பிரதேசத்துக்கும் செல்ல முடியுமென அரசியல் யாப்பில் உள்ளபோதிலும் இந்த யுத்தத்தின் காரணமாகத் தமிழ் இளைஞர்கள் தலைநகரான கொழும்புக்கு வருவது மிகவும் கஷ்டமான காரியமாகிவிட்டது. கொழும்பில் தமிழ் இளைஞர்கள் இரவில் நடமாடுவது அதனை விடக் கஷ்டமாகவிருந்தது.

மேற்குறிப்பிட்டவையாவும் எமது கருத்துக்கள் அல்ல. அமெரிக்க இராஜாங்க திணைக்களம் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வெளியிட்ட வருடாந்த அறிக்கையே.

சிநேகபூர்வமான அரசாங்கமொன்று இவ்வாறு அறிக்கை வெளியிட்டிருக்கையில், இங்குள்ள உண்மையான நிலை எப்படி இருக்கும் என்பதை வாசகர்கள் ஊகித்துக் கொள்ளலாம். வன்னியின் உணவு நிலை பற்றி இவ்வறிக்கையிற் கடுமையாக விமர்சிக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையை அண்டை நாடுகளான இந்தியாவும் பாகிஸ்தானும் நன்கு வாசிப்பார்களென எதிர்பார்க்கலாம்.

www.tamilarangam.net

முக்கியமாக தமிழ் நாட்டிலுள்ள ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகளும் கவனத்திற்கெடுக்குமென எதிர்பார்க்க முடியும்.

இதன் மூலம் அவர்களது மனமாற்றத்தையும் எதிர்பார்க்கமுடியும். ஏனெனில் தமிழ் நாட்டில் குறிப்பிட்ட ஒரு சில இனத்தவர்களுக்குச் சொந்தமான பத்திரிகைகளுக்கு இலங்கைத் தமிழர்களின் அவலங்கள் தொடர்பான சிந்தனையோ அனுதாபமோ இருப்பதாகத் தெரியவில்லை. வ்ன்னியில் ஒரு லட்சம் வரையிலான மக்கள் பட்டினியால் மரணமடைந்த பின்னராவது அவர்களுக்கு மனச்சாட்சி உறுத்தலாம்.

இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அமெரிக்க அரசாங்கத்தின் கணிப்பை அறிந்த பின்னராவது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தொடரில் இந்த அறிக்கையிலுள்ள விடயங்களை ஆதாரங்காட்டி இலங்கை அரசாங்கத்துக்குக் கடுமையான அழுத்தம் கொடுப்பார்களா? இந்த விடயத்தில் இந்தியா நடுநிலைமை வகிக்க முடியுமா? அமெரிக்க அரசாங்கத்தின் இந்த அறிக்கையைப் பார்த்து உலக வங்கியின் அனுசரணையுடன் மேற்கத்தைய நாடுகளும் இந்தியா, ஜப்பான் முதலிய நாடுகளும் இலங்கைக்குக் கடன் கொடுப்பதற்கு ஆர்வம் காட்டுவார்களா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 19

04-04-99

## மேற்குலகின் பார்வையில் கொசோவாவும் இலங்கையும்

இலங்கையில் 17 வருடங்களாக தமிழர்களுக்கெதிராக நடைபெற்றுவரும் யுத்தம் தொடர்பாக சர்வதேச அரங்கு நன்கு தெரிந்துள்ளபோதிலும் இந்த யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு எந்த ஒரு நாடாவது இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவில்லை. இது தொடர்பாக ஐ.நா. மனித உரிமைக்குழுக்கூட்டத்தில் வருடா வருடம் விவாதம் நடைபெறுவது வழக்கமாகிவிட்டபோதிலும் தீர்க்கமான முடிவெதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

1997 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைக்குழுக் கூட்டத்தொடரில் 70 அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒரு மனதாக இலங்கை தமிழர்களுக்கெதிரான மனித உரிமை மீறல்களைப் பட்டியலிட்டுக் காட்டியதோடு, தமிழர் தம் தாயகமான வட-கீழ் பிராந்தியத்தை ஆக்கிரமித்துள்ள இராணுவம் அங்கிருந்து வெளியேற வேண்டுமெனவும் வட-கீழ்ப் பிராந்தியத்தில் அமுலிலுள்ள பொருளாதாரத்தடை நீக்கப்பட வேண்டுமெனவும், தமிழர்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை அவர்களிடமே விட்டு விடவேண்டுமெனவும், வலியுறுத்தும் தீர்மானத்தை முன் வைத்தனர். அதனைத் தொடர்ந்து மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பல மனித உரிமைக் குழுக்கள் இலங்கை அரசாங்கத்தை விடுதலைப் புலிகளுக்குமிடையே மத்தியஸ்தம் செய்வதற்குத் தாங்கள் தயாராக உள்ளதாக அநேக நாடுகளும், பல அரசாங்கங்களும், முக்கிய வெளிநாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களும் முன்வந்தனர். அவ்வாறான அழுத்தங்கள் யாவற்றையும் இலங்கை அரசாங்கம் நிராகரித்தது மாத்திரமல்லாது உதாசீனம் செய்தும் விட்டது.

இலங்கை சர்வதேச அரங்கில் அதி முக்கியத்துவம் பெறாத ஓர் சின்னஞ் சிறிய நாடாகும். அப்படியிருந்தபோதிலும் தமிழர்களுக்கெதிரான யுத்தத்தை நிறுத்த வேண்டுமெனவும் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அநேக நாடுகள் விடுத்த கோரிக்கையை இல்ங்கை அரசாங்கம் நிராகரித்தமைக்கான காரணம் என்ன?

உலகின் மிக முக்கிய வல்லரசுகளான அமெரிக்கா, சீனா, பிரித்தானியா போன்ற நாடுகள் தமிழர்களை ஒடுக்குவதற்காக நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ, இராணுவ உதவிகளை வழங்குவதே இதற்குப் பிரதான காரணமாகும். சீனா, பாகிஸ்தான், பிரித்தானியா மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளிலிருந்து இலங்கை இராணுவத் தளபாடங்களைப் பெற்றுக் கொள்கின்றது. பிரித்தானியா அதிலும் தொழிற்கட்சி அரசாங்கம் இலங்கை இராணுவத்துக்கு இராணுவத் தளபாடங்களை ஏற்றுவதற்கான 67 இராணுவ ஒப்பந்தங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இவை யாவும் இலங்கை அரசாங்கம் மாலை தீவு மக்களுக்கு எதிராகப் பிரயோகிப்பதற்கோ, அல்லது இந்தியா மீது படையெடுப்பதற்காகவோ வழங்கப்படவில்லை. தனது சொந்த நாட்டு மக்களாகிய இலங்கைத் தமிழர்களைக் கொன்று குவிப்பதற்காகவே இவை வழங்கப்படுகின்றன.

இரசாயனக் குண்டுகளை உற்பத்தி செய்யவோ, வைத்திருக்கவோ, கூடாதென ஈராக் மீது அமெரிக்காவும், பிரித்தானியாவும், இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டன. ஆனால், மேற்குறிப்பிட்ட இலங்கைக்கான 67 இராணுவ ஒப்பந்தங்களில் இரசாயனம் சம்பந்தமான தளபாடங்களும் சித்திரவதை செய்யும் உபகரணங்களும் அடங்கியுள்ளன. இதுதான் பிரித்தானிய தொழிற்கட்சி அரசாங்கத்தின் நிலைப்பாடு.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பிரித்தானியாவைச் சேர்ந்த ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினருக்கு இது தொடர்பாக நாம் கூறியபோது அவர் அதிர்ச்சியடைந்தார்.

கொசோவோ சேர்பியாவின் ஒரு மாகாணமாகவே இருக்கின்றது. ஆனால், இலங்கையில் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் வேந்தனாகிய இராவணன் காலம் தொட்டு 1621 ஆம் ஆண்டு வரை தமிழர்கள் சுதந்திரமாக ஆட்சி புரிந்தனர் என்பது சரித்திர வரலாறு. சிங்களப் பேரினவாதத்தால் இதனை மறுக்கவோ அன்றேல் மறைக்கவோ முடியாது. ஆனால், கொசோவோவில் அல்பேனிய இனத்தைச் சார்ந்தவர்கள் 5000 ஆண்டுகளுக்கு மேல் தனி இறைமையோடு சுதந்திரமாக வாழ்ந்தார்கள் என்பதற்கான சரித்திர சான்றுகள் இல்லை.

www.tamilarangam.net

துருக்கிய சாம்ராஜ்யத்தின் கீழ் கொசோவிய அல்பேனிய இனத்தைச் சார்ந்தவர்கள் இல்லாமிய சமயத்தைத் தழுவினர். இவ்வாறு சரித்திரங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதில் பலனெதுவுமில்லை. ஆண்ட பரம்பரை ஆள நினைப்பதில் என்ன தவறு? எங்கள் மண்ணைக் காப்போமென்று ஆயுதமேந்திப் போராடுகிறார்கள் விடுதலைப்புலிகள். அதுபோலவே, கொசோவோ மாகாணத்தில் அல்பேனிய மக்களைக் காப்பாற்றுவதற்காகவும், அவர்களது சுய உரிமையைக் கோரியும், அவர்களைச் சேர்பியர்களின் இன ஒழிப்பு நடவடிக்கைகளிலிருந்து காப்பாற்றுவதற்காகவும் அவர்கள் ஆயுதமேந்தி சேர்பியர்களுக்கெதிராக யுத்தஞ் செய்கின்றனர். இலங்கையில் நடைபெறும் தமிழர்களுக்கெதிரான மனித சுத்திகரிப்புகளையும், இன ஒழிப்புகளையும், மனித உரிமை மீறல்களையும், பல்வேறு கோணங்களிலுமிருந்து பார்த்தாலும் 17 வருடங்களாக இது மிகவும் பயங்கரமான தோற்றத்தையே காட்டுகின்றது. கொசோவோவுடன் ஒப்பிடுகையில், இங்கு நடப்பவை மிகவும், பாரதுரமான விடயங்களாகும்.

வன்னி மக்களுக்கு உணவு அனுப்பாமையும் யாழ். குடாநாட்டின் ஒரு பகுதியான காங்கேசன்துறை, பலாலி மண்ணை அபகரிப்பதும் மனித ஒழிப்பின் ஒரு மறை முக நடவடிக்கையே ஆகும்.

இவ்விடயம் தொடர்பாக உலகப் புகழ்பெற்ற முன்னாள் அமெரிக்க இராஜாங்க அமைச்சரான ஹென்றி கிஸீங்கர், கொசோவோவைவிட இலங்கை போன்ற நோடுகளில் தான் மனித ஒழிப்பு நடவடிக்கைகள் அதிகமாகவும், பயங்கரமாகவும், நடைபெறுவதாகக்கூறியிருந்தார். அது மாத்திரமல்ல அவர் இன்னொரு பெரிய கேள்வியையும் எழுப்பியிருந்தார். அதாவது, அல்பேனிய இனத்தைச் சார்ந்த கொசோவோ மக்களை காப்பாற்றுவதற்காக சேர்பியர் மீது இராணுவத் தாக்குதலை மேற்கொண்ட மேற்குலகம், இலங்கையில் தமிழர்களுக்கெதிராக நடத்தப்படும் இனப்படுகொலைகளுக்காக இலங்கை மீது எதற்காக நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் கேட்டுவிட்டார். இரண்டாவது உலக மகாயுத்தத்துக்குப் பின்னர் உலகப் பிரசித்தி பெற்ற ஹென்றி கிஸீங்கரின் இந்த நிலைப்பாடு, இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சின் பிரசங்கங்களுக்கு ஓர் பேரிடியாக அமைந்து விட்டது. கண்களை மூடிக் கொண்டு பால் குடித்தால், அது உலகுக்குத் தெரிவதில்லை என்பது பூனையின் எண்ணம். ஆனால், இலங்கையில் நடைபெறும் தமிழர்களுக்கெதிரான இனச்சுத்திகரிப்பை உலகம் நன்கு அறிந்து கொண்டுள்ளது.

www.tamilarangam.net

கொசோவோ மக்கள் மீது ஏவப்பட்ட சேர்பிய இராணுவத் தாக்குதல்களை நிறுத்தி, அம்மாகாணத்துக்குத் தேவையான சமாதானத் தீர்வொன்றினை ஏற்படுத்ததுவதற்கு முயன்ற அமெரிக்கா அம்முயற்சியில் தோல்வி கண்டது. அதன்பின்னரே அமெரிக்காவும் ஏனைய மேற்குலக நாடுகளும் சேர்பியா மீது விமானத் தாக்குதல்களை நடத்தின. யூகோசிலாவியத் தலைவர்களின் அழுங்குப்பிடியான கொள்கையே இவற்றுக்காரணமாகும். ஆனால், எந்தவொரு வல்லரசும் இலங்கை அரசியல் தலைவர்களுக்கு அரசியல் ரீதியான அல்லது பொருளாதார ரீதியிலான அழுத்தங்களைக் கொடுக்கவில்லை. அதனால்தான் இலங்கை அரசியல் தலைவர்கள் தமிழர்களுக்கெதிரான இராணுவ நடவடிக்கைகளில் முனைப்பாகவுள்ளனர்.

ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் ஏனைய நாடுகள் தலையிடலாகாதெனச் சிலர் வாதஞ் செய்யலாம். அப்படியானால், ஒரு நாட்டின் பேரினவாதம், அந்நாட்டுச் சிறுபான்மையினரைக் கொன்று குவிக்கும் போதும், சர்வதேச சமுதாயம் தலையிடாதிருக்கமுடியுமா? எனவே, ஒரு நாட்டில் இனச் சுத்திகரிப்பு, இன ஒழிப்பு நடைபெற்றால், சிறுபான்மையினரைக் காப்பாற்றுவதற்காக சர்வதேச சமுதாயம் அரசியல் மற்றும் இராணுவ ரீதியில் தலையிடலாம். அவ்வாறு செய்யாது விட்டால், அநேக நாடுகளில் சிறுபான்மையினரை இன ஒழிப்புச் செய்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும். எனவே, எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் சேர்பியா மீது விமானத்தாக்குதல் நடத்தியமை 100 வீதம் சரியானதென்பதே எமது கருத்தாகும். ஆனால், அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும், இவ்வாறானதொரு நடவடிக்கையை ஐ.நா. சபைக்கு அறியக்கொடுத்து அதன் பின்னர் மேற்கொண்டிருக்கலாம்.

ஐ.நா. பாதுகாப்புச்சபையில் ரஷ்யா மற்றும் சீனாவினுடைய ரத்து அதிகாரத்தினால் பாதிப்பு ஏற்படலாமென்ற பீதியினாலேயே மேற்குலகம் இவ்வாறு செய்திருக்கலாம்.

1933 இலிருந்து 1939 வரையிலான காலப்பகுதியில் ஜேர்மனியில் ஹிட்லரின் ஆட்சியில் சிறுபான்மையினரான யூதர்கள் கொன்று குவிக்கப்பட்டபோது மேற்குலகம் இந்தவகையில் தலையிட்டிருக்குமானால், இரண்டாம் உலக மகா யுத்தத்தைத் தவிர்த்திருக்கலாம்.

www.tamilarangam.net

அமெரிக்காவும் மேற்குலகமும் சேர்பியா மீது நடத்திய இராணுவத் தாக்குதலை ரஷ்யாவும் சீனாவும் கடுமையாக விமர்சித்திருந்தன. இந்தியாவும் இதற்கெதிராகக் கண்டனம் தெரிவித்திருந்தது. ரஷ்யா மேற்குலகை விமர்சித்தமைக்கான காரணம், சேர்பிய மக்களும் ரஷ்ய மக்களும் ஒரே இனச் சார்புள்ளவர்கள். அதாவது சிலாப் இனத்தைச் சேர்ந்தவர்கள். எனவே, தார்மிக முறையில் உதவி வழங்கவேண்டியது ரஷ்யர்களின் கடமையாகும். சீனா அரசியல் காரணங்களுக்காக அமெரிக்காவைக் கண்டனம் செய்தது.

இதிலிருந்து நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, சேர்பிய மக்கள் இராணுவ ரீதியில் சொசோவோவில் வாழும் அல்பீனிய மக்களைக் கொன்று குவித்திருந்தால் சீனா அதனைக் காணாதது போல் கண்களை மூடிக்கொண்டு இருந்திருக்கும். இலங்கையில் தமிழர்களைக் கொன்று குவிப்பதற்காக இலங்கை இராணுவத்துக்கு அதிகளவில் இராணுவ உதவிகளை வழங்கும் சீனாவின் செயற்பாட்டை நியாயப்படுத்த முடியாது.

இந்தியா, அமெரிக்காவையும் மேற்குலக நாடுகளையும் கண்டனம் செய்தாலும் ஐ.நா.சபையை உதாசீனம் செய்து நடவடிக்கை மேற் கொண்டமையே இந்தியாவின் கண்டிப்புக்கான பிரதான காரணமாகும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவின் நிலைப் பாடு என்ன என்பது இதுவரை தெளிவான முறையில் வெளிப்படுத்தப் படவில்லை.

கொசோவோ மக்களைக் காப்பாற்றுவதற்காக அமெரிக்காவும் மேற் குலகமும் சேர்பியாவில் விமானத்தாக்குதல் மேற்கொண்டமை எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் சரியானதே.

எனவே இலங்கையில் அதிகளவிலும் பாரதூரமானதாகவும் நடை பெறும் மனித இன ஒழிப்புக்காக இலங்கை போன்ற நாடுகளுக்கெதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஹென்றி கிஸிங்கர் கேட்பதை நாம் கேட்கவில்லை. அதற்கு பதிலாக இலங்கை அரசாங்கத்துக்கு இராஜதந்திர அழுத்தங்களை மேற்குலம் கொடுக்கமானால் அதுவே. போதும். விடுதலைப் புலிகளுடன் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு நம்பகரமான அரசியல் தீர்வொன்

www.tamilarangam.net

றுக்கு மேற்குலகம் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் இலங்கைக்கான இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை நிறுத்தினால், இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு அதிக வாய்ப்புகள் உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 20

11-04-99

## தமிழர்களுக்கு இனி போக்கிடம் ஏது?

இலங்கையில் தமிழ் வேந்தனாகிய இராவணன் காலந்தொட்டு சீரோடும் சிறப்போடும் இருந்து வந்த தமிழரின் அரசியல் மற்றும் கலாசாரத் தலைநகரான யாழ்ப்பாணம் கி.பி. 1621 ஆம் வருடத்தில் போர்த்துக்கேயரிடம் யுத்தத்தில் தோல்வி கண்டு தனது சுதந்திரத்தை இழந்தது.

அதன் பின்னர் ஒல்லாந்தரும், பிரித்தானியரும் ஆட்சி புரிந்த வேளையிலும் தமிழ் இராச்சியப் பகுதிகளின் பாரம்பரிய எல்லைகளை மாற்றம் செய்யாமலே அவர்களும் ஆட்சி புரிந்தனர். 1833 ஆம் வருடத்தில், ஹோல் புறூக்கமறனுடைய சிபார்சில், பரிபாலன நலன் கருதி இலங்கை முழுவதும் ஒரு ஆட்சி பீடமாக அமைக்கப்பட்டது.

பின்னர் இலங்கை சுதந்திரம் அடைந்ததும், கிழக்கு மாகாணத்தில், தமிழர்களும், முஸ்லிம்களும் வாழ்ந்த பிராந்தியங்களில் அரச செலவில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதுபோலவே வட மத்திய மாகாண பிரதேசங்களிலும், திருகோணமலை பிரதேசங்களிலும், அரச செலவில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பலனாக, அப்பிரதேசங்களில் மிக சொற்ப விகிதாசாரமாக விருந்த சிங்கள மக்கள் தற்பொழுது தமிழ், முஸ்லிம் மக்களின் விகிதாசாரத்துக்கு சமமாக பெருகிவிட்டனர். 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசியல் ரீதியாக தமிழர்கள் சிறுபான்மையினர் எனக் கருதப்படாமல் அவர்களும் பெரும்பான்மை இனத்தவர் எனக்கருதப்பட்ட காலமும் இருந்தது.

1915 ஆம் வருடத்தில் ஏற்பட்ட சிங்கள, முஸ்லிம் இனக்கலவரத்தில் பல சிங்கள தலைவர்கள் பிரித்தானிய ஆட்சியாளர்களால் இராணுவ சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டனர். அவர்களது உயிர்களுக்கும் ஆபத்து இருந்தமையால் சேர்.பொன்.இராமநாதன் இங்கிலாந்து சென்று சிறை வைக்கப்பட்ட சிங்கள தலைவர்களுக்காக குரல் கொடுத்து அவர்களின் விடுதலைக்கு வழி செய்தார். சிங்களத்தலைவர்கள் அதற்கான நன்றிக்கடனாக, இங்கிலாந்தில் இருந்து திரும்பிய சேர்.பொன்.இராமநாதனை கொழும்பு துறைமுகத்தில் இருந்து அவரது வீடுவரை குதிரை வண்டியில் வைத்துத் தாம் குதிரைகளாக மாறி இழுத்துச் சென்றனர். பாண்டியமன்னனைச் சோதிப்பதற்காக மாணிக்கவாசகர் வாங்கிய குதிரைகளை நரிகளாக்கினார் சிவபெருமான்.

www.tamilarangam.net

ஆனால் இலங்கையில் நன்றிக்கடனுக்காக மனிதர்கள் குதிரைகளாக மாறி செயல்பட்டமை இதுவே முதல் தடவையாகும். உலகில் வேறு எங்கும் இப்படி நடந்ததாக நாம் அறியவில்லை.

மேலும் சேர்.பொன். இராமநாதன் சிங்கள பௌத்தர்களுக்கு 'வெசாக்' தினத்தை ஓர் விடுமுறைத்தினமாகக் வேண்டி வாதாடி அதனையும் பெற்றுக் கொடுத்தார். சிங்கள விவசாயிகள் மீது மிகவும் அநியாய முறையில் பிரித்தானியர் தானியவரியை திணித்தபோது அதை எதிர்த்து சட்ட சபையில் வாதாடி வெற்றி கண்டார்.

சிங்கள பேரினவாதிகள் கொடுத்த வாக்குறுதிகளை மீறினபடியால் மிகவும் மனம் நொந்து சேர்.பொன்.இராமநாதன், தமிழர்களை சிங்களவர்கள் புறக்கணித்தால் நிச்சயமாகத் தமிழர்கள் பிரிவினை வாதத்துக்குத் தள்ளப்படுவார்கள் என அன்று முழங்கினார். இன்று நடப்பவற்றை நோக்கும்போது அவருடைய தீர்க்கதரிசனம் வெற்றி அடையப் போகினறது போல் தென்படுகின்றது.

1950 களிலிருந்து தமிழர்கள் சகல துறைகளிலும் புறக்கணிக்கப் பட்டு வருகின்றனர். முதலில் அவர்களின் காணிகள் சிங்களக் குடியேற்றங்களுக்காக பறிக்கப்பட்டன. உத்தியோக மற்றும் கல்வி வாய்ப்புகள் அற்றுப்போயின. இதனால் இன்று இலங்கையில் எந்தப்பகுதியிலும் தமிழர்கள் சுய மரியாதையுடன் வாழ முடியாத நிலை எழுந்து விட்டது.

இலட்சக்கணக்கான தமிழர்கள் தங்கள் வீடு வாசல்களை இழந்து நலன்புரி நிலையங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். அவர்களின் நிலை வன்னியில் மிக மிக மோசமாகவுள்ளது. சிங்கப்பூர் மற்றும் மேற்குலக நாடுகளில் ஆடு, மாடுகளுக்கு வழங்கப்படும் வசதிகள் கூட இலங்கையில் வன்னியில் உள்ள நலன்புரி நிலையங்களில் வாழும் தமிழர்களுக்கு கிடைப்பதில்லை. இதனை உலகம் அறிந்தும் அறியாதது போல் இருப்பது வேதனைக்குரியதாகும்.

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மீனவர்கள், அரை கிலோ மீற்றருக்கு அப்பால் சென்று மீன்பிடிப்பதற்கு தடை தமிழ்க் கட்சிகளோ இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டு தமது பாராளுமன்ற ஆசனங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக கண்டும் காணாதது போல் அமைதி காக்கின்றனர்.

www.tamilarangam.net

யாழ் குடாநாட்டில் தமிழர்களின் மண்ணாவது மிஞ்சும் என்று எண்ணிய காலம் ஒன்று இருந்தது. ஆனால் இன்று அதற்கும் ஆபத்து வந்து விட்டது, பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறை முகம் முதலிய இடங்களை விஸ்தரிப்பது என்ற போர்வையில் பல வருடங்களுக்கு முன்பு அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதாகவும் அதனை அமுலாக்குவதற்கு இன்றைய அரசாங்கம் முனைப்பாக உள்ள தாகவும் தெரிகிறது. ஆயினும் தமிழர்களின் எதிர்ப்பினால் இத்திட்டம் இடை நிறுத்தப்பட்டதாகவும் செய்திகள் வெளிவந்தன. இதற்கும் ஒரு சில தமிழ்க்கட்சிகள் தங்கள் எதிர்ப்புக்கு பலன் கிடைத்ததாக தம்பட்டம் அடிக்கின்றனர். ஆனால் உண்மை என்ன? தமிழ் மண்ணை அபகரித்து அங்கு சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு இது ஒரு மறைமுகமான 'சதி' என்ற முடிவுக்கே தமிழ் மக்கள் வரவேண்டியுள்ளது. இதேவேளையில் தமிழர்களை தென் இலங்கையில் குடியேற்றுவதற்காக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதா?

கிழக்கு மாகாணத்திலும், வட மத்திய மாகாணத்திலும், தமிழர்களை அப்புறப்படுத்தி அப்பிர தேசத்தில் அரச செலவில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இது அநேக வருடங்களாக நடைபெற்று வருகின்றது. இன்றும் நடைபெறுகின்றது. நாளையும் நடைபெறும். இதனை எதிர்ப்பதற்கு தமிழ் கட்சிகளிடம் நடைமுறைத்திட்டம் ஒன்றும் இல்லை. ஆயினும் அவர்கள் அரசாங்கத்துக்கு சாதகமாகவே பாராளு மன்றத்தில் வாக்கு அளிக்கின்றனர்.

1995 இல் இறுதிப்பகுதியில் விடுலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையால் யாழ் குடாவில் இருந்து ஐந்து லட்சம் மக்கள் வெளியேறியது உலகறிந்த உண்மை. 1996 இன் நடுப்பகுதியில் அநேக தமிழ்க் குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது வீடுகள் சேதமாக்கப்பட்டிருந்தும் கூட அங்கு குடியேறினர்.

ஆனால் காங்கேசன்துறை மற்றும் பலாலிப் பிரதேசங்களைச் சார்ந்த இடங்கள் அதி முக்கிய பாதுகாப்பு வலயம் எனக் கூறப்பட்டு ஆயிரமாயிரம் ஆண்டுகளாக பரம்பரையாக அப்பிரதேசங்களில் வாழ்ந்து வந்த மக்கள் அவர்களது சொந்தக்காணிகளில் குடி இருப்பதற்கு இதுவரை அனுமதிக்கப்படவில்லை.

www.tamilarangam.net

இவ்வாறான கொடூரமான தடைகளை எவ்வகையிலும் நியாயப் படுத்த முடியாது. பாதுகாப்பு மக்களுக்காகவா? அல்லது பாதுகாப்புக்காக மக்கள் சரணடைய வேண்டுமா? என்ற கேள்வி எழுகின்றது.

பலாலி விமான நிலையத்தைப் பார்த்தால் அதுவோர் மாட்டுக் கொட்டிலைப் போலவே காட்சியளிக்கின்றது. விமானம் மூலம் செல்லும் மக்களுக்கான அடிப்படை வசதிகள் கூட அங்கு சிறப்பாக இல்லை. விமான நிலையத்தை திருத்த வேண்டிய தேவை இருக்கின்ற போதிலும் அதைப் பற்றிச் சிந்திக்காது ஆயிரக்கணக்காக ஏக்கர்களை சுவீகரிக்க நினைப்பதன் உள்நோக்கம் வெளிப்படையாகத் தெரிகின்றது.

விடுதலைப்புலிகள் பலாலி விமானத்தளத்தைத் தாக்கலாம் என நினைத்து விமானத் தளத்தைச் சுற்றிவரவுள்ள காணிகளைச் சுவீகரிப்ப தானால், காலப்போக்கில் விடுதலைப் புலிகள் 15 அல்லது 20 மைல்–களுக்கு அப்பாலிருந்தே தாக்கக்கூடிய ஏவுகணைகளைப் பெற்று தள்ளாடி முகாமைத்தாக்கியது போல் தூர இருந்தே தாக்குவார்களேயாகில், அந்தளவு தூரத்திலுள்ள காணிகளைச் சுவீகரிக்க வேண்டும். அப்படியே படிப்படியாக வளர்ந்து, யாழ் குடாநாட்டுக் காணிகள் அனைத்தையும் முற்றாகச் சுவீகரிக்க வேண்டிய நிலை ஏற்படலாம். பாதுகாப்புக்கருதிய இக் கொள்கையை எப்படி நியாயப்படுத்த முடியும்? இந்தக் கொள் கையை அமுல் செய்தால் கீரிமலை நகுலேஸ்வரமும், மாவிட்டபுரம், கந்தசுவாமி கோவிலும், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் போன்ற கோவில்களும் இடிக்கப்பட வேண்டிய ஆபத்து ஏற்படலாம். 25 மைல் தூரம் வரை செல்லக்கூடிய எறிகணைகளை விடுதலைப் புலிகள் பெற்றுக் கொள்வார்களேயாகில் நல்லூர் கந்தனுக்குக் கூட முல்லைக் காட்டுக்குப் போக வேண்டிய நிலைதான் ஏற்படும். இதுவே இன்றைய யதார்த்த நிலை.

இப்படியானதொரு நிலை உலகில் வேறெங்கும் நடைபெற்றுள் ளதா? விடுதலைப் புலிகளைப் போல இங்கிலாந்தில் ஐ.ஆர்.ஏ. இயக் கமும் ஏவுகணைகளைப் பெற்றால், லண்டன் ஹீத்ரோவிமான நிலையம், கற்பிக் விமான நிலையம், மற்றும் மஞ்செஸ்டர் விமான நிலையங்களுக்கு அருகில் வாழும் மக்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக அப்புறப் படுத்தப்படுவார்களா? இவ்வாறு முட்டாள் தனமான செயற்பாடுகள் இலங்கையில் மட்டுந்தான் நடைபெறுகின்றன.

www.tamilarangam.net

இதே தோரணையில் கட்டுநாயக்கா விமான நிலையத்தின் பாது காப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பாடுமானால் நீர்கொழும்பு வாசிகளை அப்புறப்படுத்த முடியுமா? எனவே, சுருக்கமாகக் கூறுவதானால் இச்சு வீகரிப்பு நடவடிக்கைகள் யாவும் பாதுகாப்பு நலனுக்காகவல்ல, தமிழர் களின் தாயகமாகிய யாழ்ப்பாணத்தில் சிங்களக் குடியேற்றத்தை ஏற்ப டுத்த வேண்டுமென்ற ஒரே நோக்கமே இன்று தெல்லிப்பளைக்கு அப்பால் ஒரு தமிழ் மகனையும் காண முடியாது.

காரைநகர் கடற்படைத்தளம் உள்ள இடத்திலும் சிங்களக் குடி யேற்றம் ஏற்படுவது திண்ணம். இவையாவற்றையும் அலசி ஆராயும் போது, யாழ் குடாநாட்டில் உள்ள தமிழர்களின் தனிப்பட்ட சொத்துக்கள் யாவும் பறி முதல் செய்யப்படும். திருகோணமலை லிங்க நகர் விவகா ரமும் இந்த அடிப்படையில் தான் அமைந்துள்ளது. இவை யாவற்றையும் பார்க்கும் பொழுது இலங்கையில் தமிழர்கள் சுயமரியாதையுடன் வாழ முடியுமா? இதற்கு பதில் என்ன? நீதி மன்றத்துக்கு போகலாம் எனச் சிலர் கூறுகின்றனர். இதுவோர் அடிப்படை மனித உரிமை மீறல் என்று உயர் நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டும் என கூறுகின்றனர்.

ஒரு காலத்தில் ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், நவரட்ணராஜா, இரங்கநாதன், நடேசன் போன்ற சிறந்த பிரபல்யம் வாய்ந்த சட்டவல்லுநர்கள் தமிழர்கள் மத்தியில் இருந்தார்கள்.

இவர்கள் நீதிமன்றங்களை ஆட்டிப்படைத்த விதம் முழு உலகமும் அறிந்த ஒன்றே. ஆனால் துரதிருஷ்ட வசமாக இன்று அவர்களைப் போன்று வாதாடும் திறன்படைத்த சட்டவல்லுநர்கள் தமிழர்கள் மத்தியில் இல்லாதிருப்பது பெருங்குறை என்று கூறுவதைவிட தமிழர்கள் செய்த பாவம் என்றும் கூறலம்.

www.tamilarangam.net

# 21

25-04-99

## தென் ஆசியாவில் ஒரு கொசோவோ

சேர்பியாவில் கொசோவோ மாகாணத்தில் அல்பேனிய இனத்தைச் சேர்ந்தவர்கள் சிறுபான்மையினராவர். அவர்களிற் பெரும்பான்மை யானோர் இஸ்லாம் மதத்தைத் தழுவிவியவர்கள். யூகோஸ்லாவிய தேசம் சின்னாபின்னப்பட்டமையும் பொஸ்னியாவிலுள்ள முஸ்லிம் மக்களைச் சேர்பியர்கள் கடுமையாகத் தாக்கியமையும் கொசோவோ மக்களைப் பாதித்தது.

அதன் பயனாக அல்பேனிய இனத்தைச் சார்ந்த கொசோவோ மக்கள் சேர்பியாவிலிருந்து பிரிவினை வாதத்துக்கு வித்திட்டனர். அந்தப்பிரிவினை வாதத்தினை நடைமுறைப்படுத்துவதற்கென கொசோ வோ விடுதலை இராணுவம் (K.L.A.) என்ற பெயரில் கரந்தடிப்படை யொன்று உருவாகியது.

அவர்கள் சேர்பிய இராணுவத்துடன் மோதிக் கொண்டனர். சேர்பிய இராணுவம் மிகவும் வலிமையாக இருந்தமையால் அவர்களுக் குத் தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் கொசோவோ விடுதலை இராணு வம் இருந்தது.

அதனால் கொசோவோ மாகாணத்தில் வாழும் அல்பேனிய இனத் தைச் சார்ந்தவர்களுக்கு எதிராக இனப்படுகொலை, இனச்சுத்திகரிப்பு ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. அதனால் அவர்கள் அகதிகளாக அல்பேனியாவில் தஞ்சம் புகுந்தமை சோகம் நிறைந்தவோர் கதையாகும்.

கொசசோவோ விவகாரம் தொடர்பாக, அமெரிக்காவின் தலைமை யில் மேற்குல நாடுகளால் சமாதானத் தீர்வொன்று முன்வைக்கப்பட்டது. அந்தச் சமாதானத்தீர்வை யூகோஸ்லாவியத் தலைவரான மிலோசெவிக் நிராகரித்த விட்டார். நிராகரித்தது மாத்திரமல்லாது அல்பேனிய இனத் தைச் சார்ந்த கொசோவோ மக்கள் மீது இனப்படுகொலைகளும் இனச் சுத்திகரிப்புகளும் மிகமோசமான முறையில் தீவிரப்படுத்தப்பட்டது. இந்நடவடிக்கைகளைக் கடுமையாகக் கண்டித்த மேற்குலகம் முறையான எச்சரிக்கைகளைக் கொடுத்ததன் பின்னர் நேட்டோ அமைப்பின் மூலம் சேர்பியா மீது கடந்த மூன்று வாரங்களாக விமானத்தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இவ்விதமான தாக்குதலுக்கு ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன.

கொசோவோ விவகாரம், மேற்குலகின் பார்வையில் ஓர் சர்வதேசப் பிரச்சினையாகப் பரிணமித்துள்ளது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவது உலகமகாயுத்தம் சேர்பியாவில் தான் ஆரம்பமானது என்பதனை இத்தருணத்தில் நாம் நினைவுகூருதல் வேண்டும்.

அடுத்தபடியாக கொசோவோவிலுள்ள அல்பேனிய இனத்தைச் சார்ந்தவர்கள் இஸ்லாம் சமயத்தைச் சார்ந்தவர்களாகையால், அவர்களுக்கெதிராக இனப்படுகொலைகளையும், இனச் சுத்திகரிப்பையும், சேர்பியர்கள் மேற்கொண்டனர். இஸ்லாம் சமயத்தைச் சார்ந்தவர்களைக் கொன்று குவிப்பதை உலகிலுள்ள முஸ்லிம் சமுதாயம் பார்த்துக் கொண்டிருக்காது என அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும், அபிப்பிராயப்பட்டன. அடுத்ததாக, இந்த இன ஒழிப்பு நடவடிக்கையில் மிலோசெவிக் வெற்றியடைந்தால், அவரும் ஸ்லாவ் இனத்தைச் சார்ந்தவர், ரஷ்யர்களும் அதே இனத்தைச் சார்ந்தவர்கள். ஆகையால் கிழக்கு ஐரோப்பாவில் தேவையற்ற பிரச்சினைகள் தோன்றக்கூடுமென அமெரிக்கா எண்ணியிருக்கலாம். இவ்வழிகளால் இப்பிரச்சினை சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் பெற்றமையால் அமெரிக்காவும் மேற்குலகமும் சேர்பியா மீது விமானத்தாக்குதல்களை மேற்கொண்டன.

கொசோவோவில் நடைபெறும் இனப்படுகொலைகளையும் இனச் சுத்திகரிப்பையும் விடத் தென் ஆசியாவில் இலங்கையில் கடந்த 16 வருடங்களாக நடைபெற்றுவரும் இனப்படுகொலைகளும், இனச்சுத்திகரிப்பும், மிக மோசமானவை எனக் கூறலாம். ஏனெனில், 1983 லிருந்து 1998 வரையான காலவரையில் இலங்கையில் 75,000 க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. வட-கிழக்கு மாகாணங்களில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் காணாமற் போயுள்ளனர். யாழ் குடாநாட்டில் மட்டும் 90,000 க்கு மேற்பட்ட வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பிரதேசமான வட கீழ் மாகாணத்தில் 1600 க்கு மேற்பட்ட மத வழிபாட்டுத் தலங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. புனிதமும் புகழும் மிகுந்த திருக்கேதீஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், நகுலேஸ்வரம் மற்றும் சென்றபீட்டர் தேவாலயம் ஆகியவை கடுமையாகச் சேதப்படுத்தப்பட்டுள்ளன. ஹிட்லரின் ஆட்சியிற் கூட, இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது இங்கிலாந்தில்

www.tamilarangam.net

பாடசாலைகள் மீதும் மத வழிபாட்டுத் தலங்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்வது தவிர்க்கப்பட்டது.

*ஆனால் தமிழர் தம் தாயகத்தில் அநேக பாடசாலைகள் குண்டு வீச்சினால் சேதப்படுத்தப்பட்டுள்ளன.*

யாழ் குடாநாட்டில் மாத்திரம் 15 வீதத்திற்கு மேற்பட்ட பாடசாலைகள் சேதமாக்கப்பட்டுள்ளன. சிறியதோர் இடமான யாழ். குடாநாட்டில் செம்மணி மற்றும் துரையப்பா அரங்கு போன்ற இடங்களிலுள்ள புதைகுழிகளில் எமது பிள்ளைகளின் எலும்புக்கூடுகள் நிறைந்து காணபபடுகின்றன. அதேபோல் தோண்டப்படாத எத்தனை புதைகுழிகள் கிழக்கு மாகாணத்தில் உள்ளனவோ? தோண்டினால்தான் தெரியும்.

இவ்வாறான கொடூரமான நிகழ்வுகள் ஐ.நா. மனித உரிமைக் குழுவில் பல தடவைகள் எடுத்துரைக்கப்பட்டன. மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் பல ஐ.நா.மனித உரிமைக் கூட்டங்களில் புள்ளிவிபரத் தரவுகளுடன் எடுத்துரைத்தன. இவை யாவும் இலங்கை அரசாங்கத்தின் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை, இனச் சுத்திகரிப்புச் செயற்பாடுகளின் ஓர் அம்சமாகவே விளங்குகின்றன.

16 வருட இனப்படுகொலை, இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளினால் தமிழ் மக்கள் தங்கள் வீடு வாசல்களை இழந்து, தங்கள் பிள்ளைகளின் கல்வியை இழந்து வன்னிப் பிரதேசத்தில் அகதிகளாக ஆடு, மாடுகள் போல் கொட்டில்களில் வாழ்ந்து வருகின்றனர். கௌரவமாக வாழ்ந்த தமிழ் இனம், மேலும் இழப்பதற்கு எதுவும் இல்லாத நிலையில் இலட்சக்கணக்கில் வன்னியில் வாழ்ந்து வருகின்றனர். மரத்தால் வீழ்ந்தவனை மாடு மிதித்தது போல இந்த அப்பாவி அகதிகள் மீது இடையிடையே விமானத் தாக்கதல்களும் எறிகணைத்தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

கடல் கடந்து சென்றவர்களில் சிலர் கடலில் மூழ்கி கடலுக்கே பலியான சோகக்கதைகளும், தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சட்ட விரோதமாக வெளிநாடுகளுக்கு செல்வதற்காக கொள்கலன்களின் (Containers) உள்ளேயிருந்து பயணஞ் செய்து மூச்சுத்திணறி மரணத்தைத் தழுவிய நெஞ்சையுருக்கும் நிகழ்வுகளும் நாம் அறிந்தவையே. மேலும் அநேகர் ஆறு இலட்சத்துக்கு மேற்பட்டோர் பல வெளிநாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர்.

www.tamilarangam.net

1956 லிருந்து 1983 வரை தமிழர்களுக்கெதிராக இனக்கலவரங்கள் நடைபெற்ற போதிலும் 1983 லிருந்து இன்றுவரை நடைபெற்றுவரும் இன ஒழிப்புமுறை மிகக் கொடூரமானதாகும். இவை யாவற்றினதும் புள்ளிவிபரங்களை எடுத்து ஆய்வு செய்து பார்த்தால் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இனப்படுகொலைகளும், இனச் சுத்தகரிப்பும், கொசோவோவில் இதுவரை நடைபெற்ற சம்ப வங்களை விடப் பயங்கரமானதும் மோசமானதும் அதிகமானதும் என்றே கருதவேண்டும்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இரண்டு வருடங்களுக்கு முன்பே ஐ.நா. சபையில் 70 சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கை அரசாங் கத்தை வன்மையாக விமர்சித்திருந்தன.

இங்கு நடைபெறும் விடயங்கள் வெளியுலகுக்கு அதிகளவில் தெரியாதென இலங்கை அரசு நினைக்கலாம். உலகப் பிரசித்த பெற்ற முன்னாள் அமெரிக்க இராஜாங்க அமைச்சரான ஹென்றி கீஸிங்கர் அவர்கள் கொசோவோவை விட இலங்கையில் தமிழர்களுக்கெதிரான இனப்படுகொலைகளும், இனச்சுத்திகரிப்பும் அதிகமாக நடைபெறுவதாக அண்மையில் பகிரங்கமாகக் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக அமெரிக்க செனட்டர் ஒருவரும் அமெரிக்கப் பத்திரிகைகளும் கொசோவோவை விட இலங்கையில் அதிகளவில் மனித உரிமை மீறல்கள் இடம் பெறுவதாக கூறியிருந்தன.

கொசோவோ விவகாரம் தொடர்பாக இது வரை மௌனம் சாதித்த இலங்கை அரசு, பின்பு ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இது பற்றிய தீர்மானமொன்றில் இலங்கை இது தொடர்பாகக் கவலை தெரிவிப் பதாகக் குறிப்பிட்ட அதேவேளையில் விடுதலைப் புலிகளையும் விமர் சித்து வெளிவிவகார அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டது. முழுப்பூசினிக்காயை சோற்றில் மறைத்தது போல அந்த அறிக்கை அமைந்துவிட்டது. கொசோவோவை விட இலங்கையில்தான் 16

www.tamilarangam.net

வருடங்களாக இனப்படுகொலையும் இனச்சுத்திகரிப்பும் அதிகமாக நடைபெறுகின்றது என்பதை உலகம் நன்கு அறிந்து விட்ட பின்னர் கொசோவோ விடயத்தில் கவலைப்படுவது, ஆட்டுக்குட்டி நனைகின்ற, தென ஓநாய் அழுத கதையைத்தான் எமக்கு நினைவூட்டுகின்றது.

இலங்கையில் தமிழர்களுக்கெதிராக 1983 இலிருந்து நடைபெற்ற, நாளையும் நடைபெறப்போகும் இனப்படுகொலை, இனச்சுத்திகரிப்பு மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக புள்ளி விபரங்களுடனான ஆய்வொன்று ஒரு காலத்தில் வெளிவரத்தான் போகின்றது. அந்த ஆய்வானது பாரபட்சமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்டு உலகின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுதல் வேண்டும். அதன் மூலம் விடுதலைப் புலிகளினால் வேற்றினத்தவர் எத்தனை பேர் கொலை செய்யப் பட்டனர் என்பதும், இலங்கை அரசாங்க பாதுகாப்புப் படையினரால் எத்தனை அப்பாவித்தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டனர் என்பதும் ஒப்பு நோக்கப்படுதல் வேண்டும். அது மாத்திரமல்லாது அழிக்கப்பட்ட மற்றும் சேதமாக்கப்பட்ட மத ஸ்தாபனங்கள் எத்தனை? பாடசாலைகள் எத்தனை? என்ற தரவுகளும் இடம் பெறுதல் வேண்டும். இவ்வாறான அறிக்கையொன்று வெளி வரும்போது அது நிச்சயமாக உலக அங்கீகாரத்தைப் பெறுவது மட்டுமல்லாது இலங்கையில் அதிகளவில் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டவர் யார்? என்பதனை சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் அறிந்து கொள்ள முடியும். 1983 இலிருந்து இன்றுவரை தமிழ் மக்களுக்கு கெதிரான இனப்படுகொலை, இனச் சுத்திகரிப்பு மற்றும் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பாகவிருந்த அரசியல்வாதிகள், பாதுகாப்புப் படையினர் மற்றும் அரச அலுவலர்கள், அவர்கள் எந்த இனத்தைச் சார்ந்தவர்களாயினும், எந்த மதத்தைச் சார்ந்தவராயினும், அவர்களுக்கெதிராக உரோமாபுரியில் இயங்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு அழுத்தம் கொடுக்கப்படுதல் வேண்டும். தவறிழைத்தவர்கள் தண்டிக் கப்பட வேண்டும்.

உதாரணமாக வன்னிப்பிரதேச மக்களுக்கு உணவுப் பண்டங் களையும் மருந்து வகைகளையும் அனுப்பி வைக்கக்கூடாதெனத் தீர்மா னித்தமை, அல்லது அப்பண்டங்கள் அங்கு சென்றடைவதற்கு முட்டுக் கட்டையாகச் செயற்பட்டமை, ஆகியவையும் மனித உரிமை மீறல் எனக்கருதப்பட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தண்டனை

www.tamilarangam.net

வழங்கப்பட வேண்டும். அது போலவே, பாதுகாப்பைக் காரணம் காட்டி, தமிழ்ப்பிரதேசங்களில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களை அவர்தம் நிலங்களிலிருந்து விரட்டியமைக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் மீதும், அப்பாவித் தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள் ளப்பட்ட இனப்படுகொலை, இனச்சுத்திகரிப்பு மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ, பொறுப்பாக இருந்தவர்கள் மீதும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கு சர்வதேச சமுதாயம் இலங்கைக்கு இதுவரை கடுமையான அழுத்தம் கொடுக்கவில்லை. ஆனால் தற்போதைய கொசோவோ நிகழ்வு களைப் பார்க்குமிடத்து இலங்கை அரசாங்கத்துக்கும் அதிக அழுத்தங் களைக் கொடுப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. எனவே, இக்கொடூர யுத்தத்தை நிறுத்தி மனிதப்பண்பாடுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் நடக்குமாறு இலங்கை அரசாங்கத்தைச் சர்வதேச சமுதாயம் கேட்டுக் கொள்ளும் வகையில் அழுத்தங்கள் கொடுக்கப்படுதல் வேண்டும்.

யூகோஸ்லாவியாவில் கொசோவோவில் வாழும் அல்பேனிய இனத்தைச் சார்ந்தவர்களது இனப்படுகொலைக்குப் பொறுப்பாக விருந்த தலைவரான மிலோசெவிக் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கான வாய்ப்புண்டு. எனவே கொசோவோவை விட மோசமான இனப்படுகொலைகளையும், இனச்சுத்திகரிப்பையும் மனித உரிமை மீறல்களையும், இலங்கையில் மேற்கொள்வதற்குப் பொறுப்பாக இருந்தவர்கள் யார்? என்பதைக் கண்டுபிடித்து அவர்க ளுக்கு எதிராக அதே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியுமா? இது தான் இன்றைய பிரதான கேள்வி.

சர்வதேச சமுதாயத்தின் மனச்சாட்சியே இதற்கு வழி செய்ய வேண்டும். எனவே தமிழர்களுக்கெதிரான இவ்வாறான இனப்படு கொலைகளுக்கும், இனச் சுத்திகரிப்புக்கும், மனித உரிமை மீறல் களுக்கும், அரசனின் தண்டனை உடன் கிடைக்காவிட்டாலும் தெய் வத்தின் தண்டனை நிச்சயம் கிடைத்தே தீரும். இதற்கமையத்தான் நம் முன்னோர்கள் அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்று சொன்னார்கள்.

www.tamilarangam.net

 02-05-99

## தமிழர்களுக்கு விடுதலை விமோசனம் எப்போது?

தாங்கள் அடிமைகளாகத்தான் வாழ்கின்றனர் என்பது அனேக தமிழர்களுக்குத் தெரிவதில்லை. வட மாகாணத்திலுள்ள வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்கள் விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்டு விட்டதாகக் கூறப்படுகின்றது. இதுபோலவே கிழக்கு மாகாணத்திலும், இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள மாவட்டங்களிலுள்ள தமிழ் மக்களின் வாழ்க்கை எவ்விதம் நடைபெறுகின்றது என்பது உலக நாடுகளுக்குத் தெரியாது.

இது கொழும்பில் வதியும் தமிழ்ப் பிரமுகர்களுக்குத் தெரியாது. அது கொழும்பில் வதியும் தமிழ்ப் பிரமுகர்களுக்கும் தெரிவதில்லை. தமிழ்ப் பத்திரிகைகளைப் படிப்பதனையே விரும்புவதில்லை.

தமிழ்ப் பத்திரிகைகளைப் படிப்பதனையே தரக்குறைவாகக் கருதுபவர்கள் அவர்கள் வட-கிழக்கில் நடைபெறும் சம்பவங்களைக் கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகைகள் மூலமாகவே அவர்கள் அறிந்து கொள்கின்றனர். இந்த ஆங்கிலப் பத்திரிகைகள் வட-கிழக்கில் இடம் பெறும் சம்பவங்களைத் திரித்துக்கூறுவதோடு உண்மைக்குப் புறம்பானவற்றை எழுதுவதனையும் பழக்கமாக்கிக் கொண்டுள்ளன.

தமிழ் மக்களின் வாழ்க்கை அடிமைகளை விட மோசமானதாகவே உள்ளது. அடிமைகளுக்குக் கூட உண்ண உணவும் தங்குமிட வசதியும் வழங்கப்படுகின்றது. அநேக மாவட்டங்களை விடுவித்து விட்டதாகவும், அங்கெல்லாம் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்வதாகவும், அரசாங்கம் உலக அரங்கில் பிரசாரம் செய்து வருகின்றது. ஆனால் உண்மை நிலை இங்குள்ள தமிழ் மக்களுக்குத் தான் தெரியும்.

தமிழ் மக்களுக்கான உணவுக் கட்டுப்பாடு, பாதுகாப்புப் படையினரின் சோதனைச் சாவடிகள், அந்தச் சோதனைச் சாவடிகளில் சோதனை செய்யும் முறை உலகில் வேறெங்கும் இல்லாத வகையில் அமைந்துள்ளது. சில வருடங்களுக்கு முன்னர்,இலங்கையில் மனித உரிமை மீறல்கள் எவ்வண்ணம் நடைபெறுகின்றது என்பதனைக் கண்டறிந்து கொள்வதற்காக ஐ.நா. அதிகாரிகள் இங்கு வருகை தந்திருந்தனர் அத்தருணத்தில் மறைந்த ஆயர் அம்பலவாணர் மற்றும் சிங்களப்

www.tamilarangam.net

பிரமுகர்கள் முன்னிலையில் அரசாங்கம் தமிழ் மக்களை ஆடு,மாடுகள் போலக் கேவலமாகவும் கீழ்த்தரமாகவும் நடத்துவதனை மிகவும் ஆணித் தரமாகவும் அழுத்தமாகவும் எடுத்துக் கூறப்பட்டது.

சோதனைச் சாவடிகளில் வரிசை வரிசையாக மக்கள் வந்து தமது அடையாள அட்டைகளைக் காண்பித்தல் வேண்டும். முள்ளுக் கம்பியால் அடிக்கப்பட்டுள்ள வேலிகளின் ஓரமாகவே அப்பாவித்தமிழ் மக்கள் அச்சோதனைச் சாவடிகளில் செல்லவேண்டும் என நாம் கூறியதைக் கேட்ட அந்த ஐ.நா அதிகாரி அதிர்ச்சியடைந்தார்.

தமிழ்ப் பிராந்தியங்களில் இவை சாதாரணமான சம்பவங்களாகும். அந்த ஐ.நா அலுவலர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த வேளையில் சோதனைச் சாவடிகளின் நிலை தொடர்பாக இந்த விடயங்களை உன்னிப்பாகக் கவனித்துள்ளனர். அவ்வாறான வேலிகளை மூங்கில் கம்புகளினால் அல்லது கயிறுகளினால் அமைந்திருக்கலாம். அவ்வாறு செய்யாமல் அவற்றை முள்ளுக்கம்பிகளினால் அமைத்தமை, ஆடு, மாடுகள் போல் தமிழ் மக்களை இழிவுபடுத்தும் ஓர் செயலாகும்.

அச் செயற்பாட்டிலிருந்து தமிழ் மக்களை அடிமைகளைப் போல மிகவும் தரம் குறைந்த வகையில் நடத்துவது, உலகிலேயே தமிழர் தம் தாயகத்தில் மட்டுந்தான் நடைபெறுகின்றது. வேறு இடங்களில் குற்றவா ளிகள் சிறையிலிருந்து தப்பி ஓடாமல் இருக்க வேண்டும் என்பதற்காக முள்ளுக்கம்பிகளைப் போட்டிருக்கலாம்.

தமிழ் மக்களைத் தீண்டத்தகாத ஓர் சமுதாயமாகவே பாதுகாப் புத்துறையினர் கருதுகின்றனர். இவ்வாறான முள்ளுக்கம்பித் தடுப்புக் களையும், தமிழ் மக்களைக் கேவலப்படுத்தும் சோதனைச் சாவடி களையும், நேரிற் பார்க்கக்கிடைத்த துர்ப்பாக்கியசாலிகள் நாம். வயது வித்தியாசமின்றியும் ஆண், பெண் என்ற வித்தியாசமின்றியும் மேற் கொள்ளப்படும் அவமதிக்கும் இவ்வாறான செயல்கள் அந்த அப்பாவி மக்களின் மனோநிலையை எந்தளவுக்குப் பாதிக்கும் என்பதனை ஊகித்துக் கொள்ளலாம்.

அடிமைச் சின்னத்துக்கு இதுவோர் அறிகுறி.தமிழர் தம் தாயகத்தில் மாத்திரமல்லாது கொழும்புத் தலைநகரிலும் எந்தச் சமயத்திலும் எந்த நேரத்திலும் சுற்றி வளைப்புக்களும், தேடுதல்களும், சர்வ சாதாரண

www.tamilarangam.net

மாகிவிட்டது. உரோமாபுரியில் நிறுவனப்பட்டுள்ள சர்வதேச குற்றவியல் உடன்படிக்கையின் பிரகாரம் இச்செயல் தடை செய்யப்பட்டுள்ளது.

எந்த நேரத்திலும் இரவிலும் கூடத் தமிழர்கள் சுற்றி வளைக் கப்படுவது சகஜமாகிவிட்டது. இக்கொடூரமான செயல்கள் தமிழர்களின் அடிமை வாழ்வின் பிரதிபலிப்பா அல்லது தமிழ் மக்கள் ஏனைய சமூகத்தினரோடு சரிநிகராகச் சுதந்திரமாக வாழுவதனைப் பிரதிப லிக்கின்றதா? என்று கேள்வி எழும்புகின்றது.

தற்போதுள்ள இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் எந்தவொரு இலங்கைப் பிரஜையும் நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் போய்வர உரிமையுண்டு. இதுவோர் அடிப்படை உரிமையாகும். 1995 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணத்துக்கு 90 வயது நிரம்பிய ஓர் தாயோ தந்தையோ போவதற்குக்கூட அரசாங்கத்திடம் அனுமதி பெறவேண்டும். 90 வயதைக் கடந்தவர்களாலும் கூட அரச பாதுகாப்புப் படையினருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாமென்பது அவர்களது நம்பிக்கை.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டிலுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு வேண்டிய உணவு வகைகளையோ மருந்து வகைகளையோ சுதந்திரமாகக் கொண்டு செல்ல முடியாது. இவ்விதமான தடைகள் உலகில் வேறெங்கேனும் உண்டா? இவ்வாறான தடைகள் ஐ.நா. ஸ்தாபன மரபுகளுக்கு முரணானவை யாகும். உணவு வகைகளையோ, அன்றேல் மருந்து வகைகளையோ, யுத்தக் கருவிகளாகப் பயன்படுத்தக்கூடாதென்பது ஐ.நா.மரபாகும். ஆனால் இலங்கை அரசாங்கம் இவற்றை யுத்தக் கருவியாகவே பயன் படுத்தி வருகின்றது.

அண்மையில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் வவுனியா மாவட் டத்திலுள்ள 9 ஆம் கட்டைச் சந்தியில் துப்பாக்கிப் பிரயோகத்தால் காவல் துறையினர் சிலர் மரணமடைந்தனர். மன்னார் மாவட்டத்திலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பகுதிக்கு உயிலங் குளத்தின் ஊடாகவே ஆட்களும் பொருட்களும் போவதுண்டு. இத்துப் பாக்கிப் பிரயோகச் சம்பவத்தினால் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களிலிருந்து மக்களோ பொருட்களோ போக முடியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதுபோலவே இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத இடங்களிலிருந்தும் நோய் வாய்ப்பட்டவர்கள் கூட வரமுடியாதுள்ளது.

இதன் விளைவாக ஐந்து பேர் மரணம் அடைந்துள்ளனர். இவ்வாறான செயற்பாடுகள், உணவு வகைகளையோ, மருந்து வகைகளையோ இராணுவக் கருவியாகப் பயன்படுத்தலாகாது என்ற ஐ.நா. விதிமுறைகளுக்கு முரணானவையாகும். அப்பாவித் தமிழ் மக்கள் உணவு வகைகளையும், மருந்து வகைகளையும், அனுபவிப்பதற்கு இலங்கை அரசு தடையாக இருப்பது இனப்படுகொலையின் ஓர் அம்சமாகவே விளங்கு-கின்றது.

எஜமானொருவன் தனது அடிமைகளை எவ்விதம் நடத்துவானோ, அதுபோலவே இலங்கை அரசாங்கம் அப்பாவித் தமிழ் மக்களை நடத்துகின்றது. இந்த அடிமைச் சங்கிலி அறுக்கப்படுவது எப்போது என்பதுதான் இன்றைய கேள்வி. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றோம் என்று கூறும். தமிழ்க் கட்சிகளை நம்பியிருப்பது மடமைத்தனம். ஏனெனில் தமிழ் மக்களின் அடிமைச் சங்கிலியை அறுத்தெறிவதற்கு இவர்கள் இதுவரையில் ஏதாவது முயற்சி செய்தார்களா? அல்லது வன்னி மக்களின் துயர் துடைப்பதற்காயினும் குரல் கொடுத்தார்களா? *அல்லது தமிழர் தம் தாயகத்தில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் அவலங்களைப் போக்குவதற்கு என்ன முயற்சி செய்தார்கள்?*

யாழ்ப்பாணத்திற் செம்மணி, மற்றும் துரையப்பா அரங்கின் புதைகுழிகளில் இருக்கும் தமிழ்ப்பிள்ளைகளின் எலும்புக்கூடுகள் தொடர்பாக விசாரிப்பதற்காயினும் நடைமுறையில் ஏதும் முயற்சி செய்தார்களா? அதேபோல கிழக்கு மாகாணத்தில் எத்தனை ஆயிரக்கணக்கான பிள்ளைகளின் எலும்புக்கூடுகள் புதைகுழிகளில் இருக்கின்றனவோ தெரியாது. இது தொடர்பாகத் தமிழ்க் கட்சிகள் ஏன் செயலில் இறங்கவில்லை? பாரதியார் கூறியது போல் தமிழ்க் கட்சிகள் யாவும் வாய்ச் சொல்லில் தான் வீரர்களாக உள்ளன என்றுதான் சொல்ல வேண்டும்.

இவர்கள் தமிழ் மக்களின் அடிமைச் சங்கிலியை அறுப்பதற்கு எத்தனிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா? எனவே தமிழ் மக்களின் அடிமைச் சங்கிலியை அறுப்பதற்கு எங்களின் உடன் பிறப்புக்களான தமிழ் நாட்டு மக்களையே நம்பி வாழ வேண்டியுள்ளது.

www.tamilarangam.net

அண்மையில் மதுரையில் நடைபெற்ற கூட்டமொன்றில் இந்திய மத்திய அரசின் முன்னாள் வெளியுறவுச் செயலாளராகிய ஏ.பீ. வெங்கடேஸ்வரன் அவர்கள் தமிழ் நாட்டுத் தமிழ் மக்கள் ஈழத்தமிழ் மக்களின் அடிமைச் சங்கிலியை அறுப்பதற்கு உதவ வேண்டுமெனவும், அதற்கு உடனடியாகச் செயலில் இறங்க வேண்டுமெனவும் கடுமையாக வற்புறுத்தியிருந்தார். இவ்விடயம் தொடர்பாக மறைந்த திரு ராஜீவ்காந்தி அவர்களுக்குத்தான் வழங்கிய புத்திமதிகள் யாவற்றையும் அவர் நிராகரித்துவிட்டதனை விபரமாக எடுத்துரைத்தார்.

ஈழத் தமிழர்களாகிய நாங்கள் ஆறு கோடித் தமிழ் நாட்டு மக்களை மாத்திரம் நம்பியிருப்பது அவ்வளவு புத்திசாலித்தனமானதல்ல. தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெறும் இனப்படுகொலையால் உலகின் பல்வேறு பகுதிகளிலும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் பங்களிப்பு இவ்விடயத்தில் மிகவும் அத்தியாவசியமானதாகும். அமெரிக்காவின் தலைமையில் மேற்குலகம் கொசோவோ மாகாணத்தில் அல்பேனிய இனத்தைச் சார்ந்தவர்களை இனப்படுகொலையிலிருந்து பாதுகாப்பதற்காக சேர்பியா மீது கடுமையான விமானத்தாக்குதல்களை நடத்துகின்றன.

கொசோவோ பிரச்சினையை விட கடந்த 16 வருடங்களாக இலங்கையில் நடைபெற்றுவரும் இனச்சுத்திகரிப்பு, இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்களை, ஒவ்வொரு தமிழ் மகனும், மகளும் தமது திறமைக்கேற்ப, தாங்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அந்தந்த நாட்டு அரசாங்கங்களுக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும். இனப்படுகொலை, இனச்சுத்திகரிப்பு மற்றும் மனித உரிமை மீறல் விடயங்கள் தொடர்பாக மேற்குலக நாடுகளின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தவேண்டும்.

சேர்பியாவில் மிலோசெவிக் என்பவர் ஒருவரைத்தான் அவரை மேற்குலம் கடுமையாகக் கண்டிக்கின்றது. கொசோவோவின் அல்பேனிய இனத்தைச்சார்ந்த மக்களின் விடுதலை தொடர்பாக கொசோவோ விடுதலை இராணுவத்துக்கு (K.L.A.) அமெரிக்காவும், மேற்குலகமும் இரகசியமாக உதவி வருகின்றன. சேர்பியாவின் மனித இனப்படுகொலையால் அல்பேனிய இனத்தைச் சார்ந்த அகதிகளுக்கு மேற்குலகம் தகுந்த உதவிகளைச் செய்து வருகின்றது.

www.tamilarangam.net

இலங்கையில் இனப்படுகொலை, இனச்சுத்திகரிப்பு மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் அகதிகளாகிவிட்டனர். ஏனையோர் அகதிகள் போன்றே வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களது அடிமை வாழ்வையும் அகதி வாழ்வையும் அகற்ற மேற்குலகம் முக்கியமாக அமெரிக்கா நேசக்கரம் நீட்ட முன்வரவேண்டும். கொசோவோவின் அல்பேனிய இனத்தைச் சார்ந்தவர்களைத் துன்புறுத்தியமைக்காக, சேர்பியா மீது நடத்தப்படும் விமானத்தாக்குதலை நியாயப்படுத்தும் இங்கிலாந்தின் பிரதமர், இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்காமல், அதற்கு மாறாகத் தமிழர்களைக் கொன்று குவிப்பதற்கு யுத்த தளவாடங்களை அனுப்பி வைக்கின்றார். பிரித்தானிய அரசாங்கத்தின் இரட்டை வேடத்தை இங்கே நாம் காணலாம்.

ஈழத்தமிழ் மக்களின் அடிமைச்சங்கிலியை அறுப்பதற்கு வேறு நாடுகள் எமக்கு உதவ முன்வரும் என்பது பகற்கனவாகும். எனவே எமது புலம் பெயர்ந்த தமிழர்களும், தமது உடன் பிறப்புக்களான தமிழ் நாட்டு மக்களும் தான் எமது அடிமைச்சங்கிலியை அறுக்க முன்வர வேண்டும்.

www.tamilarangam.net

23

16-05-99

## இலங்கையில் சமாதானம் எட்டாக்கனி

இலங்கையில் 16 வருடங்களாக நடைபெற்று வரும் யுத்தத்தை உடனடியாக நிறுத்தி, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நீதியானதொரு அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென பல்வேறு உலக நாடுகள் குரல் கொடுத்து வருகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகத்தான் தாம் யுத்தம் செய்வ தாகவும், இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானது அல்லவெனவும், இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் பிரசாரங்களை வெளிநாட்டு அரசாங்கங்களோ, அன்றேல் வெளி நாடுகளில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களோ நம்பும் நிலையில் இல்லை.

இலங்கையில் வாழும் சுயமரியாதையுள்ள தமிழ் மக்களும், வெளி நாடுகளில் வதியும் இலங்கைத் தமிழ் மக்களும், சர்வதேச தமிழ்ச் சமுதாயமும் இலங்கை அரசாங்கத்தினால் நடத்தப்படும் யுத்தம், தமிழ் மக்களுக்கு எதிராகவும், தமிழ் மக்களை அழித்தொழிப்பதற்காகவுமே நடத்தப்படுகிறதெனக் கருதுகின்றனர்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தம் இதுவென அரசாங்கம் கூறும்போது, விடுதலைப் புலிகள் யாவரும் தமிழர்களே என்பதையும் நாம் மனதிற் கொள்ளவேண்டும். இந்த யுத்தத்தினால் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் சகல துறைகளிலும் பாதிக்கப்பட்டுத் தமிழ் மக்கள் அகதிகளாகவும், அநாதைகளாகவும், வாழ்ந்து வருவதனை உலக சமு தாயம் உணரத் தொடங்கி விட்டது. உலக அரங்கில் கொசோவோ விவகாரம் முக்கியத்துவம் பெற்றாலும், சிறிய தீவான இலங்கையில் நடைபெறும் பிரச்சினைகள், உலகப் பிரசித்தி பெற்ற ஹென்றி கீஸிங்கர் அவர்களின் கூற்றின் மூலம் உலக கவனத்தை ஈர்த்திருப்பது தெரிய வருகின்றது. இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் தமிழர் தம் தாயகமாகிய வட-கீழ் பிராந்தியங்களில் வாழும் தமிழ் மக்களே சகல துறைகளிலும் பாதிக்கப்பட்டார்கள். காலப் போக்கில் முஸ்லிம் மக்களும், சிங்கள மக்களும், கூட இந்த யுத்தத்தின் பாதிப்புக்கு ஆளாகிவிட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யுத்தம் ஆரம்பித்த காலத்திலிருந்து இன்று வரை, சமாதானம் வேண்டுமென்ற தமிழ் மக்களின் ஏகோபித்த குரல், விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு வெளிநாட்டு அரசாங்கங்கள் கொடுத்த அழுத்தங்கள், விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தைகளை நடத்தி, யுத்தத்தை நிறுத்தி, அரசியல் தீர்வொன்றுக்குவருமாறு இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஐ.நா. ஸ்தாபனத்தின் 70 அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை, இலங்கைத் தமிழ் மக்களுக்கெதிராக நடத்தப்படும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமென அண்டை நாடான தமிழ் நாட்டின் செல்வி ஜெயலலிதாவின் அ.இ.அ.தி.மு.க. உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் விடுத்த ஏகோபித்த வேண்டுகோள் யாவும் புறக்கணிக்கப்பட்டன, அலட்சியம் செய்யப்பட்டன. நிராகரிக்கப்பட்டன.

1994 ஆம் வருடத்தில் மக்கள் கூட்டணி அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்னர், தாங்கள் பதவிக்கு வந்தால் யுத்தம் உடனடியாக நிறுத்தப்படுமெனக் கூறப்பட்டது. ஆனால் இன்று ஐந்து வருடங்கள் ஆட்சி புரிந்த பின்னரும், தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் பாரிய அழிவுகள் ஏற்பட்ட பின்னரும் யுத்தம் நின்றபாடில்லை. தமிழ் மக்களுக்கு எதிரான இந்தக் கொடூர யுத்தம் மேலும் முனைப்பாக மிக மோசமான நிலைக்கு வந்து விட்டது.

சமாதானம் வேண்டுமென்ற சமாதான இயக்கங்கள் பல அண்மைக் காலங்களில் சிங்கள மக்கள் மத்தியில் தோன்றியுள்ளன. அதிகளவில் பௌத்த குருமார்களும், சிங்களக் கத்தோலிக்க மக்களும், சிங்களப் புத்திஜீவிகளும் இலங்கையில் சமாதானம் வேண்டுமென அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்து விட்டனர். இதன் மூலம், சிங்கள மக்கள், மத வேறுபாடுகளை மறந்து, யுத்தத்தை நிறுத்தி, தமிழ் மக்களுக்கு நீதியான அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதில் முனைப்பாக உள்ளனர் என்பதை அறியக்கூடியதாகவுள்ளது.

காலப்போக்கில் சிங்கள மக்களின் சமாதானத்துக்கான உணர்வலைகள் விசுவரூபம் எடுக்கும் என்பதில் ஐயம் இல்லை. இவர்கள் யாவரும் எழுப்பும் சமாதானக்குரல், அரசாங்கத்தினால் நிராகரிக்கப்படுவதனை எவ்வகையில் நியாயப்படுத்த முடியும்?

www.tamilarangam.net

மக்களின் சமாதான விருப்பை நிராகரிப்பதற்கு அரசாங்கம் எவ்வித காரணங்களைக் கூறினாலும், அல்லது எவ்வகையான பிரசாரங் களை மேற்கொண்டாலும், அவற்றை மக்கள் ஏற்றுக் கொள்ளப்போவ தில்லை.

1994 ஆம் வருடத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களின் போது மேன்மை தங்கிய சந்திரிக்கா அம்மை யார் சமாதானப் புறாவாகக் காட்சியளித்தமையாலும், உடனடியாகச் சமாதானத்தை கொண்டு வருவதாக வாக்குறுதி வழங்கியமையாலும், தமிழ்ப் பிரதேச வாக்காளர்களில் 80 வீதம் க்கு மேற்பட்டோர் அம்மை யாரின் கட்சிக்கே வாக்களித்ததை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

சமாதானத்துக்காக காத்திருந்த தமிழ் மக்கள் சமாதானக் காற்றைச் சுவாசிப்பதற்காக இந்த அம்மையார் மீது வைத்திருந்த நம்பிக்கையை அந்தத்தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தின. அம்மையார் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, நீதியான அரசியல் தீர்வொன்றைக் கண்டு, சமாதானத்தை மலரச் செய்வார் என்று தமிழ் மக்கள் கண்ட கனவுக்கு இன்று நடந்தது என்ன? சமாதானப் புறா என்ற காட்சி அழிந்து விட்டது. இன்று அகதிகளாகவும், அநாதைகளாகவும், மாறி விட்ட தமிழ்த் தாய்க் குலம் இன்று வடிக்கும் கண்ணீர் கூரியவாளுக்குச் சமன் என்பதை நாம் மறந்திடலாகாது.

அன்று கண்ணகிவிட்ட கண்ணீர், கூரியவாளுக்கும் அப்பாற் சென்று மதுரை மாநகர் சாம்பலாவதற்குக் காரணமாக விளங்கியது. இன்று அகதிமுகாம்களின் அவலங்களுக்கு முகங்கொடுக்கும் அப்பாவித் தமிழ்த் தாய்குக்குலத்தின் கண்ணீருக்கு அதிகவிலை கொடுக்கத்தான் வேண்டி வரும். அதுவும் வெகு விரைவில் நடைபெறலாம். இன்னும் எத்தனை நாட்களுக்குத் தான் எல்லோரையும் ஏமாற்ற முடியும்? அழிவு வரும்வரை அகந்தை தான் முன் நிற்கும் என்பார்கள். இன்று இலங்கை அரசாங்கத்துக்கும் அகந்தைதான் முன் நிற்பதனை காணுகின்றோம். இந்நிலை அதிக காலம் நீடிக்கப்போவதில்லை.

உலக வரலாற்றில் மக்களுக்கெதிரான கொடூர யுத்தமொன்று வியட்நாமில் தான் நடைபெற்றது. அங்கே ஒரு கட்டத்தில் 5-$^1/_2$ லட்சம் அமெரிக்க இராணுவமும் 15 லட்சம் தென் வியட்நாம் கூலிப்படைகளும்

www.tamilarangam.net

சேர்ந்து வியட்நாம் மக்களுக்கு எதிராக போர் தொடுத்த போதிலும், ஒரு சிறு தொகையினராக வியட்நாம் மக்கள் இராணுவம், அமெரிக்க இராணு வத்தை இராணுவ ரீதியில் புறமுதுகு காட்டி ஓடச் செய்தது. சரித்திரத் திலேயே இது தான் அமெரிக்க இராணுவத்திற்கான முதற்தோல்வியாகும்.

அணுக்குண்டுகளினாலோ, அன்றேல் ஜல வாயுக்குண்டுகளினா லோ மக்களின் சக்தியை எழுச்சியைத் தோற்கடித்து விட முடியாது, என்பதையே வியட்நாம் பாடம் புகட்டுகின்றது. இந்த உதாரணங்களை இலங்கை அரசாங்கம் மனதிற் கொள்ளாமல், சமாதானக் குரல்களை நிராகரித்து வருவது வருத்தத்துக்குரியவொரு விடயமாகும். அண்மை யில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளில் ஒரு வீதமாவது இந்த அரசாங்கத்துக்கு சாதகமாகப் பயன்படுத்தப்பட வில்லை என்பதனைப் புள்ளிவிபரங்களின் மூலம் அறிந்து கொள்ளலாம். ஒரு தமிழ் மகனாவது இந்த அரசாங்கத்துக்கு ஆதரவாகத் தேர்தல் பிரசாரம் செய்ய முன்வரவில்லை. இந்த அரசாங்கத்தோடு சேர்ந்து வாக்களிக்கும் தமிழ்க் கட்சிகள் கூட இந்த விடயத்தில் தமது மனச்சாட் சிக்கு விரோதமாக நடந்து கொள்ள விரும்பவில்லை.

அன்றைய வியட்நாம் யுத்தம் முடிவடைவதற்கு வியட்நாம் மக்க ளின் எழுச்சியும், அவர்களது நாட்டுப்பற்றும், தியாக சிந்தனையும் மாத்திரமல்லாது ''வியாட்நாமிய அப்பாவி மக்களை கொல்லாதே'' என அமெரிக்க அரசாங்கத்துக்கு எதிராக, அமெரிக்கப் பல்கலைக்கழக மாணவர்கள் எழுப்பிய கோஷங்களும் காரணமாகவிருந்தன. அதே போல ''அப்பாவித் தமிழ் மக்கள் மீது குண்டு போடாதே அப்பாவி தமிழ் மக்களுக்கான உணவு மற்றும் மருந்து வகைகள் மீது தடை போடாதே, அப்பாவி மக்கள் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தாதே'' என்ற கோஷங்கள் தென் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் ஐரோப்பிய நாடுகளிலும் மற்றும் கனடா, அவுஸ் திரேலியா முலிய நாடுகளிலிருந்தும் வெடித்தெழுவதற்கு அநேக வாய்ப்புக்கள் உண்டு. ஏற்கெனவே இந்திய மத்திய அரசாங்கத்தின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ஏ.பீ. வெங்கடேஸ்வரன் அவர்கள் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவாகத் தமிழ்நாட்டு மக்கள் செயலில் இறங்க வேண்டுமெனக் குரல் கொடுத்த தை இந்நேரத்தில் நினைவு கூருதல் வேண்டும்.

www.tamilarangam.net

இலங்கைத் தமிழ் மக்கள் அகதிகளாகவும் அநாதைகளாகவும் வாழ்ந்தாலும் வன்னியில் இன்னலுறும் தமிழ்த் தாய்க்குலத்தின் அவலக் குரல், தமிழ் நாட்டுத் தாய்க்குலத்துக்குத் தாக்கம் ஏற்படுத்தும் என்பதை தத்தான் ஏ.பீ. வெங்கடேஸ்வரன் அவர்கள் மறைமுகமாக வெளிப் படுத்தியுள்ளார். 61/2 கோடி தமிழ் நாட்டு மக்களும், சர்வதேச சமுதாயமும் இலங்கைத் தமிழ் மக்களின் அவலக் குரலுக்கு நிரந்தரமாகச் செவிசாய்க்காது இருப்பார்கள் என எண்ணக்கூடாது. ஏதாவதொரு நாள் அவர்களும் செயலில் இறங்குவார்கள் என எதிர் பார்க்கலாம்.

ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் எழுச்சிக்குரல் படிப்படியாக ஒலிக்கத் தொடங்கி விட்டது. அண்மையில் டென்மார்க் கிலும், இங்கிலாந்திலும், நடைபெற்ற எழுச்சிக் கூட்டங்களை உதார ணமாகக் கூறலாம். இங்கிலாந்தில் நடைபெற்ற எழுச்சிக்கூட்டத்தில் இலங்கைத் தமிழ் மக்கள் உட்பட 7000 தமிழ் மக்கள் ஒன்று கூடி இலங்கை அரசை கடுமையாக விமர்சித்திருந்தனர். இவ்வாறான எழுச் சிக்குரல்கள் தொடர்ச்சியாக ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் கனடா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் ஒலிக்க இடமுண்டு.

சென்ற மாவீரர் தினத்தன்று விடுதலைப் புலிகளின் தலைவரான பிரபாகரன், தனது மாவீரர் தினச்செய்தியில் இலங்கைத்தீவில் நடை பெறும் யுத்தத்தினையும், அதனால் ஏற்படும் பேரழிவுகளையும் நிறுத்து முகமாக சமாதானத் தீர்வொன்றுக்கான சமிக்ஞைகளை வெளிப்படுத் தினார். அத்தருணத்தில் விடுதலைப்புலிகளை ஆதரிக்காத பாராளுமன்றத் திலுள்ள தமிழ்க்கட்சிகளும், விடு தலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு சமரசத் தீர்வொன்றுக்கு வரவேண்டுமெனப் பல தடவை கள் அரசாங்கத்தைக் கோரியிருந்தன. இவ்வாறான சகல கோரிக்கை களையும் இலங்கை அரசு நிராகரித்துவிட்டது. இதனால் ஏற்படப்போகும் பேரழிவுக்கு சர்வதேச சமுதாயமோ, அன்றேல் சிங்கள மக்களோ, விடுதலைப் புலிகள் மீது பழி சுமத்த முடியாது. இன்று இலங்கையில் நடைபெறும் அரசியல் விடயங்களை நன்கு அவதானித்தால் ஹிட்லர், முசோலினி மற்றும் யூகோஸ்லாவியாவில் ஆட்சி புரியும் மிலோசெவிக் அவர்களுக்கும், இலங்கை ஆட்சியாளர்களுக்குமிடையில் வித்தியா சத்தைக் காண முடியாதுள்ளது. சர்வதேச அபிப்பிராயத்துக்கு இலங்கை அரசு அடி பணிய வேண்டிய காலம் வெகு தூரத்தில் இல்லை. 521 ஆண்டுகளுக்கு முன்பு சுவித்தித்த வேத முனி என்பவர், தமிழ் அரச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னாகிய பராஜசேகரன் முன்தோன்றி சில தீர்க்கதரிசனங்களைக் கூறியிருந்தார். அதாவது யாழ்ப்பாணத் தமிழ் இராச்சியம் விரைவில் அழியுமெனவும் அதன் பின்னர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரான்சுக்காரர் மற்றும் ஆங்கிலேயர்களின் ஆட்சி நடைபெறுமெனவும் அதனைத் தொடர்ந்து சிங்கள இராச்சியம் நடைபெறும் எனவும் ஈற்றில் வடக்கில் ஓர் தமிழ் இராச்சியம் உருவாகும் எனவும் கூறியிருந்தார். அதன் பின்னர் நடைபெற இருப்பதாக அவர் கூறியவற்றை எழுத விரும்பவில்லை.

இத்தீர்க்கதரிசனம் தொடர்பாக மேலும் அறிவதற்கு மதிப்புக்குரிய வாசகர்கள் விரும்பினால் முதலியார் இராசநாயகம் அவர்கள் எழுதிய ''பண்டைய யாழ்ப்பாண இராச்சியம்'' என்ற நூலின் 374 ஆம் பக்கத்தைப் பார்க்கவும். தீர்க்கதரிசனங்கள் யாவும் நிதர்சனமாகாதிருக்கலாம். ஆனால் இத்தீர்க்கதரிசனத்தில் அனேகமானவை நடை பெற்றுவிட்டன என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

www.tamilarangam.net

**24** 23-05-99

## இன அழிவிலிருந்து தம்மை காத்துக்கொள்ள பிரதேச வேறுபாடுகளை தமிழர்கள் மறக்க வேண்டும்

தமிழர் எனக் கூறும் போது அதற்கான வரைவிலக்கணத்தைக் கூறுவது அவசியம். வட-கீழ் பிராந்தியங்களில் அகதி முகாம்களுக்கு உள்ளேயும், வெளியேயும், அநாதைகளாக வாழும் தமிழர்கள் மாத்திர மல்லாது, அனேக இடையூறுகளின் மத்தியிலும், கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் வாழும் தமிழர்களும், மலையகத்தமிழர்களும், தமிழர்களே. இன்றைய சூழ்நிலையில் என்று கூறும்போது, 1956 இலிருந்து 1983 வரை நிகழ்ந்த இனக்கலவரங்களையும் நினைவில் நிறுத்திக் கொள்வதோடு 1983 இல் நடைபெற்ற இனக்கலவரத்தின் பின்னணியையும், அதைத் தொடர்ந்து இன்று வரை நடைபெற்றுவரும் தமிழ் மக்களுக்கெதிரான இனப்படுகொலை, இனச் சுத்திகரிப்பு மற்றும் மனித உரிமை மீறல்களையும், தமிழர் தம் நிலங்கள் படிப்படியாக அபகரிக்கப்படுவதையும் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினால் நுவரெலியாவில் நடத்தப்பட மேதின விழாவின் போது, சிங்களப் பேரினவாதம் எவ்வாறு நடந்து கொண்டது என்பது தெரிந்த விடயமே. இச்சம்பவம் சிறியதாக விருந்தாலும், அதன் நோக்கம் மிக மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாகும்.

இன்றைய சூழ்நிலையில் வட-கீழ் பிராந்தியங்களில் வாழும் தமிழ் மக்கள் அழிக்கப்படுவது மாத்திரமல்லாது, நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள தமிழ் மக்களுக்கும் ஆபத்து உண்டு என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். சுருக்கமாகக் கூறுவதானால் இலங்கை வாழ் சகல மக்களுக்கும் உரிமைகளை மறந்து அடிமைகளாக வாழ வேண்டும். அல்லது இலங்கையைவிட்டு வெளியேறிவிடவேண்டும் என்பதே சிங்கள பேரினவாதத்தின் நோக்கமாகும். இப்படியான சூழ்நிலையை மாற்றி, தமிழ் மக்கள் சுய மரியாதையுடன் ஏனைய இனத்தவரோடு சரிநிகராக வாழுவதற்கு தமிழ் மக்கள் மேற்கொள்ள வேண்டிய திருப்பணிகள் எவை எனச் சிந்திக்க வேண்டிய தருணமிது.

www.tamilarangam.net

தங்களுக்கு ஆபத்து வராதென மலையகத்தமிழ் மக்கள் எண்ணி னால் அது மடமைத்தனம். தங்கள் கலாசாரத்தையும், மொழியையும் மறந்து வாழும் கொழும்பு வாழ் தமிழ் மக்கள் தங்களுக்கு ஆபத்து வராதென எண்ணுவார்களேயாகின் அது முட்டாள் தனம். ஜேர்மனியில் 1933 இலிருந்து 1939 வரையான ஹிட்லரின் ஆட்சியில் நாஷிக் கட்சிக் காரர்கள் சிறுபான்மை இனத்தவரான யூத மக்களுக்கு எதிராக எவ் விதத்தில் செயற்பட்டனரோ, அதே ரீதியில் இன்று இலங்கையில் சிங்களப் பேரினவாதம் சிறுபான்மைத் தமிழர்களுக்கெதிராகச் செயற்படத் தொடங் கிவிட்டது. சிறுபான்மையினருக்கெதிரான சிங்களப் பேரினவாதத்தின் இவ்வாறான இனத்துவேச செயற்பாடுகள் காலப்போக்கில் விசுவ ரூபமெடுத்த மலைநாட்டுத் தமிழ் மக்களை மாத்திரமல்லாது, முஸ்லிம் மக்களையும் பாதிக்கும். இதுதான் இன்றைய சூழ்நிலை. எனவே, தமிழர்களாகிய நாம் பிராந்திய வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு ஒரே அணியில் திரண்டு சில திருப்பணித் தொண்டுகளை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும்.

நமது முன்னோர்கள் கோவில்களில் ஆற்றும் தொண்டுகளையே திருப்பணி எனக்கூறுவர். ஆனால், இன்று எமது இனத்தை அழிவிலி ருந்து காப்பாற்றுவதற்கு மகத்தான திருப்பணியொன்று அவசியமாக வுள்ளது. இத்திருப்பணி தொண்டுகளில் பல அம்சங்கள் உள்ளன. அவற்றில் எமது இனத்தை அழிப்பதற்காக மேற்கொள்ளப்படும் எத்தனங் களை உலக அரங்கிற்குக் கொண்டு வரவேண்டியது மிக முக்கியமான அம்சமாகும். இந்த இன அழிப்புக்கான பின்னணிக் காரணிகளையும் 1956 இலிருந்து 1983 வரையான இனக்கலவரங்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாகவும், 1983 இல் ஆரம்பிக்கப்பட்டு 16 வருடங்க ளாகத் தொடர்ந்து நடத்தப்படும் யுத்தத்தில் தமிழ் மக்களுக்கு சகல துறைகளிலும் ஏற்பட்ட உயிர் அழிவுகள், பொருளாதார பாதிப்புக்கள், மத வழிபாட்டுத் தலங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்கள், தமிழ்ப் பிள்ளைகளின் கல்விக்கு ஏற்படுத்தப்பட்ட தடங்கல்களை, தொழில் வாய்ப்புக்களில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டமை, லட்சக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாக வாழும் நிலை, போன்ற விபரங்கள் சர்வதேச அரங்கிற்குக் கொண்டு செல்லப்படுதல் வேண்டும். அது போலவே மலையகத்தமிழர்களின் வாக்குரிமை எவ்வாறு பறிக்கப்பட்டதென்பதும், கல்வி மற்றும் உத்தியோகத்துறைகளில் அவர்கள் எவ்வாறு புறக்கணிக் கப்படுகின்றனர் என்பனவும் எடுத்துரைக்கப்படுதல் வேண்டும். 1983 க்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்பிருந்தே தமிழர்களுக்கேற்படுத்தப்பட்ட இடையூறுகள், மற்றும் வகுப் புக்கலவரங்களின் பின்னணியிலிருந்து இன்றுவரை தமிழர்களுக்கெதி ரான யுத்தம் தொடர்பான விபரங்களை புள்ளிவிபரத்தரவுகளுடன் வெளிப்படுவது முக்கிய திருப்பணியாகும்.

இப்பணியைப் பாரபட்சமின்றியும், உணர்ச்சி வசப்படாமலும், உள்ளதை உள்ளவாறு துணிவுடன் மேற்கொள்வதே முக்கியமாகும். இத்தொண்டுக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களாற் பெரும் பங்க ளிப்பு வழங்க முடியும். இப்பணி, பொதுவாகத் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இனப்படுகொலை, இனச் சுத்திகரிப்பு மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பான விபரங்களை வெவ்வேறாக அடையா ளங்காட்டி, என்னனென்ன துறைகளில் தமிழ் மக்களுக்கு நீதியும் நியா யமும் மறுக்கப்பட்டது என்பதைப் புலப்படுத்துவதாக அமைதல் வேண் டும்.

உதாரணமாக, இலங்கைச் சனத்தொகையில் தமிழர்கள் 18 வீதத்துக்கு மேற்பட்டவர்களாக இருக்கின்றபோதிலும் அரசாங்கத்துறை வேலை வாய்ப்புக்களில் அவர்களுக்கு 1% ஆவது வழங்கப்பட்டிருப்பது சந்தேகமே. அப்படியிருந்தபோதிலும் சிங்களப் பேரினவாதம், தமிழர் களை நீதியாகவே அரசாங்கம் நடத்திவருவதாக கொபெல்சிய பிரசா ரத்தில் ஈடுபடுகின்றது.

யாழ். குடாநாட்டிலோ அன்றேல் ஏனைய தமிழ்ப் பிரதேசங் களிலோ தமிழ் மக்கள் எந்தெந்த இடங்களில் வசிக்கவேண்டும் என்பதை நிர்ணயிக்கவேண்டியது தமிழர்களிடமில்லை. அது இராணுவத்தின ராலேயே தெரிவிக்கப்படுகின்றது. இப்படியான ஒரு நிலை சிங்கள மக்களுக்கு ஏற்படவில்லை. கடந்த காலங்களில் ஜே.வி.பி. புரட்சி நடைபெற்ற சமயங்களிற் கூட இவ்விதமான கட்டுப்பாடுகள் இடம் பெற்றதில்லை. ஆனால், இன்று தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கான வருடங்களாகப் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவந்த வீடுகள் பங்கர் அமைப்பதற்காக நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. யாழ்.குடாநாட்டின் அநேக கரையோரப்பகுதிகளில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் அப்பகுதியில் வாழ்வதற்கு இராணுவம் அனுமதி வழங்க மறுத்துவிட்டது. இந்த அக்கிரமங்களையும் தாங்கிக் கொண்டு தமிழ் மக்கள் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். இது தொடர்பாக நமது தமிழ் கட்சிகள் செயலில் இறங்கவில்லை. சில தமிழ்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சார்பாக வாக்களித்தும் வருகின்றன. இச்செய்கையானது, எட்டப்பன் மற்றும் காக்கை வன்னியன் ஆகியோரின் செயற்பாடுகளையும் மீறி விட்டன.

இந்த விடயங்களை ஒன்று திரட்டி, மனித உரிமை மீறல் தொடர்பான சகல விடய்ங்களையும் அட்டவணைப்படுத்தி உலகிற்கு உண்மையை எடுத்துரைக்கும் திருப்பணிக்குத் தொண்டாற்ற நமது தமிழ் பேராசிரியர்கள் முன்வருதல் வேண்டும். பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பணிபுரியும் பேராசிரியர்கள் தமது இனப் பற்றையும், நீதிக்குத் தலை வணங்கும் திறனையும் வெளிப் படுத்தும் வகையில், இத் திருப்பணிக்குத் தொண்டாற்ற முன்வருவார் களேயாகில், அவர்களை இன்றைய தமிழ் சமுதாயம் மாத்திரமல்லாது, சர்வதேச தமிழ்ச் சமுதாயமும் வருங்காலச் சந்ததியினரும் போற்றுவர். தமிழர்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் அநியாயங்களை, நீதியின் நிமித்தம் வெளிப்படுத்துவதற்கு இதுவரை இப்புத்தி ஜீவிகள் முன்வராமை மிகவும் வேதனையைத் தருகின்றது.

தமிழ் கட்சிகள் தமிழர்களுக்காக எதனையும் செய்யவில்லையெனக் கூறலாம். ஆனால், நீதியின் சார்பாகத் துணிவோடு தமிழ் மக்கள் அவலங்களை உலகுக்கு எடுத்துக்கூறுவது பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் முதற் கடமையாகும். நமது பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் இந்த விடயத்தில் இதுவரை முயற்சிகளை மேற்கொள்ளா விட்டாலும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் தமிழ்ப் பேராசிரியர்களாவது இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்தாமலிருப்பது வேதனையைத் தருகின்றது.

இவ்வாறான திருப்பணித் தொண்டுகளில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஈடுபடும்போது, அவர்களின் ஆக்கங்கள் நூலாக வடிவெடுத்து, அதன் மூலம் வெளிநாட்டு அரசாங்கங்களுக்கும் உலகப் பிரமுகர்களுக்கும் உண்மை நிலை தெரியவருவதற்கு வாய்ப்புண்டு. இந்த உண்மையான விபரங்களை அவர்கள் அறிந்து கொண்டால், அவர்கள் தத்தமது நாட்டு அரசாங்கங்களின் மூலம் இலங்கை பிரச்சினை தொடர்பாக சில அழுத்தங்களைக் கொடுப்பதற்கான வாய்ப்புண்டு.

www.tamilarangam.net

இவ்வாறான திருப்பணித் தொண்டிற் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஈடுபட வேண்டுமென வற்புறுத்துவதற்குக் காரணங்கள் உண்டு. அண்மைக்காலத்தில் தென் ஆபிரிக்காவிலிருந்து வந்திருந்த பாராளுமன்ற அங்கத்தவர்கள், மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்தவர்கள், ஐரோப்பிய பாராளுமன்றத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள், மற்று பெல்ஜிய நாட்டுத் தொழிற்சங்கப்பிரதிநிதிகளைக் கொழும்பிற் கண்டு அவர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. 24 அங்கத்தவர்களைக் கொண்ட அவர்களோடு மணிக்கணக்காக நாம் கலந்துரையாடி, புள்ளி விபரங்களுடன் நாம் கலந்துரையாடி, புள்ளிவிபரங்களுடன் நாம் எடுத்துக்கூறிய விடயங்கள் எதனையும் அவர்கள் தெரிந்திருக்கவில்லை. நாம் கூறிய விடயங்களை செவிமடுத்த அவர்கள் மிகவும் வேதனை அடைந்தார்கள். முக்கியமாக தென் ஆபிரிக்க பாராளுமன்ற அங்கத்தவர்களும், ஐரோப்பிய பாராளுமன்ற அங்கத்தவர்களும், ஐரோப்பிய பாராமன்ற அங்கத்தவர்களும், தங்களுக்கு இதுவரை தெரியக் கிடைக்காத விடயங்கள் தொடர்பாகவும் புள்ளிவிபரங்களுடன் எடுத்துக்கூறியமைக்கு மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

உதாரணமாக மத வழிபாட்டுத்தலங்கள் சேதமாக்கப்பட்டமை தொடர்பாக அவர்களுக்கு எடுத்துக்கூறப்பட்டது. வணக்கத்தலங்களைப் பொறுத்தவரையில் கண்டியிலுள்ள தலதாமாளிகை சேதமாக்கப்பட்டதை மாத்திரமே தாங்கள் அறிந்துள்ளதாக அவர்கள் சொன்னார்கள். வட-கீழ் பிராந்தியத்தில் ஆயிரக்கணக்கான இந்து; கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் சேதமாக்கப்பட்டதனையும், யாழ்ப்பாணக்குடா நாட்டில் மாத்திரம் மிகப் பிரசித்தி பெற்ற இந்துக்கோவில்களான மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், மற்றும் கீரிமலை நகுலேஸ்வரம் சேதமாக்கப்பட்டதையும் சர்வதேசப் புகழ்பெற்ற திருக்கேதீஸ்வரம் சேதமாக்கப்பட்டது தொடர்பாகவும், நவாலியிலுள்ள புனித பீட்டர்ஸ் தேவாலயம் விமானத் தாக்குதலால் சேதமாக்கப்பட்டமை தொடர்பாகவும், அது தொடர்பாக பாப்பாண்டவர் தனது கவலையைத் தெரிவித்திருந்தமையையும் விரிவாக எடுத்துரைத்தோம். அப்போது அவர்கள், இவ்வாறான அழிவுகளையும் தாக்கங்களையும் உள்ளடக்கிய நூலொன்று எமது புத்தி ஜீவிகளால் வெளியிடப்படுமேயாகில், சர்வதேச அரங்கில் தாக்கமொன்றினை ஏற்படுத்த முடியுமெனச் சிபார்சு செய்திருந்தனர். அவர்களின் கூற்றுப்படி, இலங்கையில் நடைபெற்ற துயரச் சம்பவங்களும், தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேத விபரங்களும் மேற்குலக்குகத் தெரியப்படுத்தப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படவில்லை. இலங்கை அரசு அதிக பணச்செலவில் மேற்கொள்ளும் கோபல்சிய பிரசாரங்களின் மூலம் உண்மைகள் அமிழ்ந்து போயுள்ளன. எனவே, மறைக்கப்பட்ட அந்த உண்மைகளை உலகறியச் செய்வதற்கும் நமது இனத்தைக்காப்பாற்றுவதற்காகவும், பல்கலைக்கழகங்களின் தமிழ்ப் பேராசிரியர்கள் முன்வரவேண்டுமென்பதே தமிழ்ச் சமுதாயத்தின் வேண் டுகோள்.

இத்திருப்பணியின் இரண்டாவது தொண்டாவது, இலங்கைவாழ் தமிழ் மக்கள் சகலரும் ஒன்றிணைந்து, ''தமிழ் இனத்தை அழிக்காதே'' என சாத்வீக ரீதியிலான போராட்டமொன்றை ஆரம்பித்தல் வேண்டும்.

வட-கீழ் மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களும், அங்கு அகதி களாக வாழும் தமிழ் மக்களும், இத்தொண்டில் முக்கிய பங்களிப்பை வழங்கலாம். அதுபோலவே ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் யுத்தத்தை வெறுக்கும் சிங்கள, மற்றும் முஸ்லிம் மக்களுடன் இணைந்து சாத்வீகமான முறையில் செயற்படலாம். இந்த யுத்தம் தமிழர்களுக்கு எதிரானது அல்லவென இலங்கை அரசாங்கம் பிரசாரம் செய்து வரு கின்றது. ஆனால், இந்த யுத்தத்தின் மூலம் அழிக்கப்படுபவர்களும் அகதிகளாக்கப்படுபவர்களும், அனாதைகளாக்கப்படுபவர்களும், தமிழ் மக்களே. அவர்களுடைய கோவில்களும், பாடசாலைகளும்தான் அழிக் கப்படுகின்றன. எனவே, இந்த யுத்தம் தமிழர்களுக்கு எதிரானது அல்ல எனக் கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானது என்பதை உலகறியச் செய்யவேண்டும்.

www.tamilarangam.net

**25** 30-05-99

## கொசோவோவையும் மிஞ்சிவிட்ட இலங்கை இனப் பிரச்சினை

தமிழ் மக்களைப் புறக்கணிக்கும் நிலை இலங்கையில் இன்று நேற்று அல்ல சேர். பொன்னம்பலம் இராமநாதன் காலத்திலேயே ஆரம்பித்து விட்டது. சிங்கள அரசியல் வாதிகள் அவருக்குக்கொடுத்த வாக்குறுதிகளை மீறினர் என்பது சரித்திர உண்மை. இலங்கை சுதந்திரம் அடைந்ததும், மலையகத்தமிழ் மக்கள் அனுபவித்து வந்த குடியுரிமைகள் 1948-1949 ஆம் வருடங்களில் சட்டபூர்வமாகப் பறிக்கப்பட்டன. இது தொடர்பாக பண்டிதர் ஜவஹர்லால் நேருவின் தலைமையிலான இந்திய மத்திய அரசு இராஜதந்திர ரீதியில் கடும் நடவடிக்கை எடுக்காமல் விட்டது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். 1950 களில் குடியேற்றத்திட்டங்கள் என்ற போர்வையில் தமிழ் தாயகத்திலுள்ள தமிழர்களின் காணிகள் மீது கை வைக்கப்பட்டது.

பின்பு 1956 ஆம் ஆண்டில் சிங்களம் மாத்திரம் என்ற சட்டம் இயற்றப்பட்டு முதன் முதலாக இனக்கலவரம் மூண்டது. அதனைத் தொடர்ந்து 1958 முதல் 1983 வரையிலான காலப்பகுதியில் அடிக்கடி தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலவரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

அக்காலவரையில், உத்தியோகவாய்ப்பு, உயர்கல்வி வாய்ப்பு போன்ற சகல துறைகளிலும் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டனர். அக்காலகட்டத்தில் நடைபெற்ற இனக்கலவரங்களின் விளைவால் தென் இலங்கையிலும் கொழும்பிலும் வாழ்ந்துவந்த தமிழ் மக்கள் தங்கள் தாயகமாகிய வடகீழ்ப் பிராந்தியத்துக்குச் சென்றனர். அப்போதைய அரசின் செயற்பாட்டுக்கு எதிராக தமிழ் மக்களின் பிரதான அரசியற் கட்சிகள் சாத்வீக முறையில் போராடியதோடு சத்தியாக்கிரகங்களையும் மேற்கொண்டன. அவை யாவும் விழலுக்கு இறைத்த நீராக எதுவித பலனையும் தராது மாத்திரமல்லாது, தமிழ் மக்களுக்கு எதிரான வன் முறைகளும் கசப்புணர்வுகளும் சிங்கள மக்கள் மத்தியில் விஷம் போல் ஏறுவதற்கும் வழிவகுத்தன.

சாத்வீக வழிகள் சரிப்படாமற் போகவே மாற்று வழியில்லாத நிலையில் 1621 ஆம் வருடத்தில் தமிழ் மக்கள் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற வேட்கையில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி 1976 ஆம் வருடத்தில் வட்டுக்கோட்டை தீர்மா

www.tamilarangam.net

னத்தை மேற்கொண்டது. ஆயினும் இத்தீர்மானம் செயற்படத்தவறி யதாலும் 1977 ஆம் வருடத் தேர்தலில் தமிழ் ஈழமே ஒரே மார்க்கம் எனத் தமிழ் மக்கள் இட்ட கட்டளையை அசட்டை செய்ததாலும் விரக்தியின் விளிம்புக்குச் சென்ற தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் தங்களது அபிலாஷைகளை அடையும் நோக்குடன் துப்பாக்கி ஏந்து வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

திருநெல்வேலியில் இலங்கை இராணுவத்தை விடுதலைப்புலிகள் தாக் கியதன் எதிரொலியாக 1983 ஆடி மாதத்தில் இலங்கையில் ஒரு போதும் இல்லாதவாறு இனக்கலவரம் வெடித்தது. தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட அக்கலவரம் தொடர்பாக இது வரையில் அரசாங் கம் விசாரணைக்குழு வொன்றை நியமிக்கவுமில்லை, குற்றம் புரிந்த வர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்தவுமில்லை. இவ்வாறு பாரபட்சமான தொரு செயல் உலகில் வேறெங்கும் நடந்ததாக வரலாறும் இல்லை.

1983 இலிருந்து இன்றுவரை வடகீழ் பிராந்தியம் ஓர் இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசமாகவே விளங்கி வருகின்றது. அங்கு இராணுவ ஆட்சியே மேலோங்கி நிற்கின்றது. சிவில் அதிகாரிகளின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. 16 வருட காலமாக நடைபெற்று வரும் இந்த யுத்தத்தின் காரணமாக இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் நாட்டை விட்டே வெளியேறி விட்டனர். இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் அகதிகளாக மாறி, அரசாங்கம் வழங்கும் உலர் உணவையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். இன்னும் சிலர் கொழும்புக்கும் அதன் சுற்றுப்புறங்களுக்கும் வந்த பல இடையூறு களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். சுருக்கமாக கூறுவதானால் கடந்த 16 வருடங்களாக இங்கு நடை பெற்றுவரும் கொடூரமான சம்பவங்கள், கொசோவோவில் அல்பேனிய இனத்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களையும் மிஞ்சி விட்டது என்பதை எவரும் மறுக்கமுடியாது. இதனைத்தான் உலகப் புகழ் பெற்ற முன்னாள் அமெரிக்க இராஜங்க செயலாளரான ஹென்றி கீஸிங்கரை கொசோவோ மீது அக்கறை கொண்டுள்ள மேற்குலகம் இலங்கை விவகாரத்தில் ஏன் அழுத்தம் கொடுக்கவில்லையென்ற முக்கியமான கேள்வி யொன்றை எழுப்ப வைத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடந்த 16 வருட காலமாகத் தமிழர் தாயகத்தில் நடைபெற்ற இன ஒழிப்பு, இனச்சுத்திகரிப்பு மற்றும் கொடூரமான மனித உரிமை மீறல்கள் போல் வெறெந்த விடயத்திலாவது நடந்ததாகத் தெரியவில்லை. இக் கொடூரமான சம்பவங்கள் தொடர்பாக ஐ.நா.மனித உரிமைக்கமிசன் முன்பாக வெளிநாட்டுத் ஸ்தாபனங்கள் ஆணித்தரமாகவும், அழுத்த மாகவும் புள்ளிவிபரங்களுடன் எடுத்துரைத்திருந்தன. இந்தப் 16 வருட காலவரையில் நமது தாய்க்குலம் அனுபவிக்கும் அவலங்கள் எழுத்தில் வடிக்க முடியாதவையாகும்.

வன்னியில் வாழும் தமிழ் மக்களுக்கான உணவு வகைகளும் மருந்து வகைகளும், அடிக்கடி நிறுத்தப்பட்டு வருகின்றன. உணவு வகைளையும், மருந்து வகைகளையும், யுத்தக் கருவிகளாகப் பயன் படுத்துவது ஐ.நா. விதிகளுக்கு முரணானதாகும். இந்தப் 16 வருட காலத்தில் தமிழ்த் தாய்க்குலத்தையும், தமிழ் யுவதிகளையும், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியமை உலகறிந்த உண்மை. தமிழ்த் தாயகதத்தில் ஆயிரக் கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் காணாமற் போய் விட்டனர். இதுவும் உலக சாதனைகளில் ஒன்றாகும். எமது பிள்ளைகள் வடக்கில் செம்மணி மற்றும் துரையப்பா அரங்கிலுள்ள புதைகுழிகளில் எலும்புக்கூடுகளாகக் காட்சியளிக்கின்றனர். கிழக்கிலும் ஆயிரக்கணக் கான பிள்ளைகளின் எலும்புக் கூடுகள் இருக்கக்கூடும்.

சேர்பியர்களின் இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக கொசோவோவில் விமானத் தாக்குதல்களை மேற்கொண்டு வரும் அமெரிக்காவும், மேற்குலகமும், கொசோவோவில் சேர்பியர்களுக் கெதிராக யுத்தம் புரியும் கே.எஸ்.ஏ. என்ற விடுதலை இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கமொன்றெ முத்திரை குத்தவில்லை. ஆனால் இலங்கையில் 16 வருடங்களாக தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் யுத்தத்தில் இலங்கை இராணுவத்துக்கு எதிராகச் சமர்புரிந்து வரும் விடுதலைப் புலிகள் என்ற தமிழ் இயக்கத்தை சட்டவிரோதமான இயக்கமெனவும், பயங்கரவாத இயக்கமெனவும் முத்திரை குத்தியதன் மார்க்கம் என்ன? கொசோவோவில் அல்பேனிய இனத்தைச் சார்ந்த மக்க ளுக்காக குரல் கொடுக்கும் கே.எஸ்.ஏக்கு அமெரிக்கா மறைமுகமாக இராணுவ உதவி செய்து வருவதாகவும் கூறப்படுகிறது. ஒரே விதமான தொரு பிரச்சினைக்கு அமெரிக்காவும் மேற்குலகமும் மாறுபட்ட வகையி னதான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மர்மம் என்ன? என்பதனை

நாம் மட்டும் கேட்கவில்லை. அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்க செயலாளர் ஹென்றி கீஸிங்கரும் அதனைத்தான் கேட்கின்றார். மேலும் அல்பேனிய இனத்தைச் சார்ந்த கொசோவோ அகதிகளுக்கு கோடிக் கணக்கான டாலர்களைக் கொடுத்துதவ முன்வரும் அமெரிக்கா; தமிழ் அகதிகளுக்கு உதவுவதற்கு முன்வராதது மாத்திரமல்லாது, தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் யுத்தத்துக்கு இராணுவ உதவிகளையும், இரா ணுவப் பயிற்சிகளையும், அமெரிக்காவும் மேற்குலகமும் வழங்கி வருகின்றன. இது அவர்களின் இரட்டை வேடத்தையே புலப்படுத் துகின்றது.

ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 26 ஆட்களுக்கு நவநீதம் தலைமையிலான விசேட நீதிபதி ஆணைக்குழுவி னால் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் அண்மையில் இந்திய உயர் நீதிமன்றம் அவர்களில் 19 ஆட்களை விடுதலை செய்த தோடு மரண தண்டனை விதிக்கப்பட்ட மூவருக்கு அதனை ஆயுள் தண்டனையாகக் குறைத்துள்ளது. நால்வருக்கு மாத்திரம் மரண தண்ட னை ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருப்பது உலகறிந்த உண்மையாகும். ராஜீவ் காந்தியைக் கொலை செய்தது ஒரு பயங்கரவாதச் செயல் அல்ல வென்பதை உயர்நீதிமன்ற நீதிபதிகள் மிகவும் அழுத்தமாகவும், ஆணித் தரமாகவும் தெரிவித்துள்ளனர். இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக் கெதிராக மேற்கொள்ளும் கோபேசியப் பிரச்சாரத்துக்கு இந்திய உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஓர் பேரடியும், பேரிடியுமாகும். ராஜீவ் காந்தியின் கொலைக்கு பயங்கரவாதத்துக்கும் தொடர்பில்லையென்பது மேற்கூறிய தீர்ப்பின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் அமெரிக்காவும் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளுமா?

இந்தத்தீர்ப்பானது விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கமென்ற இந்தியாவின் தீர்ப்பை மாற்றஞ் செய்வதற்கு வழிவ குக்கலாம். அதாவது இந்தியா இலங்கைத் தமிழ் மக்கள் மீதான தனது கொள்கையை மீளாய்வு செய்வதற்கு இடமுண்டு. எதிர்வரும் தேர்தலின் பின்னர் இந்தியாவில் இப்படி நிகழலாம்.

இலங்கைத் தமிழர் மேல் பாசமுள்ள பாட்டாளி மக்கள் கட்சியினர், திராவிடமறுமலர்ச்சி கட்சியினர் மற்றும் பெர்னாண்டஸ் ஆகியோர் ஒன்று சேர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து இலங்கைத்

www.tamilarangam.net

தமிழர்களின் அபிலாஷைகளுக்கு ஏற்றவகையிலான தீர்வொன்றினை ஏற்படுத்துவதற்கு இந்திய மத்திய அரசுக்குக் கடுமையான அழுத்தங் களைக் கொடுக்கலாம். பீ.ஜே.பீ. அரசாங்கம் இதுவரையில் பகிரங்கமாக இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் எதனையும் கொடுக்காவிட்டாலும், மாறுபட்ட சூழ்நிலைகள் ஏற்படும் பட்சத்தில் மத்திய அரசு நிச்சயமாக தனது அயல் நாட்டுக் கொள்கையை மீளாய்வு செய்ய வேண்டியதொரு நிலை ஏற்படுவதற்கு இடமுண்டு.

இவ்வேளையில் இந்திய மத்திய அரசின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ஏ.பி. வெங்கடேஸ்வரன் அவரது கருத்துக்களை அசை போடுவது உகந்ததாகும். ராஜீவ் காந்தி தனது புத்திமதிகளை அலட்சியம் செய்து மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் புத்திமதிக ளுக்கேற்பவே செயற்பட்டதாக விபரித்த அவர், இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்பட்டது, தமிழ் மக்களின் நலன்களை காப்பாற்று வதற்காகவல்ல. ஜயவர்த்தனவின் வேண்டுகோளை நிறைவேற்றுவதற் காகவே எனவும் கூறியிருந்தார். இந்தியாவின் புதிய மத்திய அரசு இலங்கை தொடர்பாகவும், இலங்கை தமிழ் மக்கள் சார்பாகவும், புதிய கொள்கையை நிர்ணயிப்பதற்கு வாய்ப்புகளுண்டு. அப்போது தமிழ் மக்களுக்கு அனுகூலமானவற்றை எதிர் பார்க்கலாம் என்பதே எமது கணிப்பு. அப்படியான காலகட்டத்தில் இன்றைய நிலைமாறித் தமிழ் மக்களுக்கு விமோசனம் ஏற்படுமென எதிர்பார்க்கலாம். இந்தியாவினது கொள்கை மாற்றமடையும் போது அமெரிக்காவினதும் மேற்குலகத் தினதும் கொள்கைகளும் மாறுபடத்தான் செய்யும்.

தமிழ்த் தாய்க்குலத்தின் அவலக் கண்ணீர் வீண்போகாது. அது நிச்சயம் நல்ல பலனைக் கொடுக்குமென்பதே தமிழ் மக்கள் அனை வரினதும் கணிப்பாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 26

13-06-99

## பேரினவாதம் நாட்டை அழிவுக்கே இட்டுச் செல்லும்

வடகிழக்கு தமிழ்ப் பிரதேசங்களில் சிவில் நிர்வாகம் நடை பெறுவதாகவும் ஜனநாயகம் கடைப்பிடிக்கப்படுவதாகவும் இலங்கை அரசாங்கம் உலகளாவிய ரீதியில் கோபேல்சியப் பிரசாரம் செய்து வருகின்றது. ஆனால் யதார்த்த நிலை என்னவென்பது தென் இலங்கையில் வதியும் தமிழ் மக்களுக்கும் சர்வதேசத் தமிழ் சமுதாயத்துக்கும் சரிவரத் தெரியாது.

வடகிழக்கு பிராந்தியங்களில் பெயரளவில் இராணுவச்சட்டம் இல்லையென்றாலும் செயலளவில் வடகிழக்குப் பிராந்திய மடங்கிலும் உலகிலுள்ள பொதுவான இராணுவச் சட்டங்களுக்கு மேலாக அனேக விடயங்கள் நடை பெற்றுவருகின்றன. இவற்றுக்கெல்லாம் தமிழ் மக்கள் முகங்கொடுத்த வண்ணம் இருக்கின்றனர்.

முதலில் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசங்களில் வாழும் மக்களுக்கென அருசாங்கத்தால் அனுப்பி வைக்கப்படும் உலர் உணவு கூட அவர்களுக்குச் சரியாக சென்றடைவதில்லை. மருந்து வகை களும் அவர்களைச் சென்றடைவதில்லை. இவற்றுக்கான காரணம் இராணு வத்தினரின் செயற்பாடுகளே. சட்டரீதியில் அல்லது மனிதாபிமான அடிப்படையில் இச் செயற்பாடுகளை இராணுவம் நியாயப்படுத்த முடியாது. இராணுவக் கட்டுப்பாட்டில் வாழும் மக்களுக்கு ஒரு நீதியும், இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வாழும் மக்களுக்கு இன்னொரு நீதியும் இலங்கைச் சட்டத்தில் இல்லை. ஆனால் நடைமுறையில் சட்டங்களுக்கு அப்பாற்பட்டு இராணுவம் தன்னிச்சையாக தமிழ் மக்க ளுக்கு எதிராக மிகக் கொடூரமான செயற்பாடுகளை அமுல்படுத்தி வருகின்றது. இதனைத் தட்டிக் கேட்கும் துணிவு நமது தமிழ்க்கட்சிகளுக் கில்லை.

தமிழ்ப்பிரதேசத்தின் அனேக பகுதிகள் விடுவிக்கப்பட்ட பகுதிகள் என அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும், அங்கெல்லாம் சோதனைச் சாவடிகளை அமைத்து இராணுவத்தினரைக் குவித்து வைத் திருப்பது எதற்காக? நடைமுறையில் சகல தமிழ் மக்களும் இராணு வத்தினரின் சட்ட திட்டங்களுக்கேற்பவே செயற்படுதல் வேண்டும்.

www.tamilarangam.net

பெயரளவுக்குச் சிவில் அலுவலர்கள் இருந்தபோதிலும், சகல சிவில் அதிகாரங்களும் இராணுவத்திடமே உள்ளது. இதன் பலனாக யாழ் மாவட்டத்திலோ ஏனைய தமிழ்ப்பிரதேசங்களிலோ சிவில் அலுவலர்களால் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயங்களை யாழ் பிரமுகர்கள் இராணுவத்தினரிடமே முறையிடுகின்றனர். இதிலிருந்து தமிழ்ப் பிராந்தியங்களில் இராணுவ ஆட்சிதான் நிலவுகின்றது என்பதைத் தென் இலங்கையில் வாழும் தமிழ் மக்களும் சர்வதேச தமிழ்ச் சமுதாயமும் உணரவேண்டும்.

உதாரணமாக அண்மையில் விடுதலைப்புலிகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு எழுதிய கடிதத்தில், செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் அலுவலகக்கடமைகளுக்கு செல்லக் கூடாதெனக் கட்டளையிட்டிருந்தனர். முன்னைய அனுபவங்களைக் கொண்டு குறிப்பிட்ட அவ்விருதினங்களிலும் அரசாங்க அலுவலர்கள் கடமைகளுக்குச் செல்லவில்லை. விடுதலைப்புலிகளின் கட்டளையைப் பொருட்படுத்தாது கடமைக்குச் செல்லுமாறு இராணுவத்தினர் புத்திமதி கூறியிருந்தனர். அப்புத்திமதிகளை அரசாங்க அலுவலர்கள் செவி மடுக்கவில்லை. அதன் பின்னர் இராணுவத்தினர் கடும் போக்கைக்கடைப்பிடித்தனர். அதாவது, கடமைகளுக்குச் செல்லாதோர் வருடக்கணக்காகச் சிறைவாசத்தை அனுபவிக்க வேண்டி வருமென மிரட்டினர். இவ்வாறான கடும்போக்கினை எந்தச் சட்டத்தின் கீழ் இராணுவத்தினர் கடைப்பிடித்தனர் என்பது தெரியாது. எனினும், திரும்பவும் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும் கடமைகளுக்குப் போகலாமென விடுதலைப்புலிகள் கடிதம் அனுப்பியிருந்தார்கள். ஜே.வி.பி. யினரின் கிளர்ச்சிக்காலத்தில் கடமைகளுக்குச் செல்லக்கூடாதென பல உயர் அலுவலர்களுக்குக் கட்டளையிட்டிருந்தனர். அக்கட்டளைகளுக்குப் பயந்து அனேக அலுவலர்கள் கடமைக்குச் செல்லவில்லை. அத்தருணத்தில் கடமைக்குச் சென்றிருக்காத அலுவலர்கள் மீது இலங்கை அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் அதேபோன்றதொரு சூழ்நிலையில், சிறைவாசம் அனுபவிக்க வேண்டி வருமென்ற மிரட்டல்கள் தமிழ் அரசாங்க அலுவலர்களுக்கு விடுக்கப்பட்ட இன ரீதியான இப்பாரபட்சத்தை நியாயப்படுத்த முடியாது.

இவ்விதமான கொடுங்கோன்மை தமிழ்ப் பிராந்தியங்களில் நடைபெறுவதனால் மக்கள் தாங்க முடியாத அவலங்களுக்கு ஆளாவதால், வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் பல, தமிழ்த் தாயகத்திலிருந்து சிங்கள இராணுவம் முற்றாக விலகவேண்டுமெனவும், இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமெனவும், தமிழ் மக்களின்

www.tamilarangam.net

அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டுமெனவும் குரலெழுப்பியி ருந்தன. இதேதோரணையில் தமிழ் நாட்டிலும் குரலெழுப்பத் தொடங்கி விட்டனர்.

இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள், இனச் சுத்திகரிப்பு மற்றும் இனப்படுகொலை யாவும் கொசோவோவில் நடை பெற்றதைவிட மிகவும் மோசமானவையென உலகப் பிரசித்தி பெற்ற முன்னாள் அமெரிக்க இராஜாங்க அமைச்சரான ஹென்றி கீஸிங்கர் அழுத்தமாகக் கூறியிருந்தார்.

கடந்தவாரம் அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் மேர்பி என்பவர், இலங்கையில் தமிழ் மக்களுக்கெதிராக நடைபெறும் சம்பவங்களை கொசோவோவில் நடைபெற்ற சம்பவங்களோடு ஒப்பிட்டுக் கூறியி ருந்ததோடு, இதுதொடர்பாக அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தை விமர்சிக்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத் திருந்தார்.

தமிழர்களுக்கெதிரான கொடூரமான சம்பவங்களைப் பின்ன ணியாகக் கொண்டே 21 வெளிநாட்டு அரசாங்கங்கள், இனப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வை மறந்து ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டு மெனவும், அதற்காக மத்தியஸ்தம் வகிப்பதற்குத் தாம் தயாராக இருப் பதாகவும் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்திருந்தனர். வடகீழ் பிராந்தியங்களில் நடைபெறும் இராணுவ சர்வாதிகாரத்தை உலக மக்கள் நன்கு அறிந்து விட்டனர் என்பதனை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம். இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சரால் நடத்தப்படும் கொபேல்சிய பிரசாரம் சர்வதேச அரசங்கில் எடுபடவில்லை என்பதனையும் இது காட்டுகின்றது.

இத் தருணத்தில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க்கட் சிகளோ, தமிழ்ப் பிரதிநிதிகளோ அல்லது அரசியற் பிரமுகரோ தமிழ்த் தாயகத்தின் மீது திணிக்கப்பட்ட இராணுவ ஆட்சி ஒழிக்கப்படவேண்டு மெனவோ இராணுவம் வடகீழ்ப்பிராந்தியங்களிலிருந்து முற்றாக விலக்கப் பட வேண்டுமெனவோ, அன்றேல் யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிக ளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டுமெனவோ, அழுத்தம் கொடுக்க வில்லை என்பதை நினைத்து மிகவும் வேதனைப்படுகின்றோம்.

www.tamilarangam.net

தமிழ் மண்ணில் இராணுவம் குவிக்கப்பட்டிருக்கும் வரை நிரந்தர சமாதானம் ஏற்படப்போவதில்லை. இலட்சக்கணக்கான இராணுவத் தினரைக் குவித்தாலும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்று காணப்படும்வரை சமாதானம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் தோன்றப்போதுமில்லை.

அண்மையில் கனடாவில் நடந்தேறிய மாநாட்டில் இது தொடர்பாக நன்கு ஆராயப்பட்டது.

இன்று 21 நாடுகளின் அரசாங்கங்கள் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கலாம். நாளை 100 நாடுகளின் அரசாங்கங்கள் அழுத்தம் கொடுக்கலாம். எத்தனை நாட்களுக்குத்தான் இலங்கை அராங்கம் அனைவரையும் ஏமாற்ற முடியும்?

மலை நாட்டுத் தமிழர்களுக்கெதிராகவும், இன்று சிங்களப் பேரின வாதம் தலைதூக்குகின்றது. கொழும்பில் தமிழ் மக்கள் வாழக்கூடா தெனவும் கூச்சலிடுகின்றது. இப்பேரினவாதத்தால் காலப்போக்கில் நாடே அழிந்து போகும் நிலை தோன்றலாம்.

எனவே, வடகிழக்குத் தமிழ்த் தாயகத்திதலிருந்து இராணுவத்தை அகற்றி நீதியான அரசியல் தீர்வொன்றுக்கு வருவதன் மூலமே நாட்டைக் காப்பாற்ற முடியும்.

www.tamilarangam.net

27-06-99

# 27

## செம்மணி கூறும் கதையும் தமிழரின் இன்றைய நிலையும்

இந்த வருட ஆரம்பத்தில் அதாவது 10.01.1990 அன்று செம்மணி விவகாரம் சர்வதேச அரங்கிற்குக் கொண்டு செல்லப்படுதல் வேண்டுமென ஞாயிறு வீரகேசரியில் மிகவும் அழுத்தமாகவும் ஆணித்தரமாகவும் குறிப்பிட்டிருந்தோம். அக்கருத்தை ஏற்றுக் கொண்ட பல வாசகர்கள் பாராட்டிக் கடிதங்களும் எழுதியிருந்தனர்.

ஏழுமாதங்கள் கடந்து இன்று செம்மணி விவகாரம் அகில உலகின் கவனத்தை மிகக்கவலையுடன் ஈர்த்துவிட்டது. இதன் விளைவு இலங்கைக்கு மிக மோசமான அபகீர்த்தியை ஏற்படுத்தும் என்பதும் நிச்சயம். இதன் மூலம் சர்வதேச சமுதாயம் இலங்கை அரசாங்கத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழக்க வேண்டி நேரிடலாம்.

அதன் மூலம் அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளிற் கூடப் படுமோசமான விளைவுகளுக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்படலாம்.

இலங்கையில் நடைபெறும் விவகாரங்கள் கொசோவோ விவகாரங்களை விடப்படுமோசமானவையென கேசரியில் வெளியாகியிருந்த பல கட்டுரைகளில் குறிப்பிட்டிருந்தோம். ஹென்றி கீஸிங்கரும் குறிப்பிட்டதைப் போலவே, கொசோவோவை விட இலங்கையில் தமிழர்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் இன ஒழிப்பு நடவடிக்கைகள் புள்ளிவிபரச் சான்றுகளுடன், உலக அரங்கில் எடுத்துரைக்கப்படுவதற்கான உண்மைகளை செம்மணி விவகாரம் உறுதிப்படுத்தும் என்பதே இன்றைய கணிப்பாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டை 1995 டிசம்பர் மாதத்தில் கைப்பற்றியதன் பின்பு, ஜனநாயகம் வென்று விட்டதாகவும், பயங்கரவாதத்தை ஒழித்து விட்டதாகவும் இலங்கை அரசாங்கம் உலகளாவிய ரீதியில் கொபெல்சிய பிரசாரத்தை மேற் கொண்டது. 1996 இன் முற்பகுதியில் தமிழ்ப் பள்ளி மாணவி கிருஷாந்தி மீது பாலியல் வல்லுறவு மேற்கொள்ளப்பட்டுக் கொலை செய்யப்பட்ட வழக்கு விவகாரம் அந்தக் கொபெல்சிய பிரசாரத்தைத் தவிடுபொடியாக்கிவிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதுவே செம்மணி விவகாரத்தின் ஆரம்பக்கட்டம். அதைத் தொடர்ந்து, யாழ். குடாநாட்டை இராணுவம் கைப்பற்றிய பின்னர் 60 க்கு மேற்பட்ட இளைஞர்கள் காணாமற் போய் விட்டன ரென சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை வெளியிட்டிருந்தமை வாசகர்களுக்கு நினை விருக்கலாம். அச்சூழ்நிலையில் இலங்கை அரசாங்கத்தின் வெளி விவகார அமைச்சர் யாழ்.குடாநாட்டில் மனித உரிமை மீறல்கள் பெரிதாக நடைபெற வில்லை யென இலங்கையில் மாத்திரமல்லாது வெளிநாடுகளிலும் கூறியது ஞாபகம் இருக்கலாம். ஆனால் இன்று இலங்கையில் தமிழ் மக்கள் எவ்விதம் சித்திரவதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டு, புதை குழிகளிற் புதைக்கப்பட்டனரெனவும், தமிழ் இளம் தாய்க்குலம் எவ்வாறு பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டனர் என்பதையும், உலகம் பூராவும் அறிந்து விட்டது. எத்தனை நாட்களுக்குத்தான் நமது வெளிவிவகார அமைச்சு உலகத்திற்கு உண்மையை மறைக்க முடியும்? செம்மணி விவகாரம் போன்றவற்றால் உண்மை எப்போதாவது வெளிவந்தே தீருமென நோக்கர்கள் கூறியி ருந்தனர்.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டது பயங்கரவாதச் செயலென இலங்கை வெளிவிவகார அமைச்சு கடுமையான பிரசாரங்களை மேற் கொண்ட போதிலும், ராஜீவ் கொலை ஓர் பயங்கரவாதச் செயல் அல்லவென இந்திய உச்ச நீதிமன்றம் ஆணித்தரமாகத் தீர்ப்பளித்திருந்தது. அது போலவே தமிழ் மக்களுக்கெதிரான மனித உரிமை மீறல்கள் அதிகள வில் நடைபெறவில்லையென இலங்கை அரசாங்கம் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளும் பிரசாரம் எடுபடப் போவதில்லையென்பதே நோக்கர் களின் கணிப்பு.

கிருஷாந்தி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை சர்வதேச அபிப்பிரா யத்துக்கிணங்கவே மேற்கொள்ளப்பட்டது. சிலர் நீதிமன்றத்திற் குற்றவாளி களாகக் காணப்பட்டனர். ஒரு சில குற்றவாளிகளுக்கு மரணதண்டனைத் தீர்ப்பும் வழங்கப்பட்டது. அவர்களில் ஒருவர் தான் கோப்ரல் ராஜபக்ஷ. அவர் கடைசியில் தான் நிரபராதி எனவும் தனது உயரதிகாரிகளின் கட்டளைகளையே தான் நிறைவேற்றியதாகவும் கூறியிருந்தார். அவரது கூற்றுக்களை வைத்து எழுந்த சர்வதேச அழுத்தத்தினாலேயே செம்மணி விவகாரம் மீண்டும் உயிர் பெற்றது.

www.tamilarangam.net

இது கிணறு வெட்டப்பூதம் புறப்பட்டதாகத்தான் அமையப் போகின்றது. ஏனெனில் பத்துப் புதைகுழிகளைத் தன்னால் அடையாளங் காட்ட முடியுமென கோப்ரல் ராஜபக்ஷ கூறி விட்டார். இவற்றை விட வேறு புதை குழிகளும் இருக்கலாமெனவும் கூறியுள்ளார். தமிழர் சரித்திரத்தில் இவ்வாறான சோக சம்பவம் இதுவரை நிகழ்ந்ததில்லை.

தென் ஆசியாவில் இம்மாதிரியான கொடூர சம்பவங்கள் நிகழ்ந் ததாக இல்லை. பார்வையாளர்களாக வெளிநாட்டவர்கள் பங்கு பற்றுவதால் இந்த விவகாரம் முக்கியத்தவம் பெறுகின்றது. அதுவும் உலகப் புகழ் பெற்ற சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி இங்கிரிட் மசகே அம்மையார் பார்வையாளராக இருப்பது இவ்விவகாரத்துக்கு அதிக முக்கியத்துவம் வழங்குகின்றது. அம்மையார் இக்கொடூரமான குற்றங்களைப் புரிந்தவர் களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டுமென யாழ்ப்பாணத்தில் கூறியிருந்தார். சர்வதேச தமிழ்ச் சமுதாயத்தின் உணர்ச்சிகளை மாத்திர மல்லாது, அம்மையாரின் அக்கூற்றானது நீதிக்குத் தலை வணங்கும் உலக சமுதாயத்தின் உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றது.

இவ்விவகாரம் தொடர்பாகக் காலப்போக்கில் ஐ.நா. மனித உரிமை மீறல்கள், ஆணைக்குழுவின் முன்பும் நன்கு விவாதிக்கப்படும் என்று பூரணமாக நம்பலாம். செம்மணிப் புதைகுழிகள் மாத்திரமல்லாது, தமிழ்ப் பிராந்தியங்களில் இன்னமும் அடையாளங் காணப்படாத புதை குழிகள் ஏராளமாக இருக்கலாம். அவற்றையும் கண்டு பிடித்து எலும்புக் கூடுகளாக வுள்ள எமது பிள்ளைகளின் மரணங்களை அம்பலப்படுத்தும் வகையில் பூரண விசாரணையொன்றினை மேற்கொள்ளுவதற்குத் தமிழ் மக்கள் முழு மூச்சுடன் பாடுபடுதல் வேண்டும்.

கிழக்கு மாகாணத்திலும் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களும், யுவதிகளும், காணாமற் போய்விட்டனர். இவ்வாறு கொடூரமான மனித உரிமை மீறல்களை மேற்கொண்டவர்களையும், அதற்கு உடந்தையாக இருந்தவர்களையும் உரோமாபுரியில் இயங்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்பு நிறுத்தி விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். இதுவோர் அரசியல் விவகாரமல்ல. தமிழர்கள் இலங்கையில் வாழக்கூடாது என்ற தோரணையிலான ஓர் சதி முயற்சி யாகவே இவ்விடயம் கருதப்படுதல் வேண்டும். இச்சதி முயற்சியாலேயே இவ்வாறான இனப்படுகொலைகள் நடைபெற்றுள்ளன. இக்குற்றங்களைப்

www.tamilarangam.net

புரிந்தவர்கள் எந்த இனத்தைச் சார்ந்தவர்களாக விருப்பினும், எந்த அந்தஸ்தில் உள்ளவர்களாக இருப்பினும், எந்த மதத்தைச் சார்ந்தவர்களாகவிருப்பினும், அவர்களை இனங்கண்டு பாரபட்சமற்றதொரு நீதி விசாரணை நடத்தப்பட்டு, உரிய தண்டனை வழங்க வேண்டியது சர்வதேச சமூகத்தின் பொறுப்பாகும். இந்தப் பொறுப்பினைச் சர்வதேச சமூகம் தட்டிக் கழித்து விடமுடியாது. எனவே, வெளிநாடுகளில் வதியும் தமிழ் இளைஞர்கள் உடனடியாக மனித உரிமை மீறல்கள் தொடர்பான தலைவர் திருமதி மேரி றொபின்சன், உலகப் பிரசித்தி பெற்ற முன்னாள் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹென்றி கீஸிங்கர் மற்றும் முன்னாள் ஐ.நா.செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ்காலி ஆகியோரது ஆதரவைத்திரட்டி, இவ்விவகாரங்கள் தொடர்பாகச் சர்வதேச சமுதாயம் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். செம்மணி போன்ற விவகாரங்களுக்கும், தமிழர்களின் இன்றைய நிலைக்குமிடையில் தொடர்பொன்றிருப்பதனை காணலாம். சுருக்கமாகக்கூறுவதானால், தமிழர்கள் இலங்கையில் சுயமரியாதையுடன் வாழ முடியுமா என்பதே முக்கிய கேள்வியாக அமைகின்றது.

சிங்களவர்களுக்கு உள்ள உரிமைகள் தமிழர்களுக்கு இல்லை. வீரவிதான போன்ற சிங்கள இயக்கங்கள் கொழும்பில் கூட்டங்களை நடத்துகின்றன. கொழும்பு மாநகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வதியும் தமிழ் மக்களை வெளியேறுமாறு கோரிக்கை விடுக்கின்றன. தொழிற்சங்க காரியாலயங்களின் தலைமை அலுவலகத்துக்குள் அத்து மீறிப் பிரவேசித்து, அவர்களது கொடிக்கு அவமரியாதை செய்துள்ளனர். இந்தச் சிங்களப் பேரினவாதக் கும்பல்களுக்கு பொலிஸ் பாதுகாப்பும் கொடுக்கப்பட்டிருந்தது. அவர்களது செய்கைகளுக்கு எதிராக ஊர்வலம் போவதற்கோ கூட்டம் நடத்துவதற்கோ தமிழர்களுக்கு உரிமை மறுக்கப்படுகின்றது. அதன்படி தமிழர்கள் சுயமரியாதையுடன் வாழ முடியாது என்பது விளங்குகின்றது. எல்லோரும் சமத்துவமாகவும், நீதியாகவும் வாழ முடியும் என்பது ஒரு பகற் கனவே. தமிழ் அரசியற் கட்சிகள் பிரதானமாக இந்த விடயத்திற் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தமது சுயமரியாதையைக் காப்பாற்றுவதற்காகவாயினும் நடவடிக்கை எடுக்காதது பெருந்தவறாகும்.

www.tamilarangam.net

கோணார் இராஜரத்னவின் இயக்கத்துக்கெதிராக 1958 இல் தமிழர்கள் நடவடிக்கை எடுத்திருந்தால், அவ்வருடத்தில் ஏற்பட்ட கலவரத்தைத்தடுத்திருக்கலாம். அதுபோலவே 1977 மற்றும் 1983 ஆகிய வருடங்களில் நடைபெற்ற கலவரங்கள் தொடர்பாகத் தமிழ் அரசியற் கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து எதிர் நடவடிக்கை மேற்கொண்டிருந்தால், அப்போதைய பாரதூரமான நிகழ்வுகளைத் தவிர்த்திருக்கலாம்.

இன்றைய மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரதி நிதிகள் அரசு கொடுக்கும் வாக்குறுதிகளை நம்பிக் கை கட்டிக் கொண்டு சும்மா இருந்தால் மலையகத்தமிழ் மக்களும், கொழும்பு வாழ் தமிழ் மக்களும், மிகவும் கொடூரமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படலாம். எனவே, வெள்ளம் வருமுன் அணை கட்டுவது மிகவும் அவசியம்.

மலையகத்தைப் பொறுத்தவரையிலோ, அன்றேல் வட-கீழ் பிராந்தியங்களைப் பொறுத்தவரையிலோ தமிழர்களுக்கு இன்றைய நிலையில் ஓர் பாராளுமன்ற தலைமைத்துவம் இல்லை என்றே கூறலாம். தமிழ் இனம் அழிவதற்குத் தமிழர்களே காரணம் என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது. சிங்களப் பேரினவாதத்தை ஆட்சேபிக்கும் உரிமை தமிழர்களுக்கில்லை. ஊர்வலம் நடத்தா விட்டாலும் கடைகளை மூடும் உரிமை கூடவா தமிழர்களுக்கில்லை. அண்டை நாடான இந்தியாவிலோ அல்லது இலங்கையிலோ உள்ள முஸ்லிம் மக்கள் தங்கள் சுயமரியாதைக்குப் பங்கம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் வீதிகளில் இறங்கி எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இதுதான் இன்றைய யதார்த்த நிலை. ஆனால் தமிழர்களுக்கு அவ்வாறான உணர்ச்சியில்லை. தங்கள் சுயமரியாதைக்குப் பங்கம் ஏற்பட்டாலும், தமிழ்த் தாய்க்குலத்துக்கு அவமரியாதை ஏற்பட்டாலும், தமிழர்கள் வாய் மூடிக் கொண்டேயிருக்கின்றனர்.

இந்த வெட்கக்கேடான நிலை இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் நீடிக்கப்போகின்றது? இங்கையின் எப்பகுதியிலும் தலைநிமிர்ந்து தனது உரிமையை நிலை நாட்டும் உரிமை தமிழர்களுக்குண்டு. கொழும்பிலோ, மலையகத்திலோ, சிங்கவருடன் சரிநிகராக சுயமரியாதையுடன் வாழவும் உரிமையுண்டு. உயிர்களைத் தியாகஞ் செய்தாவது, இந்த உரிமையை நிலை நாட்ட வேண்டியது நமது பிற்சந்ததியினருக்காக நாமாற்றும் கடமையாகும். பயங்கரமானதொரு நிலையைத் தமிழர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, அதற்கேற்ப நன்கு சிந்தித்து யதார்த்த நிலைக்கேற்ப வழிவகுத்துக் கொள்வது மிகமிக அவசியம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net



கரம்பனை பிறப்பிடமாகக் கொண்ட இந்நூலாசிரியர் தனது ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் அதனைத் தொடர்ந்து, மேற் கல்வியை யாழ் மத்திய கல்லூரியிலும், தனது பட்டப்படிப்பை பேராதெனியப் பல்கலைக் கழகத்திலும், மேற்கொண்டு ஓர் பொருளாதாரப் பட்டதாரியானார். அதன் பின்னர் இலங்கைத் துறைமுக அதிகார சபையில் நிறைவேற்று தர அலுவலராகப் பணிபுரிந்து ஐ.நா.நிறுவனப் பொருளாதாரத் திட்டமிடற் பிரிவில் பயிற்சி பெற்றார். அதன் பின்னர் ஐ.நா. ஸ்தாபனத்தில் சர்வதேச ஆலோசகராகப் பணிபுரிகையில், 1970 ஆம் ஆண்டில் ஐ.நா.ஸ்தாபன (Unctad) செயலாளர் நாயகம் அவர்கள் துறைமுகப் புள்ளிவிபரங்கள் விடயமாக உலகளாவிய ரீதியில் ஆறு புகழ்பெற்ற நிபுணர்களை நியமித்திருந்தார். திரு. நடராஜா அவர்கள் இந்த சர்வதேச நிபுணத்துவக் குழுவில் ஆசியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்குமான ஏகபோக பிரதி நிதியாக நியமிக்கப்பட்டமை, இலங்கைத் தமிழர்கள் மாத்திர மல்லாது உலகத் தமிழர்களும் பெருமைப்பட வேண்டியவோர் விடயமாகும் அதன்பின் சவுதி அரேபியாவில் 16 வருட காலமாக புத்திமதியாளர் அந்தஸ்தில் கடமை புரிந்தனர் பின்னர், 1996ல் ஈழத்திற்கு திரும்பி, மக்கள் பணியே மகேசன் பணியாகவும் தமிழ் மக்களுக்கான பணியே, திருப்பணியாகவும் கருதி, பொதுப்பணியில் இறங்கி இந்நூலையும் பிரசுரிக்கின்றார்.

ஜீ.ஜீ. பொன்னம்பலம் (குமார்)

Designed & Printed By: New Karthikeyan Printers (Pvt) Ltd. Tel: 595875

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்